சாகர சங்கமம்



எண்டமூரி வீரேந்திரநாத்

1

தரளா ஃபெர்டிலைஸர்ஸ் நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டரின் வீட்டுப் படுக்கை அறையில் இரவு இரண்டரை மணிக்கு போன் மணி ஒலித்தது. எம்.டி. இரண்டு நிமிடங்கள் பேசிவிட்டுப் போனை வைத்துவிட்டான். மறுமுனையில் சொல்லப்பட்ட வார்த்தைகள் முதலில் அவனுக்குப் புரிய வில்லை. போனை வைத்துவிட்ட பிறகும்கூட அவனுக்கு விஷயம் முற்றிலுமாக விளங்கவில்லை என்று அவனுடைய முகத்தைப் பார்த்தாலே தெரிந்தது.

அவசர அவசரமாக எழுந்து தயாராகி, "எங்கே கிளம்பி விட்டீங்க?" என்று கேட்டுக்கொண்டிருந்த மனைவிக்குக்கூட சரியாக பதில் சொல்லாமல் காரை எடுத்துக்கொண்டு காவல் நிலையத்தை நோக்கிப் புறப்பட்டான். அவனுடைய தூக்கம் இப்பொழுது முற்றிலுமாகக் கலைந்துவிட்டது.

போனில் கேட்ட செய்தியே அவன் மனதில் திரைப்படமாக ஓடிக்கொண்டிருந்தது.

"நான்தான் சார் வெங்கடாசலபதி பேசுகிறேன்."

"யாரு?"

"டூ டௌன் காவல் நிலையத்திலிருந்து வெங்கடாசலபதி எஸ்.ஐ."

"ஓ நீயா! என்ன விஷயம்?"

"நேற்று இரவு இன்ஸ்பெக்டர் அய்யா விபசார விடுதியின் மீது ரெயிடிங் செய்தார் இல்லையா?"

"யாரு? சத்யநாராயணன்தானே?" "ஆமாம்."

"அந்த மாதிரி ரெயிடிங் போகப் போவதாக நேற்று மாலையில் பேச்சுவாக்கில் சொன்னான். அது சரி. இந்த நள்ளிரவு வேளையில் எனக்கு போன் செய்யவேண்டிய காரணம்?"

"அதில் பிடிபட்ட ஒருபெண், உங்களைத் தன்னுடைய தந்தைன்னு சொன்னாள் சார்."

அவன் கை ரிசீவரை அழுத்தமாகப் பற்றிக்கொண்டது. "வ வாட்!" நம்ப முடியாதவன் போல் கத்திவிட்டான். "உனக்கு மூளை பிசகி விட்டதா என்ன?"

"உண்மைதான் சார். உண்மை."

இதுதான் இந்தக் கதையின் தொடக்கம்.

21906

தரளா சொன்ன கதை

வணக்கம். என் பெயர் தரளா. பி.ஏ. பாஸாகியிருக்கிறேன்.

திருமணம் ஆகும்வரையில் என்னை எல்லோரும் 'பிடிவாதக்காரி, குறும்பு' என்று சொல்லி வந்தார்கள். திருமணமாகி இரு குழந்தைகள் பிறந்த பிறகு அந்தப் பெயர்கள் நன்றாக இல்லை என்று 'அகம்பாவக்காரி, முன் கோபி' என்ற பட்டப் பெயர்களைச் சூட்டினார்கள். அதுவரையில் திருமணமாகி விட்டால் குடும்பப் பெயர் ஒன்றுதான் மாறும் என்று நினைத்தேன். பட்டப் பெயர்களும் மாறிவிடும் என்று பிறகுதான் புரிந்தது.

நீங்களே சொல்லுங்கள். இந்த உலகத்தில் எந்தப் பட்டப் பெயரும் இல்லாமல் யாராவது இருக்கிறார்களா?

உங்கள் பக்கத்து வீட்டுக்காரி யாரோடும் பழகாமல் தன் வேலையைத் தான் செய்துகொண்டு போனால் நீங்கள் எல்லோரும் சேர்ந்து அவளை, சாது. கடமையே கண்ணாக இருக்கிறாள் என்று சொல்வீர்களா? இல்லை 'ரிசர்வ்ட் யாருடனும் கலகலப்பாக இருக்க மாட்டாள்' என்று பட்டம் தருவீர்களா? நான் என்னவோ இரண்டாவதைத்தான் நினைக்கிறேன். உங்களுடைய எண்ணம் இதற்கு நேர்மாறாக இருந்தால் உங்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

மனிதர்கள் செய்யும் எந்தக் காரியத்தையும் இரண்டு விதமாக புரிந்துகொள்ளலாம். தன்னுடைய எதிரி மேலே வருவதற்காக ஒருவன் கை கொடுத்தான் என்று வைத்துக் கொள்வோம். எதிரியை தன் பக்கம் ஈர்த்துக்கொள்வதற்காகக் கை கொடுத்திருக்கிறான் என்று நினைக்கலாம். அல்லது எதிரியை மன்னித்து விடக்கூடிய அளவுக்கு நல்ல குணம் படைத்தவன் என்றும் நினைக்கலாம். ஆனால் மக்கள்

கண்டிப்பாக இருளை நோக்கி விரலை சுட்டிக் காட்டுவதற் காகத்தான் முயற்சிப்பார்கள். அதனால்தான் மக்களை நான் என்றுமே பொருட்படுத்தமாட்டேன்.

நான் எப்போதும் முட்டாள்தனமாக வாதம் புரிவேன் என்றும், நான் பிடித்ததற்கு மூன்றே கால்கள் என்று சாதிப்பேன் என்றும் நீங்கள் நினைத்தால் அது உங்கள் தவறு. நான் பிடித்தது முயல் தானா அல்லது முக்காலியா என்றுகூடப் பார்க்காமல் நீங்கள் இந்த முடிவுக்கு வந்தால் அது உங்களுடைய தவறுதானே! அதனால்தான் எனக்கு உங்கள் புத்திசாதுரியத்தின் மீது, பகுத்தறிவின் மீதும், அவ்வளவு ஏன்? உங்கள் மீதும் கொஞ்சம் கூட மதிப்பு இல்லை.

"உங்களுக்கு" என்றால் எங்க கிராமத்து மக்கள், என்னுடைய அப்பா, எங்க வீட்டு வேலைக்காரர்கள் என்னுடைய வகுப்புத் தோழிகள் மற்றும் பலர்.

எப்பொழுது நான் உங்களுக்கு மதிப்பு கொடுப்பதை நிறுத்தி விட்டேனோ, அப்பொழுது நீங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து எனக்குத் தரப்போகும் பட்டப்பெயர் 'அடங் காப்பிடாரி' அதான் சொன்னேனே. இந்த மக்கள் எப்பொழுதும் தங்களுடைய செயல்களைப் பலப்படுத்திக் கொள்வதற்கு சில வார்த்தைகளை முன் கூட்டியே தயாராக வைத்திருக்கும் என்று.

ஆனந்தனைக் காதலித்த புதிதில் அந்த விஷயத்தைத் தந்தையிடம் சொன்னபோது அவர் சிரித்தார்.

"சின்னப் பெண் நீ. உனக்குக் காதல் என்ற வார்த்தைக்கு அர்த்தமாவது புரியுமா?" என்று கேட்டார்.

ஏன் தெரியாது? ரோமியோ, ஜூலியட் பாடம் எங்களுக்கு இருந்தது. காதல் என்றால் ஒருவருக்காக இன்னொருவர் செத்துப் போவது என்று எங்கள் லெக்சரர் சொல்லித்தந்தார். அது நினைவுக்கு வந்தது.

அன்று இரவே காவேரியில் குதித்துவிட்டேன்.

அது சரி. காவேரியைப் பற்றி நான் உங்களிடம் ஒன்றுமே சொல்லவில்லையே? எங்கள் கிராமத்தையொட்டி காவேரி ஆறு ஓடிக்கொண்டிருந்தது. தாழ்ந்த நிலையில் தென்னை மரங்கள், எந்த நிமிடமும் விழுந்துவிடும் போல் தென்பட்டுக் கொண்டிருந்தன. இரு மருங்கிலும் நாணற்புற்கள் உயரமாக வளர்ந்திருந்தன. மழை வந்தால் கிராமமே சேற்றுக் குளமாகி விடும்.

அது சரி என்ன சொல்லிக்கொண்டிருந்தேன்? என் பாய் பிரண்ட் விஷயமாக நான் காவேரியில் குதித்த விஷயத்தைச் சொல்லிக்கொண்டிருந்தேன் இல்லையா. அம்மாடி! இருபது வருடங்களுக்கு முந்தி நடந்த நிகழ்ச்சி அது.

அன்றைக்கு ரொம்பவும் ரகளையாகிவிட்டது.

நான் அப்பாவுடன் வாதாடினேன். "காதல் என்றால் என்னவென்று தெரியுமா? என்று கேட்டது நீங்கள்தானே? அதைச் சொல்லத்தான் காவேரியில் குதித்தேன். நான் செத்துப் போயிருந்தால் ஊர் மக்கள் காலங்காலத்திற்கும் ஜூலியட் போல் என்னைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள் இல்லையா?" என்றேன்.

சிலர் என் முன்னிலையிலேயே சிரித்தார்கள். வேறு சிலர் பயந்து தொலைவில் போய்ச் சிரித்துக்கொண்டார்கள். எல்லாம் எனக்குத் தெரிந்துதான் இருந்தது.

பாவம். அப்பாவைப் பார்த்தால்தான் இரக்கமாக இருந்தது. அந்தக் கிராமத்தில் அப்பாவின் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு இருந்தது இல்லை. அவ்வளவு பெரியவர் என் பாய்பிரண்டிடம் போய் கைகளைப் பிடித்துக்கொண்டு வேண்டுகோள் விடுத்தாராம். எனக்குப் பிற்பாடு தெரிந்தது. அந்த விதமாக என் திருமணம் முடிந்தது.

ஆக மொத்தம் "காவேரியில் குதித்துக் காரியத்தைச் சாதித்துக் கொண்டுவிட்டாள்" என்று எல்லோரும் என்னைப் பற்றி நினைத்துக் கொண்டார்கள். "எனக்கு வேண்டியது நீ

சுகமாக இருப்பதுதான். இனி ஒருபோதும் இதுபோன்ற காரியங்களைச் செய்யாதே" என்று நீர் நிறைந்த கண்களுடன் அப்பா என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டார்.

"உனக்காகக் காவேரியில்கூட விழத் துணிந்துவிட்ட மனைவி கிடைத்திருக்கிறாள். நீ அதிர்ஷ்டசாலியப்பா" என்று என் கணவரை அவருடைய நண்பர்கள் பாராட்டினார்கள்.

எல்லோருக்கும் தெரியாத விஷயம் என்னவென்றால் நான் காவேரியை நோக்கிப் போகும்போது வெளியே வராண்டாவில் படுத்துக்கொண்டிருந்த வேலைக்காரனைத் தூக்கம் முழுவதும் கலைந்துபோகும் விதமாக கல்லால் அடித்துவிட்டு ஓடினேன் என்றும், திருடன் என்று நினைத்துக் கொண்டு அவன் என் பின்னாடியே வந்து காவேரியிலிருந்து என்னைக் காப்பாற்றியதற்கு எல்லோரும் அவனைப் பாராட்டிய போது, அந்த ரகளையில் அசல் விஷயத்தை 'ரொம்ப கன்வீனியன்டாக' மறந்துவிட்டான் என்று.

அதைவிட முக்கியமான விஷயம், எனக்கு நன்றாக நீச்சல் தெரியும். இந்த விஷயம் பிருந்தாவைத் தவிர அங்கிருந்த யாருக்கும் தெரியாது. அவள் மட்டும் உள்ளூர சிரித்துக் கொண்டே என் தற்கொலை நிகழ்ச்சிக்குப் பிறகு நடந்தவற்றைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள்.

பிருந்தாவைப் பற்றி உங்களிடம் சொல்லவே இல்லையே. அவள் ஒரு பைத்தியக்காரி. எப்பொழுதும் ஏதாவது வரைந்து கொண்டே இருப்பாள். "வசந்த கால நதியினிலே" என்ற பாட்டை முணுமுணுத்துக் கொண்டே இருப்பாள். எனக்கென்னவோ "சந்தையில் கோழியே" என்பது போலக் கேட்டுக்கொண்டிருக்கும். இருந்தாலும்கூட நாங்க இருவரும் நல்ல சினேகிதிகள். எனக்கு எவ்வளவு கோபம் வந்தாலும், உடனுக்குடன் அவளை மன்னித்துக் கொண்டே வந்ததால் அது சாத்தியமாயிற்று. அவளை எல்லோரும் நல்ல பெண் என்று பாராட்டும்போது எனக்குச் சிரிப்புதான் வரும். சிறிய கோட்டிற்குப் பக்கத்தில் இருந்தால்தானே பெரிய கோட்டின் மதிப்பு தெரியும்?

அவளுக்கு நல்ல பெயர் கிடைக்க வேண்டும் என்று நான் சில வழிமுறைகளைக் கடைபிடித்தேன்.

தோட்டத்தில் திருட்டுத்தனமாக மாங்காய்களைப் பறிக்கப் போனால் வேண்டாம் என்று எச்சரிப்பாள். தோட்டக்காரன் வந்து விட்டால் காய்களைப் புடவைத் தலைப்பில் மூட்டைக் கட்டிக் கொண்டு ஓட்டம் பிடிப்பேன். நடுவில் அவன் பிடித்துக் கொண்டாலும் "சின்னம்மா! நீங்களா" என்று சொல்லிவிட்டு விட்டு விடுவான். அது வேறு விஷயம். ஒருக்கால் தப்பித்துக் கொண்டு விட்டால் மட்டும் சினேகிதிகள் எல்லோரும் அந்தக் காய்களுக்காக நான், நீ என்று போட்டி போடுவார்கள். வேண்டாமென்று எச்சரித்த பிருந்தா நல்லபெண் என்ற பட்டப் பெயரைத் தட்டிச் சென்று விடுவாள். காய் வேண்டுமென்றால் மட்டும் நான் வேண்டும். அதான் சொன்னேனே, மக்களின் போக்கு எனக்கு என்றுமே புரிந்தது இல்லை.

என் கணவரின் பெயர் ஆனந்தன்.

அவருக்காகத் தான் நான் காவேரியில் குதித்தேன். நான் செய்தது ரொம்ப நல்ல காரியம். காதல் கல்யாணங்கள் பெரும்பாலும் தோல்வியில் முடியும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். எனக்கு நல்ல கணவர் கிடைத்துவிட்டார். ஆனந்தன் உண்மையிலேயே ரொம்ப நல்லவர். ஒரே ஒருமுறை என் கன்னத்தில் அடித்திருக்கிறார். அவ்வளவுதான்.

திருமணமான புதிதில் எந்தக் கணவன் மனைவிக்கும் ஒத்துப் போவது கொஞ்சம் கஷ்டமாகத்தானே இருக்கும்? இந்த இடைஞ்சல் எல்லாக் குடும்பங்களிலுமே இருக்கும் என்று நினைக்கிறேன், ஆனால் "என்னுடன்" என்பதால் அது இன்னும் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. ஆனாலும் இந்த நிலைமை ரொம்ப நாட்களுக்கு நீடிக்கவில்லை. திருமணம் ஆன முதல் ஒன்பது மாதங்கள், அதற்குப் பிறகு பாலும் தேனும் போல் ஒன்றறக் கலந்துவிட்டோம்.

எங்கள் அன்பின் சின்னங்கள் இரண்டு. சாஹிதி மற்றும் கவிதா. சொல்ல மறந்துவிட்டேன். என் கணவருக்கும் கவிதை

களில் ஈடுபாடு அதிகம். அதனால்தான் இரு மகள்களுக்கும் அந்தப் பெயர்களைச் சூட்டினார்.

நம்மில் எத்தனை பேர் மனைவிமார்கள் தம் வாழ்க்கையில் ஒரு தடவையாவது கணவர் கையால் கன்னத்தில் அடி வாங்கியிருப்பார்கள்? இந்த விஷயத்தில் உங்களுக்கு ஏதாவது ஊகம் இருக்கிறதா? இப்பொழுது புதிதாகத் திருமணமான தம்பதிகளைப் பற்றியல்ல நான் சொல்வது.

இந்தக் காலத்துக் கணவன்மார்கள் தங்களுடைய மனைவியை வெல்லக்கட்டியைப் போலப் பார்த்துக் கொள்கிறார்கள். நான் சொல்வது இருபது வருடங்களுக்கு முந்தைய கதை. அப்பொழுதெல்லாம் குடும்பங்களில் அவ்வளவாக சுமுகம் இருந்தது இல்லை. இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் திருமணமாகி ஒன்பது மாதங்கள் முடிந்த பிறகு எங்க இருவருக்கும் இடையில் எந்தவிதமான கருத்து வேற்றுமையும் ஏற்பட்டது இல்லை.

இந்த ஒன்பது மாதங்களில் அவர் ஒரே ஒருமுறை என் கன்னம் அதிரும் அளவுக்கு அடித்தார். அதுகூட எப்பொழுது தெரியுமா? எங்கள் முதலிரவுக்குப் பிறகு, அடுத்த நாள் காலையில் எட்டு மணிக்கு.

யாருக்குமே இதுபோன்ற அனுபவம் ஏற்பட்டிருக்காது இல்லையா? அப்பொழுது என்னவோ அழுகை வந்தது. ஆனால் இப்பொ, இத்தனை வருடங்களுக்குப் பிறகு நினைத்துப் பார்த்தால் சிரிப்பு வருகிறது. இப்பொழுதும் என் மகள்கள் இருவரிடமும் அந்த விஷயத்தைச் சொல்லிச் சிரிக்க வைப்பேன். முதல் இரவு விஷயம் மட்டும் சொல்ல மாட்டேன். என்னை அடித்த விஷயம் மட்டும் சொல்லி அவரை அழ வைத்துக்கொண்டிருப்பேன். அந்த நேரத்தில் மட்டும் அவர் முகம் சிவந்துவிடும். கொஞ்சநேரம் வரை உம்மென்று இருப்பார். பிறகு திரும்பவும் பழையபடி மாறி விடுவார்.

இந்த எழுத்தாளர்கள் எல்லோரும் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டே எழுதித் தள்ளுவார்கள் போலும். முக்கியமாக

முதலிரவை அவர்கள் வருணிக்கும் விதத்தைப் பார்க்க வேண்டுமே.

விடியற்காலை, நான்கு மணிக்கே மணமகள் எழுந்து கொண்டு போய் எந்தப் பாட்டியின் பக்கத்திலோ வெட்கத்தோடு முடங்கிப் படுத்துக்கொள்வாளாம். நானோ அந்த அறையிலேயே நன்றாகத் தூங்கினேன். என்னை எழுப்பும் தைரியம் வீட்டில் யாருக்கும் இல்லை. எட்டு மணிக்கு ஏதோ பெரிய ஓசைகேட்டு விழிப்பு வந்தது. அவர் கட்டிலில் தொங்கவிட்டிருந்த மல்லிகைச் சரங்களைப் பிய்த்தெறிந்து கொண்டிருந்தார். விடிந்து ரொம்ப நேரம் கழித்து எழுந்துகொண்டதால் கோபமாக இருக்கிறார் போலும் என்று நினைத்துக்கொண்டேன். "என்னங்க? என்ன ஆச்சு?" என்று கேட்டேன். அதே வேகத்தில் திரும்பி என் கன்னத்தில் பளார் என்று ஒரு அறை விட்டார்.

அதுதான் முதலும்... கடைசியும்.

அதற்குப் பிறகு ஒரு நாளும் நான் ஐந்து மணி அடித்த பிறகு தூங்கியதில்லை. என்னிடம் இருக்கும் நல்ல குணங்களில் இதுவும் ஒன்று. எனக்கு விருப்பமானவர்கள் எது சொன்னாலும், அதைக் கேட்டு அவர்களுக்குப் பிடித்த விதத்தில் நடந்து கொள்வது. ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் வருத்தம் ஏற்பட்டது. அவர் இப்படி அடிக்காமல் கொஞ்சம் நயமாகச் சொல்லியிருந்தாலும் அவர் பேச்சைக் கேட்டிருப்பேன்.

ஏதோ வாழ்க்கையே நாசமாகிவிட்டது போல் மல்லிகைப் பூச்சரங்களைப் பிய்த்தெறிந்து, கேசத்தை கலைத்துக்கொண்டு, தாமதமாக எழுந்திருக்கும் மனைவியிடம் தன் அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டியதில்லையே.

ஆனாலும் அதுவும் ஒரு விதத்தில் நல்லதற்குத்தான்.

உங்களுக்குத் திருமணமாகிவிட்டதா? ஆகியிருந்தால் உங்கள் கணவர் கையாலோ, மனைவி கையாலோ கன்னத்தில் ஒருமுறை அறை வாங்கிப்பாருங்கள். தவறு யாருடையதாக இருந்தாலும் அடித்தவர்கள் என்பதால் உங்களைக் கெஞ்ச

வேண்டிய பொறுப்பு அவர்களையே சேரும். நாம் கொஞ்சம் பிடியைத் தளர்த்தாமல் இருந்தால் அவர்கள் கெஞ்சக் கெஞ்ச இன்னும் சந்தோஷமாக இருக்கும்.

அவரிடமிருந்து நானும் அதைத்தான் எதிர்பார்த்தேன். சற்று நேரத்தில் அவரே இறங்கி வந்தார்.

என் குணங்களில் நிறைய பேருக்குப் பிடிக்காத குணம் ஒன்று உண்டு. தவறு செய்தவர்களை மன்னிக்க முடியாமல் போவது. அதற்குப் பிறகு அவர்கள் தவறு செய்துவிட்டதாக ஒப்புக் கொண்டாலும் சரி, என்னால் மன்னிக்க முடியாது. இது உண்மையிலேயே கெட்ட குணம் என்று சொல்வீர்களா? ஏனோ எனக்கு அப்படித் தோன்றவில்லை. தவறு செய்வதே ஒரு தவறு. அதை ஒப்புக்கொள்வதால் அதன் பாதிப்போ, பாவமோ, விளைவோ குறைந்துவிடாது இல்லையா?

எங்கள் வீட்டில் வேலைக்காரச் சிறுமி ஒருத்தி இருந்தாள். ஒரு நாள் ஐந்து ரூபாயைத் திருடிவிட்டாள். மிரட்டி கேட்ட போது எடுத்தேன் என்று ஒப்புக் கொண்டு விட்டாள். நீங்களாக இருந்தால் என்ன செய்து இருப்பீர்கள்? இனிமேல் அந்தச் சிறுமியின் கைக்குப் பணம் அகப்படாதவாறு கவனமாக இருந்திருப்பீர்கள் இல்லையா, அவள் குணம் தெரிந்ததால் வேலையை விட்டு நீக்கியிருப்பீர்கள்.

நான் அவ்வாறு செய்யவில்லை.

இன்ஸ்பெக்டர் சத்யநாராயணன் என் கணவரின் நண்பர். மூன்று நாட்கள் லாக்கப்பில் அடைத்து வைக்கச் சொல்லி விட்டேன். பிறகு வேலையை விட்டு நீக்கிவிட்டேன்.

அதற்குப் பிறகு எங்கள் வீட்டில் நூறு ரூபாய் நோட்டு ஒன்று தொலைந்து விட்டது. எடுத்தது எங்கள் பெரிய மகள் சாஹிதி.

இப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்? உண்மையைச் சொல்லுங்கள். உங்கள் அருமை மகள் உங்களிடம்

சொல்லாமல் பர்ஸிலிருந்து நூறு ரூபாயைத் திருடிவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

என் உத்தேசத்தின்படி சிலர் திட்டுவார்கள். ரொம்பவும் செல்லம் கொடுப்பவர்களாக இருந்தால் "தப்பும்மா. அப்படி செய்யக்கூடாது'' என்று கண்டிப்பார்கள். கொஞ்சம் கோபக்காரர்களாக இருந்தால் நன்றாக அடிப்பார்கள். நான் இந்த மூன்றையும் செய்யவில்லை.

சாஹிதியை நிற்கச் சொன்னேன்.

"இதோ பார். தவறு செய்து விட்டேன் என்று ஒப்புக் கொண்டு விட்டாலும், நான் சும்மா விட்டுவிட மாட்டேன் என்று உனக்குத் தெரியும். தெரியாமல் செய்துவிட்டேன். புத்தி வந்துவிட்டது என்று நீ சொன்னாலும் சரி, தண்டனையை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். நான் செய்யக்கூடிய உதவி என்னவென்றால், என்ன தண்டனை வேண்டுமென்று நீயே தேர்ந்து எடுத்துக்கொள்."

அவள் பதில் பேசவில்லை.

"அடிக்கட்டுமா?" என்று கேட்டேன்.

அவள் தலை அசைத்தது போல் இருந்தது.

எங்கள் வீட்டுக் கொல்லையில் கொய்யா மரம் ஒன்று இருந்தது. அதன் கிளையை ஒடித்துக்கொண்டு வந்து உள்ளங் கைகளை விரிக்கச் சொல்லி இரண்டு கைகளிலும் மாறி மாறி விளாசினேன். கடைசி அடி விழும்போது அவர் வந்து விட்டார். மகளைப் பிடித்து அப்பால் இழுத்துக்கொண்டே "நீ மனுஷிதானா அல்லது ராட்சசியா?" என்று கத்தினார்.

அதற்குள் அவள் கைகள் சிவந்து கொப்பளித்துவிட்டன.

கையிலிருந்த குச்சியை வீசியெறிந்துவிட்டு "ராட்சசி இல்லை. மனுஷிதான் உங்கள் மகளை மனுஷியாக மாற்ற வேண்டும் என்றுதான் முயற்சி செய்கிறேன்" என்றேன். அவர் சாஹிதியை அழைத்துக்கொண்டு அங்கிருந்து போய்விட்டார்.

அன்று இரவு அவரை நிற்க வைத்து கேட்டேன். "என்னை ராட்சசி என்றீர்கள். ஆனால் சொல்லுங்கள் நம் மகள் ஒரு திருடியாக மாறுவது உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? பதிமூன்றே வயதில் அவள் திருட்டுத்தனம் செய்தால் அது எவ்வளவு தலை குனிவு? இந்த விஷயம் வெளியே பரவினால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்தீங்களா?"

அவர் தலையைத் திருப்பிக் கொண்டார்.

"பார்த்தீங்களா! நீங்க சொல்ல மாட்டீங்க. உங்களால் சொல்லவும் முடியாது. நீங்களும் செய்ய மாட்டீங்க. என்னையும் செய்யவிட மாட்டீங்க."

"நீ அடித்தால் அவள் விட்டு விடுவாளா?"

"குறைந்தபட்சம் இன்னொரு தடவை செய்யும்போது பயமாவது இருக்கும்."

"நயமாக எடுத்துச் சொல்லியிருந்தால் அவள் கேட்டிருப்பாள்."

"மனிதர்களின் நல்லதனத்தின் மீது உங்களுக்கு இருக்கும் நம்பிக்கை எனக்கு இல்லை." ஏளனமாகச் சொன்னேன்.

"செய்கிற ஒவ்வொரு தவறுக்கும் தண்டனை இருந்துதான் தீரணும் என்றால் இந்த உலகத்தில் மனிதர்கள் அத்தனை பேரும் என்றோ நசித்துப் போயிருப்பார்கள்." விரக்தி கலந்த குரலில் சொன்னார்.

"சினிமா டைலாக் போதும், நிறுத்திக்கொள்ளுங்கள்."

அதற்குள் பக்கத்து அறையிலிருந்து முனகல் சத்தம் கேட்டது. அங்கே போனேன். சாஹிதி தூக்கத்தில் முனகிக் கொண்டிருந்தாள்.

தலையை வருடிக் கொடுக்கப் போனவள், அப்படியே நின்று விட்டேன். ஊஹூம். இப்பொழுது கொஞ்சம் கருணை காட்டி

னாலும், மதியம் கொடுத்த தண்டனைக்கு பலன் இல்லாமல் போய்விடும். பெண்ணாக இருந்துகொண்டு இந்த வயதில் பணத்தைத் திருடியதற்கு இந்தத் தண்டனைக்கூடப் போதாது.

ஓசைப்படுத்தாமல் அங்கிருந்து கிளம்பப்போனேன். அப்பொழுதுதான் சாஹிதி கண்களைத் திறந்தாள். நாங்களிருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டாலும் யாரும் பேசவில்லை. அவள் அத்தனை வேதனையிலும் குறைந்தபட்சம் "அம்மா" என்றுகூட அழைக்கவில்லை.

அவளுக்கே அவ்வளவு திமிரு இருந்தால் எனக்கு எவ்வளவு இருக்க வேண்டும்?

நானும் பேசாமல் திரும்பிவிட்டேன்.

மறுபடியும் அறைக்குள் வரும்போது அப்பொழுதுதான் தென்பட்டது ஹாலில் சோபாவுக்குப் பக்கத்தில்...

நூறுரூபாய் நோட்டு.

பால்காரனுக்குக் கொடுப்பதற்காக எடுத்து ஜன்னலில் வைத்தது அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. ஒரு வினாடி வாயடைத்துப் போய் விட்டது எனக்கு. விக்கித்துப் போய் அப்படியே நின்றுவிட்டேன். பிறகு வீலென்று கத்திக்கொண்டே அவர் அருகில் ஓடினேன்.

நூறுரூபாய் நோட்டை அங்கே வைத்துவிட்டு மறந்து போன விஷயத்தை அவரிடம் சொன்னேன். அவர் வியப்படைந்து என் பக்கம் பார்த்தார். அந்தப் பார்வை, மன்னியுங்கள். அதை வார்த்தைகளில் விவரிக்க எனக்குத் தெரியவில்லை. அந்தப் பார்வை மட்டும் என் இதயத்தை அம்பாய்த் துளைத்துக் கொண்டு போயிற்று. இருவரும் சாஹிதியின் அறைக்கு வந்தோம். "கண்ணம்மா" என்று அழைத்துக்கொண்டே மகளை மடியில் வைத்துக்கொண்டார், "பணத்தை நீ எடுக்கவில்லை என்று ஏன் சொல்லவில்லை?"

சாஹிதி பதில் பேசவில்லை.

நான் அருகில் சென்று, "எடுக்கவில்லை என்று சொன்னால், பொய் சொல்லுகிறாய் என்று அடித்து விடுவேனென்று பயந்தாயா?" நயமான குரலில் கேட்டேன்.

இல்லை என்பது போல் தலையை அசைத்தாள்.

"பின்னே?"

சாஹிதி தலை குனிந்தபடி மொதுவாகச் சொன்னாள்.

"இதுக்கு முன்னாடி ஐந்து ரூபாய் தொலைந்து போனதற்குப் பழைய வேலைக்காரி எடுத்தாள் என்று இன்ஸ்பெக்டர் அங்கிளிடம் சொல்லி ஜெயிலில் போட வைத்தீங்க இல்லையா?"

"ஆமாம். அதனால் என்ன?"

"அவள் எடுக்கவில்லையாம். கடவுள்மீது சத்தியம் செய்து விட்டு அழுதுகொண்டே சொன்னாள். நாம் வேலையை விட்டு அனுப்பிய பிறகு அவளுக்குச் சாப்பாடுகூடக் கிடைக்க வில்லையாம். இது தான் உண்மை. இப்பொழுது புது வேலைக்காரி வந்திருக்கிறாள். அதனால்..."

"ஊம். அதனால்?"ஏதோ சந்தேகம் வந்து என் குரல் நடுங்கியது.

"திருடி விட்டாள் என்று இவளையும் ஜெயிலில் போட்டு விடச் சொல்வாய். வேலையை விட்டு அனுப்பி விடுவாய். இவளும் சாப்பாடு கிடைக்காமல் கஷ்டப்படுவாள் என்றுதான் நானே..."

அவள் வார்த்தைகள் இன்னும் முடியக்கூட இல்லை.

அவர் அழுது நான் என்றுமே பார்த்ததில்லை. அப்படிப் பட்டவர் "கண்ணம்மா! சாஹிதீ!" என்று மகளை அப்படியே கட்டிக் கொண்டு கண்ணீர்விடத் தொடங்கிவிட்டார்.

ஐந்து நிமிடங்களுக்கு முன்னால்தான் சொன்னேன். "மனிதர்களின் நல்லதனத்தின் மீது உங்களுக்கு இருக்கும் நம்பிக்கை எனக்கு இல்லை" என்று. என் மகளே என்னுடைய

கருத்தைத் தவறு என்று நிரூபித்துவிட்டாள். தன்னுடைய கருணை குணத்தினால் என் முடிவை மிகக் கொடூரமாக வீழ்த்திவிட்டாள்.

நான் சமையல் அறைக்குப் போய்விட்டு வந்தேன். நான் வரும்போது அவர் சாஹிதியின் உள்ளங்கைகளில் தேங்காய் எண்ணையைத் தடவிக்கொண்டிருந்தார்.

"நான் தடவுகிறேன். நீங்கள் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்" சுருக்கமாகச் சொன்னேன்.

அவரிடம் எனக்கு மிகவும் பிடித்த குணம் இதுதான். என் மன உணர்வுகளை நன்றாகப் புரிந்துகொள்வார்.

மறு பேச்சுப் பேசாமல் எழுந்துகொண்டு அறையை விட்டுப் போய்விட்டார்.

மகளுக்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டு "வலிக்கிற தாம்மா?" என்று கேட்டேன். அப்பொழுதுதான் ஹோவென்று அழுதுத் தீர்த்து விட்டாள். என் மடியில் தலையை வைத்துக் கொண்டு விசும்பி விசும்பி அழுதாள். மனதின் திரைகளைக் களைய சின்ன சம்பவம் போதும்.

நான் அழவில்லை.

செய்த தவறுகளுக்கு அழுவதுதான் தண்டனை என்றால், பாவிகளைத் தண்டிப்பதற்கு இதுவரையில் நான் செய்த வாதனையே தவறு. தவறு செய்தவர்கள் எல்லோரும் ஒரு தடவை அழுது தீர்த்துவிட்டுத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டு விடுவார்கள்.

மகள் கையில் கொப்பளங்களுக்கு எண்ணையைத் தடவியபடி உட்கார்ந்திருந்தேன். கொஞ்ச நேரத்தில் மகள் உறங்கிவிட்டாள்.

பிறகு சமையல் அறைக்குச் சென்றேன். அதற்கு முன் போன போதுதான் கரண்டியை அடுப்பில் வைத்துவிட்டு வந்தேன்.

கத்துவேனா?

கத்தினால் என் பெருமை என்ன ஆவது?

ஒன்றையடுத்து மற்றொன்று வரிசையாக இரண்டு கைகளிலும் சூடு போட்டுக்கொண்டேன். மேலாக இல்லை, அழுத்தமாக. பற்களைக் கடித்து வேதனையை இதழ்களுக்கு இடையில் அழுத்திக்கொண்டேன்.

"உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? என்ன காரியம் இது?"

அவர் வேகமாக வந்து கரண்டியைப் பற்றி வீசியெறிந்தார். ஆனால் அதற்குள் நான் செய்ய நினைத்ததை செய்து முடித்து விட்டேன்.

பிறகு அந்தக் காயங்கள் குணமாக ஒரு மாத காலம் பிடித்தது.

அந்த ஒரு மாதமும் அவர் என்னைத் திட்டிக்கொண்டே இருந்தார். அதான் சொன்னேனே, சரி என்று நாம் நினைக்கும் எண்ணங்கள், செயல்கள் மற்றவர்களுக்கு மிகவும் முட்டாள்தனமாகத் தோன்றும்.

2

அன்று இரவு என் வாழ்க்கையிலேயே ஒரு பெரிய திருப்பம் ஏற்படும் என்று நான் நினைத்திருக்கவில்லை. என் கணவர்கூட "அப்பாவியாக" உறங்கிக்கொண்டிருந்தார்.

இரவு இரண்டரை மணிக்கு மேல் போன் மணி ஒலித்தது. அவருக்கு அதுபோல் போன் வருவது வழக்கம்தான். மேனேஜிங் டைரக்டர் இல்லையா. ஆனால் உரையாடல் முடிவடைந்ததுமே அத்தனை பரபரப்போடு அவர் எங்கே புறப்பட்டார் என்றுதான் தெரியவில்லை. மறுமுனையில்

இருந்தவர் என்ன சொன்னாரோ புரியவில்லை. தவிர இவர் பேசியது மட்டும் கேட்டது.

"....."

"யாரு?"

"....."

"ஓ. நீயா, என்ன விஷயம் ?"

"....."

"யாரு? சத்யநாராயணன்தானே. அந்த மாதிரி ரெயிடிங் போகப் போவதாக நேற்று மாலையில் பேச்சு வாக்கில் சொன்னான். அது போகட்டும். இந்த நள்ளிரவு வேளையில் எனக்கு போன் செய்ய வேண்டிய காரணம்?"

"....."

"வ்வாட்? உனக்கு மூளை பிசகிவிட்டதா என்ன?"

இதுதான் இந்த உரையாடல். சத்யநாராயணன் என்றால், ஒருக்கால் எங்கள் குடும்ப நண்பராகத்தான் இருக்கவேண்டும். காவல்நிலையத்தில் இன்ஸ்பெக்டராக இருக்கிறார். நேற்று மாலையில் வீட்டுக்கு வந்தவர் அவர்தான்.

"என்ன தங்கச்சி! உன் வீட்டுக்காரரை இன்றிரவு ரெயிடிங்குக்கு என்னோடு அழைத்துக்கொண்டு போகட்டுமா?" என்று வேடிக்கையாகக் கேட்டார்.

பின்னே, இப்பொ போனில் அவருடைய பெயர் அடிபடுவானேன்?

சாதாரணமாக இருந்தால் அதைப் பொருட்படுத்தியிருக்க மாட்டேன். ஆனால் அவர் முகத்தில் தென்பட்ட அந்தப் பரபரப்பு, எனக்கு ஏனோ மிக அசாதாரணமாக இருந்தது. என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ளாவிட்டால் தூக்கம் வராது போல் இருந்தது.

சத்யநாராயணனின் வீட்டுக்குப் போன் செய்தால் அவர் காவல் நிலையத்திலேயே இருப்பதாகச் சொன்னாள் அவர் மனைவி. காவல் நிலையத்திற்குப் போன் செய்த போது அவரே எடுத்தார்.

"இப்பொ எங்க வீட்டுக்குப் போன் செய்தது நீங்கதானா? என்று கேட்டேன்.

"யாரு? தரளாவா? ஆமாம். நான் தான் செய்யச் சொன்னேன்."

"அவர் அவசரமாகப் புறப்பட்டுப் போனாரே, என்ன விஷயம்?"

"அது வந்து... ஏதோ சின்ன விவகாரம். நீ படுத்துக்கொள் தங்கச்சி! பத்து நிமிடங்களில் அனுப்பிவைக்கிறேன்." இன்ஸ்பெக்டருக்கே உரிய சாமர்த்தியத்தை அமல்ப்படுத்துவது போல் சொன்னார்.

நான் ஒன்றும் அதற்குச் சளைத்தவள் இல்லை.

"அவரை ஒன்றும் பதற்றப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள். நான் இங்கே தைரியம் சொன்னேன். இருந்தாலும் அங்கே நீங்களும் சொல்லுங்கள்" என்றேன்.

"கட்டாயம். ஆனால் உனக்கு ஏன் இந்த பயம் தங்கச்சி? இதுபோன்று ஆயிரம் கேஸுகளைப் பார்த்திருக்கிறேன். நிமிஷத்தில் செட்டில் செய்துவிடுகிறேன்."

"அவர் மிகவும் திகிலடைந்து போய்விட்டார்."

"திகிலா! எதுக்குத் திகில்? ஆனாலும், இதெல்லாம் எங்க எஸ்.ஐ. வெங்கடாசலபதியால் வந்தது. விஷயத்தை இது வரையில் கொண்டு வந்துவிட்டான். அந்தப் போட்டோவைக் கிழித்துப் போட்டு விட்டால் போறாதா? அனாவசியமாக எங்க இருவருக்கும் போன் செய்து நள்ளிரவில் வரவழைத்து விட்டான்."

"போட்டோவோடு கூட இன்னும் ஏதாவது இருக்கலாமோ என்னவோ."

"இல்லை. இல்லை. வந்ததுமே நான் செய்த முதல் காரியம் அதுதான். நன்றாக தேடச் செய்துவிட்டேன். அந்தப் பெண்ணிடம் வேறு எதுவும் கிடைக்கவில்லை."

முதன்முதலாக என் மனதில் ஏதோ சந்தேகம் நிழலாகத் தோன்றியது. மிகச்சாமர்த்தியமாக நான் கக்க வைத்துக் கொண்டிருந்த விஷயங்களில் கடைசி வார்த்தையில் ஏதோ கொக்கிப்போட்டு இழுத்தாற்போல் இருந்தது.

பெண்...

ரெயிடிங்...

போட்டோ...

இருட்டில் கடைசி அம்பை எய்தினேன். "என்ன சொல்கிறாள் அந்தப் பெண்? பெண் என்றால் அந்த ரெயிடிங்கின்போது பிடிப்பட்டவளைத்தானே சொல்றீங்க? அந்தப் போட்டோ தன்னுடையது இல்லை என்று சொல்கிறாளா?"

"இல்லை என்று எப்படிச் சொல்லுவாள்? உன்னுடைய கணவர் தான் தன்னுடைய தந்தை என்று சொல்கிறாள். எங்கிருந்து சம்பாதித்தாளோ நம் ஆனந்தனின் போட்டோவை. இரண்டு உதை கொடுத்தால் எல்லாவற்றையும் தானே சொல்லிவிடுவாள். எல்லாம் எங்கள் எஸ்.ஐ. செய்த காரியம். அநாவசியமாக உங்கள் தூக்கத்தைக் கெடுத்துவிட்டார்." இன்ஸ்பெக்டர் சத்யநாராயணன் மேலும் சொல்லிக்கொண்டே போனார்.

என் செவிகளில் அவை எதுவுமே விழவில்லை. பூமி கிர்ரென்று வேகமாக சுழல்வது போல் இருந்தது. இன்ஸ்பெக்டர் சொன்னது போல் என் கணவரின் போட்டோ அந்தப் பெண்ணிற்கு எங்கேயோ கிடைத்தது மட்டும் இல்லை. அதுவாக இருந்தால் போன் வந்ததும் அவர் அவ்வளவு கலங்கிப் போயிருக்க மாட்டார்.

நூறுரூபாய்த் திருடினாயா என்று கேட்டபொழுது நான் மகள் முகத்தைச் சரியாகப் பார்க்கவில்லை. அதனால் அவள் திருடி இல்லை என்று அப்பொழுது எனக்குத் தெரியவில்லை. போனில் கேட்டுக்கொண்டிருந்த போது என் கணவர் முகம் தென்பட்ட விதம் எனக்கு இன்னும் நினைவில் இருந்தது. அது குழப்பம் இல்லை. பயத்தால் ஏற்பட்ட கலக்கம். முதல்தடவை செய்த தவறை இம்முறை செய்யவில்லை நான். நன்றாக யோசித்தேன்.

இப்பொழுது எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது.

இரவு நடந்த ரெயிடிங்கில் இன்ஸ்பெக்டர் சத்யநாராயணன் சில பெண்களைப் பிடித்துக்கொண்டு வந்து ஸ்டேஷனில் லாக்கப்பில் போட்டுப் பூட்டிவிட்டுத் தன் வீட்டுக்குப் போய் விட்டார். அதில் ஒரு பெண் என் கணவரின் போட்டோவைக் காட்டி, "இவர் தான் என் தந்தை" என்று சொன்னதும் வெங்கடாஜலபதி கலவரமடைந்து அங்கே இன்ஸ் பெக்டருக்கும், இங்கே என் கணவருக்கும் போன் செய்திருக்கிறார். இவர் பரபரப்புடன் ஓடியிருக்கிறார்.

எனக்கு மூளை மரத்து விட்டதுபோல் இருந்தது. போனைக் கீழே வைக்கும்போது அவருடைய முகத்தோற்றம் ஒரு போட்டோவைப் போல் என் மனதில் பதிந்துவிட்டது.

அதற்கு மேல் வீட்டில் ஒரு நிமிஷம் கூட என்னால் இருக்க முடியவில்லை. அங்கே காவல் நிலையத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ள வேண்டும். அவருக்கும் அந்தப் பெண்ணுக்கும் இடையே நிகழும் உரையாடலைக் கேட்க வேண்டும்.

மாடியைவிட்டுக் கீழே இறங்கி வந்தேன். காரை எடுத்துக் கொண்டு போய்விட்டார். சாஹிதி, கவிதா பயன்படுத்தும் ஸ்டாண்டர்ட் கார் இருந்தது. அதில் புறப்பட்டேன். ஐந்து நிமிட இடைவெளியில் புறப்பட்ட எங்க இருவரைப்பற்றி வாட்ச்மேன் என்ன நினைத்துக்கொண்டானோ?

இன்ஸ்பெக்டர் பேசிய ஒரு வார்த்தைதான் என்னைத் துரத்திக்கொண்டிருந்தது. போலீசாரிடம் சாட்சிகளின் நிலைமையை எடுத்துக்காட்டும் வார்த்தை அது. யோசித்துப் பார்க்கப் பார்க்கப் புது அர்த்தங்களைத் தரும் வார்த்தை அது. சாதாரண சாட்சியம் இல்லை. என் கணவரின் நேர்மைக்கு சம்பந்தப்பட்ட சாட்சியம் அது.

காவல் நிலையத்தை நெருங்கும்போது என் சந்தேகம் உண்மை என்பதற்கு அறிகுறிகள் தென்பட்டன. நாளை காலையில் கோர்ட்டில் ஆஜர்படுத்த வேண்டிய பெண்ணை இன்ஸ்பெக்டர் அவரிடம் ஒப்படைத்துக்கொண்டிருந்தார். அவர் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து காரில் ஏற்றினார். இரவு மூன்று மணிக்கு கார் அந்த ஆளரவமற்ற சாலையில் மெதுவாக எங்கேயோ போய்க்கொண்டிருந்தது.

பின்னாலிருந்து சற்று தொலைவில் நான் பின் தொடர்ந்து கொண்டிருந்தேன். இன்ஸ்பெக்டர் சொன்ன வார்த்தைகளின் பொருள் இப்பொழுது என் மனதிற்கு விளங்கிவிட்டது.

"போட்டோகூட வேறு எந்த சாட்சியங்களும் இல்லை. அனாவசியமாக எங்கள் எஸ். ஐ. இவ்வளவு தூரத்திற்குக் கொண்டு வந்துவிட்டான். அப்பொழுதே அந்த போட்டோவைக் கிழித்துப் போட்டிருந்தால் போதாதா?"

அவர் தன்னுடைய மகளை எங்கே அழைத்துப் போகிறார்? போட்டோவைக் கிழித்தெறிவது போல் இப்பொழுது...

என் கணவரைப்பற்றி அந்த விதமாக என்னால் யோசிக்க முடியவில்லை.

ஒரு விலைமகளிர் விடுதியில் அந்தப் பெண்ணின் தாய் இருப்பாளா?

என் சக்களத்தி?

இருவரும் அங்கேதான் போய்க்கொண்டு இருக்கிறார்களோ?

அப்படியானால் அந்த அபூர்வமான சந்திப்பில் நானும் இருந்தாக வேண்டும். இரண்டில் ஒன்று தெரிந்துகொள்ள.

அவருடைய காரையே பின் தொடர்ந்து என் காரை செலுத்திக்கொண்டிருந்தேன்.

போலீசார் எந்த ஏரியாவில் ரெயிடிங் செய்தார்கள் என்று தெரியவில்லை. அதனால் அவர் தன் மனைவியை (முதல் மனைவி என்று அழைப்பதா இல்லை இரண்டாவது மனைவி என்று அழைப்பதா?) சந்திக்க எந்தப் பக்கமாகப் போய்க் கொண்டிருக்கிறார் என்று எனக்குத் தெரியாது.

அவர் மகளுடன் பேசிக்கொண்டே நிதானமாக டிரைவ் செய்துகொண்டிருக்க வேண்டும். அதனால் கார் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது. டிரைவிங் சரியாக வராத எனக்கு இது நல்லதாகி விட்டது.

அதற்குள் திடீரென்று கார் வலது பக்கமாகத் திரும்பி ஒரு ஸ்டார் ஹோட்டலுக்குள் நுழைந்தது. என் வியப்புக்கு எல்லையே இல்லை. ஒரு விலைமகளிர் விடுதியில் பிடிபட்ட பெண்ணுடன் சேர்ந்து இவர் இவ்வளவு விலை உயர்ந்த ஹோட்டலுக்குள் நுழைவதாவது? காரை வெளியிலேயே நிறுத்திவிட்டு, அவர்கள் உள்ளே போனபிறகு உள்ளே அடி எடுத்து வைத்தேன்.

அவர் கௌண்டர் அருகில் நின்று எழுதிக்கொண்டிருந்தார். அப்படியென்றால் அறையை வாடகைக்கு எடுத்துக்கொள்கிறார் போலும். பெற்ற மகளை இவ்வளவு விலை உயர்ந்த ஹோட்டலில் தங்க வைப்பது பாராட்டத் தக்க விஷயம் என்றாலும் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வராமல் இருப்பது இன்னும் பாராட்டத்தக்கது.

இருவரும் சேர்ந்து லிஃப்டில் சென்றார்கள். அவர்கள் போய் விட்டார்கள் என்று நிச்சயமாகத் தெரிந்த பிறகு நான் ரிசெப்ஷன் அருகில் சென்றேன்.

"இப்பொழுதுதான் என் மகளும், கணவரும் செக் இன் செய்தார்கள். அவர்களுடைய ரூம் நம்பர் எது?"

அவன் என் பக்கம் வித்தியாசமாகப் பார்த்தான். பார்ப்பான் என்று எனக்குத் தெரியும் தந்தையும், மகளும் கையில் எந்த லக்கேஜும் இல்லாமல் அறையை எடுத்துக்கொண்ட இரண்டு நிமிடங்களுக்கெல்லாம் தாய் வந்து விசாரிப்பது அவனுக்கு வியப்பு ஏற்படுத்தினால் அதில் ஆச்சரியப்பட வேண்டியது என்ன இருக்கு? இருந்தாலும் அவன் தன் உணர்ச்சிகளை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அறையின் நம்பரைச் சொன்னான். பெரிய பெரிய ஹோட்டல்களின் வழக்கம் இது தான். ஒரு தந்தை, இரண்டு மகன்கள், மூன்று மகள்கள் வந்தாலும் முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்ட மாட்டார்கள்.

என் மனம் ரொம்ப அமைதியாக இருந்தது. ஏதாவது பெரிய ரகளை நடக்கும் முன் இப்படித்தான் அமைதியாக இருக்கும்.

லிஃப்டில் சென்றேன்.

விசாலமான வராண்டா. வரிசையாக இரண்டு பக்கமும் அறைகள்.

104 நம்பருக்கருகில் நின்றேன்.

இதுபோன்ற ஸ்டார் ஹோட்டல்களில் உள்ள சிக்கல் என்னவென்றால் ஆட்டோமேட்டிக்காக பூட்டிக்கொண்டு விடும். வெளியில் இருப்பவர்களுக்கு உள்ளே இருப்பவர்கள் தாழ்பாள் போட்டுக்கொண்டிருக்கிறார்களா இல்லையா தெரியாது.

என்ன செய்யலாம் என்று சற்று நேரம் யோசித்தேன். கதவைத் தட்டலாம். அதனால் என்ன பயன்? அவர் கதவைத் திறப்பார். முதலில் வியப்படைந்து போவார். ஆனால் தரளா ஃபெர்டிலைஸர்ஸ் மேனேஜிங் டைரக்டர் இல்லையா. நிமிடத்தில் சுதாரித்துக்கொள்ள அவருக்குத் தெரியும்.

"யாரோ ஒருபெண், நான்தான் அவளுடைய தந்தை என்று பிளாக்மெயில் செய்கிறாள். காவல் நிலையத்தில் வைத்துப் பேசினால் பேப்பர்காரங்க யாராவது பார்த்தால் விஷயம் வெளியில் பரவி விடும் என்று இங்கே அழைத்து வந்தேன்' என்று எளிதாகச் சமாளித்துவிடுவார்.

ஏற்கனவே போலீசார் ரெயிடிங், காவல் நிலையம், இப்பொ இந்த ஸ்டார் ஹோட்டல்... இவற்றால் மிரண்டு போயிருக்கும் அந்தப் பெண்ணால் என்ன பேச முடியும்?

அதனால்... அது இல்லை நான் செய்ய வேண்டியது.

என்ன செய்யலாம் என்று நான் யோசித்துக்கொண்டிருந்த போது, கதவு திறந்த சத்தம் கேட்டது. சட்டென்று மறைந்து கொண்டேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த இடத்திலும் வெளிச்சம் இருந்தது.

வேகமாகப் படிகளில் இறங்கினேன். பத்து படிகள் இறங்கி, திருப்பத்தில் நின்றுகொண்டேன். லிஃப்டிற்காக காத்திருக்காமல் அவரும் படிகளில் இறங்க முற்பட்டால் நான் பிடிபட்டுப் போவது நிச்சயம்.

என் இதயம் வேகமாக துடித்துக்கொண்டிருந்தது.

அவர் லிஃப்ட் பெல்லை அழுத்திவிட்டு அங்கேயே நின்று கொண்டிருந்தார். நான் நின்ற இடத்திலிருந்து அவரை தெளிவாக பார்க்க முடிந்தது. அவருடைய முகத்தைப் பார்க்கும் போது திடீரென்று பத்து வயது கூடிவிட்டது போல் தோன்றியது. சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து அடிக்கடி முகத்தைத் துடைத்துக்கொண்டார். திடீரென்று அவருக்கு முன்னால் போய் நிற்கவேண்டும் என்ற எண்ணத்தை வலுக்கட்டாயமாக அடக்கிக்கொண்டேன். இப்பொழுது கூடாது. அதற்கு இன்னும் நேரம் இருக்கிறது. தற்சமயம் என் சக்களத்தியைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதற்குள் லிஃப்ட் வந்துவிட்டது. அவர் அதில் நுழைந்து கீழே இறங்கிப் போய்விட்டார்.

நான் உடனே அறைக்குள் போகவில்லை. அவர் எதற்காகக் கீழே இறங்கிப் போனாரோ, திரும்பி வருவாரோ இல்லையோ தெரியாது. அதனால் ஜன்னல் வழியாகப் பார்த்தேன். சற்று நேரம் கழித்து அவர் கீழே காரை நோக்கி நடந்து போவது தென்பட்டது. அந்தக் கார் புறப்பட்டுப்போன பிறகு வராண்டாவுக்குப் போய், அறையின் முன்னால் நின்று பெல்லை அழுத்தினேன்.

ஒரு நிமிடம் கழித்துக் கதவு திறந்துகொண்டது. எதிரே பதினாறு வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரம் யாருமே பேசிக்கொள்ளவில்லை. இருவரும் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக்கொண்டு நின்றிருந்தோம். அவள் என்னை எதிர்பார்க்கவில்லை என்பதால் பயம் அவள் முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது.

"யார்... யார் வேண்டும்?" என்றாள்.

"நான் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வர்றேன்" என்றேன்.

அப்பெண்ணின் முகத்தில் பயம் இன்னும் தெளிவாகத் தென்பட்டது. கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. இன்னும் ஒரு நிமிடம் தாமதித்தால் அழுதுவிடுவாள் போல் இருந்தாள். எனக்கு இரக்கமாக இருந்தது.

"பதற்றப்படாதே. எங்க இன்ஸ்பெக்டர் நீ எப்படி இருக்கிறாய் என்று பார்த்துவிட்டு வரச் சொல்லி என்னை அனுப்பியிருக்கிறார்" என்றேன்.

அவள் பதில் எதுவும் சொல்லவில்லை.

"அவர் நாளை காலையில் வர்றேன்னு சொன்னாரா?"

ஆமாம். என்பது போல் தலையை அசைத்தாள். தொடர்ந்து நான்கைந்து கேள்விகள் கேட்டேன். எதற்குமே சரியாக பதில் சொல்லவில்லை. அதற்குள் போன் மணியடித்தது. அவளுக்கு முன்னால் நானே ஓடிப்போய் போனை எடுத்தேன்.

"ஹலோ" அவருடைய குரல்.

ரிசீவரை அவளிடம் தந்து விட்டு "நான் இங்கே இருப்பதைப் பற்றி அவரிடம் எதுவும் சொல்லாதே" என்றேன்.

அந்தப் பெண் மிரண்ட கண்களுடன் தலையை அசைத்தாள். போனில் அவர் குரல் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

"எந்த பயமும் இல்லை. நிம்மதியாகத் தூங்கு. நாளைக் காலையில் நான் வருகிறேன். அப்பொழுது எல்லா விஷயங் களையும் பேசிக்கொள்ளலாம்."

"சரி" போனை வைத்துவிட்டாள்.

"இப்பொ சொல். யார் நீ? உன் பெயர் என்ன?"

"ஸ்ரீ ....ஸ்ரீதேவி"

"உங்கம்மா பெயர்?"

"இந்திரா."

"ஆனந்தன் சார் உனக்கு என்னவாகணும்?"

அந்தப் பெண்ணின் முகத்தில் வியப்புத் தோன்றியது. இது கூட உனக்குத் தெரியாதா என்ற வியப்போ. . . இப்பத்தானே போலீஸ் ஸ்டேஷனில் சொன்னேன் என்ற ஆச்சரியமோ. . .

"என் தந்தை" என்றாள்.

என் முகத்தில் எந்த உணர்ச்சிகளும் தென்படாதவாறு கவனமாக இருந்தேன். "உனக்கு அண்ணன், தங்கை என்று யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டேன்.

"யாருமே இல்லை."

"நீ ஒரே பெண்ணா?"

"ஆமாம்."

"எங்கே இருக்கீங்க?"

"இந்த ஊரு இல்லை. மதுரை."

"உங்க அப்பாவுக்கு என்ன வேலை?"

"தரளா ஃபெர்டிலைஸர்ஸில் இன்ஸ்பெக்டர். எப்போதும் ஊர்களுக்குப் போய்க் கொண்டே இருப்பார்."

"அப்படியா சேதி' என்று நினைத்துக்கொண்டேன்.

"உங்க அம்மா எங்கே வேலை பார்க்கிறாள்?"

"ஸ்கூலில் டீச்சர்."

"பின்னே நீ இந்த ஊருக்கு எப்படி வந்தாய்? விபசார விடுதியில் எப்படி சிக்கிக்கொண்டாய்?"

அந்தப் பெண் அழத்தொடங்கிவிட்டாள். ரொம்ப நேரம் அப்படியே அழுதுகொண்டு இருந்தாள். என் நிலையும் அதே தான் என்றாலும் கோபத்தாலும், யார் மீது என்றே தெரியாத ஆத்திரத்தாலும் என் உடல் தகித்துக்கொண்டிருந்தது.

"அம்மா, அப்பா, நானும் காஷ்மீருக்குப் போயிருந்தோம்." சொல்லத் தொடங்கினாள்.

"எப்பொழுது?" என் வாயிலிருந்து வார்த்தைகள் துப்பாக்கிக் குண்டாய் வெளிவந்தன.

"போன மார்ச் மாதம்."

மார்ச் பத்தாம் தேதியிலிருந்து இருபதாம் தேதி வரை கோயம்புத்தூரில் ஏதோ மீட்டிங் இருப்பதாகச் சொல்லிவிட்டுப் போயிருந்தார். இதற்குத்தான் போலும்.

"மாதத்தில் எவ்வளவு நாள் இருப்பார் மதுரையில்?"

"எப்பொ பார்த்தாலும் டூருக்குப் போய்க்கொண்டிருப்பார். வீட்டில் இரண்டு மூன்று நாள்தான் இருப்பார். அதான் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் எப்போதும் சண்டை வந்து கொண்டே இருக்கும்."

"எதற்காக?"

"அந்த வேலையை விட்டு விட்டு வேறு ஏதாவது பார்த்துக் கொள்ளச் சொல்வாள் அம்மா. அப்பா கேட்க மாட்டார். காஷ்மீரில் இருக்கும்போது இன்னும் பெரிய தகராறு வந்து விட்டது. எங்களை மதுரையில் கொண்டு வந்து இறக்கி விட்டு விட்டுப் போய்விட்டார். அப்பொழுதிலிருந்து மறுபடியும் வரவே இல்லை. அம்மா பாவம். சாப்பிடுவதைக்கூட விட்டு விட்டாள். அன்றைக்கு ஒரு நாள் மண்ணெண்ணையை மேலே ஊற்றிக் கொண்டு தற்கொலைக்கு முயற்சித்தாள். எனக்கு ரொம்பப் பயமாக இருந்தது" என்று சொல்லிவிட்டு விசும்பினாள்.

"உன் சிறுவயதிலிருந்தே உங்க அப்பா இப்படித்தானா? அதாவது இதே போல் டூர் என்று சுற்றிக்கொண்டிருப்பாரா?"

அந்தப் பெண் தலையை அசைத்தாள்.

"நீங்க இரண்டே பேர்தானே வீட்டில்?"

அதற்கும் தலை அசைத்தாள்.

"உன் அம்மா தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்த போது நீ என்ன செய்தாய்?"

"அப்பாவைக் கெஞ்சிக் கூத்தாடி அழைத்து வருவதாகச் சொன்னேன். போலீஸ்காரம்மா! நீங்களே சொல்லுங்கள். எத்தனை நாட்களுக்குத்தான் இப்படித் தனியாக இருப்போம்? அப்பாவுக்கோ அந்தக் கம்பெனி வேலையை விடுவதில் விருப்பம் இல்லை. அதனால் நானே அந்தக் கம்பெனி முதலாளியைச் சந்தித்து, அப்பாவை வேறு பிரிவுக்கு மாற்றி விடுங்கள். இல்லாவிட்டால் எங்க அம்மா செத்துப் போய் விடுவாள் என்று சொல்ல நினைத்தேன்."

"அந்த முதலாளி அயோக்கியனாகவும், ஏமாற்றுக் காரனாகவும் இருந்தால்?"

"அப்பாவை அழைத்துக்கொண்டு போகலாம்னுதான் வந்தேன். எங்க அம்மா ரொம்ப நல்லவள். அப்பாவைவிட்டு

இருக்க முடியாமல் அப்படிச் சண்டை போட்டாளே தவிர இப்பொழுது ரொம்ப வருத்தப்படுகிறாள். அப்பா வீட்டில் இல்லாவிட்டால் எங்களுக்கு தனிமையாகவும், திகிலாகவும் இருக்கு. ஆனாலும் இவ்வளவு கோபமா? நாலு மாதத்தில் ஒருதடவை கூட வரவே இல்லை. அதனால் தான் நான் வந்தேன்."

"இந்த ஊருக்கு எப்ப வந்தாய்?"

"மாலை ரயிலில் வந்தேன். எங்கே போவது என்று தெரியவில்லை. அதற்குள் யாரோ தானாகவே முன்வந்து தனக்கு இந்த முகவரி தெரியும் என்று சொல்லி அழைத்துப் போய்..."

அதற்கு மேல் வார்த்தைகளை முடிக்கவில்லை. மற்றது புரிந்து விட்டது. அதிர்ஷ்டசாலி தான் இந்தப் பெண். இன்று இரவு மட்டும் ரெயிடிங் நடந்திருக்காவிட்டால் இந்த மலர் நிர்தாட்சிணயமாகக் கசக்கி எறியப்பட்டிருக்கும் இந்நேரம்.

"பார்க்க நல்லவன் போலவே தென்பட்டான். புரோக்கர் என்று நினைக்கவே இல்லை" என்றாள்.

"பார்க்க நல்லவர்கள் போல் தென்படுக்கிறவர்கள் எல்லோரும் நல்லவங்க இல்லையம்மா. உனக்கு இன்னும் அனுபவம் போதாது. இத்தனை வயது வந்தும் எனக்கே அந்த அனுபவம் இல்லை" எழுந்துகொண்டே சொன்னேன். "இனி நீ படுத்துக் கொள். உன்னுடைய அப்பா காலையிலேயே வந்து விடுவார். அது மட்டுமே இல்லை. இந்த இன்ஸ்பெக்ஷன்கள் எதுவும் இருக்காது. எங்கேயும் போகாமல் உங்களுடனே இருப்பார்."

"அதாவது இன்ஸ்பெக்டர் அய்யாவிடம் சொல்லி செக்ஷனை மாற்றி விடுவீங்களா?"

"செக்ஷன் இல்லை. கம்பெனியையே மாற்றி விடுவேன்." என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன்.

லிஃப்டில் இறங்கும்போது என் மனம் என் வசத்தில் இருக்கவில்லை.

ஒரு உரத் தொழிற்சாலையின் மேனேஜிங் டைரக்டராக அவர் அதிகமாக டூர் போவதோ அல்லது கேம்புகளுக்குப் போவதோ அவசியம் இல்லை. ஆனால் அவர் ஒவ்வொரு மாதமும் ஏதோ ஒரு வேலையாய் டூருக்கு ஏன் போகிறாரோ இப்பொழுது புரிந்து விட்டது. எல்லாவற்றையும் விட முக்கியமாகப் போன கோடையில் வேறு ஏதோ ஊருக்குப் போவதாகச் சொல்லிவிட்டு மனைவி, மகளுடன் காஷ்மீருக்குப் போனது உண்மை. அதற்குப் பிறகு திரும்பி வந்ததும் கோயம் புத்தூரிலிருந்து வாங்கிவந்ததாகச் சொல்லி சாஹிதி, கவிதா இருவருக்கும் உடைகள் கூடத் தந்தார். எங்க மூவரையும் உட்காரவைத்து அங்கே நடந்த விசேஷங்களைக் கதை கதையாகச் சொன்னார். அவ்விடத்து நிகழ்ச்சிகளைக் கண் முன்னாடி கொண்டு வந்து நிறுத்தினாற்போல் விவரித்துச் சொன்னார்.

அதை நினைக்கும் போதுதான் எனக்கு வெறுப்பாக இருந்தது.

ஒருத்தர் மேல் கோபம் வந்தாலோ, விருப்பம் இல்லாவிட்டாலோகூடப் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் வெறுப்பு வந்துவிட்டால் கஷ்டம். அவரே என்னிடம் ஒரு பெண்ணை இதுபோல் இன்ன காரணங்களுக்காக "வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும். நான் இது போன்ற விஷயங்களைச் சகித்துக்கொள்ள மாட்டேன் என்றும், பிரிந்து போய் விடுவேன் என்றும் என் சுபாவம் அவருக்குத் தெரியும். நான் பிரிந்து போய் விட்டால் அடுத்த நிமிடமே தரளா ஃபெர்டிலைஸர்ஸ்...

அதற்காகத்தான் அவர் என்னுடன் இருக்கிறாரா?

அந்த எண்ணத்தையே என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எங்களுடையது ரொம்ப அந்நியோந்நியமான தாம்பத்தியம் என்று இதுநாள் வரை நான் நினைத்து வந்தேன்.

அவர் என்னை நன்றாகத்தான் பார்த்துக்கொள்வார். ஆனால் அது ஒன்று மட்டும் இருந்து விட்டால் போதுமா? இந்தப் பெண்ணின் வயதைப் பார்த்தால் ரொம்ப சின்னப் பெண்ணாகத் தென்படுகிறாள். அந்தக் கணக்கில் பார்த்தால் எங்கள் திருமணம் முடிந்த ஆறேழு வருடங்களுக்குப் பிறகு அந்த மதுரைப் பெண்ணுடன் அறிமுகம் ஏற்பட்டு இருக்க வேண்டும். அவளிடம் இவர், தான் திருமணம் ஆகாதவன் என்று சொல்லியிருக்க வேண்டும்.

எவ்வளவு கொடுமை!

இப்படிப்பட்டவருடனா நான் இத்தனை வருடங்கள் குடித்தனம் செய்து வந்தேன்?

லிஃப்ட் கீழே வந்தது. இரவு மூன்று மணி.

ரிசப்ஷனில் ஆளரவம் இல்லை.

நான் வந்ததை அவர்கள் பார்க்கவில்லை போலும். ரிசப்ஷனிஸ்ட் பக்கத்தில் இருந்தவனுடன் பேசிக்கொண்டிருந்தான்.

"முதலில் தந்தையும், மகளும் வந்தார்கள். பிறகு தாய் வந்தாள். சற்று நேரம் கழித்து மகன் வந்தான். வேடிக்கையாக இல்லை? அரைமணி நேரத்திற்குள் ஒருத்தரை அடுத்து இன்னொருவர் வந்தது."

இடிமுழக்கத்தைப் போல் கேட்டன அந்த வார்த்தைகள்.

ம...க...ன்!

இந்த மகன் யார்?

அந்தப் பெண் சொன்ன வார்த்தைகள் எனக்கு நன்றாக நினைவில் இருந்தது. "எங்க அம்மாவுக்கு நான் ஒரே பெண் தான். நானும், எங்க அம்மாவும் மட்டும்தான் இருக்கிறோம்."

பின்னே இந்தப் பையன் யார்?

ரிசெப்ஷன் அருகில் வந்து அதே கேள்வியைக் கேட்டேன்.

"இப்பத்தான் உங்க பையன் வெளியில் போனான். எனி பிராப்ளம்?" மரியாதை நிரம்பிய குரலில் கேட்டான் ரிசெப்ஷனிஸ்ட்.

நான் நிற்கவில்லை. அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்றுகூட யோசிக்கவில்லை.

விசாலமாக இருந்த ரிசெப்ஷனின் கோடி வரையிலும் ஓடி, அதே வேகத்தில் படிகளில் இறங்கினேன். அதே நேரத்தில் அந்தப் பையன் தன் ஜீப்பை ரிவர்ஸ் எடுத்து, காரிடார் வழியாக வெளியே திருப்பிக்கொண்டிருந்தான். விளக்கு வெளிச்சம் அவன் முகத்தின்மீது நன்றாக விழுந்தது.

மெல்லிய கத்தல், பயத்தோடு. . . நம்ப முடியாமல் என் தொண்டையிலிருந்து கீச்சென்று வெளியே வந்தது.

இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன் என் கணவர் எப்படி இருந்தாரோ அதே தோற்றத்தில், அச்சு வார்த்தாற் போல் இருந்தான். எந்த கோர்ட்டும், எந்த நிபுணரும் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை, அவன் அவருடைய ரத்தத்தைப் பகிர்ந்துகொண்டு பிறந்தவன் என்று!

3

அந்த இளைஞன் ஜீப்பிலிருந்து தலையை வெளியே நீட்டி "என்ன மேடம்? உயிரோடு இருக்கணும்னு ஆசை இல்லையா?" என்று கேட்டான். நான் அவன் வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை. அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்படியே அவருடைய ஜாடை!

ஜீப்பின் ராடைப் பிடித்துக்கொண்டேன்.

"லிஃப்ட் வேணுமா மேடம்?" என்று கேட்டான்.

"உங்க அப்பாவின் பெயர் என்னப்பா"

நள்ளிரவு நேரத்தில் ஒரு ஹோட்டலின் காரிடாரில் ஜீப்பை நிறுத்தி, அது போன்ற கேள்வியைக் கேட்டதற்கு அவன் என்னைப் பைத்தியக்காரி என்று நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை. நான் எதையும் பொருட்படுத்தும் நிலையில் இல்லை.

"உங்க அப்பாவின் பெயர் என்ன?" மறுபடியும் கேட்டேன்.

அவன் என்னை வித்தியாசமாகப் பார்த்துவிட்டு "எங்க அப்பாவை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

எனக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

"உன்னை எங்கேயோ பார்த்தாற்போல் இருக்கு. அதனால் தான்."

"அசம்பவம்!" ஆங்கிலத்தில் சொன்னான். ஆனால் அதற்குள் தன்னைச் சுதாரித்துக்கொண்டு "நீங்க அமெரிக் காவில் இருக்கீங்களா?" என்று கேட்டான்.

"ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"நான் ஒரு மாதத்திற்கு முன்னால்தான் அமெரிக் காவிலிருந்து வந்தேன்."

"உங்க அப்பா?"

"என் சிறு வயதிலேயே இறந்து போய்விட்டார். நானும் அம்மாவும் மாமாவிடம்தான் இருக்கிறோம்.

அவன் ஒருக்கால் என் வயதிற்கு மதிப்பு அளித்து பேசிக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அத்தனைப் பொறுமையாகப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை.

"உன் தங்கை?" என்று கேட்டேன்.

அவன் நெற்றியைச் சுளித்துவிட்டு என்னை ஒரு பைத்தியக்காரியைப் பார்ப்பது போல் பார்த்தான். "தங்கையா? யாரு?"

"மேலே அறையில் இருக்கிறாளே"... "ஸ்ரீதேவி."

அவன் பார்வை கூர்க்காவின் மீது விழுந்தது. அவனைக் கூப்பிடப் போன பொழுது "நான் பைத்தியம் இல்லை" என்றேன்.

"நீங்க என்ன பேசுறீங்கன்னு எனக்குப் புரியவில்லை. ஸ்ரீதேவியோ, பூதேவியோ எனக்கு யாரையும் தெரியாது. நான் இந்த ஹோட்டலில் பத்து நாட்களாகத் தங்கியிருக்கிறேன். இரவு வர வேண்டியது ப்ளயிட் தாமதமாகிவிட்டது. அதனால் தான் விமான நிலையத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறேன். அந்த ப்ளயிட்டில்தான் அம்மா அமெரிக்காவிலிருந்து வருகிறாள். என் பெயர் கோபிசந்த். அம்மாவின் பெயர் பாக்யேஸ்வரி தேவி. என்னுடைய அப்பா சிறுவயதிலேயே இறந்துவிட்டார். அம்மாவுக்கு நான் ஒரே மகன் தான்" வேக வேகமாக சொல்லி முடித்தான். என்னிடமிருந்து விடுபடுவதற் காக என்பது போல்.

மேற்கொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தராமல் கியரை மாற்றி ஜீப்பை முன்நோக்கிச் செலுத்தப்போனான்.

"உங்க அப்பா பெயர்?"

"ஆனந்தன்."

கால்கள் தடுமாறக் கீழே விழாமல் அரும்பாடுபட்டுச் சமாளித்துக்கொண்டு கடைசிக் கேள்வியைக் கேட்டேன்.

"உன் வீட்டுப் பெயர்? அதான் உன் அப்பாவின் வீட்டுப் பெயர்?"

"அயினம்பூடி. அயினம்பூடி ஆனந்தன்." ஜீப் சத்தத்தில் அவன் வார்த்தைகள் தேய்ந்து போய்விட்டன.

என் காலடியில் நிலம் இரண்டாகப் பிளந்து விட்டது போல் தோன்றியது. உலகமே கிர்ரென்று சுழன்றுகொண்டிருப்பது போல் இருந்தது.

என் கணவரின் பெயரும் அதுதான், வீட்டுப் பெயர் உள்பட.

காரை எப்படித்தான் ஓட்டிக்கொண்டிருந்தேனோ எனக்கே தெரியாது. என் இதயத்தில் எரிமலைகள் வெடித்துக் கொண்டிருந்தன.

மகள் விஷயம் தெரிந்த அரைமணிக்குள்ளேயே, மகன் விஷயமும் தெரியவந்தது நாடகம் போல் தோன்றினாலும், சாதாரணமாக இருந்தால் நான் அதை நம்பியிருக்க மாட்டேன். ஆனால் உருவ ஒற்றுமை? கண்ணால் பார்த்ததைக் காட்டிலும் வேறு சாட்சியம் என்ன வேண்டும். கோபிசந்த் அவருடைய மகன். யார் மறுத்தாலும் இது உண்மை. இருவரின் உடலிலும் ஒரே ரத்தம்தான் இருக்கிறது.

என் தலை வெடித்துவிடும் போல் இருந்தது. ஒரு பக்கம் ஸ்ரீதேவி . . . இன்னொரு பக்கம் கோபிசந்த். என் இரு சக்களத்திகளுக்குப் பிறந்த இரு குழந்தைகள்.

ஒரு சக்களத்தி, தன் கணவன் இறந்துவிட்டான் என்று எண்ணிக்கொண்டு, மகனை அழைத்துக்கொண்டு அமெரிக் காவுக்குப் போய்விட்டாள்.

இன்னொருத்தி தன் கணவன் கம்பெனி வேலை விஷயமாக டூருக்குப் போய்கொண்டிருக்கிறான் என்று நினைத்து திருப்திபட்டுக்கொண்டிருக்கிறாள்.

இதெல்லாம் உண்மைதானா இல்லை கனவா?

கனவுதான். ஆமாம் கனவேதான்.

எனக்குப் பெரிதாகச் சிரிப்பு வந்து விட்டது. இரவு அவருக்காகக் கொண்டு வந்த பால் டம்ளரைப் போனுக்குப் பக்கத்திலேயே வைத்து விட்டு அப்படியே தூங்கிவிட்டேன். அதற்குள் தூக்கம் கண்களைச் சுழற்றிக்கொண்டு வந்துவிட்டது.

அந்தத் தூக்கத்தில் இந்தக் கனவு. அவருக்குப் போன் வந்தது போலவும், நான் உடனே கிளம்பியது போலவும், மகளையும் மகனையும் அடுத்தடுத்து சந்திப்பது போலவும்.... வேடிக்கை யான கனவுதான். நான் புன்முறுவலுடன் காரை ஓட்டிக் கொண்டிருந்தேன். அதற்குள் நாய் ஒன்று குறுக்கே வந்ததால் பிரேக் போட்டதில் முன்னால் சாயப் போனேன். கனவு கலைந்து விட்டது போல் இருந்தது.

ஆனாலும்கூட நான் காரிலேயே தான் உட்கார்ந்திருந்தேன். பால் வண்டி என்னைத் தாண்டிக் கொண்டு போயிற்று.

அதனால் இது கனவு இல்லை. கனவாக இருந்தால் நன்றாக இருக்குமே என்று என் மனதில் தோன்றிய எண்ணம் மட்டும் தான்.

ஸ்ரீதேவி. . . கோபிசந்த்.

இந்திரா. . . பாக்யேஸ்வரி.

இவ்வளவு நாட்களாகப் பிரத்யட்ச தெய்வம் என்று நான் நம்பிக் கொண்டிருந்த மரத்தின் கிளைகள், பழங்கள்...

அது மட்டும் உண்மையாக இருந்தால், அந்த மரத்தை அடியோடு வெட்டிப்போட்டு விட்டு, நானும் எரிந்து சாம்பலாகி விடப் போவது நிச்சயம். நான் எப்படிப்பட்டவள் என்று உங்களுக்கு முன்பே சொல்லிவிட்டேன். இதே சம்பவம் உங்களுக்கு எதிர்ப்பட்டால் ஒருக்கால் நீங்க சும்மா இருந்து விடுவீர்களோ என்னவோ. அவருக்கென்ன ஆண்பிள்ளை என்றோ அல்லது அய்யோ. . . அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால் என் தாலி பாக்கியம் என்னாவது என்றோ மனச்சாட்சியை வஞ்சித்துக்கொள்வீர்கள். அப்படித்தானே.

நான் அதுபோல் செய்யமாட்டேன்.

ஒரு ஆண்தான் உயிரோடு இருக்கும்போதே இறந்து போய் விட்டதாக நாடகமாடி ஒருபெண்ணை வெளிநாட்டிற்கு அனுப்பினால், ஒரு ஆண் தான் திருமணமானவனாக இருந்தும் பொய்யைச் சொல்லி இன்னொரு பெண்ணை மணந்து

கொண்டால் அவன் என்கணவனாக இருந்தாலும் சரி சும்மாவிடப் போவதில்லை.

ஒரு முடிவு கட்டிவிடுகிறேன்.

நான் திரும்பி வந்தபோது வீடெல்லாம் விளக்குகள் போடப்பட்டிருந்தன. கார் சத்தம் கேட்டதும் அவர் பதற்றத்தோடு போர்டிகோவுக்கு வந்துகொண்டே "எங்கே போயிருந்தாய்" நாங்கள் எல்லோரும் எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறோம், தெரியுமா?" என்றார்.

கண்ணிமைக்காமல் அவரையே பார்த்தேன். என் கணவர் இவ்வளவு கை தேர்ந்த நடிகர் என்று நான் நினைத்திருக்க வில்லை. மயிலிறகைத் தலையில் சூடிக்கொண்ட ஸ்ரீராமச் சந்திரனைப் போல் இருந்தார். பேசாமல் உள்ளே நடந்தேன். சாஹிதியும் விழித்துக் கொண்டுதான் இருந்தாள். ஆனால் எதுவும் கேட்கவில்லை.

நாங்கள் இருவரும் எங்க அறைக்குப் போனோம்.

"எங்கே போயிருந்தாய்?" மறுபடியும் கேட்டார்.

"என் பாய் ஃபிரண்டைச் சந்திக்க."

அவர் சிரிக்க முயற்சி செய்துகொண்டே "பின்னே இவ்வளவு சீக்கிரமாய் திரும்பி விட்டாயே?" என்று கேட்டார்.

"ஹோட்டலில் அறை எடுத்துக்கொள்வதற்காக இருவரும் போனோம். அங்கே பழைய சிநேகிதி ஒருத்தி தென்பட்டாள். அவள்தான் உதவி செய்தாள். இவ்வளவு நேரமாக அங்கே தான் இருந்தேன். அவள் பெயர் என்னவென்று கேட்கவில்லையே?"

"என்ன?"

"இந்திரா. எந்த ஊரிலிருந்து வந்தாள் என்று கேட்க மாட்டீங்களா?"

"சொல்லு" என்றார். சினேகிதி என்றதும் அவருடைய பதற்றம் குறைந்துவிட்டது.

"மதுரை." அவர் முகத்தில் மாறப்போகும் உணர்ச்சிகளைக் கவனமாகப் பார்த்துக்கொண்டே சொன்னேன். ஆனால் அவரிடம் எந்த மாறுதலும் இல்லை. எனக்கு உடல் பற்றி எரிவது போல் இருந்தது.

"இந்திராவின் மகள் ஸ்ரீதேவி கூட வந்திருந்தாள்" என்றேன்.

அப்பொழுதும் அவர் முகத்தில் மாறுதல் தெரியவில்லை.

"நான் போனது எந்த ஹோட்டல் என்று கேட்க மாட்டீங்களா?"

"எந்த ஹோட்டல்?"

"பாம்க்ரோவ்."

அப்பொழுது தென்பட்டது அவர் முகத்தில் மாற்றம். ஏதோ உந்தித் தள்ளுவது போல் திடீரென்று அவருடைய முகத் தோற்றம் மாறிப்போய் விட்டது.

"நீ. . . நீ. . . பாம்க்ரோவுக்கு வந்தாயா?" என்று கேட்டார்.

"போனாயா என்று கேட்காமல் வந்தாயா என்று கேட்கிறீங்களே. ஏன்? நீங்களும் அங்கே வந்தீங்களா?" கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டே கேட்டேன்.

அவர் பதில் பேசவில்லை. எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் தொடங்கினார். அவர் முகம் சிவந்து கன்றி விட்டிருந்தது.

"இன்னும் அரைமணி நேரத்தில் பாக்யேஸ்வரி தேவிகூட நம் நாட்டிற்கு வருகிறாள்." நிறுத்தி, நிதானமாகச் சொன்னேன். அவருடைய நடை நின்றுவிட்டது.

"பாக்யேஸ்வரியா?" நெற்றியைச் சுளித்துக்கொண்டே கேட்டார்.

"ஏன்? அவளைக்கூட உங்களுக்குத் தெரியுமா? அவள் கணவரின் பெயர்கூட ஆனந்தன்தானாம். பாவம். . . கல்யாணம்

ஆனதுமே அவர் இறந்து போய் விட்டாராம். அவள் மகன் பெயர் கோபிசந்த்."

அவரால் அவ்வளவு வேகமாக நகர முடியும் என்று கனவிலும் நான் நினைக்கவில்லை. எதிர்பாராத வேகத்துடன் வந்து என் தோளைப் பற்றிக் கொண்டு "என்ன சொன்னாய்? கோபிசந்தா?" என்று கத்திவிட்டார். அவர் குரல் கீச்சென்று ஒலித்தது.

எங்கே பிடிக்க வேண்டும் என்று நினைத்தேனோ சரியாக அந்த இடத்தில் பிடிபட்டுவிட்டார்.

"ஏன்? கோபிசந்தை உங்களுக்குத் தெரியுமா?"

"எங்கே? கோபி எங்கே இருக்கிறான்?" ஆவேசமாகக் கேட்டார்.

"அவனுடைய அம்மா இன்றைக்கு விடியற்காலையில் அமெரிக்காவிலிருந்து வருகிறாள். அவளை ரிசீவ் செய்து கொள்ள ஏர்போர்ட்டுக்குப் போய்க்கொண்டிருந்தான். வேடிக்கை என்னவென்றால் அவங்க வீட்டுப் பெயரும் நம் வீட்டுப் பெயரும் ஒன்றுதான்."

அவருடைய காதில் நான் சொன்னது விழவே இல்லை. மறுபடியும் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டார். எங்கே என்று கேட்டேன்.

"ஏர்போர்ட்டுக்கு."

"நானும் வருகிறேன்."

"என்ன?" புரியாதவர் போல் கேட்டார்.

என்னுள் அதுவரை அடங்கியிருந்த ஆவேசம் கட்டு மீறிக் கொண்டு வெளிப்பட்டது.

"நானும் ஏர்போர்ட்டுக்கு வருகிறேன் என்று சொல்கிறேன். ஏன்? வரக்கூடாதா? பாவம் அவள்! நீங்க இறந்து போய்

விட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறாள். நீங்க உயிரோடு இருப்பதாக உங்க மகனிடம் நானும் சொல்லவில்லை. அங்கே சிவப்புச் சாயம் ஏதாவது கிடைத்தால் அவள் நெற்றியில் இடுங்கள். அந்தக் காட்சியைப் பார்க்க வேண்டுமென்றுதான் வருகிறேன். அங்கிருந்து அப்படியே உங்க மகளையும் அழைத்துக்கொண்டு மதுரைக்குக்கூடப் போவோம். பாவம்... அங்கே இருப்பவர்களுக்கு உங்கள் முதல் இரு மனைவியரைப் பற்றித் தெரிந்திருக்காது. மூன்று மனைவிகளும், ஐந்து குழந்தைகளும் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து சந்தோஷமாக இருக்கலாம். உங்க பெரிய மகன் ரொம்ப ஸ்மார்ட்டாக இருக்கிறான். அச்சு வார்த்தாற் போல் உங்கள் ஜாடைதான். ஆனால் குணத்தில் உங்களைக் கொண்டிருக்கிறானோ இல்லையோ தெரியாது. கொண்டிருக்கக் கூடாது என்று கடவுளிடம் வேண்டிக்கொள்கிறேன். அப்பொ நாம் கிளம்புவோமா? பாக்யேஸ்வரி, இந்திரா காத்துக்கிட்டு இருப்பாங்க."

அவர் பேசவில்லை. அருகில் வந்து கன்னத்தில் ஓங்கி அடிக்கப் போனவர், எப்படியோ சமாளித்துக்கொண்டு திரும்பிப் போய்விட்டார்.

4

கார் வேகமாகப் போய்கொண்டிருந்தது. அவர் மௌனமாக டிரைவ் செய்துகொண்டிருந்தார். என் ஆவேசம் இன்னும் அடங்கவில்லை. என் பலவீனத்தின் மீது எனக்கே கோபம் வந்தது. அவரை உலுக்கி எடுத்துவிட வேண்டும் என்று நினைத்திருந்தேன். திருமணம் ஆவதற்கு முன் எனக்கு அகம்பாவமே நிறைய இருந்தது. வயது ஆக ஆகக் குறைந்துவிட்டது. முன்பாக இருந்தால் இந்நேரத்திற்கு லாயர் எங்க வீட்டுக்கு வந்து விவாகரத்து நோட்டீஸைத் தயாரித்துக் கொண்டிருப்பார். ஆனால் ஏனோ அவ்வாறு நிகழவில்லை.

நிறைய பேர் சொல்வார்கள், பெண்ணாக இருப்பவள் பொருளாதார ரீதியில் பலவீனமாக இருப்பதால் ஆணைச் சார்ந்து இருக்கிறாள் என்று. ஆனால் எல்லா விஷயங்களிலும் அது உண்மை அல்ல. தரளா ஃபைனான்ஸ் சம்பந்தப்பட்ட எல்லாக் கம்பெனிகளும் என்னுடையதுதான். ஆனாலும் என்னால் உடனுக்குடன் எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லை. கணவனின் துர்குணங்களைச் சகித்துக் கொள்வது மனைவிக்குக் கடவுள் கொடுத்த வரமா இல்லை சாபமா?

நான் மட்டும் எல்லாப் பெண்களைப் போன்றவள் இல்லை என்பது என்னுடைய நம்பிக்கை. அரைமணி நேரத்திற்குள் கணவனின் இரு மனைவியரைப் பற்றியும், அவர்களுடைய குழந்தைகளைப் பற்றியும், முக்கியமாக கணவன் மூவரிடமும் ஒருவருக்குத் தெரியாமல் மற்றொருவரிடம் ஆடிக் கொண்டிருந்த நாடகம் பற்றியும் தெரிந்துகொள்ள நேர்ந்தால் என் அளவுக்கு நெஞ்சழுத்தத்தோடு மட்டும் யாராலும் இருந்திருக்க முடியாது. உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது.

அதற்குள் கார் விமான நிலையத்தின் முன்னால் வந்து நின்றது. எங்கும் ஆளரவம் இல்லை. இருவரும் கேட் அருகில் சென்றோம். அங்கேயும் யாருமே இல்லை. பயணிகளுக்காகக் காத்துக்கொண்டிருப்பவர்கள்கூட யாருமே இல்லை. அதற்குள் செக்யூரிடி ஆள் ஒருவன் எங்கள் அருகில் வந்து "என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"அமெரிக்காவிலிருந்து ஏதாவது ப்ளயிட் வரப் போகிறதா?" ஆங்கிலத்தில் கேட்டார் என் கணவர்.

"அமெரிக்காவிலிருந்து விமானம் இந்த ஊருக்கு நேராக வராது" என்றார் அந்த அதிகாரி கேலியாக.

"ஐ மீன் பாம்பேயிலிருந்தோ, டில்லியிலிருந்தோ, ஏதாவது ப்ளயிட் தாமதமாக வருகிறதா?"

"இல்லை." இனிக் கிளம்புங்கள் என்பது போல் சுருக்கமாகச் சொன்னார்.

அவர் என் பக்கம் பார்த்தார். என் முகம் வெளிறிவிட்டது. அந்த இளைஞன் சொன்ன வார்த்தைகள் இன்னும் என் காதுகளில் எதிரொலித்துக்கொண்டிருந்தன.

"என்ன சொன்னான் அவன்?" காரில் திரும்பிப் போய் கொண்டிருந்த போது கேட்டார் அவர். நான் பதில் பேசவில்லை. தவறு செய்தது அவர். தலையைக் குனிந்துகொண்டு விளக்கம் செய்ய வேண்டியது அவர்தான. என்னைக் கேள்வி கேட்கும் உரிமை அவருக்கு இல்லை.

"எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?" என்று கேட்டேன்.

"பாம்க்ரோவுக்கு."

"சின்ன மகளைப் பார்ப்பதற்காகவா?" என்று கேட்க நினைத்து மௌனமாக இருந்துவிட்டேன். குத்தலாகப் பேசுவது, அழுவது, சொல்லிக்காட்டுவது... கடைசியில் மனதைத் தேற்றிக்கொண்டு தொடர்ந்து குடித்தனம் செய்வது... இதெல்லாம் சராசரி மனைவிகள் செய்யும் காரியங்கள். தரளா அப்படிச் செய்ய மாட்டாள்.

நான் என்ன செய்யவேண்டும் என்று முன்பே தீர்மானித்துக் கொண்டு விட்டேன். இவர் என் கணவராக இருந்தாலும் சரி. பாக்யேஸ்வரியைச் சந்தித்துத் தீருவேன். இவர் இறந்து போய் விட்டதாக எந்தச் சூழ்நிலையில் நினைத்துக் கொண்டாள் என்று தெரிந்து கொள்வேன். அங்கே தப்பித்துக் கொண்டாலும் இந்திரா விஷயத்தில் இவரால் தப்பித்துக் கொள்ள முடியாது. சீட்டிங்க் கேஸில் தண்டனை என்ன என்று பிரபாகரிடம் கேட்க வேண்டும்.

அவர் காரைச் செலுத்திக்கொண்டே "கோபி உன்னை ஹோட்டலில்தானே சந்தித்தான்" என்று கேட்டார்.

"ஆமாம். இந்த ஹோட்டலில்தான் அவனும் தங்கியிருக்கிறான்" என்றேன். அவனைச் சந்திக்க வேண்டும் என்று எனக்கும் பரபரப்பாக இருந்தது. ஏர்போர்ட்டுக்குப் போவதாக அவன் சொன்னது நன்றாக நினைவு இருக்கிறது.

ஏன் இவ்வாறு சொன்னான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இவருடைய போக்கை பார்க்கும் போது இந்தக் கோபி என்ற பெயர் ஏற்கனவே நன்றாகத் தெரியும் என்பது போல் தோன்றியது.

கார் ஹோட்டலுக்கு முன்னால் வந்து நின்றது. இருவரும் இறங்கி உள்ளே போனோம். அவர் ரிசெப்ஷன் அருகில் போய் "கோபிசந்த் ரூம் நம்பர் என்ன?" என்று கேட்டார்.

"கோபி சந்தா?" அந்தப் பெயரில் இங்கே யாரும் இல்லையே. பின்னால் இருந்த போர்டைப் பார்த்துவிட்டு ரிசெப்ஷனிஸ்ட் சொன்னான்.

அவர் முகம் வாடிப்போய்விட்டது.

"இன்னொரு தடவை பாருங்கள்" என்றார்.

அவன் மறுபடியும் பார்த்துவிட்டு "இல்லை சார்" என்றான்.

நாங்கள் திரும்பப் போனபோது "ஒருமுறை மேலே போகலாம்" என்றேன்.

"எதற்கு?"

"உங்களுக்கு எல்லாம் தெரியும். அப்படியும் எதற்கு என்று எதுவும் தெரியாதது போல் கேட்கிறீங்க. இங்கே எதற்கு அந்தப் பெண் தனியாக இருக்கவேண்டும்? நம்மோடு அழைத்துக் கொண்டு போய்விடலாம் என்று நினைக்கிறேன்."

அவர் பேசவில்லை. மௌனமாக லிஃப்டை நோக்கி நடந்தார். அவருடைய மௌனம் எனக்கு மேலும் வேதனையைத் தந்தது. லிஃப்டில் நாங்க இருவரும் மட்டும்தான் இருந்தோம்.

"உங்களுக்கு எறும்பு கடித்தாற்போல் கூட இல்லையா?" என்றேன்.

"எதுக்குத் தரளா?"

"ஏன்னு வேறு கேட்கிறீங்களா?" நீங்க ஒரு மனிதன்தானா? இரண்டு வேறு வேறு ஊர்களில் குடும்பத்தை நடத்துவதற்கும், இன்னொரு மனைவியே இல்லைன்னு சொல்லிக் கொள்வதற்கும் உங்களுக்கு வெட்கமாக இல்லையா?"

"நீ நினைப்பது போல் எனக்கு இரண்டாவது குடும்பம் எதுவும் இல்லை."

"பின்னே மேலே இருக்கிற அந்தப் பெண் யாரு? உங்க மூன்றாம் மனைவியின் மகள் இல்லையா?"

"....."

"அதை விடுங்கள். பாக்யேஸ்வரிக்கு நீங்க உயிரோடு இருப்பது தெரியுமா?"

"எனக்கு எந்தப் பாக்யேஸ்வரியுமே தெரியாது தரளா. என்னை நம்பு."

"தெரியாமல்தான் அச்சு வார்த்தாற்போல் வந்து முளைத்தானா உங்க மகன்?"

"....."

"எனக்குப் பதில் வேணும்."

"எனக்கு எரிச்சலைக் கிளப்பாதே தரளா. என் மனம் சரியாக இல்லை."

"எப்படிச் சரியாக இருக்கும்? மூன்று பெண்மணிகளும் சந்திக்கும் தருணம் நெருங்கும்போது மனம் சரியாக இல்லாமல் போவது நியாயம்தானே?"

"நீ என்ன பேசுகிறாய் என்று உனக்கே தெரியவில்லை." லிஃப்ட் நின்றது. அவர் வெளியே காலடி எடுத்து வைத்து, வரச் சொல்லி அழைப்பது போல் என்னைப் பார்த்தார். நான் நகரவில்லை.

"என் தலை மீது கையை வைத்துச் சொல்லுங்கள். என்னைத் தவிர உங்களுக்கு வேறு எந்தப் பெண்ணோடும் அறிமுகம் இல்லை என்று சொல்லுங்கள்."

அவர் என்னை நெருங்கி வந்து என் கைகளைப் பிடித்து வெளியே இழுத்தார். பின்னால் லிஃப்ட் கதவுகள் மூடிக் கொண்டன. அவருடைய கைகளில் திமிறிக்கொண்டே "எனக்குப் பதில் வேண்டும். பதில் வேண்டும்" என்று ஹிஸ்டீரியா வந்தவள் போல் கத்தத் தொடங்கினேன்.

"இது பொது இடம் தரளா. ரகளை செய்யாதே."

"பொது இடமா? ஆமாம். நீங்க பிரைவேட்டாகச் செய்த காரியங்கள் பப்ளிக்கில் வருவது உங்களுக்குப் பிடிக்காதுதான்." "வாயை மூடு. நான் ஒன்றும் செய்யவில்லை."

"இல்லையா? சத்தியம் செய்து சொல்லுங்கள். உங்களுக்கு யாரோடும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லுங்கள்."

அவர் என்னை நெருங்கி வந்து தலை மேல் கையை வைக்கப் போனவர் நின்றார். அவர் நின்றுவிட்டதை உணர்ந்து நான் தலையை உயர்த்தினேன். அவர் பார்வையைத் தாழ்த்திக்கொண்டு "இல்லை" என்றார். அவர் குரல் கிணற்றுக்குள்ளிருந்து வருவது போல் பலவீனமாக ஒலித்தது.

"இல்லையாம் இல்லை." பைத்தியம் பிடித்தவளைப் போல் கத்தினேன். அந்த வராண்டாவே என் கத்தலுக்கு அதிர்ந்தது. "ஒருவருடன் இல்லை. இருவருடன் இல்லை மூன்று பேருடன்."

அவர் என் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் மகள் இருந்த அறைக்குள் போனார். எனக்கு அந்தப் பத்தாவது மாடியிலிருந்து கீழே குதித்துவிட வேண்டும் போல் தோன்றியது. தலை சுற்றிக்கீழே விழுந்துவிடாமல் தூணைப்பிடித்துக் கொண்டேன்.

அதற்குள் அவர் அறையிலிருந்து வெளியில் வந்தார். அவர் முகம் வெளிறிப்போய் இருந்தது.

என்னைப் பிடித்துக்கொண்டு எப்படி அழைத்து வந்தாரோ, ரிசெப்ஷன் வரை எப்படி நடந்து வந்தேனோ எனக்கே தெரியாது.

'"மூன்று நான்கு மணி நேரத்திற்கு முன்னால் இங்கே அறையை எடுத்துக்கொண்டு, என் மகளை விட்டு விட்டுப் போனேன். என்னவானாள்?" என்று கேட்டார்.

நாங்கள் திரும்பத் திரும்ப வந்து போய்க் கொண்டிருந்ததையும், இந்த நாடகத்தையும் பார்த்துக்கொண்டே இருந்த ரிசெப்ஷனிஸ்ட் பின்னால் போர்ட் பக்கம்கூடப் பார்க்காமலேயே "மிஸ் தேவிகாவா?" என்று கேட்டான்.

"யெஸ்."

"அரை மணிக்கு முன்னால்தான் காலி செய்து விட்டுப் போய் விட்டாங்க சார்" என்றான்.

அவருடைய உள்ளங்கைகள் முறுக்கேறிக்கொண்டன.

"கா....லி....செய்துவிட்டாளா?" முணுமுணுப்பது போல் சொன்னவர் குழப்பத்துடன் என் பக்கம் பார்த்தார்.

என்னைச் சுற்றிலும் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. ஒரு பெரிய திருப்பம், என் கணவர் ஊகித்திராதது நடந்துகொண்டிருக்கிறது என்றும், அவர் கடந்த காலத்தில் செய்ததற்கு மனதளவில் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார் என்று மட்டும் புரிந்தது.

ஆனால் எந்தப் பாவமும் செய்யாத எனக்கு இந்தத் தண்டனை ஏன்?

எனக்கு ஸ்ரீதேவி விஷயத்தில் முதல் முதலாக சந்தேகம் அவர் மேல்தான் ஏற்பட்டது.

நான் ஹோட்டலிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்து, பிறகு அவருடன் சேர்ந்து ஏர்போர்ட்டுக்குப் போய், மறுபடியும் இங்கே வருவதற்குள் ஸ்ரீதேவி மாயமாகிவிட்டிருந்தாள். அப்படி என்றால் யாரோ இவருக்கு இந்த விஷயத்தில் ஒத்துழைத்து இருக்க வேண்டும்.

21906

வேறு யாரு? இன்ஸ்பெக்டர் சத்யநாராயணனாகத்தான் இருக்க வேண்டும். இவர்கள் எல்லோரும் சேர்ந்து இந்தக் கேஸை மூடி மறைப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தார்கள் என்ற விஷயம் நேற்றிரவு எங்க வீட்டுக்குப் போன் வந்த போதே புரிந்து விட்டது.

முதலில் போன் வந்ததுமே காவல் நிலையத்திற்குச் சென்று அங்கிருந்து தன் மகளை அழைத்துப் போய் ஹோட்டலில் தங்க வைத்தார். பிறகு வீட்டிற்குச் சென்றார். அதற்குள் நான் வீட்டில் இல்லாமல் போனதால் பதற்றமடைந்து விட்டிருப்பார்.

இப்பொழுது நிதானமாக யோசித்துப் பார்த்தால் என்ன நடந்திருக்கும் என்று எனக்கு மெல்ல மெல்லப் புரியத் தொடங்கியது.

நான் வீட்டில் இல்லாமல் போனதும் காவல் நிலையத்திற்குப் போன் செய்திருப்பார். அங்கே சத்ய நாராயணன் நான் அவருக்குப் போன் செய்து விஷயத்தைத் தெரிந்துகொண்டதைப் பற்றிச் சொல்லி இருப்பார். அவர் திகிலடைந்து போயிருக்க வேண்டும். எங்க வீட்டின் முன்னால் இருக்கும் கூர்க்கா நான் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்ட விஷயத்தைச் சொல்லியிருப்பான்.

நான் ஹோட்டலுக்குப் புறப்பட்ட விஷயம் அவ்விதமாகத் தெரிந்து போயிருக்கும்.

நான் வீட்டுக்குத் திரும்பி வந்ததுமே உலுக்கி எடுப்பேன் என்று அவர் முன்கூட்டியே ஊகித்திருப்பார். இன்ஸ்பெக்டரின் உதவியால் முதலில் ஸ்ரீதேவியை மறைத்துவிட்டு சாட்சியம் எதுவும் இல்லாமல் தப்பித்துக்கொண்டு விட்டார்கள்.

ஆனால் கோபிசந்த் என்னைச் சந்திப்பான் என்று இவர்கள் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். அதனால்தான் ஸ்ரீதேவியின் பெயரைச் சொன்னபோது உறுதியாக, சலனமற்று இருந்த அவர் முகம் கோபிசந்த், பாக்யேஸ்வரியின் பெயர்களைக் கேட்டதும் கலக்கமடைந்துவிட்டது.

இப்பொழுது எனக்குப் புரியாத விஷயம் ஒன்றுதான். விமான நிலையத்திற்குப் போவதாகச் சொன்ன கோபிசந்த் எப்படி மாயமானான்?

திரைப்படங்களில் வரும் இரட்டை வேடம் போல் இவருடைய ஜாடையில் இருக்கும் அந்த இளைஞன் இப்பொழுதே, இந்த இரவே தென்பட்டால் இவருடைய வண்டவாளம் வெட்ட வெளிச்சமாகி இருக்கும்.

ஆனால், குற்றவாளிகளை அவ்வளவு சீக்கிரம் வெளிப்படுத்தி விட்டால் அந்தக் கடவுளுக்கு ஜகன்னாடக சூத்ரதாரி என்ற பெயர் ஏன் வரும்?

இந்த இரவு வேளையில் அதற்கு மேல் என்னால் எதையும் யோசிக்க முடியவில்லை. ஹோட்டலில் எல்லோருக்கும் முன்னால் அவருடன் சண்டை போடுவதுகூட அனாவசியம். நான் என்ன செய்ய வேண்டும் என்று முன்பே முடிவு செய்து விட்டேன். அதனால் வெளியே நடக்கப் போனேன்.

அவர் என்னுடன் வரவில்லை. ரிசெப்ஷனிஸ்டிடம் "அவளை யாராவது அழைத்துப் போனாங்களா? இல்லை தனியாகவே போனாளா?" என்று கேட்டார்.

ரிசெப்ஷனிஸ்ட் ஏதோ சொல்லிக்கொண்டு இருந்தான்.

"காலி செய்வதாக உங்களிடம் சொல்லச் சொன்னாங்க சார்." இப்பொழுதுதானே ரூம் எடுத்தீங்க என்றுகூடக் கேட்டேன். ஆனால்..." அவன் மேலும் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான். என் பார்வை அந்தப் பெண் சம்பந்தப்பட்ட ரசீதின் மீது விழுந்தது.

மின் அதிர்ச்சி அடைந்தாற் போல் உணர்ந்தேன். "தேவிகா" என்றிருந்தது அதில்.

சொந்த மகளின் பெயரைக்கூட மாற்றி அவர் ஹோட்டலில் அறையை எடுத்துக்கொண்டு இருக்கிறார்.

நாளை ஏதாவது பிரச்னை வந்தால் ஸ்ரீதேவி என்ற பெயரைக் கூடத் தான் கேட்டதில்லை என்று சொல்வதற்காக.

இதை விடக் கொடுமை வேறு என்ன இருக்க முடியும்?

இவர்தான் என்னுடைய கணவர்.

இவருடன் தான் நான் இருபத்தி ஐந்து வருடங்கள் குடித்தனம் செய்திருக்கிறேன்.

இப்பொழுது விவாகரத்து பெற்றுக்கொள்ள நினைக்கிறேன், பிரபாகரின் உதவியுடன்.

5

நாங்கள் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது பால் வருவதற்கான வேளை ஆகிவிட்டது. அவர் மிகவும் கம்பீரமாக இருந்தார். தேள் கொட்டிய திருடன் போலீசார் கையில் பிடிபட்டு விட்டால் இது போன்ற கம்பீரத்தைத்தான் காட்டிக்கொள்வான்.

சாஹிதி, கவிதா இருவரும் திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு விவரம் தெரிந்த பிறகு நாங்கள் இவ்வாறு நடந்துகொள்வது இதுதான் முதல் தடவை. நான் எப்பொழுதாவது சண்டை போட்டாலோ, கோபம் வந்து முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டாலோ அவர்தான் முதலில் கீழே இறங்கி வந்து சமாதானப்படுத்துவார். இப்பொழுது புரிகிறது அந்த நல்லதனத்திற்குப் பின்னால் என்ன இருக்கிறதென்று.

என்னுடைய சொத்து!

தேவையான சுகங்கள் வெளியில் கிடைக்கும்போது ஒரு ஆண் வீட்டில் எவ்வளவு பணிவாக வேண்டுமானாலும் நடந்து கொள்வான்.

எங்கள் திருமணமான புதிதில் இவர் நிறையக் குடிப்பார். மணிக்கணக்காய்ச் சீட்டாடி விட்டு இரவு ஒன்று அல்லது இரண்டு மணிக்குத்தான் வீட்டுக்கு வருவார். சுமார் ஒரு வருடகாலம் நரகத்தை அனுபவித்தேன். அந்த நாட்களை

நினைத்தால் இப்பொழுதும் பயத்தால் உடல் நடுங்கும். அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுவேன். "சீட்டாட்டத்தை நிறுத்திவிடுங்கள். சொத்து விவகாரங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று. இவர் கேட்டுக் கொள்ளமாட்டார். "நீங்கள் செய்த துரோகத்திற்கு இதை விட நரகத்தை அனுபவிக்க வேண்டும்." என்பார்.

நாங்கள் செய்த துரோகம்தான் என்ன? தெருவோடு போகிறவனை அழைத்து வந்து இவ்வளவு சொத்தையும் பெண்ணையும் ஒப்படைத்ததுதானா? தகுதி இல்லாதவனைச் சிம்மாசனத்தில் உட்கார வைத்ததுதானா?

உங்களுக்குத் தோன்றலாம். இதென்ன? இவள் கணவனைப் பற்றி இப்படியெல்லாம் சொல்கிறாளே என்று. உண்மைதான். இதுநாள் வரை நான்கூட ஒரு வார்த்தை சொன்னதில்லை. திருமணமான புதிதில் இவர் படுத்தியபாட்டிற்கு ஒருமுறை கூட வாயைத் திறந்ததில்லை. கடைசியில் அப்பா இறந்து போனபோது கூட என்னுள் நான் குமறிக் கொண்டிருந்தேனே தவிர இவரை ஒன்றுமே சொல்லவில்லையே.

இவரைக் காதலித்த குற்றத்திற்காக, அப்பாவைச் சம்மதிக்க வைத்து, உலகத்தை எதிர்த்து இவரைக் கல்யாணம் செய்து கொண்ட பாவத்திற்காக. . . இவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் சகித்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

காதலைவிட மோசமான தவறு வேறு எதுவும் இல்லை என்பது என்னுடைய கருத்து. அந்தத் தவறை நானும் செய்தேன். இவரைக் காதலித்தேன். இவருக்காக நள்ளிரவில் காவேரியில் குதிக்கும் அளவுக்குக் காதலித்தேன். அது மட்டுமே இல்லை. இன்னொரு உதாரணம்கூடச் சொல்கிறேன்.

திருமணம் ஆன புதிதில் இவர் வீட்டு விஷயங்களை எதுவும் பொருட்படுத்தாமல் ஊர் சுற்றிக்கொண்டு இருந்தார். என்னுடைய பொறுமைக்கும் ஒரு எல்லை இருந்தது. ஒருநாள் கேட்டு விட்டேன். அப்பொழுது எங்கள் திருமணமாகி ஆறு மாதங்கள் முடிந்திருந்தன.

எனக்கு ஆறாம் மாதம். ஒரு சீராட்டோ, பாராட்டோ இல்லை. வீட்டில் பிள்ளைத் தாய்ச்சிப் பெண் ஒருத்தி இருக்கும் நினைப்புகூட அவருக்கு இல்லை. வழக்கம் போல் குடிக்கவும், சீட்டாடவும் புறப்பட்டார்.

"நீங்க இதுபோல் நள்ளிரவு வேளையில் வீட்டுக்கு வந்தால் நான் என்னதான் செய்வது? வீட்டில் மனைவி ஒருத்தி இருக்கிறாள் என்ற நினைப்பாவது உங்களுக்கு இருக்கிறதா?" அழுதுகொண்டே கேட்டேன்.

"நினைப்பு இல்லாமல் இருக்க வேண்டும் என்றுதான் இப்படி" என்றார்.

எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "நீங்க அந்த கிளப்பிலேயே குடித்தனம் இருந்தால் வீட்டில் நான் என்ன செய்வது?" என்று கேட்டேன்.

"உனக்கு வேண்டியதை எப்படியாவது சாதித்துக்கொள்வது உனக்குப் பழக்கம்தானே. சுவரில் என் பெயரை எழுதி வைத்துக் கொண்டு திருப்திப்பட்டுக்கொள்" என்று சொல்லிவிட்டு போய் விட்டார். சிலையாக நின்றுவிட்டேன். நான் அவரை எவ்வளவு நேசிக்கிறேன் என்று அவருக்கு எப்படிச் சொல்வேன்?

அன்று அவர் வீடு திரும்பும்போது இரவு இரண்டு மணி ஆகிவிட்டது. தள்ளாடிக்கொண்டே வந்தார். நான் என்ன செய்தேன் தெரியுமா? சுவரின்மீது அவர் சொன்னது போலவே பெயரை எழுதினேன். ஒன்று இல்லை. இரண்டு இல்லை. நூறு ஆயிரம். . . குளியலறையில் தொடங்கி படுக்கையறை, சமையலறை. . . வீட்டுச் சுவர்களில் எல்லாம் அவருடைய பெயரை எழுதி வைத்தேன்.

இதெல்லாம் உங்களுக்குப் பைத்தியக்காரத்தனமாகவும், வெறியாகவும் தோன்றினால் அது உங்களுடைய குறைதான். இவ்வளவு ஆழமாகக் காதலிக்கத் தெரியவில்லை என்றால் நீங்கள் காதலிக்கவே தகுதி இல்லாதவர்கள். நீங்க வாழவே தகுதியற்றவர்கள்.

அவ்வளவு ஆழ்ந்து அவரை நேசித்தேன். இந்த நிமிடம் வரையிலும் நேசித்து வந்தேன். நிறைமாத கர்ப்பிணியாய் இரவு இரண்டு மணிக்கு வெட்ட வெளியில், குளிரில் படியின்மீது உட்கார்ந்துகொண்டு கடைசிப் பெயரை எழுதி முடித்துக் கொண்டிருந்த என்னைப்பார்த்து அவர் நெகிழ்ந்து போனது உண்மைதான்.

"இந்தப் பைத்தியம் உன்னை விட்டு எப்போது போகப் போகிறது தரளா?" என்று அந்த நிமிடம் நேர்மையாகத்தான் கேட்டார். ஆனால் அது ஒரு வினாடிதான். பிறகு வழக்கம் போல் நடந்து கொண்டார்.

இப்பொழுது சொல்லுங்கள். இவ்வளவு ஆழமாக நேசிக்கும் மனைவி இருக்கும்போது இத்தனை பெண்களை ஏமாற்றியதற்கும், ரகசியமாகக் குடித்தனம் நடத்தி வந்ததற்கும் என்ன தண்டனை விதிக்க வேண்டும்? பிரபாகரைத் தவிர வேறு யாரும் எனக்கு உதவி செய்யமாட்டார்கள்.

அது சரி. பிரபாகரைப் பற்றி உங்களிடம் செல்லவே இல்லையே.

பிரபாகர் என் மகன். என் வயிற்றில் பிறந்தவன்.

உங்களுக்குச் சந்தேகம் வரலாம். முதலில் இரண்டே மகள்கள் தான் என்று சொல்லிவிட்டு இப்பொ மறுபடியும் "மகன்" என்று சொல்கிறாளே என்று. எங்களுக்குத் திருமணம் ஆன ஒன்பது மாதங்கள் கழித்துப் பிரபாகர் பிறந்தான். ஒரு விதமாகச் சொல்ல வேண்டுமென்றால் அவன் பிறந்த பிறகு தான் அவர் மாறினார். ஒவ்வொருத்தருக்கும் ஒரு விதமான கொள்கை இருக்கும். அதைத் தீவிரமாகக் கடைபிடிப்பதில் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். பிரபாகருக்காக ஒருபைசாகூட என் பணத்திலிருந்து செலவழிக்க இவர் அனுமதிக்கவில்லை. தரளா ஃபைனான்ஸ் விஷயங்களை எல்லாம் பார்த்துக் கொள்வதற்காகச் சம்பளம் வாங்கிக் கொள்வார். அதிலிருந்து தான் அவனைப் படிக்க வைத்தார். ஹாஸ்டலில் சேர்த்தார்.

கடைசியில் சட்டப் படிப்புப் படிக்க வைத்தார். நான் ஏதாவது சொன்னால் "உன் பணத்தால் அவனைத் திணற அடித்தால், கெட்டுக் குட்டிச் சுவராகிவிடுவான். உன் பிடிவாதம் அவனுக்குத் தொற்றிக்கொள்ளாமல் இருக்க வேண்டும் என்றால், அவன் தள்ளி இருப்பதே நல்லது' என்று சொல்லுவார்."

அதான் சொன்னேனே ஒவ்வொருத்தருக்கும் ஒருவிதமான பைத்தியம் இருக்கும் என்று. அவர் பணத்தைக்கொண்டே அவனைப்படிக்க வைத்தார். அவனுக்காகவே வாழ்வது போல் நடந்துகொள்வார். குடிப்பதை, கிளப்புக்குப் போவதை நிறுத்திக்கொண்டார்.

இதைவிட வேறு என்ன வேண்டும் எனக்கு? என் பிடிவாதத்தை, அன்பை அவர் பைத்தியக்காரத்தனமாக எடுத்துக் கொண்டது என்னுடைய துரதிர்ஷ்டம். எது எப்படியோ, பிரபாகர் பிறந்த பிறகு எங்களுடைய வாழ்க்கை ஒருவழிக்கு வந்தது. அவர் நல்ல மனிதராக மாறினார். மகனைத் தொலைவிற்கு அனுப்பி விட்டது. எனக்குக் கொஞ்சம் வேதனையாக இருந்த போதிலும், இந்த மகிழ்ச்சியில் நான் அதைப் பொருட்படுத்தவில்லை. அதற்குப் பிறகு ஏழெட்டு வருடங்கள் வரை எனக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. பிறகு சாஹிதியும், கவிதாவும் பிறந்தார்கள். பிரபாகர் படிப்பில் எப்போதும் முதல் ரேங்க்தான் வருவான். ஒரு விருந்தாளியைப் போல் விடுமுறையில் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்கு என்மீது அன்பு அதிகம். அந்த விதமாக எங்கள் குடும்பம் மெல்ல மெல்லமாக ஸ்திரப்பட்டு விட்டது. இன்றைக்கு எங்கள் குடும்பப் படகு முற்றிலுமாகக் கவிழ்ந்து போகும் வரையில் ரொம்ப அன்னியோன்யமான தாம்பத்தியம் என்றே சொல்லவேண்டும். முதல் வருடம் மட்டும் துரதிர்ஷ்டமான ஒரு கனவு. அவ்வளவுதான்.

அடுத்த மாதம் பிரபாகரின் திருமணம். லா படித்து முடித்ததும் அவனுக்கு வேலையும் கிடைத்துவிட்டது. ஏதோ பிருந்தா தொழிற்சாலையில் லா ஆபீசராக...

நான் எடுத்துக்கொள்ளப் போகும் முடிவு எனக்குத் தெரியும். இந்த விஷயத்தில் கவிதாவோ, சாஹிதியோ எனக்கு எந்த யோசனையும் சொல்லமுடியாது. அவர்கள் வயதில் ரொம்பச் சிறியவர்கள். பிரபாகரைத்தான் கேட்கவேண்டும். அவன் என் பக்கம் இருப்பானோ இல்லை அவன் அப்பாவின் பக்கம் இருப்பானோ.

இப்பொழுது என்னுடைய பிரச்சனை என்னவென்றால், இந்த விவகாரத்தை இன்றே தீர்த்துக்கொள்வதா, இல்லை பிரபாகரின் திருமணம் முடியும்வரையில் பொறுத்திருப்பதா என்பதுதான்.

திருமணத்திற்கு ஒருமாதம் இருக்கும்போது மணமகனின் தாயும் தந்தையும் பிரிந்து போய்விட்டார்கள் என்று சொன்னால் அது எத்தனை வெட்கக்கேடான விஷயம்? அவன் ரொம்பவும் வருத்தப்படலாம். திருமணம் முடியும்வரையில் இந்த விஷயத்தை மறைத்து வைத்து அதற்குப்பிறகு வெளிப் படுத்தினாலும்கூட அவன் அதே அளவுக்கு வருத்தப்படலாம்.

எது செய்ய வேண்டும் என்று முடிவு எடுக்க வேண்டியது அவன்தான்.

ஒன்று மட்டும் உண்மை.

திருமணமான புதிதில் அவர் என்னை மறுத்த போதும் பொறுத்துக் கொண்டிருந்தேன். என் மகனை வேறு எங்கேயோ தொலைவில் கொண்டு போய் வளர்த்த போதிலும் ஒப்புக் கொண்டேன்.

நான் அவரை எந்த அளவுக்கு நேசித்தேனோ அதில் ஆயிரத்தில் ஒரு பங்காவது அவர் என்னை நேசிக்காமல் இருந்தாலும் அவருடன் சேர்ந்து இத்தனை வருடங்கள் வாழ்ந்து விட்டேன்.

ஆனால் அவர் இன்னும் இரண்டு பெண்களை ஏமாற்றியிருக்கிறார் என்றால் மட்டும் என்னால் பொறுத்துக் கொள்ளமுடியாது. பிரிந்து போய் விடுவேன்.

சாஹிதி, கவிதா இருவரையும் அவர் வளர்ப்பாரோ? அல்லது என்னிடம் விட்டு விடுவாரோ? அவர் விருப்பம்.

ஆனந்தன் சொன்ன கதை

இன்றைய இரவு என் வாழ்க்கையில் இவ்வளவு மோசமான சூழ்நிலையை உருவாக்கும் என்றோ, இவ்வளவு சங்கடத்தில் என்னைத் தள்ளி விடுமென்றோ நான் கனவில்கூட நினைக்கவில்லை.

நள்ளிரவு நேரத்தில் காவல் நிலையத்திலிருந்து போன் வந்த காரணமே எனக்குப் புரியவில்லை.

யாரோ ஒருபெண் என் போட்டோவை வைத்துக்கொண்டு ஆனந்தன்தான் என்னுடைய தந்தை என்று சொன்னால் அதைக்கேட்டு பயந்துகொண்டு நள்ளிரவில் போக வேண்டிய தேவை என்னைப் போன்றவனுக்கு இல்லை. என்னவென்று தெரிந்துகொள்ளும் ஆர்வத்தில் தான் போனேன். என் எதிரிகள் யாராவது எனக்குக் கெட்ட பெயர் வரவழைப்பதற்காகத் திட்டம் போட்டு அந்தப் பெண்ணைத் தூண்டி விட்டிருப்பார்களோ என்று நினைத்தேன். ஆனால் அந்தப் பெண்ணைப் பார்த்த பிறகு என் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டேன்.

ரொம்ப அப்பாவியாக, குடும்பப் பாங்காக இருந்தாள் அந்தப் பெண்.

என்னைப் பார்த்ததும் அழத்தொடங்கி விட்டாள். அவளைச் சாதாரண நிலைக்குக்கொண்டு வருவதற்கு அரைமணி நேரம் பிடித்தது எங்களுக்கு. அந்தப் பெண்ணிடம் இருந்தது என் போட்டோ தான். ஆனால் இருபத்தைந்து வருடங்களுக்கு முந்தையது.

என்னைப் பார்த்ததும் அவள் கண்களில் பிரகாசம் ஏற்பட்டது. பெற்ற தந்தையையே பார்த்துவிட்ட மகிழ்ச்சி.

அந்தப் பெண் கொஞ்சம் தேறிக்கொண்ட பிறகு கேட்டேன். "உன் பெயர் என்ன?"

"தேவிகா."

"எந்த ஊரு?"

"செங்கல்பட்டு"

இன்ஸ்பெக்டர் சத்யநாராயணன் எங்கள் உரையாடலை ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

"உன் அம்மாவின் பெயர்?"

"பிருந்தா."

என்னுள் ஏதோ சந்தேகம் எரிமலையாய் வெடித்தது. "எந்த பிருந்தா?"

"அயினம்பூடி பிருந்தா" என்றாள். அந்தப் பெண்ணின் பேச்சில் என்பால் ஏளனம் வெளிப்பட்டதோ என்னவோ. நான் புரிந்து கொள்ளவில்லை. ஏற்கனவே என்னைச்சுற்றி உலகம் கிர்ரென்று சுழல்வது போல் இருந்தது. பி..ரு..ந்..தா.. இந்தப் பெண் பிருந்தாவின் மகள்.

அவள் கையில் என்னுடைய போட்டோ.

"இந்தப் போட்டோவை யார் கொடுத்தாங்க?"

"அம்மா கொடுத்தாள்."

"உன் அப்பாவின் பெயர் என்னவென்று சொன்னாய்?

அந்தப் பெண் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அந்தச் செயலில் 'எத்தனை முறை சொல்வது? நீதான் என்னுடைய தந்தை?' என்ற பதில் வெளிப்பட்டது.

எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் தொடங்கினேன். முதலில் என் ரத்த அழுத்தம் குறைந்தால் தவிர அடுத்த கேள்வி கேட்கும் நிலையில் இல்லை நான். கொஞ்சம் சீரான பிறகு, என் வாழ்க்கையில் இவ்வளவு நாளாக

எதற்காகத் தவித்துக்கொண்டிருந்தேனோ அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

"அண்ணா எங்கே?"

அவள் தலையை உயர்த்தினாள்.

அந்தக் கொஞ்ச நேர தாமதத்தைக்கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. விருட்டென்று அவளருகில் சென்றேன். அண்ணா எங்கே? அண்ணா எங்கே? ஒரே கேள்வி ஆயிரம் கேள்விகளாக மாறி என் பார்வையின் வழியாக அவளைச் சூழ்ந்து கொண்டது.

"அண்ணாவா? யாரு?" என்றாள். அந்தப் பதிலில் இருந்த நேர்மையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்துவிட்டேன். ஆனால் நான் எதிர்பாராத பதில் அது.

"கோபிசந்த், உன் அண்ணா" என்றேன்.

"எனக்கு அண்ணன் யாரும் இல்லை."

"இல்லையா?", இரட்டிப்பது போல் கேட்டேன்.

"இல்லை."

"அம்மா எங்கே இருக்கிறாள்?"

அவள் பதில் சொல்லவில்லை.

"உங்க அம்மா... பிருந்தா எங்கே இருக்கிறாள்?"

"அம்மா இறந்து போய்விட்டாள் 'அவள் தலையைக் குனிந்தபடி பதில் சொன்னாள்.

என்னையறியாமல் என் கையிலிருந்த கார் சாவிக் கொத்துக் கீழே நழுவி விழுந்தது.

நாற்காலியில் அப்படியே சரிந்துவிட்டேன்.

பிருந்தா இறந்துவிட்டாள். பிருந்தா இனி இந்த உலகில் இல்லை. கண்களிலிருந்து கண்ணீர் வெளியேறாமல் இருக்கப்

பெரும் முயற்சி செய்ய வேண்டியிருந்தது. நான் தேறிக் கொள்வதற்கு ஐந்து நிமிடங்கள் பிடித்தன.

"உனக்கு உண்மையிலேயே உன் அண்ணாவைப் பற்றித் தெரியாதா?"

அவள் குறுக்கே தலை அசைத்துவிட்டு "ஊஹீம். எனக்கு ஒரு அண்ணன் இருக்கிற விஷயமே தெரியாது" என்றாள்.

"அம்மா இறந்து போய் எவ்வளவு நாளாகிறது?"

"இரண்டு மாதங்கள்."

மற்றது எனக்குப் புரிந்துவிட்டது. தாயின் இறப்பினால் இந்தப் பெண் கையிலிருந்த ஒரே ஒரு ஆதாயத்தை வைத்துக் கொண்டு புறப்பட்டு இருக்கிறாள். யாரோ ஏமாற்றுக்காரர்களின் வலையில் சிக்கிக்கொண்டு அதிர்ஷ்டவசமாக அன்றிரவே தப்பித்துக் கொண்டுவிட்டாள். தன் மகளுக்கு இத்தனை கொடூரமான நிலைமை ஏற்பட்டு இருக்கிறதென்றால் பிருந்தாவின் ஆன்மா சும்மா இருக்காது. என்னை மன்னிக்காது.

நான் முடிவுக்கு வந்துவிட்டேன்.

பிருந்தா இவ்வளவு நாளாய் எங்கே இருந்தாள்? என்ன செய்து கொண்டிருந்தாள் என்று அவள் மகளைக் கேட்பதில் எனக்கு விருப்பம் இல்லை. இந்தப் பெண்ணிடமிருந்து எது போன்ற பதில்களைக் கேட்க வேண்டியிருக்குமோ?

ஒருக்கால் தன் மகளுக்குச் சமூகத்தில் ஒரு நல்ல இடத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்து, நான்தான் அவள் தந்தை என்று சொன்னாளோ என்னவோ.

அந்தப் பொறுப்பை நான் நிறைவேற்றுகிறேன்.

இந்த முடிவுக்கு வந்ததுமே என்மனம் லேசாகிவிட்டது. இன்னும் ஒரே ஒரு கேள்வி பாக்கி இருக்கிறது. "கோபிசந்த் எங்கே இருக்கிறான்?"

அதைத் தெரிந்துகொள்வது இனி அசாத்தியம். இரண்டு மாதங்களுக்கு முன்னால் இறந்துவிட்ட பிருந்தா எங்கேயாவது முகவரியை எழுதி வைத்தால் தவிர என் மகன் எங்கே இருக்கிறான் என்று தெரிந்துகொள்ள யாராலுமே முடியாது.

திடீரென்று பத்து வயது கூடி விட்டாற் போல் இருந்தது எனக்கு. இத்தனை வருடங்களாக என் மனதில் ஏதோ ஒரு மூலையில் என் மகனைச் சந்திப்பேன் என்றும், பிருந்தா அவனை ஒரு பரிபூரணமான ஆளாக வளர்த்து என் முன்னால் கொண்டு வந்து நிறுத்துவாள் என்றும் ஆசை இருந்து வந்தது. ஆனால் அவள் வாழ்க்கை இந்த விதமாக அல்பாயுளில், கொடுமையாக முடிந்துவிட்டதென்றால், இனி கோபிசந்த் என்னவாகி இருப்பான் என்று நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது.

வெளியில் இன்ஸ்பெக்டர் எனக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறார் என்று தெரியும். இந்தப் பெண் என் மகள் தானா இல்லையா என்று சொல்வதற்காகவே என்னை வரவழைத்திருக்கிறார்.

நான் வெளி அறைக்கு வந்தபோது இன்ஸ்பெக்டர் போனில் யாருடனோ பேசிக்கொண்டிருந்தார். "அது... வந்து... ஏதோ சின்ன விவகாரம். நீ படுத்துக்கோம்மா. பத்து நிமிடங்களில் அனுப்பி வைக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

மறுமுனையில் ஏதோ சொல்லியிருக்க வேண்டும். 'இது போன்று லட்சம் கேஸுகளைப் பார்த்திருக்கிறேன். நிமிடத்தில் செட்டில் செய்துவிடுகிறேன்' என்று வாதம் புரிந்து கொண்டிருந்தார். அவரைத் தொந்தரவு செய்ய விரும்பாமல் நான் மறுபடியும் உள்ளே போனேன். அந்தப் பெண் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள், கவலையுடன் தனியாய்.

எனக்கு இரக்கமாய் இருந்தது. அவளிடம் உண்மையை நிதானமாகச் சொல்ல வேண்டும். ஏற்கனவே தாயின் மரணத்தால் குன்றிப் போயிருக்கிறாள். நான்தான் தன்னுடைய தந்தை என்ற பிரமையில் ஆழ்ந்துபோயிருக்கும் இந்தப்

பெண்ணுக்கு நான் அவளுடைய தந்தை இல்லை என்ற விஷயத்தை எப்படி சொல்வது? சொல்ல வேண்டிய அவசியம் கூட இல்லையோ. இறந்துவிட்ட பிருந்தாவுக்கு இந்த அளவுக் காவது உதவி செய்வது என்னுடைய கடமை. இது ரொம்ப சின்ன பிரச்னை. எனக்கு வேண்டியது கோபிசந்த். . . என் மகன்.

"அம்மாவின் உடமைகள் எல்லாம் உன்னிடம்தான் இருக்கா?" என்றேன். ஆம் என்பது போல் தலை அசைத்தாள். அந்த ஒரு ஆசைதான் ஒட்டிக்கொண்டிருந்தது. அதில் எங்கேயாவது கோபிசந்தைப் பற்றிய விவரம் தெரியவரலாம்.

"நாம் போகலாமா?" என்று கேட்டேன்.

"எங்கே?" என்றாள் சட்டென்று. தயங்கினேன். வீட்டுக்கு அழைத்துப் போனால்?

தரளாவைப் பற்றி எனக்குத் தெரியும். ரகளை செய்து விடுவாள். நான் சொல்வதை எதையுமே காதில் வாங்கிக்கொள்ள மாட்டாள். வாங்கிக்கொண்டாலும் புரிந்துகொள்ளமாட்டாள். முக்கியமாகப் பிருந்தா விஷயம் தெரிந்தால் அவளுக்குப் பைத்தியமே பிடித்துவிடும். அதனால் தற்போதைக்கு அவளுக்கு இந்த விஷயங்கள் எதுவும் தெரியாமல் இருப்பதே நல்லது.

"நான் சொல்கிறேன். வாம்மா" என்றேன். தேவிகா எழுந்து கொண்டாள். இருவரும் முன் அறைக்கு வந்தோம்.

அந்தப் பெண் வெளிவராண்டாவை நோக்கி நடந்தாள்.

பின் தங்கிவிட்ட என்னிடம் சத்யநாராயணன் கேட்டார். "யாரு அந்தப் பெண்?"

சமுதாயம் நாளைக்குக் கேட்கப் போகும் கேள்விக்கு முதல் குரல் அது.

"தரளா சினேகிதியின் மகள். எனக்குக்கூட நன்றாகத் தெரியும். அவளுடைய அம்மா இறக்கும்போது அப்படிச் சொன்னாளாம்." சுருக்கமாகச் சொன்னேன்.

"கவனமாக இருக்க வேண்டும். அவ்வளவு சொத்து என்றதுமே எல்லோரின் கண்களும் நம்மீதே இருக்கும். வீட்டுக்கு அழைத்துப் போகப் போவதில்லையே?"

"இல்லை."

"சிஸ்டரிடம்கூட இந்த விஷயத்தைப் பற்றி மூச்சு விடாதே." என் நன்மைக்காகச் சொல்வது போல் மறைமுகமாகச் சொன்னார்.

தலையை அசைத்துவிட்டு வெளியில் வந்தேன். என்ன செய்ய வேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன். கோபிசந்த் விஷயம் தெரியும்வரை தரளாவுக்குக்கூட இந்த விஷயத்தைச் சொல்வதில் எனக்கு விருப்பம் இல்லை. அன்றிரவு தேவிகாவை ஹோட்டலில் தங்க வைப்பதென்று முடிவெடுத்தேன். நாளை காலையில் அந்தப்பெண் நன்றாகத் தேறிக்கொண்ட பிறகு பிருந்தாவின் உடமைகள் எங்கேயிருக்கு என்று கேட்க வேண்டும்.

என்னைத்தொடர்ந்து சத்யநாராயணனும் வெளி வராண்டாவுக்கு வந்தார். உள்ளே வெங்கடபதி ரிகார்டுகளை மாற்றிக் கொண்டிருந்தான். ஒருக்கால் ரெயிடிங்கில் பிடிபட்டவர் களுக்குள் ஒருத்தியின் பெயரை அடித்துக் கொண்டிருக்கிறானோ என்னவோ.

நான் தேவிகாவை அழைத்துக்கொண்டு காரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது தொலைவிலிருந்து இன்னொரு கார் காவல் நிலையத்தின் பக்கமாகத் தெருமுனையில் திரும்பிக் கொண்டிருந்தது. ஹெட்லைட் வெளிச்சம் எங்கள் மீது பட்டது. ஏதோ ஸ்டாண்டர்ட் கார் போல் இருந்தது. அதற்குள் அதன் விளக்குகள் அணைந்துவிட்டன.

இரவு மூன்று மணிக்குக் கொஞ்சம் முன்பின் இருக்கலாம்.

இரண்டு பக்கத்திலிருந்தும் வெளிச்சம் விழுந்ததைப் பார்த்து விட்டு இன்ஸ்பெக்டர் நெற்றியைச் சுளிப்பது போல் நடித்துக் கொண்டே "நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்தவங்க யாராவது தாக்குதலுக்கு வந்திருக்கிறார்களா என்ன?" என்றார். அந்த நகைச்சுவையை ரசிக்கும் நிலையில் நான் இருக்கவில்லை.

தேவிகாவுடன் வந்து காரில் ஏறிக்கொண்டேன். கார் புறப்பட்டது. தொலைவில் காவல் நிலையத்தின் அருகில் நின்ற கார் என் காரின் பின்னாடியே வந்துகொண்டிருந்தது. அதைப் பற்றி அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை.

ஹோட்டலில் தேவிகாவைத் தங்க வைத்தேன். கேராஃப் என்ற இடத்தில் என்னுடைய பெயரைத்தான் எழுதினேன். இனிமேல் இந்தப் பெண்ணைப் பாதுகாக்கும் பொறுப்பை நான் தான் ஏற்றுக்கொள்ளப் போகிறேன். இந்தப்பெண் பிருந்தாவின் மகள். அந்தத் தகுதி ஒன்றே போதும் அந்தப் பெண் என்னிடமிருந்து சகலத்தையும் பெறுவதற்கு.

நள்ளிரவில் லக்கேஜ் எதுவும் இல்லாமல் வந்த எங்களைப் பார்த்து ரிசெப்ஷனில் இருந்தவன் வியப்பு அடைந்தாலும், வந்தது தரளா ஃபெர்டிலைஸர்ஸ் எம்.டி. என்று தெரிந்ததும் பணிவோடு அறையின் நம்பரைச் சொன்னான்.

இன்றிரவு தேவிகாவைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை நான். அவளுடைய பொருட்கள் எல்லாமே இன்னும் அங்கே தான் இருக்கும். கோபிசந்த் இருப்பிடத்தைத் தெரிவித்து இறக்கும் முன் பிருந்தா ஒரு கடிதமாவது எழுதி வைத்திருப்பாள் என்று ஏனோ எனக்குப் பலமாகத் தோன்றியது.

"நாளை காலையில் வருகிறேன். பயப்படாமல் படுத்துக் கொள்" என்றேன்.

"போலீசார்?" பயந்துகொண்டே சொன்னாள்.

"போலீசாரா?" இனி யாரும் உன் பக்கம் கூடவர மாட்டார்கள் என்றேன். அங்கிருந்து கிளம்ப முற்படும் போது "அப்பா!" என்றாள். நின்றேன். ஒரு நிமிடம் தயங்கிவிட்டு "தாங்ஸ் அப்பா. நான் ரொம்பப் பயந்துவிட்டேன்" என்றாள்.

நான் தலையை அசைத்துவிட்டு "வேறு எதைப் பற்றியும் யோசிக்காதே" என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். என் மனம் முழுவதும் கலங்கி விட்டிருந்தது. அடிக்கடி பிருந்தாவின் நினைவு வந்துகொண்டே இருந்தது.

எவ்வளவு வறுமையை அனுபவித்துவிட்டு உயிரை இழந்தாளோ. . . எனக்காக.

ரோமியோ, ஜூலியட்களுக்கு இடையே, லைலா, மஜ்னுகளுக்கு இடையே உடலுறவு இருந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் கடவுள் சாட்சியாக எங்க இருவருக்கும் இடையில் அது போன்ற உறவு எதுவும் இருந்தது இல்லை. இருந்தாலும் எங்களுடைய காதல் அதை விடக் குறைந்தது ஒன்றுமில்லை. காதலிக்கும் ஒவ்வொருவருமே அப்படித்தான் நினைத்துக்கொள்வார்களாக இருக்கும். ஆனால் காதலில் என்றுமே நாங்கள் வரம்பு மீறியதில்லை. எல்லாவற்றையும் திருமணத்திற்காகப் பாதுகாத்து வந்தோம். ஆனால் விதி இவ்வளவு கொடூரமாக எங்களைப் பிரித்துவிடும் என்று நினைக்கவில்லை.

அந்த விதி என் மனைவியான தரளாவின் உருவத்தில் வந்தது, எல்லாவற்றையும்விடத் துரதிர்ஷ்டமானது.

வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தபோது என் எண்ணங்கள் எல்லாம் என் மகனையே சுற்றி வந்தன. அவனுக்கு இருபத்தி நான்கு வயது இருக்கலாம். இப்பொழுது பிரபாகரைப் போலவே இருப்பானா?

இல்லை பிருந்தாவின் வளர்ப்பில் இன்னும் திடமாக. . . புத்திசாலியாக. . . இன்னும் பெரிய பதவியில். . .

எந்தப் படகு ஜெயித்தது? பிரபாகரா? கோபிசந்தா?

காவேரிக்கரையில் தரளாவும், பிருந்தாவும் நிலா வெளிச்சத்தில் நின்றுகொண்டு நீரில் படகு விட்டுக் கொண்டிருப் பார்கள். நான்தான் நடுவர். எப்பொழுதும் தரளாவையே ஜெயிக்க வைத்துக்கொண்டிருப்பேன். தரளாவின் பிடிவாத குணம் எங்க இருவருக்கும் தெரியும். தோற்றுவிட்டால் அவளால் பொறுத்துக்கொள்ள முடியாது.

கார்த்திகைப் பௌர்ணமி அன்று நிலாவின் ஒளியில் இலையின் மீது விளக்கை ஏற்றிக் காவேரியில் விடுவார்கள்.

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. தரளா ஆள்காட்டி விரலின் நகத்தால் பிருந்தாவின் தீப இலைக்கு ஓட்டை செய்துவிட்டு எதுவும் தெரியாதது போல் சும்மா இருந்தாள். நாலடி தூரம் போனதுமே பிருந்தா விட்ட விளக்கு மூழ்கிப்போய் விட்டது. தரளா சின்னக் குழந்தையைப் போல் கை கொட்டிச் சிரித்துக்கொண்டே "நான் தான் ஜெயித்தேன்" என்று கூச்சலிடத் தொடங்கினாள். கார்த்திகைப் பௌர்ணமி அன்று யாருடைய விளக்கு அதிக தூரம் போகிறதோ அவர்களுடைய அதிர்ஷ்டம் அவ்வளவு நன்றாக இருக்குமாம்.

எனக்குத் தரளாவின் மீது கோபம் வரவில்லை. வெறுப்புதான் ஏற்பட்டது. பிருந்தா மட்டும் புன்முறுவலுடன் பார்த்தாள். "அடியே தரளா... என்னுடைய ஜாதகத்தை விட உன் ஜாதகம் நன்றாக இருக்கும் என்று சொல்வதற்கு இந்த நிலா வெளிச்சத்தில் காவேரியும், நகரும் தீபங்களும்தான் வேண்டுமா. உன்னோடது எப்பொழுதும் நன்றாகத்தான் இருக்கும்" என்றாள். அதற்குப் பிறகு தனிமையில் சந்தித்தபோது சொன்னேன். அந்த ராட்சசி தீபத்தின் கீழே இலையை ஓட்டை செய்துவிட்டாள் பிருந்தா. அவள் முறுவலித்து விட்டு எனக்குத் தெரியும். நானும் பார்த்தேன் என்றாள் சுருக்கமாய். அந்தச் சிரிப்பு பூமாதேவியை நினைவுப்படுத்தியது. அடுத்தவரின் பைத்தியக்காரத்தனத்தை பொறுமையாக, புன்முறுவலாய் மாற்றிக்கொள்பவர்களுக்குத்தான் அது பொருந்தும்.

தனக்கு வேண்டியதை தரளா நிஜ வாழ்க்கையிலும் அதே போல் சாதித்துக்கொண்டு விட்டாள்.

தன்னுடைய விளக்கை எடுத்துக்கொண்டு பிருந்தா போய் விட்டாள்.

குறைந்தபட்சம் இந்தப் போட்டியிலாவது பிருந்தா ஜெயிப்பாள் என்று நினைத்தேன். பிரபாகரைவிடக் கோபிசந்த் நான் பெருமைப்படத்தக்க மகனாய் எனக்குத் தென்படுவான் என்று எண்ணியிருந்தேன். ஆனால் இதென்ன? என் பிருந்தாவின் வாழ்க்கை இப்படி பாதியிலேயே முடிந்துபோய்விட்டதா?

கோபிசந்தை முன்னுக்குக் கொண்டு வர முடியாமல் போய் விட்டாளா? ஹீனமான நிலையில் உயிரை இழக்க வேண்டிய தாகி விட்டதா?

யோசித்துக்கொண்டே வீட்டுக்கு வந்து சேர்ந்த போது தரளா வீட்டில் இல்லை.

எங்கே போனாள் என்று ஒருவருக்கும் தெரியவில்லை. காரை எடுத்துக்கொண்டு போனதாக வாட்ச்மேன் சொன்னான். அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது, எங்களுக்குப் பின்னால் தொடர்ந்து வந்துகொண்டிருந்த காரைப் பற்றி. அவள்தானோ என்னவோ என்ற சந்தேகம் வந்தது.

முடிந்துவிட்டது.

எங்கள் குடும்ப வாழ்க்கை எரிமலையாக வெடிக்கப் போகிறது என்று புரிந்துவிட்டது. ஆனால் என் மனைவி ரொம்பவும் புத்திசாலித்தனமாக உரையாடலைத் தொடங்கினாள்.

"இந்திராவின் மகள் ஸ்ரீதேவி கூட வந்திருக்கிறாள்" என்றாள்.

"எங்கிருந்து?" என்று கேட்டேன்.

"மதுரையிலிருந்து" என்றாள். அதில் தொனித்த ஏளனத்திற்கு இழுத்து ஒரு அறை கன்னத்தில் கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். அப்படி அடிக்கும்படி நேர்ந்திருந்தால் இந்நேரத்திற்கு அவள் கன்னம் லட்சம் தடவை பழுத்திருக்கும். சமாளித்துக்கொண்டேன். முதலும் கடைசியுமாக அவளை அடித்தது எங்கள் முதலிரவு நடந்த அன்றைக்கு மறுநாள்தான். என்னைச் சுற்றிலும் அவர்கள் விரித்த வலை, நான் ஏமாந்து போய்விட்டது... இவற்றுக்கெல்லாம் நான் இல்லாமல் வேறு யாராவது இருந்தால் அந்த இடத்திலேயே அதனுடைய உயிரை எடுத்திருப்பார்கள். (மன்னிக்க வேண்டும். ஆவேசத்தில் மனைவியை 'அதை' என்று விவரித்துவிட்டேன்).

"நீயும் பாம்க்ரோவுக்கு வந்தாயா?" என்றேன், எதுவும் தெரியாதவன் போல்.

மறுபடியும் ஏளனமாக "பாக்யேஸ்வரி இன்னும் அரைமணி நேரத்தில் நம்நாட்டிற்குத் திரும்பி வரப்போகிறாள்" என்றாள். உண்மையில் அவளுக்கு மூளை கலங்கிவிட்டதென்றே நினைத்தேன். ஸ்ரீதேவி என்கிறாள். இந்திரா என்கிறாள். சற்று நேரம் கழித்து மதுரை என்கிறாள். இப்பொ யாரோ பாக்யேஸ்வரி.

"அவள் யார்?" என்றேன்.

அப்பொழுது வெளிபட்டது கோபிசந்தின் பெயர். எந்தப் பெயர் இருபது வருடங்களுக்கு மேலாக என் இதயத்தில் துடித்துக் கொண்டிருந்ததோ அந்தப் பெயர்.

சரியாக ஐந்து நிமிடங்கள் கழித்து எங்கள் கார் வேகமாக ஏர்போர்ட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. நான் எதுவும் பேசவில்லை. தரளா போன்ற முட்டாள்கள் எது சொன்னாலும் கேட்கமாட்டார்கள். அதிலும் இந்த அளவுக்குத் துப்பறியும் வேலையை செய்துவிட்டு எதையோ கண்டுபிடித்து விட்டது போல் என்னை சாதிக்கும் மனநிலையில் இருப்பவளிடம் சொல்லுவதுகூட அனாவசியம்.

ஏர் போர்ட்டில் விமானம் எதுவும் இல்லை.

எனக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. தரளா மீது கோபம் பொத்துக்கொண்டு வந்தது. உண்மையிலேயே கோபிசந்த் அவளைச் சந்தித்தானா?

"உங்க பெரிய மகன் ரொம்ப ஸ்மார்ட்டாய் இருக்கிறான். அச்சுவார்த்தாற் போல் உங்களுடைய ஜாடை தான். ஆனால் குணத்தில் உங்களைக் கொண்டிருக்கிறானோ இல்லையோ தெரியாது. பெயர் கோபிசந்த்."

சந்தித்துதான் இருப்பாள். இல்லாவிட்டால் பெயரையும் சேர்த்து துல்லியமாக எப்படிச் சொல்லுவாள்?

இருவரும் பாம்க்ரோவுக்குப் போனோம். கோபி அவ்விடத்தில் தான் தங்கியிருப்பதாகத் தரளா சொன்னாள்.

விசாரித்த போது அந்தப் பெயரில் யாருமே இல்லை என்று சொன்னார்கள். அப்பொழுதுதான் தெரிந்தது. "தேவிகா"வும் அறையைக் காலி செய்துவிட்டாள்.

என்னவாகிவிட்டாள்? யாராவது விபசார விடுதியிலிருந்து வந்து வலுக்கட்டாயமாக மறுபடியும் அழைத்துக்கொண்டு போயிருப்பார்களோ!

அல்லது என் மனைவியைப் பார்த்துவிட்டு அந்தச் சின்னப் பெண் பயந்து போய் மறுபடியும் இருளுக்குள் போய்விட்டாளா? வெளியில் அதற்காகவே காத்திருக்கும் விபசார விடுதியினர் அவளைக் கடத்திக்கொண்டு போயிருப்பார்களா?

உள்ளிருந்து துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது. கடைசி ஆதாரம்கூட கை நழுவிப் போய்விட்டது. என் மனைவியின் முட்டாள் தனத்தினால், என் மனைவியின் அறிவீனத்தினால்.

இத்தனை வருடத் தாம்பத்திய வாழ்க்கையில் என்னைப் புரிந்து கொண்டவளாக இருந்தால், குறைந்தபட்சம் ஒரு கேள்வியாவது கேட்டிருக்கலாமே.

ஊஹூம். அப்படிக் கேட்டுவிட்டால் அவள் தரளா எப்படி ஆவாள். பிருந்தா! என்னை மன்னித்துவிடு. உன் மகளை என்னால் காப்பாற்ற முடியவில்லை. தேவிகா எங்கே இருக்கிறாளோ கண்டு பிடிக்க என்னால் முடிந்தவரையில் முயற்சி செய்கிறேன்.

கோபிசந்த் சொன்ன கதை

மனிதனின் வாழ்க்கையில் அபூர்வமான நிகழ்ச்சிகளுக்குக் கூட தொடக்கம் ரொம்ப சாதாரண மாகத்தான் இருக்கும். அன்று நடந்த நிகழ்ச்சி என் வாழ்க்கையின் லட்சியத்தையே மாற்றி விடும் என்று நான் நினைக்கவில்லை.

மறுநாள் யாருக்கோ கொடுக்க வேண்டியிருந்தது என்று முப்பதாயிரம் ரூபாயை ஆபீசிலிருந்து வீட்டுக்குக் கொண்டு

வந்தேன். அம்மாவிடம் கொடுத்துவிட்டுக் காலையில் எடுத்துக்கொள்கிறேன் என்றும், பத்திரமாக உள்ளே வைத்துவிடு என்றும் சொன்னேன்.

அம்மா பணத்தை வாங்கிக்கொண்டு போய் உள்ளே வைத்தாள். அம்மா இப்பொழுதெல்லாம் ஒரு மாதிரியாக இருந்து வருவதைக் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். அவள் உடல் நலம் கூட சரியாக இருப்பதில்லை. பட்டணத்தில் இருக்கும் பெரிய பெரிய டாக்டர்களிடம் காட்டிய பிறகும் பலன் கிடைக்கவில்லை. நாளுக்கு நாள் தளர்ந்து போய்க் கொண்டிருந்தாள். நான் ஏதாவது சொன்னால், 'வயது ஆகிவிட்டதில்லையா, அதான்!' என்பாள்.

அம்மா இப்பொழுதெல்லாம் ரொம்பவும் மாறிக் கொண்டிருக்கிறாள் என்று என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அன்று ஒரு நாள் திடீரென்று எதற்கோ விழிப்பு வந்து கண்களைத் திறந்துபார்த்தால், கட்டிலுக்குப் பக்கத்தில் நாற்காலியில் அமர்ந்து கொண்டு என்னையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அம்மா தென்பட்டாள். எனக்குப் புரியவில்லை. நான் விழித்துக் கொண்டதைப் பார்த்துவிட்டு நிசப்தமாக அங்கிருந்து போய் விட்டாள்.

அதற்கு மறுநாள் யதேச்சையாகக் கேட்பது போல் கேட்டேன். "என்னம்மா? நாளுக்கு நாள் தளர்ந்து போய்க் கொண்டிருக்கிறாயே?"

சிரித்தாள். அந்தச் சிரிப்பில் உயிர் இருக்கவில்லை. "இந்த அக்டோபர் வந்தால் உனக்கு இருபத்தைந்து வயது பூர்த்தியாகி விடும் இல்லையா?" என்றாள்.

நான் கேட்ட கேள்விக்கும் அந்தப் பதிலுக்கும் சம்பந்தம் இல்லை. தலையை அசைத்தேன்.

"நான் இல்லாமல் உன்னால் இருக்க முடியும் இல்லையா?"

சரெலென்று தலையை உயர்த்தினேன். அம்மா என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் அந்தப்

பார்வை என்னை இல்லாமல் என்னுள் இருக்கும் சின்னப் பையனைப் பார்ப்பது போல் தோன்றியது.

"ஏம்மா? வீடியோவில் ஏதாவது புது சினிமாவைப் பார்த்தாயா?" என்றேன், சூழ்நிலையை எளிதாக்க முயன்று கொண்டே. எப்பொழுதோ நான் படித்த புத்தகத்தில் மனநல நிபுணர் ஒருவர் எழுதியது நினைவுக்கு வந்தது. கொஞ்சம் வயதானாலும் மனிதனுக்கு தான் வயோதிகத்தை நோக்கிக் காலடி எடுத்துவிட்டது போலவும், மரணத்தை நெருங்கிவிட்டது போலவும் உணர்ச்சிகள் தோன்றுமாம். அம்மாகூட இது போன்ற உணர்ச்சிகளால் வேதனைப்படுகிறாளோ? இருக்காது. இருக்கவே முடியாது.

அம்மா இதுபோன்ற உணர்வுகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவள் என்று நான் நம்புகிறேன். ஆமாம். அவ்வளவு உயர்ந்தவளாக இல்லாவிட்டால் சாத்தான்கள் நிறைந்த இந்த உலகத்தில் தனியாக வாழ்ந்துகொண்டு, சுயமுயற்சியால் என்னை இவ்வளவு நல்ல நிலைமைக்குக்கொண்டு வந்திருக்க முடியாது. இந்தச் சமுதாயம், இந்த மனிதர்கள் அம்மாவை எந்த அளவுக்கு துன்புறுத்தி இருக்கிறார்களோ அவள் நெற்றியில் இருக்கும் கோடுகளே தெரிவிக்கும். ஆனாலும் எல்லோரையும் எதிர்த்து நின்றாள். என்னை ஒரு மனிதனாக உருவாக்கினாள் அப்படிப் பட்ட அம்மா மரணத்தைக் கண்டு பயப்படுவாளா? இல்லை... எனக்கு இருபத்தி ஐந்து வயது நிரம்பியதும் தன் உயிர் போய்விடும் என்று யாராவது ஜோதிடம் சொல்லி இருப்பார்களா?

மறுநாள் ஆபீசுக்குப் புறப்படுவதற்கு முன்பு பணத்தை எடுத்துக் கொள்வதற்காக பீரோவைத் திறந்தேன்.

பத்தாயிரம் குறைவாக இருந்தது.

வியப்படைந்தேன்! இன்னொருமுறை எண்ணினேன். இருபதாயிரம்தான் இருந்தது. "அம்மா! இதில் பணம் குறைவாக இருக்கு" என்று கத்தினேன். அம்மா வந்தாள்.

ஆமாம் கண்ணா. நான்தான் எடுத்தேன்.

"நீ எடுத்தாயா?" என்றேன். திகைப்புடன் அந்தப் பணம் எனக்கு அவசரமாக வேண்டியிருந்தது. அதோடு அம்மா என்னிடம் சொல்லாமல் அப்படி எடுத்துக்கொண்டது அதுதான் முதல் தடவை.

"எதுக்கு?" என்று கேட்டேன்.

"எதுக்கு என்று சொன்னால் தவிர எடுத்துக்கொள்ளும் உரிமை எனக்கு இல்லையா?" அம்மா அத்தனைக் கடுமையாக பேசுவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தலை உயர்த்திப் பார்க்கும்போது அம்மா முகத்தைத் திருப்பிக்கொண்டு அங்கிருந்து போய்விட்டாள். அவள் கண்களில் ஈரம் பளபளத்தது போல் தோன்றியது. அதற்குக் காரணம் எனக்கு அன்று மாலையில் தெரிந்தது.

அன்று முழுவதும் அலுவலகத்தில் அதைப் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தேன். அவ்வளவு அவசரமாக அம்மாவுக்குப் பணம் எதற்குத் தேவைப்பட்டிருக்கும்? பத்தாயிரம் தனக்குப் பெரிய விஷயம் ஒன்றுமில்லை. ஆனால் தான் அந்த விஷயத்தைக் கேட்டதும் அம்மா முகத்தில் தென்பட்ட குற்ற உணர்ச்சியைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு சின்னப்பையன் இல்லை நான்.

சிறுவயதிலிருந்தே அம்மாவிடம் எனக்குப் பிரியம் அதிகம். அதை என்னால் வார்த்தைகளில் சொல்லமுடியாது. வீட்டில் நானும் அம்மாவும் மட்டுமே இருந்து வந்ததால், இந்தப் பாசப் பிணைப்பு அதிகமாகி விட்டிருக்கலாம். என் தந்தை ஜெயிலில் இருக்கிறார்.

ஆமாம். கிட்டத்தட்ட இருபத்தி ஐந்து வருடங்களாக ஜெயிலில்தான் இருந்து வருகிறார்.

நடுவில் ஒரு மாதமோ, இரண்டு மாதமோ வெளியில் வருவதும் மறுபடியும் இன்னொரு குற்றம் செய்துவிட்டு ஜெயிலுக்குப் போவதும்தான் அவர் வழக்கம். வெளியில் இருந்த போது, ஓரிரு முறை வீட்டிற்கு வந்தார். அம்மாவைத் துன்புறுத்திப்

பணத்தை வாங்கிக்கொண்டு போவார். ஆனால் இதெல்லாம் என் சிறு வயதில் நடந்த விஷயம். என் பன்னிரண்டாவது வயதில் என்று நினைக்கிறேன். ஏதோ கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு அப்பாவுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

அவ்வளவு சின்ன வயதிலேயே அந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு நான் ரொம்ப நிம்மதியாக உணர்ந்தேன். அப்பா வீட்டுக்கு வந்து துன்புறுத்திய போதெல்லாம் அம்மா நாலைந்து நாட்கள்வரை சாதாரண மனுஷியாக இருக்க மாட்டாள். எனக்கு யார் மீது என்றே சொல்லத் தெரியாத கோபம், ஆத்திரம் வரும். ஆனால் எதுவும் செய்ய வழி இல்லாத சிறு பிராயத்தில் இருந்தேன். அதனால் அப்பா இன்னும் பன்னிரண்டு வருடங்கள் வரை வெளியே வர மாட்டார் என்று தெரிந்ததுமே அந்த வயதில் மகிழ்ச்சி அடைந்தேன்.

அப்பாவைப் பற்றிய பேச்சே வீட்டில் எப்போதும் வந்தது இல்லை. அம்மாவுக்கு அதைப் பற்றிப் பேசினாலே பிடிக்க வில்லை என்று தெரிந்த பிறகு நானும் என்றுமே அந்தப் பேச்சை எடுத்ததில்லை. ஒன்று மட்டும் நினைத்துக்கொள்வேன். அடுத்த முறை வரட்டும். ஒருகை பார்த்து விடுகிறேன். இந்த முறை அப்பா வந்து பணம் கேட்டால் அவர் தன் வாழ்நாளில் என்றுமே அனுபவித்திராத நரகத்தை அனுபவிக்கப் போகிறார்.

அம்மாகூட அப்பாவைப் பார்க்க ஜெயிலுக்குப் போவதோ, கடிதம் எழுதுவதோ செய்தது இல்லை. அம்மாவைப் போன்ற உத்தமிக்கு அப்பா எப்படி கணவராக வந்தாரோ எனக்கு இன்று வரை புரியவில்லை.

அப்பாவின் பெயர் பைரவமூர்த்தி.

எனக்கு நினைவு தெரிந்த பிறகு அவர் இரண்டு மூன்று முறை ஜெயிலிலிருந்து வந்திருக்கிறார். அந்தச் சமயத்தில் ஏதோ வேலை இருப்பது போல் அம்மா என்னை அங்கிருந்து அனுப்பி விடுவாள். அப்பாகூட என்னை அருகில் அழைத்து அணைத்துக் கொண்டதோ, அன்பாகப் பேசியதோ இல்லை. பணம் வாங்கிக்கொண்டு போய்விடுவார்.

ஒவ்வொரு ரூபாயும் சம்பாதிப்பதற்கு அம்மா எவ்வளவு கஷ்டப்பட்டாள் என்று எனக்குத் தெரியும். அப்படி சம்பாதித்ததை அப்பா வந்து சுருட்டிக்கொண்டு போவதைப் பார்க்கும்போது எனக்கு ரொம்ப வேதனையாக இருக்கும். அப்படியும் அம்மா ஒரு சின்ன டப்பாவில் போட்டுப் பணத்தை ஒளித்துவைப்பாள்.

எனக்கு எட்டு வயதாகும் வரையில் நாலைந்து வீடுகளில் வேலைக்காரியாக வேலை செய்து வந்தாள். மதிய நேரத்தில் துணிகளைத் தைப்பாள். இரவு வேளைகளில் எனக்குப் படிப்புச் சொல்லித் தருவாள். நான் ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது அம்மாவுக்கு ஏதோ ஆபிசில் சின்ன வேலை கிடைத்தது. அதிலிருந்து பணத்திற்கு அவ்வளவாகக் கஷ்டம் இல்லாமல் இருந்தது. ஆனால்... அதற்கு முந்தைய நாட்களைப் பற்றி நினைத்துப் பார்த்தால் மட்டும்... மைகாட்! வேண்டாம். ஆனால் அம்மா மட்டும் முறுவலுக்குப் பின்னால் கஷ்டங்களை மறைத்து வைத்து விடுவாள். கொஞ்சம் கூட வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார். சொல்ல மறந்து விட்டேன். அம்மா ஒரு பட்டதாரி. ஒரு பட்டதாரிக்கு வேலை கிடைப்பதற்குப் பத்தாண்டுகள் ஆயிற்று. ஆனால் இந்தப் பத்து ஆண்டுகளும் ஏதோ ஒரு வேலையைச் செய்து அம்மா என்னைப் படிக்க வைத்தாள். தானும் வாழ்ந்தாள்.

அதற்குப்பிறகு நான் நிறைய புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினேன். நிறைய பேர் பெண்களின் பிரச்சனைகளை, வரதட்சணை சாவுகளை, முதிற்கன்னிகளின் திருமணப் பிரச்னைகளைப் பற்றியும் நிறைய எழுதியிருக்கிறார்கள். அம்மாவைப் பார்க்கும்போது எனக்குத் தோன்றும்; 'தனித்தன்மை இருந்தால் எந்தப் பிரச்னையாக இருந்தாலும் எதிர்த்து நிற்க முடியும்' என்று. எல்லாப் பிரச்சனைகளுக்கும் மூலக்காரணமே தைரியம் இல்லாததுதான். கணவனும், மாமியாரும் சேர்ந்து கொடுமைப்படுத்தினாலும், வரதட்சணை கொடுக்க முடியாமல் திருமணம் நடக்க முடியாமல் போனாலும் எல்லாமே 'தலையெழுத்து' என்று நினைத்துக் குமுறிக்கொண்டிருப்பவர்கள்

எல்லோரும் இந்த வயதில் மகனோடு சேர்ந்து தனியாக இவ்வுலகில் தலை நிமிர்ந்து நின்றிருக்கும் அம்மாவைப் பார்த்து நிறையக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பத்தாம் வகுப்பில் தேர்வு பெற்றதும் நான் சின்ன வேலையில் சேர்ந்தேன், கார் கம்பெனியில் ஃபிட்டராக. அம்மாவுக்கு அதில் விருப்பம் இல்லை. ஆனால் நான் அம்மாவிடம் சொன்னேன். இந்தக் கல்வியைக் கற்பதற்குப் பகல் முழுவதும் கல்லூரியிலும், மாலையில் நண்பர்களோடும், இரவுகளில் சினிமாக்கள் என்று கழிக்கத் தேவையில்லை அம்மா. கடைசி இரண்டையும் விட்டு விட்டால் நாளுக்கு இரண்டு மணி நேரம் போதும். என்றேன். அம்மாவின் கண்களில் எத்தனை முயன்றாலும் மறைக்க முடியாத சந்தோஷம் தென்பட்டது. ஒருக்கால் தன்னுடைய பிடிவாதமும், வாழ்க்கையைப் பற்றி இருக்கும் கமாண்டும் கொஞ்சமாவது மகனிடம் தென்பட்டதற்காகவும் இருக்கலாம். அம்மா ரகசிய மாகச் சேமித்து வைத்திருந்த டப்பாவில் நானும் பணம் போடத் தொடங்கினேன். பிரைவேட்டாகப் படிப்பைத் தொடர்ந்தேன்.

நான் பி.காம் பாஸான அன்றைக்கு இருவருமாகச் சேர்ந்து அதைத் திறந்து பார்த்தோம். அந்த மகிழ்ச்சியைச் சொன்னால் புரிந்துகொள்ள முடியாது. அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும். வங்கியில் சேமித்து வைத்திருந்தாலும் அந்த மகிழ்ச்சி கிடைத்திருக்காது. இருபது வருடங்களின் உழைப்பு அது. அம்மா ஒவ்வொன்றாக எண்ணிக்கொண்டிருந்தபோது பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தேன். சுமார் ஒரு மணி நேரம் பிடித்தது. சில்லரைகளையும், நோட்டுகளையும் எண்ணி முடிக்க.

மொத்தம் இருபத்தி ஐந்தாயிரம் வரையில் இருந்தது.

அப்பொழுது அழுதாள் அம்மா, ஆனந்தத்தால். அதான் சொன்னேனே, சில உணர்வுகளுக்குக் காரணம் இருக்காது என்று.

அந்த இருபத்தைந்தாயிரம் ரூபாயை முதலீடாக வைத்துக் கொண்டு மூவருடன் கூட்டு சேர்ந்துகொண்டு செகண்ட்

ஹேண்ட் கார்களை வாங்கி விற்கும் தொழிலைத் தொடங்கினோம். கார் விலையில் நிறைய ஏற்றம் ஏற்பட்டது. அந்த நாட்களில் நாங்கள் தொட்டதெல்லாம் பொன்னாகத் துலங்கியது. அதோடு எனக்கு இந்தத் துறையில் சிறு வயதிலிருந்தே இருந்த அனுபவம் கை கொடுத்தது. நான்கு ஆண்டுகள் முடிவதற்குள் என் எம்.பி.டெக். படிப்பு முடிவடைந்தது. இன்னொரு பக்கம் பிருந்தா இண்டஸ்ட்ரிஸ் நன்றாக வேரூன்றி விட்டதோடு செழித்து நின்றது.

அது சரி. என் தாயின் பெயரை உங்களுக்குச் சொல்லவே இல்லை இல்லையா.

பிருந்தா.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கும் பின்னால் ஒருபெண் இருப்பாள் என்று சொல்வார்கள். அந்தப் பெண் காதலியாக இருந்தால் வெற்றி இளமையிலிருந்து தொடங்கிவிடும். தாயாக இருந்தால் குழந்தைப் பருவத்திலிருந்தே தொடங்கிவிடும்.

அன்றைக்கு மாலை ஆபிசிலிருந்து நான் திரும்பி வந்து கொண்டிருந்தபோது நடுவில் கார் மக்கர் பண்ணியது. வீடு அருகிலேயே இருந்ததால் நடந்து வந்துவிட்டேன்.

நான் வந்தது அவர்களுக்குத் தெரியாது. முன் அறையில் இருந்தான் அவன். அம்மா அந்தப் பக்கமாகத் திரும்பிப் பேசிக் கொண்டிருந்தாள்.

அவனுக்குத் தாடி மண்டியிருந்தது. கன்னங்கள் குழி விழுந்திருந்தன. என் தந்தையாக இருக்குமோ என்ற சந்தேகம் முதலில் வந்தது. ஆனால் அவன் என் தந்தை இல்லை. அவன் சொல்லிக்கொண்டிருந்தான்.

"நேற்று நீ கொடுத்த பத்தாயிரம் ரொம்பவும் உதவியாக இருந்தது பெரியம்மா. இன்னொரு பத்தாயிரம் கொடு. பைரவ மூர்த்திக்குத் தரணும்."

அவன் என்ன கேட்கிறான் என்று முதலில் எனக்குப் புரியவில்லை. பைரவ மூர்த்தி என்ற பெயர் என் எண்ணங்களைச்

சிதறடித்துவிட்டது. என் தந்தை ஜெயிலில் இருந்து இவனை அனுப்பியிருக்கிறார் என்று புரிந்துவிட்டது. இவ்வளவு நாளாக இல்லை என்று நினைத்திருந்த தொல்லை மறுபடியும் ஆரம்பமாகி விட்டது.

பக்கத்து ஜன்னல் கம்பிகள் வழியாகப் பார்த்தபோது என் தாயின் முகம் நன்றாகத் தெரிந்தது. அவள் முகம் உணர்ச்சிகளற்று ஒரு வெள்ளைக் காகிதம் போல் இருந்தது. திருமணம் ஆன அடுத்த நிமிடத்திலிருந்து துன்புறுத்திக் கொண்டே வந்து வாழ்க்கை முழுவதிலும் நாலைந்து தடவைகளே சந்தித்து, சந்தித்த ஒவ்வொரு தடவையும் பணத்திற்காகத் தொல்லை கொடுத்து வந்த அவன்பால் அவளுக்கு அன்போ, மதிப்போ எப்படி இருக்கும்? ஆனால் இதுவரையில் நடந்தது வேறு. குடிப்பதற்காக மனைவியை ஹிம்சித்தது சாதாரண விஷயம். ஆனால் ஜெயிலிலிருந்து எவனோ ஒரு கையாளை அனுப்பி வைத்தது சகித்துக்கொள்ள முடியாத விஷயம். இதுபோன்ற செய்தியை மற்றொரு முறை கொண்டுவராமல் இருப்பதற்காக அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க எண்ணி உள்ளே காலடி வைக்கப் போன போது மறுபடியும் அவன் குரல் கேட்டது.

"கொடுக்காமல் இருக்க முடியாது பெரியம்மா. உன் மகன் பைரவமூர்த்திக்குப் பிறந்தவன் இல்லை. அவன் உடம்பில் ஓடுவது உன் புருஷனின் ரத்தம் இல்லை. இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லாமல் இருக்கணும் என்றால் பத்தாயிரம் கொடுக்க வேண்டியதுதான்."

பூமி கிர்ரென்று சுழன்றாற் போலிருந்தது. தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டு சமாளித்துக்கொண்டேன். என் தாய்! என்னை வளர்த்து ஆளாக்கிய அன்பின் சொரூபம். அவள் வாழ்க்கைக்குப் பின்னால் இருந்தக் கரிய நிழல்கள் விகாரமாகச் சிரித்து என்னை கேலி செய்துகொண்டிருந்தன. ஒரு கரிய மேகம் என்மீது கவிழ்ந்துவிட்டது போல் உணர்ந்தேன்.

சட்டென்று பாய்ந்து அவர்களுக்கு முன்னால் போய்

நின்று, "அம்மா! இதென்ன? இவன் சொன்னது உண்மைதானா?" என்று உலுக்கி எடுத்துவிட வேண்டும் போல் இருந்தது. ஆனால் ஏதோ புரியாத விவேகம் என் முதுகைத் தட்டி தடுத்துவிட்டது. அவள் என் தாய்!

"என்னிடம் பணம் இல்லை. என்னால் தர முடியாது." அம்மா சொல்லிக்கொண்டிருந்தாள்.

அவன் எழுந்துகொண்டான். "நன்றாக யோசித்துக்கொள் பெரியம்மா. நாளைக்கு இதே நேரத்திற்கு வர்றேன். நீ பணம் தரவில்லையென்று வைத்துக்கொள், உன் மகன் இப்பொழுது பெரிய பதவியில் இருக்கிறான். ஜெயிலில் இருக்கிறவனோடு மகன் இல்லை இவன் என்று வெளி உலகிற்கு தெரிவது அவ்வளவு நல்லது இல்லை. அதற்குப் பிறகு சில நாட்கள் கழித்து, இவன் அவனுடைய மகனே இல்லை. வயிற்றில் பிள்ளையைத் தந்தவன் வேறொருத்தன். வயிற்றுச் சுமையோடு இருந்தவளைப் பார்த்து இரக்கப்பட்டு எங்க பைரவமூர்த்தி கல்யாணம் கட்டிக்கிட்டான் என்று இன்னொரு வதந்தியை எடுத்துவிடுவேன். அதற்குக் கிராமம் முழுவதும் வந்து சாட்சியம் சொல்லும். நீதான் ஓடி வந்துவிட்டாயே ஒழிய காவேரிக்கரையில் அந்தக் கிராமம் எங்கேயும் போகலையே? அங்கே எல்லோருக்கும் உன் விஷயம் தெரியும். அவங்களுக்கு நீ இங்கே இருக்கிறாய் என்று தெரிந்தால் உன் கதி என்னவாகும் என்று யோசித்துப் பார்த்துக்கொள். இந்த ரகசியம் எனக்கும் பைரவமூர்த்திக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. இதைப் புரிந்து கொண்டால் இனி விஷயம் வெளியில் வரவே வராது. போயிட்டு நாளைக்கு வரேன். பணத்தை ரெடியாக எடுத்து வை."

நான் சட்டென்று பக்கத்தில் திரும்பி மறைந்து கொண்டேன். அவன் இறுமாப்புடன் நடந்து வெளியில் போய் விட்டான். உள்ளே அம்மா சிலையாய் நின்றிருந்தாள், ரத்தம் வற்றிப் போய்விட்ட முகத்துடன்.

அவனைச் சற்று தூரம் போகவிட்டு நான் படியை இறங்கினேன். அவன் கேட்டைத் தாண்டிப் போய்க்

கொண்டிருந்தான். கீழே மெகானிக் வந்து நின்று கொண்டிருந்தான், கார் சாவியைத்தந்து விட்டு "சரியாகி விட்டது சார் என்றான்." காரை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தேன். இரண்டு தெருக்களைக் கடக்கும் வரையில் அவனை விட்டு விட்டுப் பின்னாலிருந்து காரைப் பக்கத்தில் கொண்டு போய் நிறுத்தினேன்.

"காரில் ஏறிக்கொள்"

"யார் நீ?"

"காரில் ஏறிக் கொள்." சொல்லுகிறேன்.

"யாருன்னு கேட்டால் சொல்ல மாட்டேங்கிறாயே?"

காரை விட்டு இறங்கிச் சுற்றிக்கொண்டு வந்து பக்கத்தில் நின்று பிரண்ட் டோர் திறந்து பிடித்துக்கொண்டு, "ஏறு சொல்கிறேன்" என்றேன்.

"எதுக்குன்னு சொன்னால் தவிர ஏற மாட்டேன். நீ யாரு? அதைச்சொல்லு முதலில்."

உள்ளங்கையை மடக்கிக் கொண்டு அவன் முகவாய் இடம் பெயரும் அளவுக்கு பலமாகக் குத்து விட்டேன். கார்களைப் பழுது பார்த்த கைகள் அவை. அவன் தலை காரில் போய் மோதிக் கொண்டது. தெருவில் போய்க் கொண்டிருந்தவர்கள் நின்று வியப்போடு பார்த்தார்கள். புத்தர் அவதரித்த நாட்டில் பிறந்த மக்கள்' சாதாரணமாக யாருடைய தகராறிலும் தலையிட மாட்டார்கள். பக்கத்தில் கொலையே நடந்தாலும் பொருட்படுத்த மாட்டார்கள்.

சட்டைக் காலரைப் பற்றி எழுப்பிக் காரில் தள்ளி விட்டு, டிரைவிங் சீட்டில் உட்கார்ந்துகொண்டு நிதானமாக டிரைவிங் செய்யத் தொடங்கினேன்.

"இதென்ன அநியாயம்?" என்று அவன் திமிறிக் கொண்டிருந்தான். அவன் வாயிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

காரை ஊர் எல்லைக்கு அப்பால் கொண்டு போய் ஆளரவ மில்லாத தோட்டத்திற்கு அருகில் நிறுத்தினேன். காரிலிருந்து அவனை இறங்கச் சொன்னேன்.

"சந்தடியான கடைத்தெருவிலேயே உன்னை அடித்ததி லிருந்து என் சுபாவம் உனக்குப் புரிந்திருக்கும். எனக்கு அதிக நேரம் இல்லை. உனக்குத் தெரிந்ததை முழுவதுமாகச் சொல்லி விடு.

"என்ன செய்யணும்? யார் நீ?"

"நீ இப்பொழுது பிளாக் மெயில் பண்ண வந்தாயே. அவளுடைய மகன் நான்."

'ஓஹோ. . . அதோட மகனா?"

இந்த முறை அடித்த அடி கன்னத்து எலும்பிற்குச் சற்று கீழே பட்டது. ரத்தத்தில் தோய்ந்த இரண்டு பற்கள் உதிர்ந்து விழுந்தன.

"சொல்லு. பைரவ மூர்த்திக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? என் தந்தை யாரு?"

"நான் சொல்ல மாட்டேன்." அது மட்டுமில்லை. "உன் தாய் பற்றியும், உன்னைப் பற்றியும் உலகம் முழுவதும் சொல்லி விடுவேன்."

நான் காரின் பின்னால் சென்று டிக்கியைத் திறந்தேன். நான் அந்தப் பக்கமாகப் போனதைப் பார்த்துவிட்டு அவன் ஓடப் போனான். அதை முன் கூட்டியே ஊகித்துவிட்ட நான் காலைக் குறுக்கே நீட்டியதும் குப்புற விழுந்தான்.

காரிலிருந்து கேனை எடுத்து வந்து பெட்ரோலை அவன் மேல் வீசினேன்.

"எங்க அம்மாவைப் போல் எனக்குப் பொறுமை, நிதானம், பயம் எதுவும் இல்லை. ஒரு நிமிஷம் அவகாசம் தருகிறேன். உனக்கும், உன் குருநாதனுக்கும் தெரிந்த அத்தனையுமே சொல்லி விட வேண்டும்.

அவனை முழுவதுமாகப் பெட்ரோலில் நனைத்துவிட்டுப் பையிலிருந்து லைட்டரை எடுத்தேன். உரத்த குரலில் கத்தப் போனவனின் வாயைப் பூட்ஸ் காலால் அழுத்தி மூடினேன்.

"உலகம் முழுவதும் பரப்பி விடுவேன்னு சொன்னாய் இல்லையா. இப்பொ கத்துவானேன்? எப்படிப் பரப்புவாயோ பார்த்து விடுகிறேன். முதலில் உன்னைக் கொன்று விடுகிறேன். பிறகு, ஜெயிலில் இருக்கிற அவனையும் கொன்று விடுகிறேன் அது போதும். இந்த ரகசியம் இனி வெளியில் வராது."

டப் என்ற சத்தத்துடன் லைட்டர் எரிந்தது.

முன்னால் குனிந்தேன், காற்று வீசிய வேகத்திற்கு லைட்டர் இன்னும் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது.

"சொல்கிறேன். என்னைக் கொன்று விடாதே." கத்தினான் பயத்துடன்.

லைட்டரை அணைத்துவிட்டு எழுந்து நின்று கொண்டு, "சொல்லு" என்றேன்.

"நீ பைரவ மூர்த்தியின் மகன் இல்லை. உன் தாயின் கழுத்தில் தாலியைத்தான் அவன் கட்டினான்.

உன் தந்தை வேறொருத்தன். அவன் உன் தாயை ஏமாற்றி விட்டுப் போய் விட்டான். பாவம் என்று இரக்கப்பட்டு எங்க வாத்தியார் கல்யாணம் பண்ணிக்கிட்டார்."

"இதெல்லாம் உனக்குச் சொன்னது யாரு?"

"ஜெயிலில் இருக்கும் எங்க வாத்தியார்தான்."

"வா. அவனிடம் போவோம்."

"அவன் அங்கே எப்படி இருப்பான்? செத்துப் போய்ப் பத்து நாளாகிறது."

நான் சிலையாகிவிட்டேன். பைரவ மூர்த்தி இறந்து விட்டான். என் தாயின் கணவன் செத்துப் போய்விட்டான்.

என்னுள் மாறிக்கொண்டிருந்த எண்ணங்களைப் பொருட் படுத்தாமல் அவன் மேலும் சொல்லிக்கொண்டே போனான்.

"செத்துப் போவதற்கு முன்னால் என்னை அருகில் அழைத்து அவன் சொன்னான். அடுத்த வாரம் நீ வெளியில் போகப் போகிறாய். உனக்கு ஏதாவது பணம் தேவைப்பட்டால் என் பெண்டாட்டியிடம் கேளு. நல்ல அந்தஸ்தில் இருக்கிறாள். அவளுடைய மகனின் ரகசியம் உனக்குத் தெரியும்னு சொல்லு. பணத்தைத் தந்துவிடுவாள் என்றான். பாவம் சாகும் போதுகூடச் சீடனை மறக்கவில்லை."

அவன் கழுத்தைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினேன்.

"நான் யாருடைய மகன்?"

"எனக்குத் தெரியாது."

"தெரியும் இந்த விஷயத்தைக்கூட அவன் உனக்குக் கட்டாயம் சொல்லியிருப்பான். சொல்லு! என் தாயை ஏமாற்றியது யாரு?"

"சத்தியமாகச் சொல்லுகிறேன். பெயர் சொன்னால் போதும். பணத்தைக் கொடுத்து விடுவாள் என்று சொன்னான். மீதி விவரங்கள் எதுவும் அவனுக்குக் கூடத் தெரியாது என்று நினைக்கிறேன். உன் தந்தை எங்கே இருக்கிறானோ அவனுக்கும் தெரியாது."

உதட்டை அழுத்திக்கொண்டு கடினமான குரலில் கேட்டேன். "என்ன பெயரைச் சொன்னான்?"

"....."

"திருமணத்திற்கு முன்னால் என் தாயை ஏமாற்றியவன் பெயர் என்னவென்று சொன்னான்?" என் கத்தலுக்கு அங்கிருந்த மரங்கள் கூட அதிர்ந்தன.

"அயினம்பூடி ஆனந்தன்."

6

பூமியும், காற்றும், மரங்களும் என் தாயை ஏமாற்றியவனின் பெயரைக் கேட்டன. நாளைக்கு அவனுடைய சாவிற்கு அவைகளே சாட்சிகளாய் நிற்கும்.

அந்தப் பெயரை நான்கைந்து முறை மனதிலேயே சொல்லிப் பார்த்துக்கொண்டேன். அயினம்பூடி ஆனந்தன்.

எதிரே நின்றிருந்தவனிடமிருந்து பெட்ரோல் நாற்றம் காற்றில் கலந்து வீசியது. வாயிலிருந்து ரத்தம் இன்னும் வழிந்து கொண்டிருந்தது. அவன் முற்றுலும் மிரண்டு போனவனாக தென்பட்டான். இனி அவனிடமிருந்து எந்த ஆபத்தும் வராது என்று தோன்றியது.

"இந்தப் பெயர் உன்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது இல்லையா?"

"தெரியாது."

"சொல்லுவாயா?"

"மாட்டேன்."

"மறுபடியும் எங்க வீட்டுப் பக்கம் வருவாயா?"

"மாட்டேன்."

"என்னுடைய தாயைச் சந்திக்க முயற்சி செய்வாயா?"

"மாட்டேன். இந்த ஊரிலேயே இருக்க மாட்டேன். போய் விடுவேன்.

"போ. திரும்பவும் இன்னொருதடவை நீ கண்ணில் பட்டாயானால், இந்த விஷயத்தை நீ யாருக்காவது சொன்னாயா இல்லையா என்றுக்கூடக் கேட்க மாட்டேன். பெட்ரோலால்கூட எரிக்க மாட்டேன். ஒரே போடு மார்பில். தெரிந்ததா?"

அவன் தலையை அசைத்தான்.

"போ. நான் மனதை மாற்றிக்கொள்வதற்கு முன் ஓடிப் போய் விடு."

அவன் திரும்பினான்.

"இன்னொரு விஷயம். பைரவமூர்த்தி இறந்துபோன விஷயம் என் தாய்க்குத் தெரியக்கூடாது."

அவன் தலையை அசைத்துவிட்டு ஓட்டமாக ஓடி போய் விட்டான்.

காரில் உட்கார்ந்துகொண்டேன். உடனே ஸ்டார்ட் செய்யவில்லை. அதுவரையில் இருந்த கோபமும், எரிச்சலும் மறைந்து அந்த இடத்தில் சோர்வு ஆட்கொண்டது. என் தாய் ஏன் இவ்வளவு வேதனைபட்டுக் கொண்டிருந்தாள் என்று புரிந்துவிட்டது. நாளாகக் கடந்த காலம் அவளை நிழலாய்ப் பயமுறுத்திக் கொண்டே வந்தது என்ற விஷயம் அவள்பால் எனக்குக் கோபத்தையோ, வெறுப்பையோ ஏற்படுத்தவில்லை. இந்த உலகில் ஒரு பெண் நஷ்டப்பட்டுவிட்டாள் என்றால் அது ஆணின் மோசடிக்கு எடுத்துக்காட்டு மட்டும்தான். இத்தனை வருடங்களாக இந்த எரிமலையை மனதிற்குள் புதைத்து வைத்துக்கொண்டு, மகனின் எதிர்காலத்திற்காகப் பாடுபட்ட அப்பெண்மணி எனக்குத் தாயாக இல்லாமல் இருந்தாலும், இந்தக் கதை தெரிந்த பிறகு எனக்கு அவள்மீது கோபம் வராது. என் கோபமெல்லாம் அவன் மீதுதான். அயினம்பூடி ஆனந்தன்! அவன் எங்கிருந்தாலும் கண்டு பிடிக்கிறேன். உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் சரி.

இனி பைரவமூர்த்தி இறந்துபோன செய்தியை வெளிப்படுத்துவதா வேண்டாமா என்ற கேள்வி என்னுள் எழும்பியது. அம்மாவிடம் ஏன் சொல்ல வேண்டும்? மொத்த வாழ்க்கையில் பத்து, பன்னிரண்டு தடவைகள் மட்டுமே சந்தித்து, சந்தித்த போதெல்லாம் பணத்திற்காகத் துன்புறுத்தி, இப்பொழுது அவள் வாழ்க்கையிலிருந்து சாசுவதமாக பிரிந்து

சென்றவனுக்குப் போகும்போது என்தாயின் மஞ்சள் குங்குமத்தைப் பறிக்கும் உரிமை என்ன இருக்கிறது? என் தாய் சுமங்கலியாகத்தான் சாகவேண்டும். "பிளாக் மெயில், பண்ணுவதற்கு அவன் ஏன் இப்பொழுதெல்லாம் வருவதில்லை?" என்று கொஞ்ச நாள் ஆச்சரியமடைந்தாலும் மெள்ள மெள்ள மறந்து போய் விடுவாள். போகட்டும். அதை விட வேறு என்ன வேண்டும்? என் யோசனை சரியாக இருக்கும் போல் தான் தோன்றியது. என் தாயின் கணவன் இறந்து போன விஷயத்தை மட்டும் அவளிடம் சொல்லப் போவதில்லை. என் தந்தை யார் என்று தெரிந்த அடுத்த நிமிடத்திலிருந்தே அவனை மானசீகமாய்க் கொல்லத் தொடங்குவேன்.

அந்த எண்ணம் வந்த பிறகு மனம் கொஞ்சம் நிதானத்திற்கு வந்தது.

காரை ஸ்டார்ட் செய்து வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். வீடு முழுவதும் நிசப்தமாக இருந்தது. இருட்டி விட்ட பிறகும் வீட்டில் விளக்குகள் எரியவில்லை. அம்மா அப்படியே உட் கார்ந்திருந்தாள். விளக்கைப் போட்டு விட்டு அப்பொழுதுதான் ஆபிசிலிருந்து வந்தவனை போல்.

"என்னம்மா? இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டேன். நீண்ட யோசனையிலிருந்து விடுபட்டவளைப் போல் திடுக்கிட்டு "ஒன்றுமில்லையப்பா" என்றாள்.

"ரொம்பப் பெரிய விபத்தும்மா. வரும்போது வழியில் பார்த்தேன். எவனோ பாவம். நன்றாகக் குடித்து விட்டுத் தெருவில் குறுக்கே வந்து பஸ்ஸின் அடியில் மாட்டிக்கொண்டான்."

"பாவம். யாருப்பா?"

"சிவப்பு நிறச் சட்டையைப் போட்டிருந்தான். தாடி ரொம்ப வளர்ந்திருந்தது. ஜெயிலில் இருந்து வெளியில் வந்தவனாம். போலீசார் பேசிக்கொண்டார்கள்."

அம்மாவின் முகம் வெளிறிப் போய்விட்டது. ஆனால் ஏதோ இனம் தெரியாத நிம்மதி அவள் முகத்தில் தென்பட்டது.

அது போதும்.

செங்கற்பட்டிற்குப் பக்கத்தில் உள்ள ஒரு ஊரில் ஒரு சிறிய பேப்பர் மில்லை, பிருந்தா இண்டஸ்ட்ரீஸின் சார்பில் வாங்கினோம். அதை வாங்கி ஒரு வருடம் ஆகிறது. ஆனால் வாங்கினதிலிருந்தே தகராறுதான். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை லட்சக்கணக்கான விலை மதிப்புள்ள மூங்கில்களை இரவு நேரத்தில் யாரோ திருட்டுத்தனமாய்க் கொளுத்திக் கொண்டிருந்தார்கள். தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ஒரு பக்கம். அங்கே இருந்த மேனேஜரைக் கொலை செய்துவிட்டார்கள். மனிதர்களுக்குத் தொலைவில் காட்டில் ஒவ்வொரு நிமிடமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ வேண்டிய சூழ்நிலை. அங்கே யாருமே மேனேஜராகப் போவதற்கு விருப்பப்படவில்லை. அங்கே ரகளை ஓயும் வரையில் ஏதோ ஒரு சாக்கு வைத்துக்கொண்டு இங்கேயே தங்கி விடும் யோசனையில் இருந்தார்கள்.

புது ஆட்களைத் தேர்வு செய்து சிலரை அங்கே அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் வந்தது. அதற்காக விளம்பரம் செய்தோம்.

வந்த அப்ளிகேஷன்களைப் பார்க்கும்போது எனக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. நாலு இடம் காலி இருந்தால் கிட்டத்தட்ட இரண்டாயிரம் அப்ளிகேஷன்கள் வந்தன. எல்லோரும் நன்றாகப் படித்தவர்கள்தாம். என் தாய் என்னை இப்படி உருவாக்கியிருக்காவிட்டால், நானும் அவர்களைப் போலவே இருபத்திநான்கு வருடங்கள் வரை படிப்பில் காலம் கழித்துவிட்டு, யாரும் வேலை தருவார்களா என்று அப்ளிகேஷன்களை எழுதி நிரப்பிக் காலத்தை வியர்த்தமாக கழித்துக்கொண்டிருப்பேன்.

"நீங்களும் இன்டர்வ்யூக்கு வர்றீங்களா?" மேனேஜர் கேட்டார்.

"எவ்வளவு பேரை வடிக்கட்டி இருக்கீங்க?"

"எழுத்துத் தேர்வில் நூறு பேர் வரை எடுத்திருக்கிறோம். அதில் இருபது பேரை பைனலைஸ் செய்திருக்கிறோம்."

"சரி. இண்டர்வ்யூ எப்போது?"

"இன்னும் ஒரு மணி நேரத்தில்."

"கிருஷ்ணமூர்த்தியைப் பண்ணச் சொல். நடுவில் நான் வந்து சேர்ந்து கொள்கிறேன்" என்றேன்.

கிருஷ்ணமூர்த்தி என்னுடைய பார்ட்னர்.

மேனேஜர் போய்விட்டார். நான் இன்னும் சற்று நேரம் வேலைகளை முடித்துக்கொண்டு அங்கே போய்ச் சேரும் போது பாதிப்பேருக்கு மேல் இண்டர்வ்யூ நடந்து முடிந்துவிட்டது. ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்தேன்.

"அர்ஜெண்டினாவின் தலைநகரம் எது?"

இமயமலை மேல் ஏறும்போது நழுவி கீழே விழுந்து இறந்து போன கொரியா இளைஞனின் பெயர் என்ன? போன்ற சம்பந்தா சம்பந்தம் இல்லாத கேள்விகளைக் கிருஷ்ணமூர்த்தி கேட்டுக் கொண்டிருந்தான். எங்க கார்களுக்கு ப்ரேக்லைனர் களை சப்ளை செய்யும் இன்னொரு கம்பெனியின் டைரக்டர் சிபாரிசு செய்த நபருக்கு இந்த வேலையே முன் கூட்டியே தீர்மானித்துவிட்டதால் இந்தச் சடங்கெல்லாம் வெறும் கண் துடைப்பிற்காகத்தான். நான் மௌனமாகப் பேப்பர்களைக் கையில் எடுத்துக்கொண்டு பரிசீலித்துக் கொண்டிருந்தேன். இண்டர்வ்யூக்கு வந்தவர்களின் பட்டியல் அது. அத்துடன் அப்ளிகேஷன்கள் இணைக்கப்பட்டிருந்தன.

ஓரிடத்தில் என் பார்வை அப்படியே நின்றுவிட்டது. ஒரு இளைஞனின் போட்டோ அத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. அதை இல்லை நான் பார்த்தது. அந்தப் பெயரை ஏ. பிரபாகர். சன் ஆஃப் அயினம்பூடி ஆனந்தன்.

என் கைகள் நடுங்கத் தொடங்கின. நாற்காலியை விட்டு எழுந்து நின்றேன். கிருஷ்ணமூர்த்தி கேள்வி கேட்பதை நிறுத்தி விட்டு என் பக்கம் பார்த்தான். நான் பொருட்படுத்தவில்லை.

அந்த லிஸ்டை எடுத்துக்கொண்டு அப்படியே வெளியே வந்தேன். மேனேஜர் ஒவ்வொரு கேண்டிடேடை உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்.

என் வாழ்நாளில் என்றுமே நான் அத்தனை பரபரப்பு அடைந்ததில்லை. தேடப் போனமூலிகை காலுக்குத் தட்டுப் பட்டாற் போல் இருந்தது. "இவன்... இவனுடைய இன்டர்வ்யூ முடிந்து விட்டதா?"

"முடிந்துவிட்டது சார். இப்பத்தான் போனார்." மேனேஜர் அவனுடைய நம்பரைப் பார்த்துவிட்டுச் சொன்னார். கொஞ்சம் ஏமாற்றம் அடைந்த போதிலும் முற்றிலும் மனம் தளர்ந்து போகவில்லை. அப்ளிகேஷனில் அவனுடைய முகவரி இருந்தது.

அடுத்த நிமிடமே காரில் இருந்தேன்.

அந்த முகவரியைக் கையில் வைத்துக்கொண்டு வீட்டைக் கண்டு பிடிக்க அரைமணி நேரம் பிடித்தது. ஆனால் நான் நினைத்தாற்போல் அது வீடு இல்லை. ஒரு வீட்டின் முன் அறையில் பிரபாகர் குடியிருந்தான்.

நான் போனபோது அவன் ப்ரீஃப் கேசை எடுத்துக்கொண்டு படியிறங்கிக்கொண்டிருந்தான்.

அயினம்பூடி ஆனந்தன் என்ற பெயரில் இருவர் இல்லாத பட்சத்தில் இவன் என்னுடைய தம்பி.

"யார் வேண்டும் உங்களுக்கு?" என்றான்.

அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் "பிருந்தா இண்டஸ்ட்ரீஸின் பார்ட்னர் நான்" என்றேன். அவன் முகத்தில் உடனே மாறுதல் தெரிந்தது.

"என்ன வேண்டும் சார்?" என்றான்

"எங்கே பயணம்?"

"வீட்டுக்குக் கிளம்பிக்கொண்டிருக்கிறேன். இப்பொழுது தான் உங்க ஆஃபீசில் இண்டர்வ்யூவுக்கு வந்தேன்."

"ஆமாம். தெரியும்."

"இண்டர்வ்யூ முடியாவிட்டால் இரவு ரயிலில் போகலாம் என்று நினைத்தேன். சீக்கிரமாக முடிந்துவிட்டது. உடனே புறப்பட்டால் இந்த ரயிலையே பிடித்துவிடலாம்."

"அந்தப் பக்கம்தான் போகிறேன். ஸ்டேஷனில் இறக்கி விடுகிறேன்."

அவன் கண்களில் குழப்பம் முழுவதுமாக நீங்கவில்லை. அப்படியே வந்து உட்கார்ந்துகொண்டான். கார் கிளம்பியது.

"உங்களுக்கு எந்த ஊரு?"

சொன்னான்.

"உங்க அப்பா என்ன செய்கிறார்? ஆனந்தன்தானே அவருடைய பெயர்?"

"ஆமாம். அவரை உங்களுக்குத் தெரியுமா?"

தெரியும் என்று சொல்லலாமா? மகாத்மா காந்தி சொன்னது போல் நம் எல்லோர் உடம்பிலும் ஓடுவது ஒரே ரத்தம். நம் மூவர் உடம்பிலும்.

"தெரியாது. அப்ளிகேஷனில் பார்த்தேன். என்ன செய்கிறார்?" சாதாரணமாகக் கேட்பது போல் கேட்டேன், காரை மெதுவாக ஓட்டிக்கொண்டே "தரளா இண்டஸ்ட்ரீஸ் முதலாளி."

வியப்புடன் பார்த்துவிட்டு, "பின்னே எங்கள் கம்பெனியில் வேலைக்கு அப்ளை செய்வானேன்?" என்று கேட்டேன்.

அவன் உடனே பதில் சொல்லாமல் சற்று தாமதித்து விட்டுச் சொன்னான். "கொஞ்சம் அனுபவம் கிடைக்குமே என்று தான். அதோடு என் சுயமுயற்சியால் ஒரு நிலையை அடைய வேண்டும் ஆர்வமும் இருந்தது."

வெரிகுட். அயினம்பூடி ஆனந்தனின் ரத்தத்தில் இன்டிவிட்யுவாலிடியை வாரிசுக்குத் தரும் குணம் இருக்கும் போலும்.

"தரளா இன்டஸ்ட்ரீஸ் பெயரே வேடிக்கையாக இருக்கு."

"அம்மாவின் பெயர் தரளா. எல்லா இண்டஸ்ட்ரிஸும் அம்மாவின் பெயரில்தான் இருக்கு."

"உங்க தாத்தாவோடதா?" ரொம்பக் காஷுவலாகக் கேட்டேன்.

"ஆமாம்."

ஆனந்தன் என் தாயை ஏன் மணக்கவில்லை என்று புரிந்து விட்டது. வழக்கமான இரையைத் தின்று முடித்த பிறகு, முடிந்தால் இன்னொரு நல்ல உணவை நோக்கிப் போவது மீனுக்குப் பழக்கம் தானே.

நான் மௌனமாக டிரைவ் செய்துகொண்டு இருந்ததைப் பார்த்துவிட்டு "நீங்க..." என்று இடையிலேயே நிறுத்திக் கொண்டான்.

"எங்க பேப்பர் மில்லில் அஸிஸ்டெண்ட் மேனேஜர் வேலைக்காக நீங்க அப்ளை செய்தது?"

"ஆமாம்."

"மேனேஜர் வேலையே தருகிறேன். ஒப்புக்கொள்வீர்களா? மேலும் ஐநூறு ரூபாய் அதிகமாகக் கிடைக்கும்."

அவன் கண்களில் வியப்பு வெளிப்படையாகத் தெரிந்தது.

"எனக்கா?" என்றான்.

"ஆமாம். நீங்க சட்டம் படித்திருக்கீங்க இல்லையா?"

அவன் தலையை அசைத்துவிட்டு அதைப் படிக்கத்தான் இந்த ஊருக்கு வந்து தங்கினேன். "விடுமுறையில் பொழுது போகுமே என்று வேலைக்கு அப்ளை செய்தேன்" என்றான்.

"அதற்காக வேலையைக்கூட பொழுது போக்காகச் செய்ய மாட்டீங்க இல்லையா?"

"சாரி. என் உத்தேசம் அது இல்லை."

"ரொம்ப ரிஸ்கான வேலை அது. அந்த ஏரியா அவ்வளவு நல்லதும் இல்லை. அங்கே உள்ளூர்க்காரர்களுடன் தொழிலாளர் களுடன் எந்த நிமிடமும் ஆபத்து வரலாம். கொஞ்சம் கோபம் வந்தாலும் கும்பலாகப் படை எடுத்து வந்து உயிரை எடுத்து விடுவார்கள்."

"ஆனாலும் பரவாயில்லை. செய்கிறேன்."

"கேட்டதை விடப் பெரிய வேலை தருகிறேன். அதனால் மூன்று வருடங்களுக்குப் பாண்ட் எழுதித் தர வேண்டியிருக்கும்."

"ஆட்சேபணை இல்லை."

"அதைத் தெரிந்துகொள்ளத் தான் வந்தேன். உன்னால் எவ்வளவு சீக்கிரத்தில் வேலையில் சேர முடியும்?"

"மூன்று நாட்களில் வந்து விடுகிறேன்."

"குட்" கார் ஸ்டேஷனுக்கு முன்னால் வந்து நின்றது. அவன் இறங்கிக்கொண்டு "தாங்க்ஸ்" என்றான். தலையை அசைத்தேன். அவன் உடனே போகவில்லை.

"இண்டர்வ்யூ முடிந்ததும் இப்படி சுயமாக வந்து கேட்டீங்க என்றால் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. சிபாரிசுகளால் நிரம்பி விட்ட இந்த உலகில் நீங்க இதுபோல் வலிய வந்தது வியப்பாகவும் இருக்கிறது. உண்மையில் என்னிடம்அவ்வளவு தகுதி என்ன இருக்கிறதென்று எனக்கே தெரியவில்லை. போய்வருகிறேன். மூன்று நாட்கள் கழித்து வந்து சந்திக்கிறேன்."

அவன் போன திசையையே பார்த்தபடி மனதில் நினைத்துக் கொண்டேன். 'மிகப் பெரிய தகுதி இருக்கிறது பிரபாகர் உனக்கு. அது என்னவென்று விரைவிலேயே தெரிந்துவிடும்.'

ஆபீசுக்கு வந்ததுமே மேனேஜரிடம் ப்ளைட்டுக்கு டிக்கெட் வாங்கச் சொன்னேன். கிருஷ்ணமூர்த்தியிடம் மேனேஜர் பதவிக்கு ஆளைத் தேர்ந்தெடுத்துவிட்டது பற்றிச் சொன்னேன். அவன் வியப்படைந்தாலும் ஆட்சேபணை சொல்லவில்லை.

"அவ்வளவு பிடித்துப்போய்விட்டானா. உனக்கு அந்தப் பையன்?" என்று மட்டும் சொன்னான்.

"பையனில்லை. அவனுக்கும் என் வயதுதான் இருக்கும்" என்றேன்.

"ஏதாவது சொந்தமா என்ன?"

" அப்படித் தான். ஆனால் அவனுக்குத் தெரியாது."

''தெரிந்திருந்தால் சிபாரிசுக் கடிதம் கொண்டு வந்திருப்பான்."

அதற்குள் மேனேஜர் வந்து டிக்கெட் ஓ.கே. ஆகிவிட்டது என்று தெரிவித்தார். அன்று மாலையே புறப்பட்டு ஒரு மணி நேரத்தில் அந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தேன். ஏர்போர்டில் இறங்கியதும் டைரக்டரியில் பார்த்துத் தரளா இண்டஸ்ட்ரீஸுக்குப் போன் செய்தேன்.

"யார் வேண்டும்? ஆபரேட்டர் கேட்டாள்."

"மிஸ்டர் ஆனந்தன்."

"நீங்க யாரு?"

"ஏ. சாயிசந்த்."

ஒரு நிமிடம் கழித்து ஆனந்தன் லைனில் வந்தார். அதற்குள் போனை வைத்துவிட்டேன்.

ஏர் போர்ட்டிலிருந்து நேராகத் தரளா இண்டஸ்ட்ரிஸுக்கு போனேன். "ஆனந்தன் இருக்கிறாரா?" என்று கேட்டேன்.

''இப்பொழுதுதான் கிளம்பிப் போனார்'' என்றாள் ரிசெப்ஷனிஸ்ட்.

"எங்கே?"

"வீட்டுக்கு."

"கொஞ்சம் வீட்டு அட்ரெஸைத் தர முடியுமா?" என்று கேட்டு முகவரியைப் பெற்றுகொண்டு ஆனந்தனின் வீட்டுக்குப் புறப்பட்டேன்.

பெரிய பங்களா அது. கேட்டுக்கு இரு பக்கத்திலும் தரளா, ஆனந்தன் என்ற பெயர்கள் பதித்து இருந்தன. ரொம்ப மலிவான ரசனை அது. ஆனந்தனின் மனைவி போலும். நாற்பத்தி ஐந்து வயதுக்கு மேல் இருக்கும். வெளியில் தோட்டத்தில் அமர்ந்து கொண்டு தேநீர் கலந்து கொண்டிருந்தாள்

அதற்குள் அவன் உள்ளேயிருந்து தோட்டத்திற்கு வந்தான். ஜிப்பா, பைஜாமா அணிந்திருந்தான். தலைமுடி நரைத்திருந்தது. எந்த நபருக்காக நான் ஒரு வாரமாக, இந்த உலகில் எங்கே இருந்தாலும் கண்டு பிடிக்க வேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தேனோ அந்த ஆள்!

அயினம்பூடி ஆனந்தன் என்ற பெயரில் இருவர் இருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் இதுவரையில் இருந்து வந்தது. அவனைப் பார்த்ததும் அந்த சந்தேகம் நீங்கிவிட்டது.

அவனுடைய நரைத்த தலைமுடிக்குக் கொஞ்சம் டை அடித்து விட்டு எங்க இருவரையுமே சேர்த்து நிற்க வைத்தால் இரட்டையர்கள் என்றுதான் நினைப்பார்கள். நான் அவனுடைய மகன் தான் சந்தேகமே இல்லை.

ரொம்ப நேரம் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள். அவன் சிரித்துக் கொண்டே ஏதோ பதில் சொன்னதும் அந்த அம்மாளும் கலகலவென்று நகைத்துக்கொண்டிருந்தாள்.

எங்கள் வீட்டில் என்றுமே இதுபோன்ற காட்சிகள் தென்பட்டது இல்லை. பொறுப்புகளில் பாரமும், லட்சியத்தை அடைய வேண்டும் என்ற வெறியும், சிக்கல் நிறைந்த வாழ்க்கையின் போக்கும் தாய் மகனுக்கு இப்படிப்பட்ட மகிழ்ச்சிகளுக்கு இடம் தராமல் செய்துவிட்டன. எங்கள் முகங்களிலிருந்து முறுவலை நிரந்தரமாகப் பிரித்துவிட்ட கயவன் இதோ எனக்கு நூறு அடி தொலைவில் தன் சொந்தக் குடும்பத்துடன் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

நான் உடனே எங்கள் ஊருக்குத் திரும்பிப் போய் விடவில்லை. அங்கேயே நான்கு நாட்கள் இருந்தேன். ஒருவினாடி கூட வீணாக்கவில்லை. ஆனந்தனைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தேன். நான் நினைத்தது உண்மைதான். திருமணத்திற்கு முன்னால் அவன் ரொம்ப ஏழையாக இருந்தான். பட்டிக்காட்டில் இருந்து வந்திருக்கிறான். தரளாவைத் திருமணம் செய்து கொண்ட பிறகு வியாபாரத்தைப் பெருக்கினான். ஒரு மகன், இரண்டு மகள்கள். மகன் பெயர் பிரபாகர். மகள்கள் இருவரும் சிறியவர்கள். அந்த வீட்டில் தரளா வைத்ததுதான் சட்டம். கொஞ்சம் பைத்தியம் கூட இருக்குமோ என்று சந்தேகம். அவள் எது சொன்னாலும் அது அந்த வீட்டில் நடந்தாக வேண்டும்.

இவைதான் நான் சேகரித்த விஷயங்கள்.

முதலில் தரளாவிடமிருந்து தொடங்க எண்ணினேன். அந்தக் குடும்பத்தைச் சின்னா பின்னமாக்க வேண்டும் என்பதுதான் என் லட்சியம். அந்தக் குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொரு நபரும் மனதிலேயே குமுறிக்குமுறி சாக வேண்டும்.

என்னுடைய இந்த முடிவு உங்களுக்கு என் மீது வெறுப்பை, கோபத்தை ஏற்படுத்தினால் என்னை மன்னித்து விடுங்கள். வேளைக்குச் சரியான உணவு இல்லாமல், தந்தை யார் என்று தெரியாமல், நாள் ஒன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் உழைத்துக் கொண்டு நள்ளிரவில் பக்கத்திலிருந்து தாயின் மௌன விசும்பலைக் கேட்டுக்கொண்டே வளர்ந் திருக்கும் இளைஞனுக்கு இதை விடக் குறைந்த கோபமும், எரிச்சலும் இருந்தால் அவனிடம் ஏதோ குறை இருக்கிறது என்று அர்த்தம்.

பிரபாகர் செங்கல்பட்டிற்கு அருகிலிருந்த மில்லில் வேலைக்குச் சேர்ந்து விட்டான். அங்கே ரகளைகள் பெருகி விட்டன. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டி ருந்தது. வேறு சமயமாக இருந்தால் யாராக இருந்தாலும் வேலையை விட்டுப் போயிருப்பார்கள். ஆனால் பிரபாகரிடம்

இருந்து முன்பே அக்ரிமென்ட் எழுதி வாங்கிக்கொண்டு விட்டேன். அந்த விதமாக அவனை சிறைப்படுத்திவிட்டேன். அவன் அனுப்பிய பிரபோசலையும் ஒப்புக்கொள்ளவில்லை. தொழிலாளர்களின் பிரச்னை நாளுக்கு நாள் தீவிரமடைந்து கொண்டிருந்தது. எந்த நிமிடத்திலும் அவர்கள் ஃபாக்ட்ரியை தீயிட்டுக் கொளுத்தினாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஒரு விதத்தில் அதுகூட நல்லதுதான். அந்தத் தலைவலி யெல்லாம் போய் இன்ஷ்யூரென்ஸ் பணம் கிடைத்துவிடும்.

ஆனந்தனின் மகனை இதுபோன்ற சிக்கலான சூழ்நிலையில் மாட்ட வைத்துவிட்ட பிறகு இரண்டாவது விக்டிம்க்காகத் தேடினேன். அவள்தான் தரளா.

அதற்கான திட்டம் எதிர்பாராத விதமாக அமைந்துவிட்டது.

ஊனமுற்றோர் சங்கத்தின் நிகழ்ச்சிக்கு ஒருநாள் போயிருந்தேன். உதவி நிதிக்காக நாடகம் போட்டார்கள்.

அப்பொழுதுதான் பார்த்தேன் அவளை. பெயர் ராணியாம். பதினாறு வயதுக்கு மேல் இருக்காது. அற்புதமாக நடித்தாள். அரங்கில் இருந்த எல்லோரும் அசந்து போய் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் அந்தத் திட்டம் என் மனதில் உருவாயிற்று.

அந்தப் பெண்ணின் வீட்டைக்கண்டு பிடித்துகொண்டு மறுநாளே போனேன். அறிமுகம் செய்துகொண்டு பொதுவாக பேசிய பிறகு கேட்டேன்.

"ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் உனக்கு எவ்வளவு தருகிறார்கள்?"

"நானூறு ரூபாய்."

"ஒத்திகையெல்லாம் எவ்வளவு நாள் செய்ய வேண்டியிருக்கும்?"

"ஒரு வாரம்."

"என்னுடன் சேர்ந்து ஒருநாடகம் போட்டால் உனக்கு பத்தாயிரம் ரூபாய் தருகிறேன்."

அந்தப் பெண் சந்தேகத்தோடு பார்த்தாள்.

நான் சிரித்துவிட்டு "எனக்கு எந்தவிதமான கெட்ட எண்ணமும் இல்லை. எனக்குத் தங்கையாக நடிக்க வேண்டும் அவ்வளவு தான்" என்றேன்.

"எனக்குப் புரியவில்லையே?"

எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னேன். ஆனால், அதில் என் தாய்க்கு நேர்ந்த அநியாயம் எதையும் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆனந்தன் என்ற நபரை மானசீகமாக எப்படி கலக்கமடையச் செய்ய வேண்டும் என்பதை மட்டும் சொன்னேன்.

அவள் உற்சாகத்துடன் ஒப்புக்கொண்டாள். அதிகக் கேள்விகள் கேட்கவில்லை. என்னை விட அதிகமாக த்ரில்லாக உணர்ந்தாள்.

"எப்போதிலிருந்து தொடங்கப் போகிறோம்?" என்று கேட்டாள்.

"இரண்டு மூன்று நாட்களில். உன்னோடு கூட யாரையாவது அழைத்து வர வேண்டும் என்றால் தாராளமாக அழைத்து வா."

"தேவையில்லை."

அந்தப் பெண்ணிடம் எனக்குப் பிடித்திருந்த விஷயமே என்னவென்றால் தனக்குத் தேவையானதைத் தவிர மற்ற விவரம் எதையும் கேட்காததுதான். அவளிடம் ஒப்படைக்கப் பட்ட பொறுப்பைத் திறமையாக முடித்துவிடுவாள் என்ற நம்பிக்கை எனக்கு ஏனோ தோன்றியது.

ஐயாயிரம் ரூபாய் அட்வான்ஸாகக் கொடுத்தேன்.

"ஒரு விபசார விடுதியில் உன்னைப் பிடித்துக்கொள்வார்கள். அந்த ஏற்பாடுகளை எல்லாம் நான் செய்கிறேன். அந்தக் காவல் நிலையத்தில் இருக்கும் இன்ஸ்பெக்டர் எனக்கு வேண்டியவர் தான். நீ ஆனந்தனின் போட்டோவைக் காட்டினால் போதும். அந்தச் செய்தி ஆனந்தனுக்குப் போய்ச் சேர்ந்து விடும்.

தனக்குத் தெரியாத இந்த மகள் யாரென்று பதற்றமடைவான். இந்த விஷயம் அவன் மனைவிக்குத் தெரியும் விதமாக நான் ஏற்பாடு செய்கிறேன்."

"ஒருவேளை என்னைப் பார்க்கக் காவல் நிலையத்திற்கு வந்தால்?"

"உனக்குப் பிடித்தாற் போல் ஏதோ ஒரு கதையைச் சொல்லு. உன் தாயின் பெயர் மட்டும் பிருந்தா என்று சொல்லு. அந்தப் பெயரைச் சொன்னதுமே அவன் முகத்தில் எப்படிப்பட்ட மாறுபாடு தென்படுகிறது என்று கவனி. அந்தப் பெயரைச் சொன்ன பிறகும் நான் பொருட்படுத்தாமல் இருந்தால், அதற்குப் பிறகு இந்த விஷயத்தை விட்டுவிடு. உன்னை நான் உடனே விடுவித்து விடுகிறேன்.

"ரெயிடிங் கேஸில் மாட்டிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனில் இருப்பது ரொம்பவும் ரிஸ்க்."

"உனக்கு இருநூறடி தொலைவில் இரவு முழுவதும் நான் அங்கேயே இருப்பேன். நீ கொஞ்சம்கூட பயப்பட வேண்டாம். ஆனந்தன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மட்டும் தடுமாறாமல் பதில் சொல்லு."

நான் கிளம்ப முற்பட்டபோது அந்தப் பெண் கேட்டாள். "நீங்க ஒன்றும் நினைத்துக்கொள்ளவில்லை என்றால் ஒருகேள்வி. பிருந்தா யாரு?"

"என் தாய்."

7

பிறகு நாங்கள் எண்ணியது போலவே நடந்தது. ஆனந்தன் பிருந்தாவைத் தனக்குத் தெரியாதது போல் நடிப்பான் என்று நினைத்திருந்தேன். ஆனால் அவன் ராணியைத் தன்னோடு அழைத்துக்கொண்டு போனதைப் பார்த்து ஆச்சரியமடைந்தேன்.

காவல் நிலையத்திலிருந்து அவனைப் பின் தொடர்ந்தேன்.

ராணியை ஹோட்டலுக்கு அழைத்துச்சென்று அறையை புக் செய்தான். விலை உயர்ந்த ஹோட்டல், என் ஆச்சரியம் மேலும் கூடியது. சந்தேகமும் ஏற்பட்டது. இந்த சாட்சியத்தை அமுக்கிவிட ஆனந்தன் முயற்சி செய்கிறானோ?

அவன் ராணியுடன் சேர்ந்து அறை எடுத்துக்கொண்டிருந்த சமயத்தில் நான் வராண்டாவில் காத்துக்கொண்டிருந்தேன். அவளைத் தங்க வைத்துவிட்டு அவன் கிளம்பிப் போனதும் அறைக்குள் சென்றேன். என்னைப் பார்த்ததும் ராணி முறுவலுடன் வரவேற்றாள்.

"என்ன சொல்கிறான்?" என்று கேட்டேன்.

"உன் அண்ணா எங்கே இருக்கிறான் என்று திரும்பத் திரும்பக் கேட்டான்" என்றாள்.

"என்ன சொன்னாய்?"

"எனக்கு அண்ணன் யாரும் கிடையாது என்று சொன்னேன்."

"பதற்றமடைந்து விட்டானா?"

"ரொம்பவும்."

அப்படி என்றால் என் தாய்க்கு ஆண் குழந்தை பிறந்த விஷயம் கூட அவனுக்குத் தெரியும் போலும். என் எண்ணங்களைப் புரிந்துகொண்டாற் போல் ராணி சொன்னாள்.

"அவனுக்கு உங்க பெயர்கூடத் தெரியும்."

திடுக்கிட்டு "என் பெயர் தெரியுமா?" என்றேன்.

"ஆமாம். கோபிசந்த் எங்கே என்று கேட்டான்."

அப்படியானால் ஏமாற்றிய பிறகும் கொஞ்ச நாட்கள் வரை என் தாயைப் பற்றி அவன் விசாரித்து வந்திருக்கிறான் போலும், நான் ஏதோ சொல்லும் முன் கதவு தட்டிய சத்தம் கேட்டது. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டோம்.

21906

நான் சட்டென்று பாத்ரூம்க்குள் நுழைந்தேன். ராணி போய்க் கதவைத் திறந்தாள்.

ஆனந்தனின் மனைவி உள்ளே வந்தாள். கதவு இடுக்கு வழியாக பார்த்துக்கொண்டிருந்த நான் வியப்படைந்துவிட்டேன். அந்த நள்ளிரவு வேளையில் கணவனைப்பின் தொடர்ந்து அவ்வாறு ஹோட்டலுக்கு வருவாள் என்று நான் எதிர்பார்க்க வில்லை.

"யா... யார் வேண்டும்?" ராணி பயந்தவாறு நடித்துக் கொண்டே கேட்டாள்.

இது நாங்கள் எதிர்ப்பார்க்கவில்லை.

"நான் காவல் நிலையத்திலிருந்து வருகிறேன்" என்றாள். ஆனந்தனின் மனைவி, எனக்குச் சிரிப்பு வந்தது. ராணிகூட உள்ளுக்குள் சிரித்துக்கொண்டிருக்க வேண்டும்.

"உன் பெயர் என்ன?" தரளா கேட்டுக்கொண்டிருந்தாள்.

"ஸ்ரீதேவி."

"உங்க அம்மாவின் பெயர்?"

"இந்திரா."

"உங்க அப்பா என்ன செய்கிறார்?"

"தரளா ஃபெர்டிலைஸர்ஸில் இன்ஸ்பெக்டர்."

"உங்க அம்மா?"

"ஸ்கூலில் டீச்சர்."

"பின்னே, நீ இந்த ஊருக்கு எப்படி வந்தாய்? விபசார விடுதியில் எப்படி வந்து சேர்ந்தாய்?"

ராணி அழத்தொடங்கினாள். மிக அற்புதமாக நடித்துக் கொண்டிருந்தாள்.

ராணி சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் துப்பாக்கிக் குண்டு போல் வெடித்துக்கொண்டிருந்தது.

அதற்குப் பிறகு ராணி சொன்ன கதை எனக்கே ரொம்ப ஆர்வத்தை ஏற்படுத்தியது. மாதத்தில் நான்கு நாட்கள் மட்டுமே தந்தை தங்களுடன் இருப்பதாகச் சொன்னாள். இந்தப் பிரிவைத்தாங்க முடியாமல் தன்னுடைய தாய் மண் ணெண்ணையை ஊற்றிக்கொண்டு தீ குளிக்கப் போனாள் என்றும் சொன்னாள்.

தரளா சொன்னாள். "இனி படுத்துக்கொள். உங்க அப்பா காலையிலேயே வந்து விடுவார். அது மட்டுமே இல்லை. இனி இந்த இன்ஸ்பெக்ஷன் எதுவும் இருக்காது. உங்களுடனே இருப்பா." என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

அவள் அறையை விட்டுப் போனதும் நான் வெளியில் வந்து "அற்புதம்" என்றேன். "நான் எதிர்பார்த்ததை விட பெரிய கதையைப் புனைந்துப் விட்டாய். இனி ஆனந்தனுக்கு நரகம் தொடங்கிவிடும்."

ராணி புன்முறுவலித்தாள்.

"இதோ ஒரு நிமிடத்தில் வந்து விடுகிறேன்" என்று கீழே இறங்கி வந்து ஆனந்தனின் மனைவி படியிறங்கிக்கொண்டிருந்த சமயத்தில், ஜீப்போடு அவளுக்கு முன்னால் வந்தேன். நான் எதிர்பார்த்தாற் போலவே அவள் முகத்தில் ஆச்சரியம் தென்பட்டது.

"உங்க அப்பாவின் பெயர் என்ன தம்பி?" என்று கேட்டாள்.

"என் பெயர் கோபிசந்த். அம்மாவின் பெயர் பாக்யேஸ்வரி. எங்க அம்மா அமெரிக்காவில் இருக்கிறாள். சிறுவயதிலேயே அப்பா இறந்து போய்விட்டார்."

"அவருடைய பெயர்?"

"அயினம்பூடி ஆனந்தன்."

ஜீப்பைக் கிளப்பினேன். திரி பற்றிக்கொண்டுவிட்டது. வெடிகுண்டு வெடிக்க வேண்டியதுதான் பாக்கி. வீட்டிற்குப் போனதும் வெடிக்கும். தன்னையும் சேர்த்து தன் கணவனுக்கு மூன்று மனைவிகள் இருப்பதாகத் தெரிந்தால் எந்தப் பெண்ணால்

தான் சகித்துக்கொள்ள முடியும்? அதிலும் தரளா போன்றவர்கள் கொஞ்சம்கூடப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

இன்றிரவு அவர்களுடைய வாழ்க்கையில் புயல் வீசத் தொடங்கி விடும். இனி அது அந்தக் குடும்பம் என்ற விருட்சத்தை வேரோடு சாய்த்து விட்டுத்தான் ஓயும். எந்த ஒரு ஆதரவும் இல்லாமல் தத்தளித்துக்கொண்டிருக்கும் ஆனந்தனிடம் போக வேண்டும். நான் கேட்க நினைத்தது ஒரே கேள்வி என் தாயின் சார்பில்.

ஆனால் இப்பொழுதே இல்லை.

இன்னும் நன்றாக அவனைச் சிக்க வைக்கவேண்டும்.

சதுரங்கத்தில் இரண்டாவது காயை நகர்த்தத் தொடங்கினேன்.

பிருந்தா சொன்ன கதை

பாலைவனத்தில் பயணம் செய்து களைத்துப் போய்விட்ட பயணியின் நெற்றியில் வழிந்து ஓடும் வியர்வையின் கோடுகளைப் போல் வயோதிகம் என் உடலில் சுருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. வாழ்க்கைப் போராட்டத்தில் களைத்துப் போனவளை விழுங்குவதற்கு மெள்ள மெள்ளமாக சாவு முன்னேறிக்கொண்டிருப்பது எனக்கே தெரியும். டாக்டர் கள் சொல்ல வேண்டியதில்லை.

இந்தப் பௌர்ணமி இரவில் என் கதையை உங்களிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது. இந்தக் கதை யெல்லாம் தெரிந்தால் தரளா என்னை மன்னிக்கமாட்டாள். அவளுக்கு நான் துரோகம் செய்துவிட்டேனோ என்று அவ்வப் போது என்னையே நான் கேட்டுக் கொள்வேன். இல்லவே இல்லை என்று என்னையே சமாதானப்படுத்திக்கொள்வேன். தவறு யாருடையதாக இருந்தாலும் சரி, விஷயம் தெரிந்தால் தரளா என்னை மன்னிக்கவே மாட்டாள்.

தான் எதைச் சாதித்துவிட்டோம் என்று வாழ்க்கையின் கடைசி நாட்களில் மனிதன் ஆர அமர யோசித்துக் கொள்வ தற்காகத்தான் அந்தக் கடவுள் வயோதிகத்தை உருவாக்கி யிருப்பார் போலும். எனக்கு அத்தகைய அதிருப்தி எதுவும் இல்லை. கோபிசந்தை ஒரு நல்ல மனிதனாக உருவாக்கினேன் என்ற திருப்தி ஒன்றே போதும். பிரபாகரை விட ஒரு படி உயர்வாகவே கோபியை முன்னுக்குக்கொண்டு வந்து விட்டேன். இருபத்தி ஐந்து வருடங்கள் பிடித்தன நான் சொன்ன சொல்லை நிறைவேற்ற! ஆனால் இந்த விஷயங்கள் எல்லாம் தரளாவுக்குத் தெரியுமா? ஆனந்தன் சொல்லியிருப்பானா?

அது சரி. இன்று இரவு உங்களுக்கு என்னுடைய கதையைச் சொல்வதாகச் சொன்னேன் இல்லையா? எங்கிருந்து தொடங்குவது?

நிலா வெளிச்சம் எங்கும் பரவியிருந்தது. பௌர்ணமி நிலவில் நீங்கள் என்றாவது காவேரி நதியைப் பார்த்திருக்கீங் களா? காவேரி என்று இல்லை. கம்பீரமாகப் பாய்ந்தோடும் எந்த நதியை வேண்டுமானலும் பாருங்கள். பளபளவென்று மின்னும் அலைகள், சலசலவென்று பாயும் நீர் "தொலைவில் போய்க்கொண்டிருக்கும் படகு. . . எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா? அதனால் தான் எங்கள் கிராமம் என்றால் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். பக்கத்திலேயே காவேரி. . . தாழ்ந்த தென்னை மரங்கள் ...ஆனந்தன்...

ஆனந்தனோடு என் அறிமுகம் ஏற்பட்டதை ஒரு வேடிக்கை. எங்கள் கிராமத்தில் மளிகைக் கடைகள் நான்கைந்தை விட அதிகமாக இல்லை. அதில் ஒரு கடைக் காரன் மட்டும் லாட்டரி சீட்டுகளை வரவழைத்து விற்பான். ஒரு நாள் ஏனோ எனக்கு லாட்டரி சீட்டு வாங்க வேண்டுமென்று தோன்றியது. சரியாக அதே நேரத்தில் ஆனந்தன்கூட லாட்டரி சீட்டு தரச் சொல்லிக் கேட்டான். அன்றுதான் கடைசி நாள். கடைக்காரன் ஒரே ஒரு சீட்டு இருப்பதாகச் சொன்னான். யார் வாங்கிக்கொள்வது என்ற பிரச்னை வந்தது. இருவரும் ஆளுக்கு எட்டணா வீதம் கொடுத்து வாங்கிக்கொண்டோம்.

எங்களுடையது ரொம்ப ரொம்ப சிறிய கிராமம். கிராமத்தில் ஏறக்குறைய எல்லோரையுமே எனக்குத் தெரியும். ஆனந்தன் அந்தச் சமயத்தில் பட்டணத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந் தான். அதனால் நான் அவனைப் பார்த்ததில்லை. பிற்பாடு தெரிந்தது அவன் நாராயணி அத்தையின் மகன் என்று.

சரி. லாட்டரி சீட்டை யாரிடம் வைத்திருப்பது என்ற கேள்வி வந்தது. என்னிடம் இருக்கட்டும் என்றேன். நான் யார் என்று கேட்டுத் தெரிந்துகொண்டான். நான் திரும்பும்போது பின்னாலிருந்து கத்தினான். "லாட்டரியில் பணம் வந்தால் என்னை ஏமாற்றி விடக் கூடாது." எனக்குச் சிரிப்பும், கோபமும் ஒன்றாக வந்தன.

மறுநாள் நாளேட்டில் பார்த்தபோது நாங்கள் வாங்கிய டிக்கெட்டிற்கு லட்சம் ரூபாய் பரிசு விழுந்திருப்பது தெரிந்தது. ரொம்ப நேரம் வரை என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. மகிழ்ச்சியைத் தாங்க முடியாமல் அம்மாவிடம் இந்த விஷயத்தைச் சொன்னேன். அம்மா மாமாவிடம் தெரிவித்தாள். நான் செய்த தவறு அதுதான். மாமா என்னிட மிருந்து லாட்டரி சீட்டைப் பறித்துக்கொண்டார். பணத்தை வாங்கிக்கொண்டு வருவதற்கு மறுநாளே பட்டணத்திற்குப் போனார். எங்களுக்கு லட்ச ரூபாய் வந்த செய்தி ஊரெல்லாம் குப்பென்று பரவிவிட்டது. எல்லோரும் திடீரென்று எங்களைக் கௌரமாகப் பார்க்கத்தொடங்கினார்கள்.

அதுவரை எங்களுக்கு அந்தக் கிராமத்தில் மரியாதையும், மதிப்பும் இல்லாமல் இருந்தன. காரணம் என்னுடைய தாய் ஒரு விபசாரி. பிரசிடெண்டிலிருந்து முன்சீப் வரை எல்லோருக்கும் எங்கள் வீடு ஒரு காலத்தில் விடுதியாக இருந்தது. எனக்கு விவரம் தெரிந்த பிறகுகூட அவர்கள் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். என்னைக்கூட அந்தத் தொழிலில் இறக்க வேண்டும் என்பது அம்மாவின் விருப்பமாக இருந்தது. ஆனால் நான் தீவிரமாக மறுப்புத் தெரிவித்ததால் அந்த எண்ணத்தை தற்காலிகமாக ஒத்திப் போட்டாள்.

எனக்கு அழுகை ஒன்றுதான் பாக்கி. அம்மாவிடம் கெஞ்சிக் கேட்டுகொண்டேன். நானும் ஆனந்தனும் ஆளுக்குப்பாதி பணம் போட்டு அந்த லாட்டரி சீட்டை வாங்கினோம் என்றும், அதில் பாதிப் பணத்தை அவனுக்குத் தந்துவிட வேண்டும் என்றும் சொன்னேன். அம்மா என்னை விழுங்கி விடுவது போல் பார்த்தாள்.

"உனக்கு மூளை கலங்கிப்போய் விட்டதா? எவனோ முன்பின் தெரியாதவனுக்குச் சுளையாய் தூக்கி ஐம்பதாயிரம் கொடுப்பாங்களா?" என்று எரிந்து விழுந்தாள்.

"அவன் தந்த எட்டணா விஷயத்தை யாரிடமாவது சொன்னாயோ தெரியும் சேதி. ரௌடிகளை வைத்து அவனைச் செம்மையாக அடித்துப் போடச் செய்யாவிட்டால் என் பெயரை மாற்றி வைத்துக்கொள்கிறேன்" என்று சவால் விட்டுவிட்டுப் போனார் மாமா.

எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை, கடையில் லாட்டரி சீட்டை வாங்கியபோது அவன் சிரித்துக்கொண்டே சொன்ன வார்த்தைகள் மறுபடியும் மறுபடியும் நினைவுக்கு வந்தன. அவனைப் போய்ச்சந்தித்தேன். நடந்ததைச் சொல்லி விட்டு, "நீங்க எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன், தவறு என்னுடையதுதான். நீங்க எவ்வளவோ நம்பிக்கையோடு லாட்டரி சீட்டை என்னிடம் தந்ததால் நான் இப்படிச் செய்து விட்டேன்." தலையைக்குனிந்து கொண்டே சொன்னேன்.

"எட்டணா கொடுங்க" என்றான்.

அவன் என்ன சொல்கிறான் என்று எனக்குப் புரியவில்லை.

"என் எட்டணாவை என்னிடம் திருப்பித் தந்து விடுங்கள். கணக்குத்தீர்ந்து விடும்" என்றான் அதே முறுவலுடன்.

என் கண்களில் நீர் சுழன்றது. என் தாயும், மாமாவும் இவன் முன்னால் எவ்வளவு அல்பமானவர்கள் என்று புரிந்தது.

என் நிலைமையை அவன் உணர்ந்துவிட்டான் போலும். "இதைப் பற்றி யோசிக்கவே வேண்டாம். அப்படியே மறந்துபோய் விடுங்கள்" என்றான்.

அவ்வளவு நல்லதனத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அன்றிரவு அம்மாவிடம் சண்டை போட்டேன். எந்தச் சூழ்நிலையிலும் சரி, ஐம்பதாயிரம் அவனுக்குக் கொடுத்தாக வேண்டும் என்று அடம்பிடித்தேன். அம்மா என் மீது பாய்ந்தாள். அவள் சொன்னதை அப்படியே உங்களிடம் சொல்கிறேன்.

"ஐம்பதாயிரம் கொடுப்பதற்குப்பதில் அவனுக்கு ஒரு நாள் ஆசை நாயகியாக இருந்துவிடேன். உனக்கும் தொழில் தொடங்கினாற் போல் இருக்கும். எங்களுடைய பிரச்னையும் தீர்ந்துவிடும். இளமையில் வரவேண்டிய வருமானத்தை இப்படி அநியாயமாக இழக்கச் செய்து கொண்டிருக்கிறாய். குறைந்த பட்சம் இவனிடமிருந்தாவது உன் தொழிலைத்தொடங்கு."

அன்று இரவு அம்மா உறங்கிவிட்ட பிறகு, நான்கு உடைகளை எடுத்து ஒருபையில் திணித்துக்கொண்டு அவனிடம் போனேன். இத்தனை வருடங்களுக்குப் பிறகு நினைத்துப் பார்க்கும் போது அவ்வளவு தைரியம் எப்படி வந்தது என்றுதான் ஆச்சரியமாக இருக்கிறதே தவிர அன்று எனக்குப் பயம் ஏற்படவில்லை. சாக்கடைக்குச்சமமான வாழ்க்கை யிலிருந்து வெளியேறி வந்துவிட்டேன் என்ற திருப்திதான் ஏற்பட்டது.

"படகில் ஏறி பட்டணத்திற்குப் போய்விடப் போகிறேன் ஆனந்தன் சார். என்னை மன்னித்துவிடுங்கள் என்று மறுபடியும் கேட்டுக் கொள்ளத்தான் வந்தேன். குறுகிய மனம் படைத்த வர்களுக்கு நடுவில் என்னால் இருக்க முடியவில்லை." என்றேன்.

முதலில் ஆச்சரியமடைந்தான். பிறகு நயமாக எடுத்துச் சொன்னான். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அவன் சொன்ன வார்த்தைகள் இப்பொழுதும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றன.

"பணத்தை எப்போதும் உறவுகளோடு முடிச்சுப் போடாதீங்க பிருந்தா! இந்தப் பணம் என்பது ரொம்ப பாவப்பட்டது. நீல லிட்மஸ் பேப்பரைக்கூட சிவப்பாக மாற்றிவிடும். பாசத்தைக் குழிதோண்டி புதைத்து விடும். சிற்சில உறவுகளைப்பரிசோதனைக்கு உள்ளாக்காமல் இருப்பதே நல்லது."

"உங்களுக்குத்தெரியாது. அந்த வீட்டில் நான் நானாக இருக்க முடியாது."

"நாளைக்குப் பட்டணத்திற்குப் போனாலும் நீங்கள் நீங்களாக இருக்கமுடியாது" என்றான் கண்டிக்கும் தோரணையில். "ஆவேசத்தில் எந்த முடிவும் செய்யாதீங்க" என்று சொல்லிவிட்டு வீடு வரைக்கும் கொண்டுவந்து விட்டுவிட்டுப் போனான்.

அன்று இரவு ஆவேசத்தில் அவ்வாறு செய்துவிட்டேனே தவிர, பொழுது விடிந்த பிறகு என் துணிச்சலை நினைத்தால் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அவன் பேச்சில் இருந்த உண்மை புரிந்தது. அவன் மட்டும் எச்சரித்துத் திருப்பி அனுப்பி யிருக்காவிட்டால் இந்நேரத்திற்கு எங்கே இருந்திருப்பேனோ? பட்டணத்தில்... எந்த வீட்டிலாவது...

நானும், என் குடும்பத்தினரும் சேர்ந்து அவனுக்கு இழைத்து விட்ட தீங்கை நினைத்து என் மனம் குன்றிவிட்டது. இரண்டு நாட்களுக்குப் பிறகு மாமா முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு திரும்பி வந்தார். பேப்பரில் நம்பர் தவறாக பிரசுரமாகி இருக்கிறது. லாட்டரி எங்களுக்கு விழவில்லை.

கிராமமே கொல்லென்று சிரித்தது, எனக்கு மட்டும் சொல்ல முடியாத சந்தோஷம் ஏற்பட்டது.

பணம் கிடைக்கவில்லையே என்ற வருத்தத்தைவிட நான் ஆனந்தனுக்குக் கடன் படவில்லை என்ற விஷயம்தான் எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தந்தது. என் மாமாவுக்கும், தாய்க்கும் நல்ல பாடம் கற்பித்ததற்கு அந்தக் கடவுளுக்கு மனதிலேயே நன்றியைச் செலுத்தினேன்.

எதுவானால் என்ன, ஆனந்தனுடன் என் அறிமுகம் அந்த விதமாக ஏற்பட்டது. அதற்குப் பிறகு நாங்கள் அதிகம் சந்தித்துக் கொள்ளவில்லை. ஆனால், தினந்தோறும் மாலையில் வாக்கிங்கிற்கு அவன் எங்கள் வீட்டைத் தாண்டிக்கொண்டுதான் போவான். அந்தச் சமயத்தில் நான் அவனைப் பார்ப்பேன். நான் பார்ப்பது அவனுக்குத் தெரியும் என்று நான் அறிவேன். நிசப்தம் எங்க இருவருக்கும் இடையே தூது போய்க் கொண்டிருந்தது. நான் அழகி இல்லை. என் கண்களுக்குப் பேசத் தெரியாது.

அதனால்தான் நிசப்தத்தைத் தழுவினேன்.

அந்த நிசப்தத்தை உடைத்தெறிந்தாள் தரளா.

தரளா ஜி.பி.ராவின் மகள்.

தரளாவும் நானும் ஒன்றாகப் படித்தோம். தரளா என்னைப் போன்றவள் இல்லை. எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக் கொள்வாள். கிராமத்தில் யாரையுமே பொருட்படுத்த மாட்டாள். கிராமமே அவளைக்கண்டு பயப்படும், கிராமத்தில் எல்லோரிடமும் சேர்த்தால் எவ்வளவு செல்வம் இருக்குமோ, ஜி.பி.ராவ் ஒருத்தரிடமே அவ்வளவு சொத்து இருப்பதால் பயப்படாமல் எப்படி இருக்க முடியும்?

தரளாவுக்குச் செல்வந்தரின் மகள் என்ற கர்வம் கொஞ்சம் கூட இல்லை. கடவுள் அவளுக்குச் செல்வத்தை மட்டுமே அல்ல, அழகும் கொடுத்திருக்கிறார். கொடி போன்ற உடல் வாகு. கொஞ்சம் குறும்பு அதிகம். அழகாக இருக்கும் பெண்கள் எவ்வளவு குறும்பு செய்தாலும் நன்றாகத்தான் இருக்கும்.

இருவரும் காகிதத்தில் படகு செய்து காவேரியில் விடுவோம். யாருடைய படகு அதிக தூரம் போகிறதோ அவர்கள் ஜெயித்தது போல் கணக்கு. என் படகு எப்படி இருக்கிறதோ பார்க்கும் சாக்கில் கையில் எடுத்துப் பார்த்துவிட்டு விரலால் ஓட்டை செய்துவிடுவாள். பிற்பாடு அவள் என்னிடம் பச்சாத்தாப்படும்போது எனக்குச் சிரிப்புத்தான் வரும்.

ஒருநாள் காலையிலேயே எங்கள் வீட்டிற்கு வந்தாள் தரளா. அவள் எங்க வீட்டுக்கு வருவது எனக்குப் பிடிக்காது. இந்தக் கிராமத்தில் அம்மாவுக்கு எப்படிப்பட்ட பெயர் இருந்து வந்தது என்றும், மற்றவர்கள் எங்களைப் பற்றித் தாழ்வாக நினைப்பதும் எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட வீட்டிற்குத் தரளா வருவது அவ்வளவு நல்லதில்லை. ஆனால் சொன்னாலும் கேட்க மாட்டாள்.

"நேற்றிரவு ஒரு சுவாரசியமான விஷயம் நடந்தது." உள்ளே வந்துகொண்டே சொன்னாள்.

"என்ன?" என்று கேட்டேன்.

"நேற்று மாலை ஐந்து மணிக்கு அப்பாவைச் சந்திக்க ஒரு ஆள் வந்தான். ஏதோ உரக் கம்பெனியின் ஏஜெண்டாம். உங்க அப்பாவுக்கு ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கு. எங்க கம்பெனியின் உரங்களைப் பயன்படுத்திப் பாருங்கள் என்றான். அவன் பேசிய விதத்தைப் பார்த்தால் ரொம்பச் சிரிப்புத்தான் வந்தது."

உரக் கம்பெனி என்றதுமே எனக்குச் சந்தேகம் வந்தது. இந்த ஊருக்குப் புதிதாக வந்திருப்பவன் ஆனந்தன் ஒருத்தன் தான். தரளாவுக்குத் தெரியாத புதிய ஆள். அதோடு இந்த ஊரில் அவன் தான் அந்தக் கம்பெனியின் ஏஜண்ட்.

"பிறகு என்ன நடந்தது?" பரபரப்புடன் கேட்டேன்.

"அவனைக் கொஞ்சம் அழ வைக்கலாம் என்று தோன்றியது. அப்பா உங்களை எப்பொ வரச்சொல்லியிருந்தார் என்று கேட்டேன். ஐந்து மணிக்கு என்றான். உள்ளே போய் அப்பாவுடன் பேசிவிட்டுத் திரும்பி வந்தாற் போல் நடித்து "மாலையில் ஐந்து மணி இல்லையாம். அதான் எனக்குச் சந்தேகம் வந்தது. அப்பா எப்போதும் காலையில் தான் அப்பாயிண்ட்மென்ட் தருவது வழக்கம். உங்களை வரச் சொன்னது நாளை காலை ஐந்து மணிக்கு" என்றேன்.

"அவன் பெயர்?"

"ஆனந்தன்." சிரிப்பை அடக்கிக்கொண்டே சொன்னாள். 'பாவம்'. மறுநாள் அதிகாலையில் குளிரில் ஐந்து மணிக்கே வந்துவிட்டான். அப்பா விஷயம் தான் உனக்குத் தெரியுமே. ஒன்பது மணிக்கு முன்னால் எழுந்துகொள்ள மாட்டார்."

"பிறகு என்ன நடந்தது?"

"நேற்று மாலையில் வரச்சொன்னால் இன்னிக்குக் காலையில் வந்திருக்கிறாயே என்று அப்பா கேட்ட போது, பாவம் தலையைக் குனிந்துகொண்டான். ரொம்ப ஸ்மார்ட்டாக இருக்கிறான். எனக்கே இரக்கமாக இருந்தது."

நான் லாட்டரி சீட்டு விஷயத்தைச் சொன்னேன். ஐம்பதாயிரத்தை அவன் எவ்வளவு சர்வ சாதாரணமாக விட்டுக் கொடுத்தது, நான் அவனிடம் போன போது நயமாகப் பேசி; எடுத்துச் சொல்லித் திருப்பி அனுப்பியது எல்லாம் விவரமாகச் சொன்னேன். தரளாவின் முகத்திலிருந்த சிரிப்பு மறைந்தது. நான் சொன்னதை எல்லாம் கேட்டுவிட்டு "அவனைப் பார்க்க வேண்டும் வா" என்றாள். நான் திகைத்துப் போய் "அவனிடமா?" என்றேன்.

"ஆமாம் ஏன்?"

"நம் ஊர் மக்களை மறந்து போய்விட்டாயா? விஷயம் கடுகளவு இருந்தாலும் மலையளவுக்கு உருவகப்படுத்திப் பேசுவார்கள்."

"கிழிச்சாங்க." அலட்சியமாகச் சொன்னாள். தான் ஏதாவது நினைத்துக் கொண்டால் போதும், தாமதிக்க மாட்டாள். இருவரும் அவனிடம் போனோம். ஒரு சின்ன வீட்டில் தங்கியிருந்தான்.

எனக்கு அவ்வளவு துணிச்சல் வந்திருக்காது. தரளா முதலில் மன்னிப்பு கேட்டுக்கொண்டாள். ஆனால் அது கேவலம் உரையாடலைத் தொடங்குவதற்காகத்தான். அதற்குப் பிறகு அதைப்பற்றிய பேச்சே வரவில்லை. பள்ளத்தை நோக்கிப்

பாயும் காவேரியைப் போல் சலசலவென்றுப் பேசிக் கொண்டிருந்தாள்.

அவனும் ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்தான்.

அவர்கள் இருவரையும் பார்த்துக்கொண்டிருக்கையில் எனக்குச் சந்தோஷமாக இருந்தது. நான் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேனா? இல்லை என்று என்னால் மனப்பூர்வமாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் எனக்கு என்ன தகுதி இருக்கிறது? விலைமகளின் மகளாகப் பிறந்தும் அழகு இல்லை. அவ்வளவு ஏன்? தரளா மட்டும் இன்றைக்கு என்னை இதுபோல் அழைத்து வந்திருக்காவிட்டால் இன்னும் நாலு வருடங்கள் ஆனாலும் அவனுடன் பேசும் தைரியம் எனக்கு வந்திருக்காதோ என்னவோ. . .

அவ்விருவரையும் பார்த்தேன்.

அதற்குள்ளாகவே நல்ல நண்பர்களாகி விட்டாற்போல் பேசிக் கொண்டிருந்தார்கள். தரளா அப்படித்தான். எதையாவது நினைத்துக்கொண்டால் உடனே செய்துவிடுவாள். வெளியே வந்த பிறகு "நான் காதலில் விழுந்து விட்டேன்" என்று சொன்னாள்.

"அதற்குள்ளேயா?"

"ஆமாம். லவ் எட் ஃபஸ்ட் சைட்."'

நான் பேசவில்லை. தான் நினைத்ததைச் சாதித்துக் கொண்டே தீருவாள் என்று தெரியும்.

நடந்துகொண்டே இருந்தவள் சட்டென்று நின்று "ஒருக்கால் நீ அவனைக் காதலிக்கிறாயோ?" என்றாள்.

நான் சிரிப்பை அடக்கிக்கொண்டு "இல்லை. இன்னும் சொல்லப்போனால் நான் அவனைச் சந்தித்தது மூன்றாவது முறை மட்டும்தான். அதுவும் கூட நீ இருப்பதால்" என்றேன்.

"எதிர்காலத்தில் யாரையாவது காதலிக்க நினைத்தால் என்னிடமிருந்து கொஞ்சம் தைரியத்தைக் கடன் பெற்றுக்கொள்"

"கட்டாயம்"

அதற்குப் பிறகு ஆனந்தனைச் சந்திக்கும் விஷயத்தைத் தரளா ரகசியமாக வைத்திருக்கவில்லை. எங்க வீட்டுக்கு வந்து என்னை வரச் சொல்வாள். அம்மாவுக்குத் தரளா என்றால் பயமும், மதிப்பும் அதிகம். அவள் எங்கள் வீட்டுக்கு வருவதே ஒரு அதிர்ஷ்டமாக நினைப்பாள். நான் போக மறுத்தால் வலுக்கட்டாயமாக என்னை அனுப்பிவைப்பாள். காவேரிக்கரையில் ஆனந்தன் எங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பான். மூவரும் சிறிய படகில் வாய்க்காலுக்கு அந்தப் பக்கம் போவோம். மதியம் முழுவதும் அங்கேயே தோட்டத்தில் கழிப்போம்.

என் மனதில் ஏதோ ஒரு மூலையில் பயம் இருந்து கொண்டு தான் இருந்தது. தரளாவின் தந்தைக்கு இதெல்லாம் தெரிந்து விட்டால் என்ன ரகளை எற்படுமோ என்று.

சில நாட்களுக்குப் பிறகு அந்த ஆபத்து வந்தேவிட்டது. தரளாவின் தந்தையிடமிருந்து இல்லை. ஆனந்தனிடமிருந்து.

8

ஒரு நாள் நானும், ஆனந்தனும், தரளாவும் எப்போதும் போல் காவேரிக் கரையில் உட்கார்ந்துகொண்டிருந்தோம். தரளா தொலைவில் போய் வாய்க்கால்கரையில் நின்று மீன்களைப் பிடித்துக்கொண்டிருந்தாள். டவல் ஒன்றை நீருக்குள் போட்டு சின்னச் சின்ன மீன்களைப் பிடித்துப் பாட்டிலில் போட்டு வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய் தொட்டியில் விடுவது அவளுடைய பொழுது போக்கு.

தரளா இல்லாமல் நாங்கள் இருவரும் மட்டுமே இருக்கும் போது எங்களுக்கு இடையே அதிகமாக உரையாடல் நிகழாது. மௌனமாக உட்கார்ந்திருந்தோம். ஆனந்தன் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான்.

"எதுக்கு இவ்வளவு சிகரெட் பிடிக்கிறீங்க? இதை விட்டு விடக் கூடாதா?" என்றேன்.

"நம் கல்யாணமான முதல் நாளிலிருந்தே விட்டு விடுகிறேன். போதுமா?" என்றான்.

நான் திக் பிரமை அடைந்தவளாய்த் தலையை உயர்த்தினேன். இதுபோன்ற டாபிக்கை அவன் கொண்டு வருவான் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தரளா இன்னும் மீன் பிடித்துக்கொண்டு இருந்தாள்.

"நீங்க என்ன பேசுறீங்களோ எனக்குப் புரியவில்லை ஆனந்தன்" என்றேன்.

அவன் புன்முறுவலித்தான். "ஒன்றுமே தெரியாதது போல் நடிக்காதே. நான் என்ன பேசுகிறேன் என்று உனக்குத் தெரியும். நான் இவ்வளவு கஷ்டப்பட்டு தரளாவின் அறுவைப் பேச்சை சகித்துக்கொண்டிருப்பதெல்லாம் உனக்காகத்தான்."

என்னையும் அறியாமல் என் பார்வை தரளாவின் மேல் விழுந்தது. என் எண்ணத்தை ஊகித்துக்கொண்டவனைப் போல் "தரளா ரொம்ப சின்னப் பெண். குறும்பு செய்வதைத் தவிர வேறு எந்த விதமான உணர்வுகளும் அவளுக்குத் தெரியாது. வீட்டில் ரொம்ப சுதந்திரம் கொடுத்துவிட்டார்கள். இந்தக் கிராமத்தில் இவ்வளவு தூரம் சோஷியலாகப் பழகுபவர்கள் யாருமே இல்லாததால் இந்த அறிமுகத்தையே காதல் என்று நினைத்துக் கொள்கிறாள். கொஞ்சநாள் போனால் சாதாரணமாக ஆகி விடுவாள்" என்றான்.

"என்னைப் பற்றிக்கூட உங்களுக்கு ஒன்றுமே தெரியாதே?"

"தெரிய வேண்டிய தேவை இல்லை." சிரித்தான். யாரோ கவிஞன் சொன்னதுபோல் லவ் ஹேஸ் நோ ரீஸன் அண்ட் ரீசன்."

என் இதயத்தில் ஏதோ மிரட்சி. இனம் தெரியாத பயம்.

நான் ஆனந்தைக் காதலிக்கிறேனா? அதைவிட முக்கியமாக என் வீட்டை விட்டு வெளியேறி விட வேண்டும் என்ற சுயநலம் தான் அதிகமாக இருக்கிறதோ. ஆனந்தனின் தனித்தன்மை சிறிய நிகழ்ச்சியின் மூலமாக வெளிப்பட்டதுமே மனிதர்களில் இவ்வளவு உயர்த்தன்மை படைத்தவர்கள் இருக்கிறார்களா என்று வியப்படைந்தேன். பிறகு அது அபிமானமாக மாறியது. முதலில் சொன்னது போல் தரளா மட்டும் இதில் நுழைந்திருக்காவிட்டால் அது அப்படியே ஊமையாக இருந்துவிட்டிருக்கும். அவனைச் சந்திக்கும் தைரியம் எனக்கு வாழ்நாளில் என்றுமே வந்திருக்காது.

ஆனால் இப்பொழுது?

ஆனந்தன் தன் காதலை வெளிப்படுத்தியதுமே என் மனம் என் சுவாதினத்தில் இல்லாமல் போய்விட்டது.

சில நாட்கள் கழிந்தன.

ஆனந்தன் நன்றாகக் கவிதைகளை எழுதுவான். இரவு முழுவதும் உட்கார்ந்து பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டிருப்பான். அதை மறுநாள் என்னிடம் கொண்டு வந்து தருவான். தரளா கேலி, செய்வாள். நாமே சொந்தமாக ஒரு பத்திரிகையைத் தொடங்கி இதையெல்லாம் பிரசுரிப்போமா என்று நக்கல் செய்வாள். அந்தக் கவிதைகள் எல்லாம் எனக்காக எழுதப்பட்டவை என்று அவளிடம் நான் எப்படிச் சொல்லுவேன்?

நாளுக்கு நாள் என் நிலைமை தர்மசங்கடமாக மாறியது. இருவருக்கும் தெரியாவிட்டால் அது வேறு விஷயம். ஆனந்தனைத் தரளா நேசிக்கிறாள் என்று தெரிந்தும் இவ்வாறு தெரியாதது போல் நடிக்க என்னால் முடியவில்லை. ஆனந்தனிடம் அந்த விஷயத்தையே சொன்னேன்.

"இது ரொம்ப அநியாயம் ஆனந்தன். தரளாவிடம் பணம் இருக்கிறது. அழகு இருக்கிறது. உங்களுக்கு அவள்தான் சரியான ஜோடி."

"உன் எண்ணம்தான் என்ன?"

"அவள் உங்களுக்காகவே இப்படி வருகிறாள். அவளைக் கல்யாணம் செய்துகொள்வது உங்களுக்கு எல்லா விதத்திலேயும் பயன் தரும். நியாயமானதும்கூட."

"நீ எங்கள் இருவரையும் சேர்த்து வைத்துவிட்டு அஸ்த மித்துக்கொண்டிருக்கும் சூரியனை நோக்கிப் போய்விடலாம் என்று நினைக்கிறாயா?"

"உங்களுக்கு விளையாட்டாய் இருக்கிறது போலும்."

"நீ சொல்வதுதான் நகைப்புக்கு உரியதாக இருக்கிறது. கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது. பணத்திற்காகவும், அழகிற்காகவும் காதலை என்னால் மாற்றிக்கொள்ளமுடியாது. நீ என்னைப் புரிந்துகொண்டது இவ்வளவுதானா என்று நினைக்கும் போது வருத்தமாக இருக்கு. நான் உன்னைக் காதலிப்பதாகச் சொன்னேன். நீ என்னைக் காதலிக்கவில்லை என்றால் அது வேறு விஷயம். இப்பொ தரளா என்ன? அவள் அப்பா வந்து கேட்டால்கூட என்னால் ஒப்புக்கொள்ள முடியாது."

"ஆனால் அந்த விஷயத்தை அவளிடம் சொல்லி விடலாம் இல்லையா?"

"என்னவென்று? நீ என்னை அடிக்கடி இதுபோல் காவேரிக்கரைக்கு அழைத்துக்கொண்டு வருவது என்னைக் காதலிப்பதற்காகவா? அப்படியானால் வேண்டாம். என்னால் உன்னைக் காதலிக்க முடியாது என்று சொல்லச் சொல்கிறாயா? இழுத்துக் கன்னத்தில் ஒருஅறை கொடுப்பாள். 'உன்னை நான் காதலிப்பதாக யார் சொன்னது? எல்லாம் நீயே உனக்குள் ஊகித்துக் கொண்டிருக்கிறாய்' என்று சொல்வாள். அப்பொ என்ன செய்யட்டும்?"

ஆனந்தன் சொன்னது உண்மைதான். தரளா தன்னுடைய காதலைப் பற்றி ஆனந்தனிடம் என்றுமே வெளிப்படுத்திய தில்லை. என்னிடம்தான் சொல்லுவாள்.

ஒருமுறை நான் சொன்னேன்.

"இதோ பார் தரளா! முதலில் அவனுக்கு உன்மீது என்ன எண்ணம் இருக்கிறதென்று தெரிந்துகொள். இல்லாமல் போனால் உன்னுடையது ஒருதலைக் காதல் ஆகிவிடப் போகிறது."

தரளா என்னை வினோதமாகப் பார்த்துவிட்டு "உண்மையிலேயே உனக்கு மூளை கலங்கிவிட்டது" என்றாள்.

"ஏன்?"

"அவனுடைய ஒவ்வொரு பார்வையிலும், ஒவ்வொரு அசைவிலும் என்மீது அன்பு தென்படவில்லையா? இன்னும் தனியாக வேறு சொல்ல வேண்டுமா என்ன? வி ஆர் இன் லப் லவ்.

எனக்கு உண்மையிலேயே தலையைச் சுற்றியது. சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை. என் எண்ணங்களை அவள் வேறு விதமாகப் புரிந்துகொண்டாள்.

"ஏன் சந்தேகமாக இருக்கிறதா? என் மீது ஆர்வம் இல்லாமல் இருந்தால் தினந்தோறும் மாலை வேளைகளில் நம்மோடு ஏன் வருகிறான்? உனக்குத் தெரியுமோ தெரியாதோ. அவன் பேசும் போது அந்தக் கண்களில் தெரியும் மின்னல் ஒன்றே போதும் அவன் காதலிக்கிறான் என்று சொல்வதற்கு."

அந்த மின்னல் என்னைப் பார்த்ததால் வந்தது என்று எப்படிச் சொல்வேன்?

ஆனந்தன் சொன்னது போல் எனக்கு வித்தியாசமான கனவுகள் வரும். அவ்விருவருக்கும் திருமணத்தைப் பண்ணி வைத்துவிட்டு, நான் சூனியத்தை நோக்கிப் போய்க் கொண்டிருப்பது போலவும், என் கண்களை அவனுக்கு பொருத்தச் சொல்லிவிட்டு நான் இறந்துபோய் விடுவது போலவும் கனவுகள் வரும். எனக்குச் சிரிப்பு வந்ததோடு, துக்கமாகவும் இருந்தது. தரளாவிடம் ஒரு வார்த்தைச் சொல்லிவிட்டால் இந்தத் தொல்லை எதுவும் இருக்காது. ஆனால் என்னால் எப்படிச் சொல்ல முடியும்? ஆனந்தன் தான் சொல்ல வேண்டும்.

"அவளுக்குக் கொஞ்சம் அகம்பாவம் அதிகம் பிருந்தா. தன்னைப் பார்த்து யாருமே காதலித்து விடுவார்கள் என்ற எண்ணம் அவள் மனதில் ஆழமாகப் பதிந்து இருக்கிறது. அதைத் தகர்க்க வேண்டும். செத்தாலும் நான் சொல்ல மாட்டேன். வேண்டுமானால் நீ சொல்லிக்கொள். நாமிருவரும் திருமணம் செய்து கொள்ளப்போகிறோம் என்று சொல்லு. எனக்கு ஆட்சேபனை இல்லை.

நான் கோபமாகப் பார்த்தேன். "அவள் மீது கொஞ்சம்கூட ஆர்வம் இல்லாதபோது இப்படி ஏன் வர வேண்டும்?" என்றேன்.

"உனக்காக" என்றான். "உனக்கு இல்லாத தைரியம் அவளிடம் இருக்கு. உன் மேல் இல்லாத நம்பிக்கை உங்க அம்மாவுக்கு அவள் மேல் இருக்கு. அதனால்தான் அவளையும் நம்மோடு சேர்த்துக் கொண்டேன்."

மறு நாள் நான் கொஞ்சம் துணிச்சல் பெற்றுத் தரளாவிடம் சொல்லிவிட்டேன்.

"ஆனந்தனுக்குத் திருமணம் நிச்சயம் ஆகப்போகிறதாம்.

தரளா சட்டென்று தலையை உயர்த்தி "செய்தி உன் வரைக்கும் எட்டி விட்டதா?" என்றாள்.

இம்முறை வியப்படைவது என் பங்காயிற்று. "அப்படி என்றால்?" கேட்டேன் குழப்பத்துடன்.

"நேற்று மாலையிலேயே அப்பாவிடம் சொல்லிவிட்டேன்" என்றாள்.

"என்ன சொன்னார்?" என்றேன் பதற்றத்துடன்.

சிரித்தாள் "வேறென்ன சொல்லுவார்? நான் எப்பொ எதைக் கேட்டாலும் மறுக்க மாட்டார்."

ஏறக்குறைய ஓட்டமும் நடையுமாக ஆனந்தனிடம் போனேன். "இதெல்லாம் உங்களுக்கு வேடிக்கையாகவும், நடைமுறைக்கு எதிர்மாறாக இருப்பது போலவும் தோன்றலாம். ஆனால் இதற்கு மாறுபட்டு யாராவது நடந்துகொள்வார்கள்

என்றால் கற்பனை இலக்கியத்தில்தான் சாத்தியப்படும் என்று நான் நினைக்கிறேன்"

நான் சொன்னதை எல்லாம் கேட்டுவிட்டு ஆனந்தன் அலட்சியமாக "சரி, நான்பார்த்துக்கொள்கிறேன். அவளுடைய அப்பாவிடம் சொல்லி விடுகிறேன், என்னால் பண்ணிக்கொள்ள முடியாது என்று" என்றான்.

எனக்கு ஏனோ அவ்வளவு திருப்தியாக இல்லை. அனாவசியமாக நிலைமையை இவ்வளவு தூரத்திற்குக் கொண்டு வந்து விட்டோமோ என்று தோன்றியது. அவள் முன்னிலையிலேயே அவளுக்குத் தெரியாமல் நாங்கள் காதலித்துக்கொண்டது, அவளுக்கு முன்னால் ஒன்றும் தெரியாதது போல் இருந்தது, அவள் அவனைக் காதலிப்பதாகச் சொன்னபோதுகூட நான் "ஊம்" கொட்டியது... இதெல்லாம் சேர்ந்து தவறு என்னுடையது தான் என்று தோன்றும் விதமாகச் செய்தன.

"போகட்டும். அவளையே திருமணம் செய்து கொள்ளுங்கள்" என்றேன்.

"இது ஒன்றும் ஹோட்டல் இல்லை. இட்லி இல்லாவிட்டால் தோசை கொண்டு வா என்று சொல்வதற்கு" அருகில் வந்து சொன்னான். "நீ யாரைப் பற்றியும் பயப்படத் தேவையில்லை. உங்கள் வீட்டார் மறுத்தாலும் சரி, பொருட் படுத்தத் தேவை இல்லை. எல்லாவற்றையும்விட முக்கியமான விஷயம். நான் கதாநாயகனின் லட்சணங்களைக்கொண்ட தீரனோ, வீரனோ இல்லை. ஒருக்கால் நீ தியாகம் செய்தாலும் சரி, என்னைக் கைவிட்டாலும் சரி, நான் தரளாவை மட்டும் திருமணம் செய்து கொள்ளமாட்டேன். செய்து கொள்ளவும் முடியாது. பிராக்டிகலாக யோசித்துப்பார்க்கிறேன் நான். உன் தியாகத்தால் தயவுசெய்து என்னை வேதனையில் ஆழ்த்தாதே."

ஏனோ தெரியவில்லை. எனக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. இந்த விஷயமெல்லாம் தெரிந்தால் தரளா

என்ன நினைத்துக்கொள்வாள்? பாக்கு வெட்டிக்கு நடுவில் இருக்கும் கொட்டைப் பாக்கு போல் இருந்தது என் நிலைமை.

என்வீட்டுச் சூழ்நிலைகூட ஒன்றும் சரியாக இல்லை. அம்மா, மாமாவின் வற்புறுத்தல் அதிகமாகிவிட்டது. நாங்க இருந்த சூழ்நிலைகூட அப்படிப்பட்டது தான். தரளாவை யாராலும் ஒன்றும் சொல்லமுடியாது. ஆனால் என் விஷயம் அப்படி இல்லை. அக்கம் பக்கத்தில் வம்பு பேசத் தொடங்கிவிட்டார்கள். முன்பு தரளாவுடன் வெளியில் என்னை அனுப்புவதற்கு ஒப்புக்கொண்ட என் தாய் பிறகு வருத்தப்படத் தொடங்கினாள். ஆனந்துடன் நான் சுற்றுவது வெளியுலகிற்குத் தெரிந்தால் என் மார்கெட் (இந்த வார்த்தையைப் பயன்படுத்தியதற்காக மன்னித்து விடுங்கள்.) போய் விடுமே என்ற பயம் அம்மாவுக்கு. ஏற்கெனவே பணம் பண்ணும் இயந்திரம் வெறுமே இருப்பது அவர்களுக்கு ரொம்ப இடைஞ்சலாக இருந்தது. ஆனந்தின் அறிமுகத்தால் அது மேலும் அதிகமாகிவிட்டது. சொந்தத் தாய்கூட அவ்வாறு இருப்பாளா என்று நீங்கள் சொன்னால் உங்களுக்கு உலக அனுபவம் குறைவு என்றுதான் அர்த்தம். நான் ஆனந்தனை மணந்துகொள்வதற்கு என்தாய் ஒப்புக்கொள்ளவே மாட்டாள் என்று எனக்குத் தெரியும். இந்த விஷயத்தை ஆனந்திடம் சொன்னால் "அவள் என்ன ஒப்புக் கொள்வது?" நீ மேஜர். வேண்டுமானால் காவல் நிலையத்திலேயே உன்னைத் திருமணம் செய்துகொள்கிறேன் என்று சொல்லுவான்.

எங்கள் கிராமத்தில் பெரும்பாலான காதல் கதைகள் வைக்கோல் போருக்குப் பின்னால் தோன்றி அங்கேயே சமாதியாகிவிடும். ஆனால் ஆனந்தன் என்னை ஒருமுறை கூடத் தொட்டதில்லை. அவன் எப்பொழுதும் காதலைப் பற்றிப் பேசாமல் திருமணத்தைப் பற்றித்தான் அதிகமாகப் பேசிக் கொண்டிருப்பான். அதனால்தான் அவன்பால் எனக்கு நாளுக்கு நாள் அன்புடன் மதிப்பும் கூடிக்கொண்டிருந்தது. எப்படியோ முயற்சி செய்து என் தாயை என்னால் எதிர்க்க முடியும். ஆனால் சினேகிதி விஷயம்தான் எனக்கு வேதனை

யாக இருந்தது. எத்தனை சீக்கிரமாக இந்த விஷயத்தை வெளிப் படுத்துகிறோமோ அத்தனை நல்லது என்று தோன்றியது.

கடைசியில் அன்றைக்கு நானே தரளாவிடம் அத்தனையும் சொல்லிவிட வேண்டும் என்று முடிவு செய்தேன். அதற்காகப் பல முறை ஒத்திகைப் பார்த்துக் கொண்டேன்.

தரளா என்னை நன்றாகக் கோபித்துக்கொள்வாள் என்று எனக்குத் தெரியும். ஆனால் நீங்களாவது என்னைப் புரிந்து கொண்டால் போதும். நான் ஒன்றும் அன்னிபெஸண்டோ, நைட்டிங்கேலோ இல்லை. நான் பிறந்த இனத்திற்கும், எனக்கு இருக்கும் அழகிற்கும் எனக்குத் திருமணம் ஆகும் என்று கனவிலும் நினைக்க முடியாது. அதற்குள் ஊரில் இருந்த "பெரிய மனிதர்கள்" எனக்காக மறைமுகமாக விசாரிக்கத் தொடங்கி விட்டார்கள். இதுபோன்ற சூழ்நிலையில் உதவிக்கரம் ஒன்று என்னை இந்தப் புதை மணலிலிருந்து வெளியே கொண்டு வர முயற்சி செய்யும்போது, அதைப் பற்றிக்கொள்ளாமல் இருப்பது சுயநலமற்றத் தன்மையா இல்லை முட்டாள்தனமா? தரளா விஷயம் அப்படி இல்லை. அவள் அவனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றால் அந்தஸ்தைப் பொறுத்தவரையில் சில படிகல் இறங்கிவர வேண்டும். அவளுக்கு அத்தனை அவசியம்தான் என்ன?

தரளா எவ்வளவு நல்லவளோ எனக்குத் தெரியும்.

எங்கள் இருவரின் விஷயமும் தெரிந்தால் நன்றாகத் திட்டினாலும், பிறகு சிரித்து விடுவாள். அப்படி நடந்தால் இத்தனை நாளும் நான் அனுபவித்து வந்த பதட்டம் தேவையற்றது. திடீரென்று போய் திருமண அழைப்பிதழைத் தந்தால் அவள் மனம் ரொம்ப புண்பட்டுவிடும். அதனால் முன்னாடியே சொல்லி விடுவது நல்லது.

பலவிதமாக யோசித்துவிட்டு ஒத்திகைப் பார்த்துக் கொண்டு நான் தரளாவின் வீட்டுக்குப் போன போது அவளே வாய்நிறைய சிரித்துக்கொண்டு எதிரே வந்தாள். "வா... வா... உனக்கு ஒரு குட் ந்யூஸ்" என்றாள்.

"என்ன?" என்றேன்.

"எங்கள் திருமணத்திற்கு ஆனந்தன் சம்மதித்துவிட்டான்"

எனக்குக் கண்களை இருட்டிக்கொண்டு வந்தது. "என்னது?" மறுபடியும் கேட்டேன்.

"காது சரியாகக் கேட்கவில்லையா என்ன? எங்கள் கல்யாணத்திற்கு ஆனந்தன் ஒப்புக்கொண்டுவிட்டான்" என்றாள்.

என் முகத்தில் மாறிக்கொண்டிருந்த உணர்ச்சிகளைத் தரளா பார்த்துவிடாமல் இருக்கப் பெரும் முயற்சி செய்ய வேண்டியிருந்தது.

"கங்கிராட்சுலேஷன்ஸ் சொல்ல மாட்டாயா?"

"கங்கிராட்சுலேஷன்ஸ்." எப்படியோ வாயைத் திறந்து சொன்னேன். எனக்கு எல்லாமே குழப்பமாக இருந்தது. 'ஆனந்தன் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டுவிட்டான்' இந்த வார்த்தைகள்தான் என் காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தன, எப்படி நடந்திருக்கும் இது? என் மனம் எதிர்மறையான இரு வெவ்வேறு உணர்ச்சிகளால் தத்தளித்துக் கொண்டிருந்தது. அதிக நேரம் அங்கே என்னால் இருக்க முடியவில்லை. அங்கிருந்து எப்படியோ வெளியேறி, வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். ஏற்கனவே எங்கள் வீடு நரகம். இப்பொ நான் இருந்த மன நிலையில் இன்னும் தாங்க முடியாததாகத் தோன்றியது. ஆனந்தனைச் சந்தித்தால் தவிர என் மனம் ஒரு நிலைக்கு வராது போலிருந்தது.

"எங்கே கிளம்பி விட்டாய்?" மாமா கேட்டார்.

"காவேரியில் குதிக்க." பதில் சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

"பார்த்தாயா அக்கா எவ்வளவு திமிராகப் பேசுகிறாள்?" அம்மாவிடம் புகார் செய்துகொண்டிருந்தார் மாமா. "சீக்கிரத்தில் அடக்கி வைக்காமல் போனால் நம் பேச்சைக் கேட்கமாட்டாள்."

9

ஏறக்குறைய ஓடினாற்போலவே ஆனந்தனிடம் போனேன்.

"இதென்ன? என்னவோ போல் இருக்கிறாயே?" ஆனந்தன் கேட்டான். நான் உடனே பதில் சொல்லவில்லை. எதைப் பேசினாலும் துக்கம் பொங்கிக்கொண்டு வரும் போலிருந்தது. அவன் முகத்தைப் பார்த்தேன். அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை. "இப்பொழுதுதான் தரளாவிட மிருந்து வருகிறேன்" என்றேன் சுருக்கமாய். அதை அவன் புரிந்து கொண்டானோ இல்லையா என்று தெரியவில்லை. ஆனால் "என்ன விசேஷம்?" என்று கேட்டான். அவன் அவ்வாறு சாதாரணமாகக் கேட்டதைப் பார்க்கும்போது எனக்கேதோ சந்தேகம் வந்தது. அதற்கு மேல் எதையும் மறைக்காமல் தரளா என்னிடம் சொன்னதை எல்லாம் அவனிடம் சொல்லிவிட்டேன்.

எல்லாவற்றையும் கேட்டு முடித்தப் பிறகு அவன் சிரித்தான். "பாவம். மகளின் மனதை நோகடிக்கக்கூடாது என்று அவளுடைய அப்பா கஷ்டப்படுகிறார் போலும்."

"அப்படி என்றால்"

"நேற்று என்னிடம் வந்தார். மகளைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லிக் கேட்டார்."

நான் வாயடைத்துப் போய் அவன் பக்கம் பார்த்தேன். தரளாவின் தந்தை ஆனந்தனிடம் வந்தார் என்றால் நம்ப முடியவில்லை. அந்த லட்சாதிபதி. . . ஆனந்தனுக்காக. . .

"என்ன யோசிக்கிறாய்?"

நான் தலை உயர்த்தி அவன் பக்கம் பார்த்தேன்.

அவன் மறுபடியும் சிரித்தான். "இவ்வளவு நாள் சொல்லி விட்டால் நல்லது, சொல்லி விட்டால் நல்லது என்று பயந்து கொண்டே இருந்தாய் இல்லையா. நேற்றே அவரிடம் சொல்லி விட்டேன்."

"என்னவென்று?"

"உங்க மகள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறாள். எனக்கு அவள் மேல் அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை என்றேன். அவர் வியந்து போய்விட்டார் முதலில். அப்படிப்பட்ட எண்ணம் இதற்கு முன் இல்லையென்றால் போகட்டும். இப்பொழுது பண்ணிக்கொள்ளக்கூடாதா என்றார். தரளாவுக்கு எவ்வளவு திமிர் இருக்கோ அதுபோல் இரு மடங்கு திமிர் அவளுடைய அப்பாவுக்கு இருக்கும் போலிருக்கு. பணத்தால் எதையும் வாங்கி விடலாம் என்ற பிரமையில் இருந்தார். என்னைப் போன்ற லட்சாதிபதி உன்னை வந்து கேட்பதே உன் அதிர்ஷ்டம் என்பது போல் பேசினார். இன்னும் கொஞ்சம் அழ வைக்கலாம் என்று தோன்றியது. ஆனால், வயசானவர் பாவம் என்று விட்டு விட்டேன்."

என்ன நடந்திருக்கும் என்று புரிந்துவிட்டது. தரளாவிடம் இந்த விஷயத்தைச் சொல்ல அவர் தயங்கியிருப்பார். அந்த வீட்டில் தரளா என்றால் எல்லோருக்கும் உயிர். சின்ன வயது முதல், யானை பொம்மை கேட்டால் நிஜ யானையையே வாங்கித்தரும் அளவுக்குச் செல்லமாக அவளை வளர்த்தார்கள். ஆனந்தனைப் போன்ற அன்னக்காவடி ஒருத்தனைக் காதலித்ததற்கு வேறு எந்த தந்தையாக இருந்தாலும் அவளை நன்றாகத் திட்டித் தீர்த்திருப்பார்கள். ஆனால், அவர் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் ஆனந்திடம் வந்தார். அத்தனை பெரிய செல்வந்தர் கைகளைக் கூப்பி வேண்டிக்கொண்டார்.

ஆனந்தன் மறுத்துவிட்ட போது அந்த விஷயத்தை மகளிடம் சொல்லாமல் அவன் சம்மதித்துவிட்டான் என்று பொய் சொல்லியிருக்கிறார்.

கைக்கெட்டிய அதிர்ஷ்டத்தைக்கூட மறுத்துவிட்ட ஆனந்தனைக் கண்டு எனக்கு மதிப்பும், அபிமானமும் மேலும் கூடின. நான் எத்தனை அதிர்ஷ்டசாலி என்று புரிந்தது. அப்படிப்பட்ட ஆண்கள் ரொம்பக் குறைவாகத்தான் இருப்பார்கள். பண விஷயத்தில் மட்டுமே இல்லை. அவன் யோசிக்கும் விதம், முடிவு செய்யும் திறமை, சில விஷயங்களில் அவனுடைய பிடிவாதம்... எல்லாமே அபூர்வமாகத் தோன்றின. நீங்கள் நினைக்கலாம். காதலில் விழுந்த எல்லோருக்கும்தான் விரும்பும் நபரைப் பற்றி அப்படித்தான் நினைக்கத் தோன்றும் என்று. அதற்குப் பதில் நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். நாங்கள் இருவரும் கண்மூடித்தனமாக காதலில் என்றுமே ஆழ்ந்து போனதில்லை. இவ்வளவு நடந்த பிறகு இனித் தாமதம் செய்வது நல்லது இல்லை என்று சொன்னான் ஆனந்தன்.

முதலில் ஒருமுறை என் வீட்டுக்கு வந்து என் தாயிடம் திருமண விஷயமாகக் கேட்பதாகவும், அவள் எப்படியும் சம்மதிக்க மாட்டாள் என்பதால் கோயிலில் மணம் செய்து கொள்வோம் என்று சொன்னான். மாமா ஏதாவது ரகளை செய்தால் முன் எச்சரிக்கையாகப் போலீஸில் கூடச் சொல்லி வைக்கிறேன் என்று சொன்னான். நாங்களிருவரும் ஒருத்தர் கண்ணில் இன்னொருத்தர் பார்த்துக்கொண்டு உலகத்தையே மறந்து போய் விடவில்லை. இருவரும் சேர்ந்து எதிர்காலத்தை நோக்கி எதிர்பார்ப்புடன் பார்த்துக்கொண்டிருந்தோம். காதல் என்றால் உலகத்தையே மறந்துவிடுவது இல்லை. உலகில் எப்படி வாழ்வதென்று யோசிப்பதுதான் காதல் என்பது எங்களுடைய அபிப்பிராயம்.

மறுநாளே அவன் எங்கள் வீட்டுக்கு வருவதாகச் சொன்னான்.

எங்கள் காதல் விஷயம் யாருக்குமே தெரியாது என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் அந்த விஷயம் தெரிந்த இன்னொரு நபர் இருக்கிறார் என்று அன்றிரவுதான் எனக்குத் தெரிந்தது. அந்த நபர் என்னுடைய மாமா. நான்

தூங்கிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டு பக்கத்து அறையில அம்மாவுடன் பேசிக் கொண்டு அவர் கேட்டேன். எதையாவது செய்து என்னை இந்தத் தொழிலில் இறக்க வேண்டும் என்று அவர்கள் வாதாடிக்கொண்டிருந்தார்கள். என் தலையணை கண்ணீரால் நனைந்துவிட்டது இரண்டு நாட்கள் சீக்கிரமாகக் கழிந்துவிட்டால் போதும் என்று கடவுளை வேண்டிக் கொண்டேன். மூன்று நாட்களுக்குப் பிறகு எங்கள் திருமணம்.

அன்றிரவு எனக்கு உறக்கம் வரவில்லை. சின்ன சத்தம் கேட்டாலும் போதும். மாமாதான் உள்ளே வருகிறாரோ என்று பயந்து கொண்டிருந்தேன். இந்த நிலைமை எதிரிகளுக்குக் கூட வரக்கூடாது. எங்கள் வீட்டிலேயே எனக்குப் பாதுகாப்பு இல்லை.

மறுநாள் ஆனந்தன் வந்து இந்த விஷயத்தைச் சொன்னதுமே வீட்டில் கிளம்பப் போகும் புயலை நினைத்தாலே பயமாக இருந்தது. இந்த நிலைமையில் எனக்கு மனதளவில் ஒரு துணை வேண்டும் போலிருந்தது. அதுபோன்ற தைரியத்தை எனக்கு யாரால் தரமுடியும்?

தரளா!

ஆமாம். தரளாவைத் தவிர வேறு யாருமே இல்லை. இருபத்திநாலு மணி நேரமும் தரளா என்னோடு இருந்துவிட்டால் போதும். ஆனந்தனின் இல்லத்திற்குள் அடியெடுத்து வைத்து விடுவேன். எவ்வளவு வினோதமான சூழ்நிலை? எனக்கு உதவி செய்யும்படித் தரளாவிடம் கேட்பது! காதலுக்காகத் தியாகம் செய்பவர்களைத்தான் நீங்க பார்த்திருப்பீர்கள். சுயநலத்திற் காகக் காதலைப் பலியிடும்படிக் கேட்டும் நபரை இப்பொழுது நீங்கள் என்னுள் பார்க்கிறீர்கள். என்னைப் பார்த்தால் உங்களுக்கு அருவருப்பு ஏற்படலாம். ஆனால், வாழ்க்கை என்பது கற்பனை அல்ல, யதார்த்தம்.

தரளாவை இந்த விஷயத்தில் உதவி கேட்க வேண்டும் என்ற எண்ணம் வந்ததுமே எனக்குத் தைரியம் வந்துவிட்டது. அன்று இரவு அதற்குமேல் என்னால் பொறுத்திருக்க

முடியவில்லை. எல்லா விஷயத்தையும் அவளிடம் சொன்னா லொழிய என் மனம் நிம்மதி அடையாது போலிருந்தது. எல்லா வற்றையும் கேட்டப் பிறகும்கூட அவள் இன்னும் ஆனந்தனை நேசித்து வந்தால், என்னால் அதற்கு மேல் செய்வதற்கு எதுவும் இல்லை. ஆனால், தரளா விஷயம் எனக்கு நன்றாகத் தெரியும். வாழ்க்கையை ரொம்ப லைட்டாக எடுத்துக் கொள்ளக்கூடியவள். ஆனந்தனை நன்றாகத் திட்டுவாள். பிறகு சிரித்துவிடுவாள். ஆனந்தனுக்கு அந்தக் கண்டிப்பு அவசியம்தான் அந்தப் பெண் தன்னைக் காதலிப்பது தெரிந்தும் ஒன்றுமே தெரியாதது போல் இருந்தது அறியலாம். அந்தப்பெண் தன்னுடைய காதலை வெளிப்படுத்தவில்லை என்பதால் நானும் எதுவும் சொல்லமாட்டேன், என்று பிடிவாதமாய் இருப்பது, அந்தப் பெண்ணை அழ வைக்கும் நோக்கம் தவிர வேறு எதுவும்இல்லை. தரளா நல்ல பெண் என்பதால் தந்தையின் மூலமாகச் செய்தி அனுப்பினாள். அவர் இன்னும் நல்லவராக இருப்பதால் திரும்பி வந்து மகளிடம் பொய் சொல்லிவிட்டார்.

எல்லோரும் நல்லவர்கள்தான். நடுவில் நலிந்து போய்க் கொண்டிருந்தவள் நான் ஒருத்திதான்.

இரவு பன்னிரண்டைத் தாண்டிவிட்டது.

முன் அறையில் அம்மாவும், பக்கத்து அறையில் மாமாவும் உறங்கிக்கொண்டிருந்தார்கள். ஓசைப்படுத்தாமல் வெளியில் வந்தேன். கிராமம் இருளைத் திரையாகப் போர்த்திக் கொண்டிருந்தது. தரளாவின் வீடு அதிகத் தொலைவில் இருந்தது. ஜன்னல் வழியாகக் கூப்பிட்டால் எழுந்துவிடுவாள்.

தெருக்கள் ஆளவரமற்று இருந்தன. அந்தச் சமயத்தில் என்னை யாராவது பார்த்துவிட்டால் போதும். மறுநாள் ஊர் முழுவதும் இச்செய்தி காட்டுத் தீயாகப் பரவிவிடும். ஆனால் ஏதோ தெரியாத குருட்டுத்துணிச்சல் என்னைப் பற்றிக் கொண்டது. அப்படியே நடந்துபோய்க்கொண்டிருந்தேன். தரளாவின் வீடு முழுவதும் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. என் மனம் ஏதோ தீங்கை எடைபோட்டது. நடையின் வேகம்

அதிகரித்தது. உள்ளே போனேன். முன்னறையில் தரளாவின் தந்தை நடைபயின்று கொண்டிருந்தார். தூணுக்குப் பக்கத்தில் வேலைக்காரன் திருதிருவென்று விழித்தபடி கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

அறையின் நடுவில் தரளா, ஈர உடையில் தலையிலிருந்து வழியும் நீரோடு காட்சியளித்தாள்.

அந்தச் சமயத்தில் என்னை எதிர்பார்க்காத அந்த வீட்டார் அனைவரும் ஆச்சரியமடைந்துவிட்டார்கள். முதலில் தேறிக்கொண்டது தரளாவின் தந்தைதான். வேலைக்காரனிடம் போய் "இந்த விஷயம் இரண்டாம் பேருக்குத் தெரியக்கூடாது. ஜாக்கிரதை" என்று எச்சரித்தார். அவன் பயந்துகொண்டே தலையை அசைத்துவிட்டு வெளியே போய்விட்டான்.

தரளாவை அவள் தாய் உள்ளே அழைத்துக்கொண்டு போனாள்.

அறையில் நாங்கள் இருவர் மட்டுமே இருந்தோம். தரளாவின் தந்தை என்னிடம் வந்து "இவள் என்ன காரியம் செய்தாள் தெரியுமா?" என்றார். எனக்கு இன்னும் அங்கே என்ன நடந்தது என்று புரியவில்லை.

"நள்ளிரவில் போய்க் காவேரியில் குதித்துவிட்டாள்."

இடி விழுந்தாற் போல் அதிர்ந்துவிட்டேன். அவர் என்ன சொல்கிறார் என்று கொஞ்ச நேரம் புரியவில்லை.

"அந்த ஆனந்தன் என்ன சொன்னான் என்று தெரியவில்லை. இரவு முழுவதும் என்னவோ போல் இருந்தாள். நள்ளிரவில் போய்க் காவேரியில் குதித்துவிட்டாள். அதிர்ஷ்டம் நன்றாக இருந்தது. எங்கள் வேலைக்காரனுக்கு விழிப்பு வந்ததால் காப்பாற்றப்பட்டு விட்டாள்." அவர் முகம் கோபத்தாலும், ரோஷத்தாலும் சிவந்து விட்டது. "என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் அந்த ஆனந்தன் தன்னைப் பற்றி? என் மகள் ஊம் என்று சொல்ல வேண்டுமே ஒழிய ஆயிரம் மாப்பிள்ளைகள் வரிசையில் நிற்பார்கள்" என்று கத்தினார்.

கதவை லோசாகத் திறந்து முகத்தை வெளியில் நீட்டி "எனக்கு ஆயிரம் பேர் தேவையில்லை. ஆனந்தன் போதும்." என்றாள் தரளா. என் பக்கம் பார்த்துவிட்டுக் கண் சிமிட்டி விட்டு உள்ளே போய்விட்டாள். அவர் மேலும் சத்தமாக ஏதோ சொல்லப் போய் சுதாரித்துக் கொண்டு என் பக்கம் பார்த்தார். என்ன பேசுவதென்று புரியாமல் நான் மௌனமாக இருந்தேன். அவர் என் அருகில் வந்தார். "இந்த விஷயத்தை நீ கூட யாரிடமும் சொல்லாதே. இரண்டு நாட்களில் எல்லாம் சரியாகிவிடும். அவள் உன்னுடைய சினேகிதி என்பதால் எப்படியாவது அவளைச் சமாதானப்படுத்து, இரண்டு நாட்கள் பொறுத்திருக்கச் சொல்லு. அதற்குள் அந்த ஆனந்தனை நான் வழிக்குக்கொண்டு வந்து விடுகிறேன்" என்றார்.

இதுபோன்ற சூழ்நிலை யாருக்குமே வந்திருக்கக்கூடாது. கத்திரிக்கோலுக்கு நடுவில் அகப்பட்டுக்கொண்டது போல் என் நிலைமை மோசமாகிவிட்டது. தரளா இப்படிச் செய்வாள் என்று கனவில்கூட நினைக்கவில்லை. ஆனந்தன் மீது கோபம் வந்தது. நான் போன பிறகு தரளா ஆனந்தனிடம் போயிருப்பாள். அவள் தந்தையிடம்தான் சொன்னதை அப்படியே அவளுக்கு ஆனந்தன் சொல்லியிருப்பான். அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் காவேரியில் குதித்துவிட்டாள்.

"இன்றிரவு இங்கேயே படுத்துக்கொள். உங்கள் வீட்டுக்கு நான் தகவல் சொல்லி அனுப்புகிறேன்" என்றார் அவர். "தரளாவிடம் நயமாகப் பேசி, தைரியம் சொல்லு. இரண்டு நாள் பொறுத்திருக்கச் சொல்லு."

அவருடைய இடத்தில் வேறு ஒருவர் இருந்தால் மகளைக் கொன்று போட்டிருப்பார்கள். ஆனால் தரளா அவருடைய செல்லமகள்.

வந்த வேலையை மறந்துபோய் தரளாவின் அறைக்குள் சென்றேன். சாம்பிராணிப் புகையால் தலைமுடியின் ஈரத்தைக் காய வைத்துக்கொண்டிருந்த தரளா என்னைப் பார்த்துச் சிரித்தாள். "நீ எதுக்கு வந்தாயென்று எனக்குத் தெரியும். இன்று

இரவு முழுவதும் இங்கேயே இருக்கப்போகிறாய். தற்கொலை செய்து கொள்வது மகாபாவம் என்று சொற்பொழிவு ஆற்றப் போகிறாய். எங்க அப்பா வழங்கப்போகும் நீண்ட உரைக்கு நீ வக்காலத்து வாங்கப்போகிறாய் அப்படித்தானே" என்றாள்.

இனி என்னால் என்ன பேச முடியும்?

தரளாவின் தாய் மகளைக் கடிந்துகொண்டிருந்தாள். நான் அரைமணி நேரம் உட்கார்ந்துகொண்டிருந்து விட்டுத் திரும்பி விட்டேன்.

அந்தச் சூழ்நிலையில் நான் சொல்ல நினைத்ததை எப்படிச் சொல்வேன்? அதான் அந்த விஷயத்தைப் பற்றிப் பேச்சே எடுக்காமல் வீட்டுக்கு வந்துவிட்டேன்.

அப்படிச் செய்யாமல் அன்றிரவே அவளிடம் எல்லா வற்றையும் சொல்லியிருந்தால் இந்தக்கதை வேறு விதமாகத் திரும்பியிருக்குமோ என்னவோ.

அன்று இரவு என்னைப் பொறுத்தவரை சிவராத்திரியாகி விட்டது.

மறுநாள் காலையில் நான் படுக்கையிலிருந்து எழுந்து கொள்ளும்போதே அம்மா அருகில் வந்தாள் "கேட்டியோ செய்தியை. நேற்று இரவு தரளா காவேரியில் குதித்து விட்டாளாம்." நீட்டி முழக்கிக்கொண்டே சொன்னாள்.

கிராமம் முழுவதும் இந்தச் செய்தி காட்டுத் தீயாகப் பரவி விட்டது என்று எனக்கு அப்பொழுதுதான் புரிந்தது. இந்த விஷயத்தை மறைத்து வைக்கும் முயற்சி எதுவும் தரளா செய்யவில்லை. வேலைக்காரனைக் கட்டுப்படுத்த முடிந்ததே தவிர மகளை எப்படித் தடுக்க முடியும்.

வேடிக்கை என்னவென்றால் தரளாவை யாருமே குற்றம் சொல்லவில்லை. மேலும் காதல் என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டார்கள். இத்தனை நாள் சுற்றிவிட்டு இப்பொ மறுத்தால் எப்படி என்று ஆனந்த

னைத்தான் திட்டினார்கள். அவ்விருவருடன் நானும் இருந்தேன் என்ற விஷயத்தை எல்லோரும் மறந்துவிட்டார்கள். அதே காரியத்தை நான் செய்திருந்தால் 'தேவடியாச் சிறுக்கி!' அவனை வலையில்போட்டுக்கொள்ள முயற்சி செய்தாள். அந்த முயற்சியில் வயிற்றில் சுமை ஏற்பட்டு, காவேரியில் குதித்து விட்டாள். என்று சொல்லி இருப்பார்கள். சமுதாயத்தில் அந்தஸ்தும், செல்வாக்கும் மனிதர்கள் யோசிக்கும் விதத்தில் எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்துமோ என்று எனக்கு அப்பொழுதுதான் புரிந்தது. கோழியைப் பிடிப்பதற்காக நான்குபேர் நாலா பக்கத்திலிருந்து சூழ்ந்துகொண்டு அதை எங்கேயும் போகமுடியாமல் சிறைப்படுத்துவார்கள். அதேபோல் மெள்ளமாக எல்லா கதவுகளுமே மூடிக்கொண்டு வருவது போல் தோன்றியது.

இந்தத் தாக்குதலுக்கு சுதாரித்து நின்றவன் ஆனந்தன் ஒருத்தன்தான். எனக்குச் சுருக்கமாகக் கடிதம் எழுதி அனுப்பினான். மேலும் தாமதம் செய்வதோ முகூர்த்தத்திற் காகக் காத்திருப்பதோ அனாவசியம். தாலியையும், புரோகிதரையும் நான் ஏற்பாடு செய்து விடுகிறேன். மூன்றே வாக்கியங்கள்தான் இருந்தன அந்தச் சீட்டில்.

அந்தக் காகிதம் ரொம்ப நேரம் என் கைகளில் அப்படியே இருந்தது. இதயம் முழுவதும் பயமும், நடுக்கமும் பரவியது. எந்த முடிவு எடுப்பது என்று புரியாத நிலை. ஆனந்தன் இவ்வளவு சீக்கிரமாகத் தன்னுடைய முடிவைச் செயல்படுத்த முற்படுவான் என்று நினைக்கவில்லை.

நான் ஏதோ போல் இருந்ததை அம்மாக் கண்டுபிடித்து விட்டு காரணம் கேட்டாள். எதையோ சொல்லித் தப்பித்துக் கொண்டு விட்டேன்.

மாலை நெருங்க நெருங்க என்னுள் உத்வேகம் அதிகரித்தது. வீட்டை விட்டு வெளியேறும் துணிச்சல் இருக்கவில்லை. மாமாவை நினைத்தால் பயமாக இருந்தது. அவரால் ஒன்றும் பண்ணிவிட முடியாது. ஆனாலும் அந்தப் பயம் மட்டும் என்னை விட்டு நீங்கவில்லை.

இருட்டிவிட்டது.

குட்டி போட்ட பூனையைப் போல் அறையைச் சுற்றிச் சுற்றி வந்தேன். காரணமில்லாமல் அழுகை பொங்கிக்கொண்டு வந்தது. என் மீது எனக்கே கோபமும் எரிச்சலும் ஏற்பட்டன.

ஆறரை மணி ஆகிவிட்டது. ஏழு....ஏழரை.

இனி என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. வாட்சையும் கழட்டி மேஜைமீது வைத்துவிட்டுப் படிகளில் இறங்கினேன்.

"இத்தனை இருட்டிய பிறகு எங்கே கிளம்பி விட்டாய்?" அம்மா கேட்டாள்.

"தரளா வீட்டுக்கு." பதில் சொன்னேன்.

ஆனந்தனுக்காகத் தரளா காவேரியில் குதித்தாள் என்று தெரிந்த பிறகு அம்மாவுக்கு என்மீது நம்பிக்கை வந்துவிட்டது போலும். மறுப்பு எதுவும் சொல்லவில்லை. "சீக்கிரமாக வந்து விடு" என்று மட்டும் சொன்னாள்.

வெளியில் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. ஓட்டமும் நடையுமாகக் கோவிலுக்குப் போனேன்.

வீட்டில் இருந்தபோது போவதா வேண்டாமா என்று இருந்த பதற்றம், வெளியே வந்ததும் ஆவேசமாக மாறி என்னை ஓடச் செய்தது.

பதினைந்து நிமிடங்களில் கோவிலை அடைந்தேன்.

ஊருக்குச் சற்று தொலைவில் இருந்த கோவில் அது. ஆளரவமற்று இருந்தது.

குருக்கள் மட்டும் இருந்தார். அத்தனைத் தொலைவி லிருந்து வந்த என்னைப் பார்த்ததில் அவர் முகத்தில் வியப்பு வெளிப்படையாகத் தெரிந்தது.

"ஏம்மா. இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

அந்த ஒரு கேள்வியில் எனக்குச் சகலமும் புரிந்துவிட்டது.

ஆனந்தன் புரோகிதருடன், திருமணத்திற்கான ஏற்பாடு களுடன் அங்கே வந்திருந்தால் குருக்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கமாட்டார்.

அப்படி என்றால்...

ஆனந்தன் வரவில்லை.

ஆனந்தன் சொன்னகதை

தரளாவின் விவகாரம் எனக்குத் தலைவலியாக மாறிவிட்டது.

அந்தப் பெண்ணிடம் இருப்பது திமிரா அல்லது அசட்டுத் தனமா என்று எனக்குப் புரியவில்லை. தரளா காவேரியில் குதித்த பிறகு என் நிலைமை அந்தக் கிராமத்தில் எப்படி இருந்திருக்கும் என்பதை நீங்கள் ஊகித்துப் பார்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, வார்த்தைகளில் சொல்லிப் புரிய வைக்க முடியாது.

நான் மறுத்துவிட்டதால் தரளா தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தாள் என்ற உண்மையை யாராலும் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை போலும். இந்தச் செய்தி அவர்களுக்கு அவ்வளவாக ஆர்வத்தை ஏற்படுத்தவில்லை.

அதனால் அப்பாவிகளாக இருக்கும் கிராம மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் விதமாக, எடுத்துச் சொல்வதற்கு வசதியாக, ஆர்வத்தைத் தூண்டக்கூடிய செய்தியைப் பரப்புவதில் ஆழ்ந்து விட்டார்கள்.

எனக்கும் தரளாவுக்கும் இடையில் ரொம்ப நாளாகத் தொடர்பு இருந்து வந்ததாகவும், அவள் இப்பொழுது மூன்று மாத கர்ப்பிணி என்றும், அவள் தந்தை லட்சாதிபதி என்பதால் உலகத்து வழக்கம் போல் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக்

கொள்ளாததால் தரளா காவேரியில் குதித்துவிட்டாள் என்றும் பேசிக்கொண்டார்கள்.

ரொம்ப வேகமாகப் பரவக்கூடியது வதந்தி மட்டும்தான். சுற்று வட்டாரத்தில் இருக்கும் கிராமங்களுக்கு இந்தச் செய்தி மிக வேகமாகப் பரவிவிட்டது. ஓரிருவர் என்னிடம் வந்து தரளாவின் தந்தையை எதிர்த்து நின்றாவது இந்த திருமணத்தை முடித்துக் கொள்ளச் சொல்லி இலவசமாக அறிவுரை வழங்கினார்கள். இந்தப் பெரிய மனிதர்களே தரளாவின் தந்தையிடம் சென்று என்னைப் பற்றிக் கெடுதலாகச் சொல்லி முடிந்தால் என்னை நையப் புடைக்கச் சொல்லி யோசனை தந்திருப்பார்கள் என்று என்றால் ஊகித்துக் கொள்ள முடியும்.

பிருந்தா சொன்னதைக் கேட்காமல் போனது எவ்வளவு பெரிய தவறாகிவிட்டது என்று எனக்கு இப்பொழுதுதான் புரிந்தது. தரளாவிடம் முன்னாடியே தெரிவித்து இருந்தால் இவ்வளவு அனர்த்தம் ஏற்பட்டு இருக்காது. பிருந்தா சொன்னது போல் முளையிலேயே கிள்ளி எறிந்திருக்க வேண்டியதைக் கோடலி வரைக்கும் கொண்டுவந்துவிட்டேன்.

எது எப்படி வேண்டுமானாலும் போகட்டும். நான் செய்ததில் எந்தத் தவறும் இல்லையென்று எனக்குத் தெரியும். தரளா வாயைத் திறந்து எதுவும் சொல்லாத போதே "நான் உன்னைக் காதலிக்கவில்லை" என்று எப்படிச் சொல்வது? அந்தப் பெண்ணின் முன்னிலையில் பிருந்தாவிடம் நான் நடந்துகொண்ட விதத்தைப் பார்த்தால், கொஞ்சம் மூளை இருக்கும் எந்தப் பெண்ணாக இருந்தாலும் உடனே புரிந்துகொள்வாள். அவ்வளவாவது புத்திசாலித்தனம் இருந்திருந்தால் அவள் ஏன் தரளாவாக இருக்கப் போகிறாள்?

இனி எந்த விஷயத்தையும் பொருட்படுத்த வேண்டியதில்லை என்று முடிவெடுத்தேன். அந்தப் பெண் காவேரியில் குதித்தாலும் சரி, கடலில் குதித்தாலும் சரி.... எனக்குத் தேவையில்லை. பிருந்தாவைத் திருமணம் செய்து கொண்டு விட்டால் இந்த வதந்திகள் எல்லாம் தானே அடங்கிவிடும்.

தன்னுடைய காதலைப்பற்றி ஊர் முழுவதும் டமாரம் அடித்துக் கொண்டது தரளாவின் தவறு.

என்னிடம் குறைந்தபட்சம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் இவ்வளவு தடபுடல் யார் செய்யச் சொன்னார்கள் அவளை?

இதையெல்லாம் யோசித்துப்பார்த்துவிட்டு இறுதியாக ஒரு முடிவுக்கு வந்து பிருந்தாவுக்குக் கடிதம் எழுதினேன். மாலையில் கோவிலுக்கு வரச்சொல்லியும், அங்கே திருமணம் செய்து கொள்வோம் என்று எழுதினேன். ஒருமுறை விஷயங்கள் தானே சரியாகி விடும் என்று எனக்குத் தோன்றியது.

அன்று என் உடல்நலம்கூட அவ்வளவு சரியாக இருக்க வில்லை. இரண்டு நாட்களாகத் தொடர்ந்து இருமிக்கொண்டே இருந்தேன். திருமணம் ஆன அடுத்த நிமிடத்திலிருந்து சிகரெட்டை விட்டுவிட வேண்டும்.

காலையிலேயே பக்கத்துக் கிராமத்துக்குப் போய் அந்த ஊர் புரோகிதரை வரச்சொல்லி விட்டு வந்தேன். இந்த ஊரைச் சேர்ந்தவனாக இருந்தால் ஏதாவது ஆபத்து வரக்கூடும்.

மறுநாளிலிருந்து விடுமுறை எடுத்துக் கொண்டேன். திருமணம் ஆனதுமே இந்த ஊரை விட்டுப் போய் வெளியூரில் சிலநாட்கள் இருந்துவிட்டுத் திரும்பி வர வேண்டும். எனக்காவது பரவாயில்லை. ஆனால் பிருந்தாவால் இந்தக் கிராமத்து மக்களைச் சமாளிக்க முடியாது.

மாலை ஐந்தாகிவிட்டது. இனி கோவிலுக்குப் போவோம் என்று நினைத்தபோதுதான் எதிர்பாராமல், இதயத்தில் அந்த வலி. . . லேசாகத் தோன்றியது.

முதலில் அதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால் நேரம் ஆக ஆக வலி அதிகரித்தது. அதற்கு மேல் பொறுத்துக்கொள்ளமுடியாமல் டாக்டரிடம் போனேன்.

பிருந்தா இந்நேரம் கோவிலுக்குப் போயிருப்பாள் என்று நினைத்தேன். டாக்டரிடமிருந்து சீக்கிரமாக வெளியேற வேண்டும் என்ற என் விருப்பம் அவ்வளவு சுலபமாக நிறைவேறவில்லை.

சுமார் ஒருமணி நேரம் பரிசோதனைகளை செய்தார்.

அதற்குள் ஆறரைமணி ஆகிவிட்டது.

பரிசோதனையின் முடிவுகளை மறுநாள் சொல்வதாக டாக்டர் சொன்னார். நான் அதை அவ்வளவாகப் பொருட் படுத்தவில்லை. ரொம்பக் களைப்பாக இருந்தது. அப்படியும் ஓட்டமும் நடையுமாகக் கோவிலுக்குப் போனேன்.

பிருந்தா தென்படவில்லை. உள்ளே குருக்கள் மட்டும் இருந்தார். அவரிடம் விசாரித்தேன். அவர் சொன்னதிலிருந்து பிருந்தா வந்துவிட்டுப் போனதாகத் தெரியவில்லை. பெயரைச் சொல்லாமல் விஷயத்தைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்தேன். அந்தக் கோவிலுக்கு கடைசி பக்தன் வந்து ஒரு வாரமாகிவிட்டது என்றும், ஜீவனம் கஷ்டமாக இருக்கிற தென்றும் தன்னுடைய கதையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஏழரை ஆகிவிட்டது.

பிருந்தா வரவில்லை.

ஒருக்கால் பயந்து போயிருப்பாள். அவளுடைய பயத்தை என்னால் புரிந்துகொள்ள முடியும். கோவிலை விட்டு வெளியே வந்து அங்கே எனக்காகக் காத்திருந்த புரோகிதரைப் போகச் சொல்லி அனுப்பிவிட்டேன். பிருந்தாவின் வீட்டுக்கு புறப்பட்டேன். எனக்கு அவள்மேல் கோபம் வரவில்லை. எத்தனையோ தைரியம் இருந்தாலொழிய ஒரு பெண் வீட்டை விட்டு வெளியில் வருவது அத்தனை சுலபம் இல்லை.

அதோடு இத்தனைத் திருட்டுத்தனமாக ஏதோ தவறு செய்து விட்டவன் போல் ரகசியமாக திருமணம் செய்து எனக்கென்ன என்று தோன்றியது. தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தபோது எதிரே மொபெட் மீது டாக்டர் வருவது தென்பட்டது.

என்னைப் பார்த்து வண்டியை நிறுத்திவிட்டு "உங்களைத் தேடித்கொண்டு தான் அவசரமாக வந்துகொண்டிருந்தேன்"

என்றார். விஷயம் என்னவென்று கேட்டேன். எதுவும் சொல்லாமல் க்ளினிக்கிற்கு அழைத்துச் சென்றார்.

அங்கே இன்னொரு டாக்டர் இருந்தார். அவரை அறிமுகப்படுத்திவிட்டுப் "பட்டணத்தில் இவர் கார்டியாலஜிஸ்ட் ஆக இருக்கிறார் என்னுடைய நண்பர். அதிர்ஷ்டவசமாக இன்றைக்கு வந்திருந்தார். உங்களுடைய ரிப்போர்ட்டைப் பார்க்கும் போதே எனக்குச் சந்தேகம் வந்தது. இவரிடம் காண்பித்தேன். நீங்கள் ஒரு முறை பட்டணத்திற்குச் சென்று பெரிய ஆஸ்பத்திரியில் காட்டினால் நல்லது என்று இவர் அபிப்பிராயப்படுகிறார்" என்றார்.

"உங்களுடைய சந்தேகம் என்ன?" என்று கேட்டேன்.

அந்த கார்டியாலிஜிஸ்ட் சங்கடப்படுவது போல் பார்த்துவிட்டுப் "பரிசோதனைகள் செய்து முடித்த பிறகு ஒரு முடிவுக்கு வருவது நல்லது" என்றார்.

"விஷயத்தை என்னால் புரிந்துகொள்ள முடியும். சொல்லுங்கள்" என்றேன்.

"இதயத்தில் சின்ன ஓட்டை இருக்கிறதோ என்று சந்தேகமாக இருக்கிறது" என்றார், எளிமையான மொழியில் எனக்குப் புரியும் விதமாகச் சொல்ல முயன்றபடியே. இந்தப் பட்டிக்காட்டில் இப்படிச் சொன்னால் தவிர புரியாது என்று அவர் நினைத்திருக்கக் கூடும். ஆனால் நானும் அறிவியல் படித்திருக்கிறேன். கார்டியால் டிஸ்ஆர்டரைப்பற்றி என்னால் புரிந்துக்கொள்ள முடியும்.

என் கால்களுக்கு அடியில் நிலம் நழுவியது போல் இருந்தது. அறையில் இருந்த பொருட்கள் வேகமாகச் சுழல்வது போல் தென்பட்டன.

"சின்ன ஆபரேஷன் செய்தால் சரியாகிவிடும். பயப்படத் தேவையில்லை." டாக்டர் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஆகாது என்று எனக்குத் தெரியும்.

10

அன்றிரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. டாக்டர்கள் முழுவதுமாகச் சொல்லாவிட்டாலும் எனக்குத் தெரியும், மரணம் மிகச் சமீபத்தில் காத்திருக்கிறது என்று. எனக்குப் பயம் ஏற்படவில்லை. யாராக இருந்தாலும் கடைசியில் அந்த மரண தேவனிடம் போய்ச் சேர்ந்துதானே ஆக வேண்டும். என் எண்ணங்கள் முழுவதும் பிருந்தாவையே சுற்றி வந்தன பாவம். அந்தப் பெண்ணின் வாழ்க்கையை நான்தான் நாசமாக்கி விட்டேன். ஆசைகளை வளர்த்து விட்டு, கடைசியில் கிள்ளி எறிந்துவிட்டேன்.

ஒரு விஷயத்தில் எனக்குச் சந்தோஷமாக இருந்தது. காதல் என்ற பெயரில் நாங்கள் அவசரப்படவில்லை. அவள் களங்கம் அடைந்து விடவில்லை. இப்பொ நான் செய்ய வேண்டியது ஒன்று தான். உண்மையைப் பிருந்தா ஜீரணித்துக் கொள்ளும் விதமாக நயமாக எடுத்துச் சொல்வதுதான். வேறு யாரையாவது மணந்து கொள்வதற்கு அவளைச் நசம்மதிக்க வைக்க வேண்டும். இது கொஞ்சம் கஷ்டமான காரியம் என்றாலும் அசாத்தியம் மட்டும் இல்லை.

பிருந்தாவின் வீட்டு நிலைமை எனக்குத் தெரியும். அவளைச் சுற்றிலும் கழுகுகள் காத்துக்கொண்டிருக்கின்றன. அவற்றிலிருந்து அவளைத் தப்பிக்க வைத்து, ஒரு இல்லத் தரசியாக்கிவிட்டால் மரணத்திற்கு முன்பு என் வாழ்க்கைக்கு ஒரு முழுமை கிடைத்துவிடும்.

சற்று நேரம் கழித்து, அவளைச் சந்தித்தேன். டாக்டர்கள் சொன்னதை அவளுக்கு விவரமாகத் தெரிவித்தேன்.

முழங்கால்களைக் கட்டிக்கொண்டு தலையைக் குனிந்தபடி நான் சொன்னதை எல்லாம் மௌனமாகக் கேட்டுக்

கொண்டிருந்தாள். அவள் முகத்தில் மாறும் உணர்ச்சிகளை அந்த மங்கலான வெளிச்சத்தில் என்னால் கவனிக்க முடியவில்லை. எல்லாவற்றையும் கேட்டு முடித்தபிறகும் அவள் மௌனமாக இருந்தாள். அந்த நிசப்தத்தைச் சிதறடித்துக் கொண்டே சொன்னேன்.

"பிருந்தா நான் விரும்புவது ஒன்றுதான். நீ வேறு யாரையாவது திருமணம் செய்துகொள்."

அவள் தாழ்ந்த குரலில் "திருமணம் செய்து கொள்கிறேன். வேறு யாரையோ இல்லை உங்களையே" என்றாள்.

அவள் சொன்னது எனக்குப் புரியவில்லை. "என்ன?" என்றேன். அவள் மறுபடியும் அதையே சொன்னாள்.

"நான் அதிக நாள் உயிரோடு இருக்க மாட்டேன் பிருந்தா."

"நானும் அப்படித்தான்."

"நீ என்ன பேசுகிறோம் என்று புரிந்துதான் பேசுகிறாயா?"

அவள் தலையை உயர்த்திச் சொன்னாள். "என் காதல் லைலா, பார்வதி இவர்களைப் போல் உயர்ந்ததாக இல்லாமல் போகலாம். ஆனால் நீங்கள் இல்லாத உலகத்தில் நானும் இருக்கமாட்டேன்."

"ரொம்பச் சின்னக் குழந்தையைப் போல், அறிந்தும் அறியாத வயதில் சினிமாக்களைப்பார்த்து விட்டுப் பேசுகிற பெண்களைப் போல் பேசுகிறாய் நீ."

"நீங்க என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள். என் முடிவு மாறாது."

"கொஞ்சம் பிராக்டிகலாக யோசி."

"பிராக்டிகலாக யோசித்துவிட்டுத்தான் சொல்கிறேன். நீங்கள் மட்டும் என் வாழ்க்கையில் வராமல் இருந்தால், என் தாயும் மாமாவுமாகச் சேர்ந்து என்றோ என் வாழ்க்கையை செல்லாக்

காசாக ஆக்கியிருப்பார்கள். உங்களுடைய நட்புதான் என்னை அவர்களுக்கு எதிரில் தைரியமாக நிற்க வைத்தது. இப்பொ நீங்கள் மறுத்தால் அவர்கள் என்னைச் சீரழிப்பது நிச்சயம்."

"இந்தப் பிரச்சனைக்குத் தீர்வுதான் என்ன?"

'நாம் இந்த ஊரைவிட்டுப் போய்விடுவோம். எனக்கு ஏதாவது சின்ன வேலை கிடைக்காமல் போகாது. முடிந்த வரையில் உங்களுக்கு வைத்தியம் செய்து பார்ப்போம்."

எனக்குச் சிரிப்பு வந்தது. இந்த நோய்க்கு 'முடிந்தவரையில்' என்ற வார்த்தையே தேவையில்லை. ஆபரேஷன் செய்தால் பிழைத்துக்கொள்வேன். இல்லை என்றால் பிழைக்க மாட்டேன். அவ்வளவுதான்.

"நான் ஒன்று செய்கிறேன். கேட்பாயா?"

என்ன என்பது போல் பார்த்தாள் பிருந்தா.

"நீ உங்க வீட்டை விட்டு வெளியேறுவது ரொம்ப முக்கியம். நான் உயிரோடு இருக்கும்போதே இது நடக்க வேண்டும். உனக்கு நல்ல வரன் பார்க்கிறேன்."

இம்முறை அவள் சிரித்தாள். அவள் திருமணம் நடப்பது என் அறுவைச் சிகிச்கைக்குப் பணம் ஏற்பாடு செய்யும் அளவுக்குக் கஷ்டமானது என்று அந்தச் சிரிப்புக்கு அர்த்தம் போலும். எனக்கு உலகத்தின் மீதே எரிச்சலாக இருந்தது. இறப்பு பற்றிய செய்தியால் ஏற்பட்ட எரிச்சல் அல்ல அது. ஒரு நல்ல பெண், கல்வி கற்றவள் தன் குலத்தொழிலிலிருந்து வெளியேறி இல்லத்தரசியாக மாறுவதற்கு இத்தனைத் தடங்கல்களா என்ற வருத்தத்தால் ஏற்பட்ட எரிச்சல் அது. ஒவ்வொன்றுக்கும் பணம் வேண்டும். அவள் விவாகத்திற்கும், என் வைத்தியத்திற்கும். . .

சகலத்திற்கும் பணம்தான் பிரதானம்.

அவள் பிரச்சனையை என்னால் தீர்க்கமுடியாது. என் பிரச்சனையை அவளால் தீர்க்க முடியாது.

காதல் ரொம்ப உயர்வானதென்றும், எத்தனையோ சோதனைகளையும் அது எதிர்த்து நிற்க வல்லது என்றும் வரலாற்று வல்லுனர்கள் நிரூபித்து இருக்கிறார்கள். ஆனால் அது வாஸ்தவத்திற்கு எவ்வளவு மாறானது என்று இப்பொழுது புரிகிறது.

"நான் ஒரு விஷயம் கேட்டால் பதில் சொல்வீர்களா?"

"என்ன பிருந்தா?"

"நாம் நினைத்தாற் போலவே சரியான சமயத்திற்கு அந்தக் கோவிலில் சந்தித்திருந்தோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நம் திருமணம் நடந்து முடிந்திருக்கும். அதற்குப் பிறகுதான் நமக்கு இந்த விஷயம் தெரிந்திருக்கும். அப்படித்தானே?"

"ஆமாம். அதனால்?"

"இப்போகூட அதுபோல் நடந்ததாக நினைத்துக் கொள்வோம். நாமிருவரும் திருமணம் செய்துகொள்வோம்."

"நம் இருவருக்கும் திருமணம் நடப்பது அந்தக் கடவுளுக்கே பிடிக்காமல், என்னைக் கோலிலுக்குத் தாமதமாக வரவழைத்தாரோ என்னவோ?"

அவள் ஏதோ சொல்லவந்தபோது இடைமறித்துவிட்டு "இனி இந்த வாதங்கள் எல்லாம் தேவையில்லாதது பிருந்தா. நடந்தது எதுவோ நம்முடைய நல்லதுக்குத்தான் நடந்தது என்று வைத்துக்கொள்வோம். காதல் தெய்வீகமானதாகவே இருக்கட்டும். அதற்காக சாவதற்கு முன்னால் திருமணம் செய்துகொள்வது அந்தக் காதலுக்கு ஒரு எடுத்துக்காட்டு என்று நினைப்பது முட்டாள்தனம். நாம் இருக்கப்போகும் இந்தச் சொற்ப காலத்திற்குள் உன் வாழ்க்கைக்கு என்ன செய்ய முடியும் என்று என்னை யோசிக்கவிடு." திடமான குரலில் சொன்னேன்.

அவள் எழுந்து நின்று அதே திடமான குரலில் "நான் சொல்வதை நீங்களும் கேட்டுக்கொள்ளுங்கள். என் காதல் மீது உங்களுக்குத் தொடக்கத்திலிருந்தே அவ்வளவாக

நம்பிக்கை இல்லைபோல் தோன்றுகிறது. உங்களைத் தவிர வேறு யாரையும் நான் திருமணம் செய்துகொள்ளமாட்டேன். இந்த உலகமே தலைகீழானாலும் சரி" என்றாள்.

"முட்டாள்தனம் என்றால் இதுதான்."

"நீங்கள் அதற்கு என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

இருளில் நான் மட்டும் தனியாக இருந்தேன்.

அறை முழுவதும் நிசப்தமாக இருந்தது.

எத்தனை நேரம் அப்படி உட்கார்ந்திருந்தேனோ தெரியாது.

கதவு அருகில் சந்தடி கேட்டதும் தலையை உயர்த்திப் பார்த்தேன். தரளாவின் தந்தை!!

"என்ன? இப்படி இருட்டில் உட்கார்ந்து இருக்கிறாய்?" விளக்கைப் போட்டுக்கொண்டே கேட்டார். நான் பதில் சொல்ல வில்லை. அவர் அந்தச் சமயத்தில் வந்தது ரொம்ப வியப்பாக இருந்தது.

அவர் என்னுடைய பதிலுக்காகக் காத்திருக்காமல் "தரளா காவேரியில் குதித்ததிலிருந்து இந்த ஊரில் என்னால் தலை நிமிர்ந்து நடக்க முடியவில்லை. அந்த விஷயம் உனக்கும் தெரிந்திருக்கும்" என்றார் முன்னோடியாய்.

அவர் இந்த ஊரில் எப்படி நடமாடிக் கொண்டிருந்தார் என்று நான் பார்த்ததில்லை. அதனால் அதற்கும் பதில் சொல்லவில்லை.

"இந்தத் திருமணத்தை எப்படி நடத்துவது என்று உள்ளூர நான் கலக்கமடைந்துகொண்டிருந்தேன். என் மகள் கேட்ட எதையுமே நான் இதுவரை மறுத்ததில்லை."

"இதுக்கு முன்பே என்னிடம் இதைப் பற்றிச் சொல்லி விட்டீர்கள்."

"சொன்னேன். ஆனால் அப்போது என்னுடைய தேவைக் காகச் சொன்னேன். இப்போது உனக்காகச் சொல்கிறேன்."

"எனக்காகவா? அதென்னது?"

"இப்பொழுதுதான் டாக்டர் உன்னுடைய இதய நோய் பற்றிச் சொன்னார். மை காட் எவ்வளவு வேகமாகப் பரவி விட்டது இந்த விஷயம்!"

"பார்த்தீங்களா, எவ்வளவு அதிர்ஷ்டசாலி நீங்க? அவசரப்பட்டு இந்தத் திருமணத்தை நடத்தியிருந்தால் மஞ்சள் குங்குமத்தை இழந்த நிலையில் உங்க மகளை நடுவீட்டில் வாழ்நாள் முழுவதும் பார்த்துக்கொண்டே கழிக்கும்படி நேர்ந்திருக்கும்" என்றேன்.

அவர் சிரித்தார்.

அவர் ஏன் சிரிக்கிறார் என்று எனக்குப்புரியவில்லை. அவர் பதில் சொன்னபிறகுதான் புரிந்தது.

அவர் சொன்னார். "இப்போதும் என் நிலைமை இதைவிட உயர்ந்ததாக இல்லை ஆனந்தன். தரளா உன்னைத் தவிர வேறு யாரையுமே பண்ணிக்கொள்ளமாட்டேன் என்று பிடிவாத மாக இருக்கிறாள்."

"என் விஷயம் தெரிந்தபிறகும் கூடவா?" வியப்புடன் கேட்டேன்.

"ஆமாம். தெரிந்த பிறகும்."

வாயடைத்துப்போய்விட்டது போல் வியப்போடு கண்ணிமைக்காமல் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். என்ன பேசுவதென்று புரியவில்லை.

இதயக் கோளாறு உள்ளவன் என்று தெரிந்த பிறகும் தரளா என்னை மணக்கத் தயாராக இருக்கிறாள். இது காதலா? முட்டாள்தனமா? அறியாமையா? பிடிவாதமா?

அந்தப் பெண்ணுக்குத்தான் மூளை இல்லை. இவருடைய அறிவு எங்கே போய்விட்டது?

என் எண்ணத்தை ஊகித்துவிட்டவரைப் போல் அவர் சொன்னார்.

"எல்லாப் பெண்களையும் போல் தரளாவை நான் வளர்க்கவில்லை. அவள் ஏதாவது கேட்டு நான் மறுத்துவிட்டால் அவள் உயிரோடு இருக்கமாட்டாள். செத்தாவது சரி, சாதித்துக் கொண்டு விடுவாள். அவ்வளவு ஏன்? என் விஷயத்தையே எடுத்துக் கொள். எந்தத் தகப்பனாவது இப்படி வருவானா? பிழைப்பானோ இல்லையோ என்று தெரியாத நபரை மருமகனாக வரச்சொல்லி வேண்டுகோள் விடுப்பானா?"

"என்ன பேசுறீங்க நீங்க?"

"என் மகளை மணம் செய்துகொள்ளச் சொல்லிக் கேட்கிறேன். உன் சர்ஜெரி விஷயத்தை என்னிடம் விடு. அமெரிக்காவிலிருந்து டாக்டர்களை வரவழைக்கிறேன்."

"பைபாஸ் சர்ஜெரி என்றால் டான்ஸில்ஸ் ஆபரேஷன் போல் இல்லை. டாக்டர்கள் அமெரிக்காவிலிருந்து வந்தாலும் சரி. ஆப்பிரிக்காவிலிருந்து வந்தாலும் சரி. பிழைக்கும் வாய்ப்பு ஐம்பது பர்சண்ட் தான்."

"அந்த விஷயம் எனக்குத் தெரியும்."

"தெரிந்துமா இப்படி தூது வந்தீங்க? எந்தத் தகப்பனும் தன் மகள் விதவையாவதற்கு ஒப்புக் கொள்ளமாட்டான் என்று நினைக்கிறேன். அந்த வாய்ப்பு சரிபாதியாக இருந்தாலும் சரி."

"இதை எல்லாம் நான் யோசித்துப்பார்க்கவில்லை என்று நினைக்கிறாயா? அவளுக்கு எத்தனையோ விதமாகச் சொல்லிப் பார்த்து விட்டேன். கேட்க மறுக்கிறான்."

"உங்க இடத்தில் நான் இருந்தால் அறையில் தள்ளி சாத்திவிட்டு நான்கு நாட்கள் பட்டினிப்போட்டிருப்பேன். அந்தப் பிடிவாதம் தானாகக் குறைந்து போயிருக்கும்."

"உன் இடத்தில் நான் இருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமா?"- கேட்டார்.

"என்ன செய்திருப்பீங்க?"

"மரணத்தின் விளிம்பில் இருக்கிறான் என்று தெரிந்த பிறகும், திருமணம் செய்துகொள்ளப் பிடிவாதம் பிடிக்கிற பெண்ணை செத்தாலும் கை நழுவ விட்டிருக்க மாட்டேன். அந்த அளவுக்குக் காதலிப்பவர்கள் கிடைப்பது அதிர்ஷ்டம். அசாத்தியம் கூட."

உண்மையாக இருக்கலாம். என் மனதின் ஒரு மூலையில் வியப்பு ஏற்பட்டது. அந்தப் பெண்ணுடையது இன்ஃபாசுயேஷனாக இல்லாமல் உண்மையான காதலாகவே இருந்தால் அதைப் பாராட்ட வேண்டும். அது எனக்கு தேவையற்ற அதிர்ஷ்டமாகவே இருந்தாலும் காதலித்தது மட்டும் அபூர்வமான விஷயம்தான்.

"உங்களுக்கு என்னை விட இருபத்தைந்து வயது அதிகமாக இருக்கலாம். ஒரு கேள்விக்கு உங்கள் அனுபவத்தை வைத்துக் கொண்டு பதில் சொல்லுங்கள்."

"கேள்" என்றார்.

"உயிரோடு இருப்பது முக்கியமா? சந்தோஷமாக வாழ்வது முக்கியமா?" இந்தக் கேள்வியை எதிர்பார்க்காத அவர் வியப்படைந்து விட்டார். ஆனால் பெரிய வியாபாரப் புள்ளி என்பதால் உடனே சமாளித்துக்கொண்டு. "வாழவேண்டும் என்று வாழ்க்கையைத் தொடங்கி விட்ட அதற்கு பிறகு சந்தோஷத்தை எப்படியும் தேடிக்கொள்வான் மனிதன். அதனால் உயிரோடு இருப்பதுதான் முக்கியம்" என்றார்.

"அதனால்தான் உங்களிடமிருந்து இரண்டு லட்சத்தை வாங்கிக்கொண்டு ஆபரேஷனைச் செய்துகொண்டு வாழத் தொடங்கவேண்டும். அதற்குக் கைமாறாக உங்கள் மகளைத் திருமணம் செய்துகொள்ளவேண்டும். உங்களுடைய தியரியின் படி வாழத் தொடங்கிய பிறகு, திருமணம் ஆனதும் எப்படியும் சந்தோஷத்தைத் தேடிக் கொள்வது தவிர்க்க முடியாது. அதனால் நாங்க இருவரும் மகிழ்ச்சியாக இருப்போம்."

"அதேதான். அதேதான்" என்றார் அவர்.

"நான் உங்களிடம் இரண்டு லட்சத்தை வாங்கிக்கொண்டு, ஆபரேஷன் ஆனபிறகு மூட்டைமுடிச்சைக் கட்டிக்கொண்டு போய் விட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய தியரி அப்பொழுது கூடச் சரியாக இருக்கும் இல்லையா?" என்றேன்.

"இங்கிருந்து போன பிறகு சாவகாசமாக மகிழ்ச்சியைத் தேடிக் கொள்கிறேன்."

"ஆனால் உன் ஆபரேஷன் கல்யாணம் முடிந்த பிறகு தானே நடக்கும்?" என்றார். இம்முறை வியப்படைவது என் பங்காயிற்று.

"ஒருக்கால் ஆபரேஷன் தியேட்டரிலேயே நான் இறந்து விட்டால்?" என்று கேட்டேன்.

"என் மகள் விதவையாகி விடுவாள்." சுருக்கமாகச் சொன்னார்.

"நீங்கள் ஒன்று முட்டாளாக இருக்க வேண்டும். இல்லையா, பைத்தியக்காரனாகவாவது இருக்க வேண்டும்" என்றேன். அந்த வார்த்தைகளைக் கேட்டு அவரிடம் நான் எதிர்பார்த்த மாறுதல் எதுவும் தென்படவில்லை. வேதாந்தியைப் போல் "ஆமாம்" என்றார். "தரளாவைப் போன்ற மகள் உள்ள தந்தைக்கு இந்த இரண்டு தகுதிகளுமே சரியாகப் பொருந்தும்."

நான் ஏதோ சொல்லப் போன பொழுது இடைமறித்து அவரே சொன்னார். "இல்லாவிட்டால் என்னைப் போன்ற தந்தையை எங்கேயாவது பார்த்திருக்கிறாயா? என் மகளை விட்டுவிடு. லட்ச ரூபாய் தருகிறேன். இரண்டு லட்சம் தருகிறேன் என்று சொல்லும் தந்தைகளைத்தான் நாவல்களிலும் சினிமாக்களிலும் பார்த்திருப்பாயே தவிர 'என் மகளைப் பண்ணிகொள், இரண்டு லட்சம் செலவு செய்து ஆபரஷேன் வைக்கிறேன் என்று கேட்கும் தந்தையை, என்னை மட்டும் தான் பார்த்திருப்பாய். இதெல்லாம் என்னுடைய தலையெழுத்து."

'உன்னைப் போன்ற அன்னக் காவடியிடம் வந்து மன்றாட வேண்டிய நிலைமை வந்தது என் தலையெழுத்து அல்லாமல் வேறு என்ன?' என்ற அர்த்தம் அவருடைய பேச்சில் தொனித் திருக்கலாம். ஆனால் நான் அதைப் பொருட்படுத்தனில்லை.

எனக்கு இன்னொரு யோசனையும் வந்தது. பணத்தால் எதையுமே வாங்கிவிடலாம் என்ற மமதையுடன் இருக்கும் இந்தத் தந்தை மகளுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்றால் திருமணத்தை செய்துகொண்டு, ஆபரேஷன் ஆனபின் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட வேண்டும் என்று தோன்றியது. ஆனால் அடுத்த நிமிடமே அது போன்ற யோசனை வந்ததற்கு எனக்கே வெட்கமாக இருந்தது.

நான் எழுந்து நின்று கைகளைக் கூப்பிக்கொண்டே "நீங்கள் தந்த வாய்ப்புக்கு ரொம்ப நன்றி" என்றேன்.

"அது சரி. நான் சொன்னது. . . ."

"என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை. மன்னித்து விடுங்கள்."

அவர் உடனே போகவில்லை. "இன்னொரு தடவை யோசித்துப் பார்த்துக் கொள்" என்றார்.

"யோசிப்பதற்கு எதுவும் இல்லை. தரளாவின் தந்தையாக இருந்துகொண்டு நீங்கள் படும் கஷ்டத்தைப் பார்த்த பிறகும், அவளுக்குக் கணவனாகப் பதவியை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. அதைவிட இந்த இதய நோயால் இறந்து போவதே மேல் என்று நினைக்கிறேன்."

அவர் முகம் சிவந்துவிட்டது. "என்னை என்ன வேண்டு மானாலும் சொல்லு. ஆனால் என் மகளை மட்டும் எதுவும் சொல்லாதே. என்னால் தாங்கிக்கொள்ள முடியாது."

"நான் உங்களைவிடச் சிறியவன். ஆனாலும் உங்களுக்கு ஒரு அறிவுரையை வழங்கவேண்டுமென்று நினைக்கிறேன். விருப்பம் இருந்தால் கேட்டுக்கொள்ளுங்கள். குழந்தைகளை

வளர்க்கிற முறை இது இல்லை. இன்றில்லா விட்டால் என்றாவது ஒரு நாள் நீங்கள் பிரச்னையில் மாட்டிக் கொள்வீர்கள், உங்கள் மகள் காரணமாக."

அவர் முகம் மேலும் சிவந்தது. "கேட்காமலேயே மகளைக் கொடுக்க வந்தேன் என்பதற்காக வாய்க்கு வந்தபடி பேசாதே" என்றார்.

"உண்மையைச் சொன்னால் யாருக்கும் கசப்பாகத்தான் இருக்கும்" என்றேன்.

அவர் கோபமாக அங்கிருந்து போய்விட்டார்.

நானும் என்னுடன் என் தனிமையும் மட்டுமே இருந்தாலும். இதயத்தில் மறுபடியும் வலிக்கத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து என் எண்ணங்கள் வேறு பக்கம் திசை திரும்பின. இன்னும் எத்தனை நாட்கள் நான் உயிரோடு இருக்கப் போகிறேன்? டாக்டர்கள் அந்த விஷயத்தைச் சொல்லவில்லை. ஒருக்கால் நாலைந்து மாதங்கள்தானோ என்னவோ. இந்த சொற்ப காலத்திற்குள் பிருந்தாவின் வாழ்க்கையை எப்படி ஒரு வழிக்குக் கொண்டு வரமுடியும்? எதற்குமே பணம் வேண்டும்.

எந்தப் பிரச்சனையை எங்கிருந்து எடுத்துக்கொண்டாலும் அது பணம் என்ற விஷயத்திடம் வந்து நின்று போவது எனக்கு வியப்பாக இருந்தது. கடைசியில் காதல்கூடப் பணத்தால் முடிச்சுப் போடப்பட்டுவிட்டது.

மார்புவலி அதிகரித்தது. தண்ணீர் குடிக்க எழுந்தவன் நினைவு தப்பிக் கீழே விழுந்துவிட்டேன்.

மறுபடியும் எனக்கு நினைவு திரும்பியபோது டாக்டர் என்னைப் பரிசோதித்துக்கொண்டிருந்தார். பக்கத்தில் பிருந்தா இருந்தாள். நான் கண்களைத் திறந்ததைப் பார்த்துவிட்டு டாக்டர் "எப்படி இருக்கு?" என்று கேட்டார்.

"இப்பொழுது கொஞ்சம் தேவலை. திடீரென்று வலிவந்தது. அதற்குப்பிறகு என்ன நடந்தது என்று தெரியவில்லை" என்றேன்.

"மருந்து எதுவும் எழுதித்தரவேண்டிய அவசியம் இல்லை. ஆபரேஷன் செய்தாக வேண்டும் அவ்வளவுதான்" என்றார் டாக்டர்.

"வந்து பார்த்ததற்கு ரொம்ப நன்றி" என்றேன். டாக்டர் கிளம்பிப் போய்விட்டார். இரு கணிதமேதைகள் பேசிக் கொண்டது போல் எங்கள் உரையாடல் ரொம்பச் சுருக்கமாக இருந்தது.

"எவ்வளவு நேரமாச்சு நீ வந்து?" டாக்டர் போன பிறகு பிருந்தாவிடம் கேட்டேன்.

"அரைமணி. நான் வரும் போது நீங்க கீழே நினைவு தப்பிய நிலையில் கிடந்தீங்க. இப்பொ எப்படி இருக்கு?"

"நன்றாகத்தான் இருக்கிறேன். மறுபடியும் உடனே வந்திருக்கிறாயே? என்ன விஷயம்?"

அவள் உடனே பதில் சொல்லாமல், கொஞ்சம் பொறுத்து, தாழ்ந்த குரலில் சொன்னாள். "இப்பத்தான் தரளாவின் தந்தை என்னைச் சந்தித்தார்."

நான் திகைத்துப்போய் விட்டேன். அவர் பெரிய வியாபாரப் புள்ளி என்று தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரத்தில் காய்களை நகர்த்தக் கூடியவர் என்று தெரியாது.

"என்னவாம் விஷயம்?" என்றேன்.

"எப்படியாவது தன் மகளுக்கு இந்த இடம் முடியும் விதமாகச் செய்ய வேண்டும் என்று உன்னிடம் வேண்டுகோள் விடுத்திருப்பார். நான் ஊகித்தது சரி என்றால் நீ இப்போழுது அந்த விஷயத்தைப் பற்றிப் பேசத்தான் வந்திருக்கிறாய். அப்படித்தானே."

"ஆமாம்" என்றாள் தலையைக் குனிந்துகொண்டே.

"காதல் தியாகத்தை விரும்பும் என்றும், காதலின் அர்த்தமே பிரிந்துபோவதுதான் என்றும், உண்மையான காதலுக்குத்

திருமணம் தான் உச்சக்கட்டம் இல்லை என்றும், உன்னை மறந்து போகச் சொல்லியும் தரளாவைத் திருமணம் செய்துகொள் என்றும் கேட்க வந்திருக்கிறாய். அஸ்தமித்துக்கொண்டிருக்கும் சூரியனை நோக்கிப் போய்க்கொண்டே அவர் சார்பில் வக்காலத்து வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாய். சரிதானே."

அவள் தலையை குறுக்காக அசைத்துக்கொண்டே "இல்லை" என்றாள்.

வியப்படைந்தவனாய் "பின்னே?" என்றேன்.

"அவர் ஒரு நல்ல பிரபோசலுடன் வந்தார். தரளாவை மணந்து கொள்வதற்கு உங்களைச் சம்மதிக்க வைத்தால், எனக்குப் பட்டணத்தில் நல்ல வேலை ஏற்பாடு செய்வாராம். அது மட்டுமே இல்லை. என் திருமணத்திற்காக ஐம்பதாயிரம் வங்கியில் போடுவாராம். மேலும் எங்கள் வீட்டார் என் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கமுடியாதபடி வழி பண்ணுவாராம்."

நான் உரத்தக் குரலில் சிரித்தேன். "அசகாய சூரனாக இருப்பான் போலிருக்கே அந்தக் கிழவன். அது சரி. நீ என்ன சொன்னாய்?" என்று கேட்டேன்.

"இந்தப் பிரபோசல் நன்றாகத்தான் இருக்கு. முயற்சிக்கிறேன் என்று சொன்னேன்."

என் முகத்தில் சிரிப்பு மறைந்துவிட்டது. "என்ன?" என்றேன் இரட்டிப்பது போல்.

"சில விஷயங்களைப் பிராக்டிகலாக யோசித்துப் பார்க்கவேண்டும். உணர்வுகள்... கற்பனைகள்... அவற்றுக் கென்ன? அவை எப்போதும் நன்றாகத்தான் இருக்கும். பிரச்சனைகளுக்கு எப்படித் தீர்வு கிடைக்கும் என்பதுதான் முக்கியம். அவர் சொன்ன போது முதலில் நானும் ஆவேசமடைந்தேன். ஆனால் நிதானமாக யோசித்துப் பார்த்தபோது, இதை விடநல்ல தீர்வு என்ன இருக்க முடியும் என்று தோன்றியது. இந்த விதமாக செய்தால் நம் மூவரின் வாழ்க்கையும் நன்றாக இருக்கும்."

"போதும். நிறுத்து" என்று கத்தினேன்.

அவள் தடுமாறவில்லை. எழுந்து நின்றாள். "அவர் சொன்னதில் எந்த தவறும் எனக்குத் தென்படவில்லை. நான் தேவதாசி இனத்தைச் சேர்ந்தவள் என்பதால் ஒருக்கால் அந்த வியாபார குணம் என் ரத்தத்தில் ஊறிப்போய். அவர் சொன்னதில் இருந்த உண்மையைச் சீக்கிரமாக உணரும்படிச் செய்திருக்கலாமோ என்னவோ. நீங்களும் நிதானமாக யோசித்துப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

21906

நான் சிலையாக நின்றுவிட்டேன். என்னைச் சுற்றிலும் இருந்த பொருள்கள் கிர்ரென்று சுழன்று வருவது போல் தோன்றியது.

ஜி.பி.ராவ் சொன்ன கதை

தரளா என்னுடைய ஒரே மகள்.

என்மகள் விரும்பிவிட்டால் மலைமீது இருக்கும் குரங்கு கூட இறங்கி வர வேண்டியதுதான். ஏன் வராது? மலையைச் சுற்றிலும் பத்து ஆட்களை நிற்கவைத்துக் கையில் வலை களைத்தந்து மெல்ல மெல்ல மேலே ஏறச்செய்தால் குரங்கு பிடிபடாமல் எங்கே போய்விடும்? ஒரு ஆளுக்கு பத்து ரூபாய் கூலிபேசி வைத்துக்கொண்டாலும், மொத்த செலவு நூறு ரூபாய் தான் ஆகும். அதாவது நாம் மிகவும் அபூர்வமாகவும், ஆச்சரியமாகவும் சொல்லிக்கொள்ளும் "மலைமீது குரங்கின்" விலை நூறு ரூபாய் மட்டும்தான். யோசித்துப் பாருங்கள். என் பேச்சில் இருக்கும் உண்மை உங்களுக்கே விளங்கும். என் தியரியும் உங்களுக்குப் புரியும்.

உங்களுக்கு இன்னொரு விஷயம் கூடச் சொல்ல வேண்டும்.

என் மகள் என்றால் எனக்கு ரொம்ப செல்லம் இருக்கலாம். ஆனால் அவள் கேட்ட ஒவ்வொன்றையும்

வாங்கித் தருவதற்குக் காரணம் வெறும் செல்லம் மட்டுமே இல்லை.

என்னுடைய அகம்பாவம்தான் காரணம்.

அவள் எவ்வளவு கஷ்டமான ஒன்றைக் கேட்கிறாளோ?, அதைப் பெற்றுத்தருவதில் எனக்கு அவ்வளவு திருப்தி ஏற்படும். சிறுவயதில் யானை பொம்மையைக் கேட்டாள். யானைக் குட்டியை வரவழைத்தேன். அந்தக்காலத்தில் இரண்டாயிரம் ரூபாய் செலவாயிற்று.

"என் காதில் சரியாக விழவில்லையம்மா. யானை பொம்மையா கேட்டாய்? யானைக் குட்டின்னு காதில் விழுந்தது. போகட்டும் திருப்பி அனுப்பிவிடுகிறேன்" என்றேன். அனுப்பி வைப்பதற்கு முன்னூறு ரூபாய் செலவாயிற்று. இரண்டாயிரம் ரூபாயும் திரும்பி வந்துவிட்டது. வராவிட்டாலும் அவ்வளவாக பொருட்படுத்தி இருக்கமாட்டேன்.

காவேரி இரண்டாகப் பிரியும் இடத்தில் நடுவில் அமைந்த தீவு எங்களுடைது. அந்த நாட்களிலேயே மக்கள் தொகை பத்தாயிரத்திற்கு மேல் இருந்தது. முன்னூறு ரூபாய் செலவழித்ததன் மூலம் பத்தாயிரம் பேர் பிரமிப்புடன் மூக்கின் மீது விரலை வைத்துக்கொண்டு, 'மகள் யானைப் பொம்மை யைக் கேட்டால் யானைக் குட்டியையே வரவழைத்துவிட்டார் இந்த கோபாலன்' என்று சொல்லிக் கொள்ளும் படியாகச் செய்வது அத்தனை சாதாரண விஷயம் இல்லை. வெகு நாட்கள் வரை இந்த நிகழ்ச்சியை எங்கள் சுற்று வட்டார கிராமங்களில் கதை கதையாகச் சொல்லிக்கொண்டார்கள்... முன்னூறா ரூபாய் செலவில்.

இப்பொழுது சொல்லுங்கள், நான் சாமர்த்தியசாலியா இல்லையா என்று.

இன்றைக்கும் இந்தக் கிராமத்திற்கு முடி சூடாத மன்னன் நான்தான். இந்தக் கிராமத்தில் எல்லோருக்குமே என்னைக் கண்டால் பயம்... பக்தி. என்னுடைய 'யானை தியரி' என்றுமே

பொய்த்தது இல்லை. இந்த அப்பாவி மக்களின் பார்வையில் அந்த இடத்தை தக்கவைத்துக்கொள்வது எப்படி என்று எனக்கு நன்றாகவே தெரியும்.

அது போன்ற தியரியின் மீது என் மகள் ஒரு உதை கொடுத்துவிட்டாள்.

ஆனந்தன் என்ற வெற்றுப்பயலைக் காதலிப்பதாகச் சொல்லி!

முதலில் எல்லோரையும் போல் இந்த ஆனந்தன் என்ற நபரை எப்படி அப்புறப்படுத்தலாம் என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால் என் மகள் என்னை விடப் புத்திசாலி. நான் ஆனந்தனை ஏதாவது செய்யும் முன்பே, போய் காவேரியில் குதித்துத் தன் காதலை ஊர் முழுவதும் பரப்பிவிட்டாள். விடியும் போதே இந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. எனக்கு முன்னால் நின்று பேசும் துணிச்சல் யாருக்கும் இல்லை என்றாலும் இப்பொழுது ஆனந்தனுக்கு ஏதாவது நடந்தால் அது என்னால்தான் என்று நினைத்துக் கொள்வார்கள். இத்தனை நாளாய் நான் காப்பாற்றி வந்த மதிப்பு மரியாதை எல்லாம் காற்றில் கலந்து விடும்.

'அம்மா தரளா! என் மகள் என்பதை நிரூபித்துவிட்டாய்' என்று நினைத்துக்கொண்டேன். வெளியில் சொல்லவில்லை.

ஆனால் தவறு தரளாவுடையது இல்லை. வயதுக்கு வந்த மகளை வீட்டில் வைத்துக்கொண்டு மதிய நேரங்களில் அவள் எங்கே போகிறாள் என்று கண்காணிக்காமல் போனது அவளுடைய தாயின் தவறு. பட்டணங்களிலாவது பிரைவேட் கிளாசுகள் இருக்கும். எங்கள் ஊரில் காவேரிக்கரைதான் இவர்களுக்கு பிரைவேட் இடமாக இருந்தது என்று எனக்குப் பிற்பாடு தெரிந்தது. இவ்விருவருடன் பிருந்தா என்று இன்னொரு பெண்ணும் இருந்தாளாம். தன்னுடைய காதல் நாடகத்தில் இந்தப்பெண்ணை என் மகள் சேடியைப் போல் பயன்படுத்திக் கொண்டிருக்கிறாள் போலும்.

இந்த ஆனந்தன் என்ற இளைஞனைச் சந்திப்பதற்காகப் போனேன். எல்லா இளைஞர்களையும் போல் "ஆமாம். எங்கள் காதல் உறுதியானது. நாங்கள் இருவரும் லைலா மஜ்னு" என்று சொல்லவில்லை. வேறு சிலரைப் போல் "மன்னித்து விடுங்கள். தவறு நேர்ந்துவிட்டது" என்று நடுங்கவும் இல்லை. "உங்க மகள் தவறாகப் புரிந்துகொண்டு இருக்கிறாள். அவள் மீது எனக்கு அது போன்ற எண்ணம் எதுவும் இல்லை" என்றான்.

எனக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது.

"என் மகளும், நீயும் காதலித்துக்கொள்ளவில்லையா?" என்றேன்.

"இல்லை. நாங்க நட்பு முறையில் சந்தித்து வந்தோம். அவள் என்றுமே என்னிடம் இந்தப் பேச்சை எடுத்ததில்லை" என்றான். அவன் பொய் பேசவில்லை என்று புரிந்துவிட்டது.

எனக்குப் பெருமையாக இருந்தது. என் மகள் எல்லோரையும் போல் இல்லை. தன் விருப்பத்தைப் பற்றி வீட்டிலுள்ள பெரியவர்களிடம்தான் சொல்ல வேண்டும் என்ற இங்கித ஞானம் படைத்தவள்.

அப்பொழுதுதான் அவனைக் கூர்ந்து பார்த்தேன்.

அழகாகத்தான் இருந்தான். கண்களில் ஒரு விதமான உறுதி தென்பட்டது. அதை என்னவென்று சொல்லலாம்? திமிர் என்று சொல்லலாமா?

எனக்கு அவனைச் சீண்டிப் பார்க்கவேண்டும் என்று தோன்றியது. ஆசையைக் காட்டி அழவைப்போம் என்று நினைத்துக்கொண்டே "என் மகளைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன்.

அவன் தலையைக் குனிந்துகொண்டு மென்று விழுங்குவான் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அப்படி எதுவும் செய்யாமல் "நல்ல பெண்தான். ஆனால், திமிர் கொஞ்சம் அதிகம்" என்றான்.

எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டுவந்தது. "அது திமிர் இல்லை. மனத்துணிச்சல்" என்றேன்.

"இரண்டிற்கும் அதிக வித்தியாசம் இல்லை. தன் மீது தனக்கு நம்பிக்கை தனித்தன்மையினால் வந்தால் அதை மனத்துணிச்சல் என்பார்கள். பணத்தால் வந்தால் அதைத் திமிர் என்பார்கள்."

இழுத்துக் கன்னத்தில் ஒரு அறைவிட்டது போல் இருந்தது. இந்த இளைஞன் யாரோ தெரியவில்லை. தமிழை நன்றாகக் கரைத்துக் குடித்திருக்கிறான் போலும். குரங்கைப் பிடிக்கும் தியரி என்னுடையது. சிரித்துவிட்டு, "நான் இப்பொ எதற்காக வந்திருக்கிறேன் என்று நினைக்கிறாய்?" என்று கேட்டேன்.

"பணக்காரப் பெண்ணின் தந்தை எதற்காக வருவார்? என் மகளை மறந்துவிடு. இல்லாவிட்டால் கஷ்டங்களில் சிக்கிக் கொள்வாய் என்று எச்சரிப்பதற்காக வந்திருப்பீங்க."

குரங்கு மலை மேல் ஏறிக்கொண்டிருந்தது. மேலே போகப் போக தப்பித்துக்கொண்டு ஓடிப்போகும் வாய்ப்பு குறைவு என்று பாவம் அதற்குத் தெரியாது. எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. புன்முறுவலுடன் சொன்னேன்.

"அப்படி எதுவும் இல்லை. என் மகள் கேட்ட எதையுமே இல்லை என்று மறுத்ததில்லை. இப்பொழுதுகூட அவளுக்காகத் தான் வந்தேன்." கடைக்கண்ணால் அவனைப் பார்த்துக் கொண்டே கேட்டேன். "சொல்லு. என் மகளைத் திருமணம் செய்துகொள்கிறாயா?"

துள்ளிக் குதிக்கும் முயற்சி எதுவும் அவன் செய்யவில்லை. "சாரி" என்றான் சுருக்கமாக. இவ்வளவு அவமானத்தை நான் என்றுமே அடைந்ததில்லை.

அவனுடைய இடத்தில் வேறு யாராவது இருந்தால் அத்தனைக்கத்தனை பழி வாங்கியிருப்பேன். ஆனால் அவனுடைய தயக்கமற்றத்தன்மை (ஒருக்கால் அது என்

மகளைக் காப்பாற்றக் கூடும் என்பதால்) எனக்குப் பிடித்தது. பணத்தை வேண்டாமென்று சொல்பவர்களும், வாழைப் பழத்தை மறுக்கும் குரங்குகளும் மிகக் குறைவு. குரங்கை மலை மேலிருந்து இறக்கும் முயற்சி எதுவும் செய்யாமல் திரும்பி வந்துவிட்டேன்.

தரளா எனக்காகக் காத்திருந்தாள். ஆனந்தன் என்னிடம் சொன்னதை அப்படியே அவளிடம் சொன்னால் அவள் இதயமே நின்றுவிடும். அடுத்தவன் தன்னை நேசிக்கிறானா இல்லையா என்று கூடத் தெரிந்துகொள்ளாமல் தந்தையைத் தூது அனுப்பும் அளவுக்கு அப்பாவி என் மகள். ஆனந்தன் என்ன சொன்னான் என்று சொன்னால் அவளால் தாங்கிக் கொள்ள முடியாது. இந்த டாபிக் அவர்களுக்கு இடையில் எப்படியும் வரும் என்று எனக்குத் தெரியும். ஆனந்தன் அவளைக் காதலிக்கவில்லை என்ற விஷயத்தை நான் எதற் காகச் சொல்ல வேண்டும்? அவனே சொல்லிக்கொள்ளட்டும்.

நான் ஊகித்தது போலவே ஆனந்தன் தரளாவிடம் அந்த விஷயத்தைச் சொல்லிவிட்டான் போலும். ஆனால் அதற்குப்பிறகு நான் எதிர்பார்க்காத சம்பவம், நிகழ்ந்துவிட்டது. தரளா காவேரியில் குதித்தாள். என் மதிப்பும் மரியாதையும் போய்விட்டன.

ரொம்ப சின்ன விஷயம் என்று நினைத்து பார்த்துக் கொண்டிருந்தபோதே பெரிய பிரச்சனையாகிவிட்டது. இப்பொழுது ஆனந்தன் மட்டும் என் மகளைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொன்னால் விளை யாட்டாக அழைத்து வந்த யானை தோட்டத்தையே மிதித்து நாசமாக்கிய கதையாகி விடும்.

அவன் எனக்கு மருமகனாக வருவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. தரளாவைத் திருமணம் செய்து கொள்பவன் யாராக இருந்தாலும் என் சொத்தைப் பார்த்துத் தான் வருவான் என்று எனக்குத் தெரியும். அப்படியிருக்கும் போது பணத்தையே லட்சியம் செய்யாத ஆனந்தனைப்

போன்றவன் மருமகனாக வந்தால் என்ன ஆட்சேபனை இருக்கப் போகிறது? இது முதல் காரணம். என் மகள் அவனை விரும்புகிறாள். அது இரண்டாவது காரணம். எல்லாவற்றையும் விட முக்கியமான மூன்றாவது காரணம் வேறு ஒன்று இருக்கிறது.

ஆனந்தனைப் போன்ற ஏழைக்கு மகளைத் திருமணம் செய்து கொடுப்பது.

இந்தத் திருமணம் நடந்ததுமே கிராமத்தில் என் புகழ் பட்டித் தொட்டியெல்லாம் பரவிவிடும். புகழுக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்று உங்களுக்குத் தெரியும். அதே போல்தான் மகளுக்காகவும். ஆனால் உடனே நான் ஆனந்தனிடம் மறுபடியும் போகவில்லை. அந்த இளைஞனின் திமிரைப் பற்றி ஏற்கெனவே அனுபவப்பட்டு விட்டேன். இப்பொழுது போனால் முருங்கை மரம் ஏறி உட்கார்ந்து கொள்வான். அவனையே என்னிடம் வரவழைக்கவேண்டும்.

வந்தபிறகு, மாமனாராக வரப்போகிறவரும் தன் அளவுக்கு சாமர்த்திய சாலிதான் என்று அவனுக்குப் புரிய வைக்கவேண்டும்.

எப்படி?

நான் இந்த விதமாக யோசித்துக்கொண்டிருந்தபோது. . .

அதே நேரத்தில் ஆனந்தன் மார்பில் வலி என்று ஆஸ்பத்திரிக்குப் போனது தெரிந்தது.

அப்பொழுது எனக்கு ஒரு யோசனை உதித்தது.

சின்னக் குறும்பு யோசனை.

டாக்டர் எனக்கு வேண்டியவர்தான். நான் எதைச் சொல்லச் சொன்னாலும் அதைச் சொல்லுவார்.

"ஆனந்தன் ஆஸ்பத்திரிக்கு ஏன் வந்தான்?"

"ஏதோ வலி என்று வந்தான்." டாக்டர் பதில் சொன்னார்.

"என்ன சொன்னாய்?"

டாக்டர் தான் சொன்னதைத் தெரிவித்தார். அவர் என்ன சொல்ல வேண்டும் என்பதை நான் டாக்டருக்கு எடுத்துச் சொன்னேன். நான் சொன்னதைக் கேட்டுத் திகைத்துப் போய்விட்டார். பிறகு தர்மசங்கடத்துடன் சிரித்தார். சிரிக்காமல் என்ன செய்வார்?

நான் அவருக்குப் பணம் எதுவும் தரவில்லை. நான் சொன்னதை மறுக்கக்கூடிய தைரியம் அந்த இளம் டாக்டருக்கு இருக்காது என்று எனக்குத் தெரியும். அதிலும் நான் பெரிதாக ஒன்றும் கேட்டுவிடவில்லை. மருத்துவர் என்ற முறையில் சாதாரண வலிக்காக வந்த ஆனந்தனுக்கு இதய நோய் என்றும், பைபாஸ் ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டும் என்றும் அறிவுரை வழங்கச் சொன்னேன்.

அபார்ஷன் செய்யச் சொல்லியோ, கற்பழிப்பு விவகாரத்தை மூடி மறைக்கச் சொல்லியோ கேட்டுவிடவில்லை. அதுகூட, இந்தப் பொய் ஒரு மாத காலத்திற்கு மட்டுமே என்றும் சொன்னேன்.

இத்தனைச் சின்ன உதவியைச் செய்ய அந்த டாக்டருக்கு என்ன ஆட்சேபனை இருக்கமுடியும்? சரி என்பது போல் தலையை அசைத்தார். உடனே வண்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

அதற்குப் பிறகு பார்க்க வேண்டுமே ஆனந்தனின் நிலைமையை.

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தான். அந்தப் பிருந்தா என்ற பெண்ணுடன் நிறைய பேசினான். உயிர் என்றால் யாருக்குமே வெல்லக்கட்டித்தானே. அதன் விலை மட்டும் என் மகளைத் திருமணம் செய்து கொள்வது.

ஆனால் நான் ஆனந்தனிடம் உடனே போகவில்லை. இரும்பை வளைக்க வேண்டும் என்றால் அதைப் பழுக்கக் காய்ச்சவேண்டும். அதனால்தான் சில நாள் பொறுத்திருந்து,

அதற்குப் பிறகு போய் என்னுடைய பிரபோசலை சொன்னேன். அவன் திகைத்துப் போனது வெளிப்படையாகத் தெரிந்தது. ஆமாம் பின்னே "என் மகளைத் திருமணம் செய்து கொள். உன் இதயநோயைக் குணமாக்க வழி செய்கிறேன்" என்று யாருமே சொல்ல மாட்டார்கள். அதிலும் பணக்கார மாமனார். அதான் அவன் என்னை ஒரு பைத்தியக்காரனைப் பார்ப்பது போல் பார்த்தான். அவனுக்கும் மூளை கலங்கிப் போயிருக்க வேண்டும். "நீங்கள் என் இதய நோய்க்கு ஆபரேஷன் செய்ய வைத்த பிறகு நான் உங்கள் மகளைப் பண்ணிக்கொள்ள மறுத்து விட்டால்?" என்றான்.

பரவாயில்லை. எனக்கு இருக்கிற திமிரில் பாதி இவனுக்கு இருப்பது போல் தோன்றுகிறது. எனக்கு ஏற்ற மாப்பிள்ளைதான். சொத்துக்கென்ன வந்தது? நாயை விரட்டுவது போல் விரட்டினால் தானே வந்து சேரும்.

முறுவலித்தேன். "என் மகளோடு உன் திருமணம் நடந்த பிறகுதான் உனக்கு ஆபரேஷன் நடக்கும்" என்றேன். அவனுக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்திருக்க வேண்டும். "நான் ஆபரேஷன் தியேட்டரிலேயே இறந்து போய்விட்டால்?" என்று கேட்டான்.

நான் சொன்ன பதிலைக் கேட்டுவிட்டு, என் மகளை நான் எப்படி வளர்த்திருக்க வேண்டும் என்று லெக்சர் கொடுத்தான். என்னால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடிய வில்லை. இந்த இளைஞன் மீது எனக்கும் ஆர்வம் ஏற்பட்டது. என் மகளின் தேர்வு சரியானதுதான்.

இப்படிப்பட்ட இளைஞர்களை நான் நன்றாக அறிவேன். அவர்கள் மனச்சாட்சியை வஞ்சித்துக்கொள்ள மாட்டார்கள். நேர்மையை விரும்புவார்கள். ஆனால் வாழ்க்கை ஒரு நிலைக்கு வந்த பிறகு வெகு சீக்கிரமாக அதனுடன் சமாதானமாகி விடுவார்கள். நாளைக்குத் திருமணம் ஆனது அவனுக்கு இதயநோய் இல்லை என்று சொன்னால் அவன் அதை எப்படி எடுத்துக்கொள்வான் தெரியுமா? முதலில் எரிந்துவிழுவான்.

தன்னை ஏமாற்றியதற்கு என்னை உலுக்கி எடுப்பான். ஆனால் மனதில் ஏதோ ஒரு மூலையில் சந்தோஷம் கட்டுக்கு அடங்காமல் பொங்கி எழும்பும். மரணம் நெருங்கப் போகிறது என்று பயந்து கொண்டிருந்தவனுக்கு அது வாசல் அருகில் கூட வரவில்லை என்று தெரிவித்தால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்?

இனி குடும்ப விஷயத்தைப் பற்றிக் கேட்கிறீங்களா? அந்த விஷயத்தைத் தரளா பார்த்துக்கொள்வாள். பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல் ஒரு பக்கம் இத்தனை சொத்தோடு மனைவி வருவது, இன்னொரு பக்கம் இதய நோய் இல்லை என்ற நல்ல செய்தி. இதைவிட நல்ல வெகுமதியைத் திருமணத்தின்போது மருமகனுக்கு எந்த மாமனாரால் தரமுடியும்?

அதனால்தான் என் திட்டம் பற்றி நான் மிகவும் நம்பிக்கையோடு இருந்தேன். திருமணம் நடந்து முடிந்துவிட்டால் போதும். எல்லாம் தானே சரியாகிவிடும். என் மகளின் கண்களில் மகிழ்ச்சியைப் பார்க்க வேண்டும். அதுதான் எனக்கு முக்கியம்.

ஆனால் ஆனந்தன் என் பிரபோசலுக்கும் சம்மதிக்க வில்லை.

அதற்கு நான் பயப்படவில்லை. இன்று இல்லாவிட்டால் நாளைக்காவது சம்மதித்துத்தானே ஆக வேண்டும். ஒரு வேளை நாளைக்கும் ஒப்புக்கொள்ளாவிட்டால் என்ன செய்வது?

என்ன செய்வது என்று நான் யோசித்துக்கொண்டிருந்த நேரத்தில் பிருந்தா வந்து என்னைச் சந்தித்தாள்.

அந்தப் பெண் என்னிடம் வந்ததைப் பார்த்து நான் வியப்படைந்துவிட்டேன். தரளாவுக்கும், ஆனந்தனுக்கும் இடையில் இந்தப் பெண் தூதாக இருந்திருக்கிறாள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் நிஷ்டுரமாக, "பார்த்தாயா.

இவ்வளவு தூரத்திற்கு வந்த பிறகு உன் நண்பன் திருமணத்திற்குச் சம்மதிக்க மறுக்கிறான்" என்றேன்.

அவள் தலையை அசைத்துவிட்டு, "அந்த விஷயம் பேசத்தான் வந்திருக்கிறேன். ஆனந்தனின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்றால் அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கு" என்றாள்.

எனக்குச் சிரிப்பு வந்தது. ஆனந்தன் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறான் என்ற செய்தி எல்லோருக்கும் தெரியத் தொடங்கிவிட்டது போலும்.

"அதென்ன வழி?" என்றேன்.

"நீங்க எனக்கு உதவி செய்வதாகச் சொன்னால் தவிர ஆனந்தன் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ளமாட்டான்."

எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. "ஏன் அப்படி?" என்றேன்.

"ஆமாம். உங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கு? சில இளைஞர்கள் அப்படித்தான். தங்களுடைய உயிர் போனாலும் பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால் அடுத்தவனுக்காக எதை வேண்டுமானாலும் செய்வதற்குச் சம்மதிப்பார்கள். ஆனந்தன் அப்படிப்பட்டவர். இந்தத் திருமணத்தின் மூலமாகத்தனக்குச் சொத்து வரும் என்று சொன்னாலும் கேட்டுக்கொள்ளமாட்டார். ஆனால் எனக்கும் ஏதாவது நல்லது நடக்கும் என்றால் சம்மதித்து விடுவார்."

"இப்பொ நான் என்ன செய்யவேண்டும்?

அவள் தலையைக் குனிந்துகொண்டு," சொல்வதற்கு எனக்கு என்னவோ போல் இருக்கு. ஆனால் இந்தத் திருமணம் நடைபெற வேண்டுமானால் சொல்லித்தான் ஆகவேண்டும். நான் எந்த இனத்தில் பிறந்தேன் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். என் வீட்டாரே என் எதிர்காலத்தை நாசமாக்க முயற்சி செய்கிறார்கள். நீங்கள் என் எதிர்காலத்திற்காக ஏதோ ஒரு ஏற்பாடு செய்வதாக ஆனந்தனிடம் சொல்லுங்கள்.

"அதற்குப் பதிலாக இந்தத் திருமணம் நடைபெற வேண்டும் என்று கண்டிஷன் போடுங்கள். அவன் சம்மதிப்பான்" என்றாள்.

''உனக்காக அவ்வளவு தூரம் செய்வானா?'' சந்தேகத்தோடு கேட்டேன்.

அவள் மேலும் தலையைக் குனிந்துகொண்டே "தரளா, நான் ஆனந்த் மூவரும் சினேகிதர்கள். ஒருவருக்காக மற்றவர் என்ன வேண்டுமானாலும்செய்வோம்" என்றாள்.

"பின்னே நான் போய்க் கேட்ட போது ஏன் திருமணத்திற்கு மறுத்துவிட்டான்?"

"அவர்கள் இருவரும் சின்னக் குழந்தைகள் போல் எப்போதும் சண்டை போட்டுக்கொண்டே இருப்பார்கள். ஆனால் ஒருத்தர் மேல் ஒருவருக்கு அன்புதான். ஏதோ பிடிவாதம் பிடிக்கிறானே தவிர ஆனந்தன் கட்டாயம் ஒப்புக்கொள்வான். அதுவும் எனக்காக என்று சொன்னால் மேற்கொண்டு பிடிவாதமாக இருக்கமாட்டான்" என்றாள்.

"அப்படி என்றால் நான் உனக்கு உண்மையிலேயே பணம் தர வேண்டியிருக்குமா, இந்த உதவி செய்வதற்கு?"

அவள் முகம் வாடிவிட்டது. "தேவையில்லை" என்றாள்.

அது போல் கேட்டதற்கு வருந்தினாலும் உடனே சமாளித்துக் கொண்டு "நான் போய் ஆனந்தனிடம் நீ என் மகளைத் திருமணம் செய்துகொண்டால் பிருந்தாவுக்கு உதவி செய்கிறேன் என்று சொன்னால். ரொம்பவும் பேரம் பேசுவது போல் இருக்கும். என்னதான் இருந்தாலும் எதிர்காலத்தில் அவனுக்கு மாமனாராக வரப் போகிறவன் இல்லையா" என்றேன்.

அவள் புரிந்துகொண்டாற் போல் தலை அசைத்துவிட்டு, எழுந்து நின்று "அப்படி என்றால் நானே போய் சொல்கிறேன்.

ஒருக்கால் ஆனந்தன் உங்களைக் கேட்டால் மட்டும் உண்மைதான் என்று சொல்லுங்கள். அதைச் சொல்லத்தான் வந்தேன்." கிளம்ப முற்பட்டவளாய் சொன்னாள்.

"கடைசியாக ஒரு கேள்வி" என்றேன்.

நின்று என்ன என்பது போல் பார்த்தாள்.

"இதெல்லாம் நீ எங்கள் தரளாவுக்காக செய்கிறாயா இல்லை, ஆனந்தன் பணக்காரனாக வேண்டும் என்று செய்கிறாயா? "

அவள் சட்டென்று தலையை உயர்த்தினாள்.

நான் புன்முறுவலுடன் சமாளித்தேன். "அது வந்து.... இருவரும் உனக்கு சினேகிதர்கள்தானே. யாருக்காகச் செய்கிறாய் என்று தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன். திருமணத்திற்காகவா அல்லது சொத்துக்காகவா?"

அவள் போய்க்கொண்டே பதிலளித்தாள் "ஆனந்தனின் உயிருக்காக."

நான் சிலையாக நின்றுவிட்டேன். கண்ணுக்குத் தெரியாத கை ஒன்று நீண்டு வந்து என் கன்னத்தில் பளாரென்று அறைந்தாற் போல் இருந்தது.

ஆனால் உடனே சந்தோஷமாகவும் இருந்தது. நட்பு என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்.

இதெல்லாம் நான் ஆடிய நாடகம்தான் என்றும், ஆனந்தனுக்கு எந்த இதய நோயும் இல்லையென்று நான் வெளிப்படுத்தியதும், இந்த மூன்று நண்பர்களும் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் என்று நினைத்துப் பார்க்கும்போது என்னை நானே பாராட்டிக்கொள்ள வேண்டும் போல் இருந்தது.

11

மேலும் இரண்டு நாட்கள் சென்றன. நானும், பிருந்தாவும் பேசி வைத்துக்கொண்டது போல் இந்நேரம் அந்தப் பெண் ஆனந்தனிடம் நாங்கள் பேசிக்கொண்டதைச் சொல்லியிருப்பாள். அதற்குப் பிறகு ஆனந்தன் என்னிடம் வருவான் என்று நான் எதிர்பார்த்தேன். நான் ஊகித்தது போலவே ஆனந்தன் என்னிடம் வந்தான்.

"தரளாவைத் திருமணம் செய்து கொள்ள எனக்குச் சம்மதம்தான். முகூர்த்தம் பாருங்கள்." சுருக்கமாகச் சொன்னான்.

"சந்தோஷமாகத்தான் சொல்கிறாயா? வேறு வழியில்லை என்பதால் சொல்கிறாயா?" ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே கேட்டேன். என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. வெற்றி கைக்கெட்டும் தூரத்தில் வந்துவிட்டது என்று தெரிந்ததும் ஏற்படும் பெருமிதம் கலந்த சந்தோஷம் அது.

"நான் எப்படிச் சொன்னால் என்ன? அதைப் பற்றி இப்பொ பேசத் தேவையில்லை."

நான் அடியுண்டவனாகி, உடனே தேறிக்கொண்டு, "இந்த விஷயத்தை நீயே சுயமாகத் தரளாவிடம் சொல்லு. சந்தோஷப்படுவாள்" என்றேன்.

"நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். மற்றதை நீங்க உங்க மகளிடம் சொல்லிக்கொள்ளுங்கள்" என்றான், சற்று எரிச்சல் கலந்த குரலில்.

எனக்கு உண்மையிலேயே கோபம் வந்துவிட்டது. "இதோ பார். கேள்வி கேட்கிறவனுக்குப் பதில் சொல்பவன் தாழ்வு

என்பார்கள். நானே வலிய வந்து என் மகளைத் திருமணம் செய்து கொள் என்று கேட்டேன் என்பதற்காக உன்னை நீயே உயர்வாக நினைத்துக்கொண்டு முருங்கை மரம் ஏறி உட்கார்ந்து கொண்டால் நடக்காது. அதுபோன்ற நினைப்பு ஏதாவது இருந்தால் இப்போதே சொல்லிவிடு. எப்படியோ என் மகளை நான் சமாதானபடுத்திக் கொள்கிறேன். அவ்வளவு தானே தவிர கல்யாணம் ஆன பிறகும் இதேபோல் பற்று இல்லாமல் இருந்தால் நடக்காது."

அவன் முகம் வாடிவிட்டது. "அதான் திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லிவிட்டேன்" என்றான். போகப் போனவன் நின்று "பிருந்தா என்னிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள்" என்றான்.

என்ன சொன்னாள் என்று தெரிந்துகொள்ள வேண்டும் போல் இருந்தாலும், நானே வெளிப்பட்டு விட்டால் நன்றாக இருக்காது என்று நினைத்து மௌனமாக இருந்துவிட்டேன்.

அவன் போய்விட்டான்.

நான் வெற்றியைச் சாதித்துவிட்டது உண்மைதான் என்றாலும், ஏனோ எனக்கு அது சந்தோஷத்தைத் தரவில்லை. தரளாவிடம் முகூர்த்தம் குறிக்கப் போவதைப் பற்றிச் சொன்னேன். அவள் கண்களில் தென்பட்ட மகிழ்ச்சி என் பதற்றத்தை எல்லாம் போக்கடித்துவிட்டது. அதான் சொன்னேனே, என் பலவீனங்களைப் பற்றி. ஒன்று புகழ்... இரண்டாவது என் மகள்.

அதற்குப் பிறகு மற்ற வேலைகள் எல்லாம் மளமளவென்று நடந்து முடிந்துவிட்டன. அழைப்பிதழ்கள்கூட அச்சாகிவிட்டன. ஆனந்தனின் சார்பில் யாருமே இல்லை. அதனால் எல்லா வேலைகளையும் நான் ஒருத்தனாகவே செய்து முடிக்க வேண்டியதாயிற்று.

தரளா காவேரியில் குதித்த விஷயம் ஊர் முழுவதும் தெரியும். அதனால் இந்தத் திருமணம் யாருக்கும் அவ்வளவாக

வியப்பை ஏற்படுத்தவில்லை. ஓரிருவர் மட்டும் என்னிடமிருந்து நன்மதிப்பைப் பெற வேண்டும் என்பதற்காக 'எவ்வளவு தைரியம் அவனுக்கு? உங்கள் மகள் வாழ்க்கையுடன் விளையாடுவானா? அவனை ஒரு கை பார்த்துவிடச் சொல்றீங்களா?' என்று சொன்னார்களே தவிர, நான் இந்தத் திருமணத்திற்கு எதிரி இல்லை என்று தெரிந்ததும், உடனே 'ஆனந்தனுக்கு என்ன? தங்கமான பையன்' என்று ப்ளேட்டைத் திருப்பிவிட்டார்கள். இந்தப் பட்டிக்காட்டு மக்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா என்ன?

அழைப்பிதழ்களை எடுத்துக்கொண்டு ஆனந்தனிடம் போனேன்.

உள்ளே பிருந்தாவின் குரல் கேட்டது. அதில் என்னுடைய பெயர் அடிப்பட்டதைக் கேட்டு வெளியிலேயே நின்றுவிட்டேன்.

"மறுபடியும் என்னை எதற்காக அழைக்கச் செய்தாய்?" பிருந்தா ஆனந்தனிடம் கேட்டுக்கொண்டிருந்தாள்.

எனக்கு அந்த வார்த்தைகள் வியப்பை அளித்தன. அம்மூவரும் நண்பர்கள்தானே? பின்னே கூப்பிட்டு அனுப்புவது ஏன்?

"ராவ் சாரிடம் போய்த் தரளாவைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லி விட்டேன்'' ஆனந்தன் சொன்னான்.

"நல்லது."

"ஒருக்கால் உனக்குச் சந்தோஷமாக இருக்கலாம். இனி உன் நல்லது கெட்டதை எல்லாம் அவரே பார்த்துக்கொள்வார், உங்களுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி."

அவளிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

"என்ன? பதிலையே காணும்?"

"என்ன சொல்லட்டும்?"

"உனக்குச் சந்தோஷம்தானே?"

"ஆமாம். எதிர்காலம் நன்றாக இருக்கும் என்பதால் சந்தோஷம்தான்."

''யாருடைய எதிர்காலம்? உன்னுடையதா? என்னுடையதா?"

அவளிடமிருந்து பதில் எதுவும் இல்லை. மேலும் ஆனந்தனே சொன்னான். "ரொம்ப நன்றாக நாடகமாடி இருக்கிறாய். ஆனால் ராவ் சார் எல்லாவற்றையும் சொல்லி விட்டார்."

வெளியில் நின்று கேட்டுக்கொண்டிருந்த நான் திடுக்கிட்டேன். உள்ளே பிருந்தாவின் நிலைகூட அதே போலத்தான் இருந்திருக்கும்.

"என்ன சொன்னார்?" பிருந்தா கேட்டாள்.

"உங்க இருவருக்கும் இடையில் நடந்த உரையாடலை. அதாவது நீ என்னிடம் சொன்னது இல்லை. உண்மையில் என்ன நடந்ததோ அதை. ஏன் இப்படிச் செய்தாய் பிருந்தா?"

அவள் பதில் சொல்லும் முன் உள்ளே போக வேண்டும் என்ற என் ஆர்வத்தை அரும்பாடுபட்டு அடக்கிக்கொண்டேன். உள்ளே போவதா வேண்டாமா என்று நான் குழம்பிக் கொண்டிருந்தபோதே பிருந்தா சொன்ன பதில் காதில் விழுந்தது.

"உனக்காகத்தான்."

"எனக்காக இவ்வளவு பெரிய பொய்யைச் சொன்னாயா? தரளாவின் தந்தை உன்னிடம் வந்து என்னை விவாகத்திற்குச் சம்மதிக்கச் செய்தால் உன் எதிர்காலத்தைத்தான் பார்த்துக் கொள்வதாகச் சொன்னாரா? அவர் மட்டும் உண்மை விஷயத்தைச் சொல்லியிருக்காவிட்டால் எனக்கு என்றுமே உன் மீது சந்தேகம் வந்திருக்காது தெரியுமா?"

வெளியிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த எனக்கு வியர்த்துக் கொட்டியது. இனி நான் உள்ளே போகக் கூட வழியில்லை.

"நான்தான் சொன்னேன் ஆனந்தன்" என்றாள் பிருந்தா. "குறைந்தபட்சம் அப்படிச் சொன்னாலாவது நீ இந்தத் திருமணத்திற்கு ஒப்புக்கொள்வாய் என்றுதான்."

"ஏன்? அவ்வளவு அவசியம் என்ன வந்துவிட்டது?"

அவளிடமிருந்து பதில் இல்லை. ஆனந்தனே சொன்னான். "பத்து நாட்களுக்கு முன்னால் நீ ஒரு வார்த்தை சொன்னாய் நினைவு இருக்கிறதா? அந்த இதயவலி மட்டும் கோவிலில் நம்முடைய திருமணம் நடந்த பிறகு வந்திருந்தால் என்னவாகி இருக்கும் என்று? அப்படிச் சொன்ன நீதானா இப்பொழுது இப்படிப் பேசுகிறாய்?"

அதற்கு அவள் என்ன பதில் சொன்னாள் என்று எனக்குச் சரியாக கேட்கவில்லை. ரொம்பவும் தாழ்ந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தாள் போலும். ஆனால் அதைக் கேட்கும் எண்ணம் கூட எனக்கு இருக்கவில்லை.

ஆனந்தனின் பேச்சைக் கேட்ட பிறகு எனக்கு மூளை கலங்கி விட்டது போலிருந்தது. நான் சற்றும் எதிர்பாராத, எனக்குத் தெரியாத புதுத் திருப்பம்.

கோவிலில் திருமணம்!

அபபடி என்றால்?

ஆனந்தனும், பிருந்தாவும் காதலித்து வந்தார்களா? திருமணம் கூட செய்து கொள்வதாக இருந்தார்களா?

என் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போல் இருந்தது. ஆனந்தன் இத்தனை நாளாக இந்தத் திருமணத்திற்கு ஏன் உடன்படவில்லை என்றும் புரிந்தது. என் கையிலிருந்த அழைப் பிதழ்கள் என்னைப் பார்த்து ஏளனம் புரிவது போல் தோன்றியது.

உள்ளே பிருந்தா சொல்லிக்கொண்டிருந்தாள். "உனக்கு மனைவியான பிறகு ஏழ்மையினால் உன்னைக் காப்பாற்றிக் கொள்ளமுடியாமல், விதைவையானாலும் உன்னுடைய எண்ணங்களிலேயே வாழ்நாள் முழுவதும் திருப்தியாக வாழ்ந்து விடுவேன் ஆனந்த். ஆனால் உன்னை மணந்துகொள்ளாமல் இருந்தால் கிடைக்கப்போகும் பணம் உன் உயிரைக் காப்பாற்றும் என்று தெரிந்த பிறகும் என்னால் இந்தத் திருமணத்தை எப்படிச் செய்து கொள்ள முடியும்? என்னைப் புரிந்துகொள்."

புரிந்துவிட்டது.

எனக்கு மட்டுமே இல்லை. உள்ளே இருந்த ஆனந்தனுக்கும் புரிந்திருக்க வேண்டும். கண்களைப் பறிக்கும் ஒளியைப் பார்த்த மனிதன் தன்னையறியாமல் கண்களை மூடிக்கொள்வது போல் அவள் சொன்னது புரிந்தாலும், மனம் மரத்துப் போய்விட்டது.

அந்த நிமிடமே உள்ளே போய் நான் சொன்ன பொய்யைப் பற்றி அவர்களிடம் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்தேன்.

ஆனால் கையிலிருந்த அழைப்பிதழ்கள் என்னைத் தடுத்து விட்டன.

உங்கள் கண்களுக்கு நான் ஒரு அரக்கன் போல் தோன்றலாம். அதான் சொன்னேனே. நான் வாழ்க்கையில் மதிப்பு தருவது இரண்டே இரண்டு விஷயங்கள்தான்.

ஒன்று என் மகள், மற்றது என் மதிப்பு. நீங்க என்ன நினைத்துக்கொண்டாலும் சரி. அதை என்னால் பலி கொடுக்க முடியாது.

இவ்வளவு நடந்த பிறகு, ஊரில் எல்லோருக்கும் அழைப்பிதழ்கள் கொடுத்தாகி விட்ட பிறகு இனி இந்தத்

திருமணம் நின்றுவிட்டால் என் மதிப்பும், மரியாதையும் என்ன ஆவது?

திரும்பி வந்துவிட்டேன், ஆனால் வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்த போது இனம் புரியாத வேதனை ஏதோ என் மனதைத் துளைத்தெடுத்துக்கொண்டே இருந்தது. ஆனால் என்னால் மட்டும் என்ன செய்ய முடியும்?

இது நடந்த பத்து நாட்களுக்குப் பிறகு ஆனந்தன், தரளாவின் திருமணம் நடந்து முடிந்தது.

பிருந்தாவே அருகில் இருந்துகொண்டு திருமண வேலைகளை எல்லாம் செய்தது என்னை மேலும் சங்கடத்தில் ஆழ்த்தியது. அந்தப் பெண்ணின் முகத்தில் எந்த உணர்ச்சியும் எனக்குத் தென்படவில்லை. எங்க ஊரில் உள்ள காவேரி நதிகூட இதே போலத்தான். மேடு பள்ளங்களை, சுழல்களைத் தன் வயிற்றில் மறைத்து வைத்துக்கொண்டு மேலுக்குக் கம்பீரமாகத் தென்படும்

அந்தப் பெண்ணின் காதல் விஷயம் தெரிந்த மூன்றாம் நபர் ஒருத்தன்தானோ? காதல் மீது எனக்கு உயர்வான அபிப்பிராயம் இருந்தது இல்லை. ஆனால் என்னுடைய கணிப்புகளை எல்லாம் தலைகீழாக்கி விட்டாள் இந்தப் பெண். காதலித்தவனைக் காப்பாற்றுவதற்காக தன் எதிர்காலத்தையே பணயமாக வைத்து விட்டாள். எனக்குத் தெரியாத புதிய உலகம் இது. நான் பார்த்த உலகத்தில் கிராம அரசியல், பகை, துவேஷம், வெற்றி தோல்வி... இவைகளே தவிர காதலோ, தியாகமோ இருந்தது இல்லை. நான் சொன்ன பொய் பல இரவுகள் என்னைத் துன்புறுத்தி வந்தது.ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை முடிக்கச் சொல்லி பெரியவர்களே சொல்லியிருக்கிறார்கள் என்று நினைத்து மனதைச் சமாதானப்படுத்திக்கொள்வேன்.

என் மகள் பிருந்தாவிடம் விளையாட்டாகப் பேசியது என் காதில் விழாமல் இல்லை. பிருந்தா அவளுக்கு மருதாணி இட்டு

விடும்போது "அடியே பிருந்தா! பார்த்தாயா. காவேரியில் நான் விட்ட படகு தான் முதல் இடத்தில் இருந்தது. அதான் என் கல்யாணம் உனக்கு முன்னால் நடக்கிறது." என்ற போது மட்டும் அவர்களுக்கு முன்னால் போய் நின்று எல்லா வற்றையும் சொல்லி விட வேண்டும் என்று தோன்றியது. ஆனால் அப்பொழுதுகூட சுயமதிப்புப் பற்றிய பயம் குறுக்கிட்டு விட்டது. அப்பொழுது திருமணத்திற்கு இரண்டே நாட்கள்தான் இருந்தன.

ஆனந்தனின் இதய நோய் பற்றிய விஷயம் தெரிந்தவர்கள் நால்வர்தான். டாக்டர், பிருந்தா, ஆனந்தன் மற்றும் நான்.

திருமணம் முடிந்த அடுத்த நாளே முதலிரவுக்கான முகூர்த்தம் குறிக்கப்பட்டது. அன்று மாலையில் பிருந்தா என்னிடம் வந்தாள்.

"ஆனந்தனின் உடல் நிலை இப்படி இருக்கும் போது இப்பொ எதுக்கு மாமா இந்த பங்ஷன் எல்லாம்? உடம்பு குணமான பிறகு வைத்துக்கொள்ளலாமே" என்றாள்.

அப்பொழுதுதான் எனக்கு நினைவு வந்தது.

திருமணம்தான் முடிந்துவிட்டதே. இனி டாக்டரைக் கொண்டு உண்மை விஷயத்தைச் சொல்ல வைக்கவேண்டும்.

"பரவாயில்லைம்மா...நான் டாக்டரிடம் கன்சல்ட் செய்து விட்டேன்" என்று அந்தப் பெண்ணை அனுப்பிவிட்டு டாக்டருக்குத் தகவல் அனுப்பினேன். மறுநாள் காலையில் அவர் வந்தார். அறைக்குள் அழைத்துச் சென்று அவர் என்ன சொல்ல வேண்டும் என்று சொல்லித் தந்தேன். ஆனந்தனை மறுபடியும் பரிசோதித்து விட்டு (முடிந்தால் பட்டணத்திலிருந்து பெரிய டாக்டரைக்கூட இன்னொரு தடவை வரவழைத்து) பைபாஸ் சர்ஜரி தேவையில்லை என்றும், மாத்திரை, மருந்து சாப்பிட்டாலே குணமாகிவிடும் என்றும் அவர் சொல்ல வேண்டும்.

டாக்டர் தலையை அசைத்தார்.

"ஆனந்தனுக்குக் கொஞ்சம்கூடச் சந்தேகம் வரக் கூடாது. முதலில் பைபாஸ் ஆபரேஷன் தேவை என்றுதான் இருந்தது. இப்பொழுது தானே சரியாகிவிட்டது என்று சொல்ல வேண்டும். புரிந்ததா?"

"நான் பார்த்துக்கொள்கிறேன் சார். எல்லோரும் சந்தோஷப்படக் கூடிய நல்ல செய்தியை எப்படி அறிவிக்கப் போகிறேன் என்று நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார் அந்த இளம் டாக்டர். பரவாயில்லை, முன்னுக்கு வந்து விடுவான். நாங்கள் மேலும் இரண்டு நிமிடங்கள் பேசிவிட்டு அறையை விட்டு வெளியேற நினைக்கும்போது தடாலென்ற சத்தத்துடன் கதவு திறந்துகொண்டது. வாசற்பக்கம் திரும்பிப் பார்த்தவன் பாம்பைக் கண்டு விட்டது போல் அப்படியே நின்றுவிட்டான்.

மாடியிலிருந்து எப்பொழுது வந்தானோ, எவ்வளவு நேரமாகக் கேட்டுகொண்டிருந்தானோ தெரியாது. ஆனந்தன் அங்கே நின்று கொண்டிருந்தான். அவன் முகம் சிவந்து கன்றியிருந்தது. இறுக்கமாக மூடிய உள்ளங்கைகளும், நடுங்கும் கரங்களும் அவன் ஆவேசத்தை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன. ஆத்திரமும், ஆவேசமும் நன்றாகச் சேர அவனுடைய உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

ஆனந்தன் சொன்ன கதை

திரும்பிப் போவதற்கு நான் சாமன்களை எதையும் மூட்டைக் கட்டவில்லை. திருமணத்திற்காக எடுத்து வந்த பெட்டி, உடைகளை கூட திருப்பி எடுத்துக்கொண்டு போகும் முயற்சி எதுவும் செய்யவில்லை.

ரொம்ப சாதாரணமாக என் அறைக்கு வந்துவிட்டேன். நான் அவ்வாறு கிளம்பி வந்தது அவர்கள் வீட்டில்,

திருமணத்திற்கு வந்திருக்கும் உறவினர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ என்று எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்த வரை இந்தத் திருமணம் நடக்கவில்லை. அவ்வளவுதான்! ரொம்ப அமைதியாக, நிதானமாக என் அறைக்குத் திரும்பி வந்துவிட்டேன்.

எனக்கு எந்த விதமான இதயநோய் இல்லையென்றும், இந்தத் திருமணத்திற்காகப் போட்ட திட்டம் என்றும் அறையினுள் அவருக்கும், டாக்டருக்கும் நடுவில் நடந்த உரையாடல் மூலமாகத் தெரிந்து கொண்ட அடுத்த நிமிடமே நான் அரக்கனாக மாறி விட்டேன். தடாலென்று கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த என்னைப் பார்த்து அவர்கள் விக்கித்துப் போய் விட்டார்கள். டாக்டரின் முகத்தில் பயம் தெளிவாகத் தெரிந்தது. அவர் ஏதோ சொல்ல வருவதற்கு முன் என் கை வேகமாகப் போய் அவருடைய முகவாயைத் தாக்கிற்று. ஒருக்கால் பற்கள் ஆடிப் போயிருக்கக் கூடும். குறுக்கே வந்த தரளாவின் தந்தையையும் அதே வேகத்தில் தாக்கப்போனேன். ஆனால் அவர் வயது என்னைத் தடுத்துவிட்டது. அறையை விட்டு வேகமாக வெளியே வந்தேன்.

என் ஆவேசம் இன்னும் கட்டுக்குள் அடங்கவில்லை. அதே வேகத்தில் மாடிக்குப் போனேன். தரளா இன்னும் உறங்கிக் கொண்டுதான் இருந்தாள். என் கோபம் எல்லை மீறி விட்டது. முதலிரவு முடிந்து, விடிந்த பிறகு கூட இவ்வளவு நேரமாக தூங்கிக் கொண்டிருந்த அவளுடைய சுபாவம், நினைத்ததை எப்படியாவது சாதிக்க வேண்டும் என்ற பிடிவாதம், என்னை ஒரு முட்டாளாக்கி விட்டது. போன்ற உணர்ச்சி... எல்லாமாகச் சேர்ந்ததன் விளைவு....

"என்ன ஆச்சு? ஏன் அப்படி இருக்கீங்க?" அப்பொழுது தான் விழித்துக்கொண்ட தரளா கேட்டாள். கேள்வி இன்னும் முடியக் கூட இல்லை. அவள் கன்னத்தில் பளாரென்று அறை விழுந்தது. மல்லிகைப் பூக்கள் அறை முழுவதும் சிதறின. ராட்சசி! உன்னால்தான் இத்தனையும், என் ஆத்திரம்,

ஆவேசம் எல்லாம் தொண்டைக் குழியிலேயே அடைப்பட்டுப் போய்விட்டன.

தரளா அப்படியே சிலையாக நின்றுவிட்டாள். எனக்கும், பிருந்தாவின் எதிர்காலத்திற்கும் அவள் செய்த துரோகத்தை, நாங்க இருவரும் கண்ட கனவுகளை அவள் நிர்மூல மாக்கியதைச் சொல்லி விடவேண்டும் என்று நாக்கின் நுனிவரையில் வந்த வார்த்தைகளைக் கட்டுப்படுத்தினேன்.

"ச்சீ....ச்சீ இவளிடம் போய்ச் சொல்வதாவது?" என்று தோன்றவே வெறுப்புடன் கீழே வந்துவிட்டேன். அது மட்டுமே காரணம் இல்லை. இவர்கள் எதற்கும் துணிந்தவர்கள். எனக்கும், பிருந்தாவுக்கும் இடையில் உள்ள காதலைப் பற்றி இவர்களுக்கு தெரிந்தால் அது பிருந்தாவின் உயிருக்கே ஆபத்தாக முடியலாம்.

அந்த நிமிடம் தரளா என் மனைவி என்ற விஷயத்தைக் கூட மறந்து போய்விட்டேன். இவளும், இவள் தந்தையும் என் எதிரிகள். அவ்வளவுதான். அந்த ஒரு எண்ணம்தான் என் மனம் முழுவதும் நிரம்பியிருந்தது.

இவர்களால் மனிதர்களை விலை கொடுத்து வாங்கி விட முடியும். பணத்தாலோ அல்லது மிரட்டியோ அதுவும் முடியா விட்டால் இப்பொழுது செய்தது போல் ஏதாவது திட்டம் போட்டோ நினைத்ததைச் சாதித்துக்கொள்வார்கள்.

அவர்களுடைய முகத்தைப் பார்க்கக்கூட அருவருப்பாக இருந்தது.

அதான் என் அறைக்கு வந்துவிட்டேன். இத்தனைக்கும் காரணம் பிருந்தா! என் கைகளைக் கட்டிப்போட்டு விட்டு இந்தத் திருமணத்திற்கு இணங்கச் செய்துவிட்டாள். தியாகம் என்ற பெயரில் தேவையில்லாமல் என்னை இந்தப் புதை மணலுக்குள் தள்ளிவிட்டாள்.

நான் அறைக்கு வந்த ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு தரளாவின் தந்தை வந்தார்.

திறமை மிகுந்த நடிகர் அவர். பல நாட்கள் பட்டினிக் கிடந்தவரைப் போல் முகத்தை வைத்துக்கொண்டார். வந்ததுமே என் கைகளைப் பிடித்துக்கொண்டு "மாப்பிள்ளை தவறு முழுவதும் என்னுடையது, என்னை மன்னித்து விடு" என்றார்.

என்னை நான் கட்டுப்படுத்திக்கொள்ள பெரும் முயற்சி செய்ய வேண்டியிருந்தது. "இதோ பாருங்க நடந்தது ஏதோ நடந்து விட்டது. உங்க மகளுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. நீங்க பெரிய மிராசுதாரர் என்றும், இந்த ஊரிலேயே உங்களுக்குச் செல்வாக்கு அதிகம் என்றும் எனக்குத் தெரியும். ஆனால் உங்களால் என்ன செய்ய முடியும் என்று நானும் பார்த்து விடுகிறேன். நீங்களும், உங்க மகளும் சேர்ந்து போட்ட இந்த மிகப் பெரிய திட்டத்திற்கு நான் உங்கள் மகளுக்குத் தரும் தண்டனை இது தான். முதலிரவு முடிந்த பிறகு கணவனால் கைவிடப்பட்ட பெண்ணாக வாழ்நாள் முழுவதும் கழிக்கட்டும். ஏன் கை விட்டான் என்பதற்குக் காரணம் என்ன சொல்லிக் கொள்வீர்களோ, உங்கள் விருப்பம். இனி நீங்கள் போகலாம்."

"நான் இந்த நாடகம் நடத்தியது தரளாவுக்குத் தெரியாது."

"என்ன சொல்றீங்க நீங்க?"

"ஆமாம் ஆனந்தன். தரளாவை இதில் சேர்க்காதே இதில் ஏதாவது தவறு இருந்தால், அது என்னுடையது மட்டும்தான். தரளா அப்பாவிப் பெண். அவள் உன்னை உயிருக்கும் மேலாக நேசிக்கிறாள். அதனால்தான் நான் டாக்டரிடம் அப்படிச் சொல்லச் சொன்னேன்."

தரளாவுக்கு இந்தத் திட்டத்தில் பங்கு இல்லை என்ற விஷயம் என்னுள் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. ஆனால் உடனே தேறிக்கொண்டேன். "இப்பொழுது பிரச்னை தரளாவுக்கு இதில் பங்கு இருக்கா இல்லையா என்பதைப் பற்றி இல்லை. நாசமாகி விட்ட என் வாழ்க்கையைப் பற்றி."

"நான்தான் சொல்லிவிட்டேனே. நீங்க என்ன சொன்னாலும் சரி. இனி நான் உங்கள் வீட்டு வாசற்படியை மிதிக்கமாட்டேன். உங்க மகளிடம் என்ன சொல்வீங்களோ உங்க இஷ்டம். இதில் அவளுடைய தவறு இல்லாமல் இருக்கலாம். ஆனால் எந்தத் தவறும் செய்யாமலேயே சிலர் தண்டனையை அனுபவிப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்குள் நான் முதல் நபராக இருந்தால் உங்க மகள் இரண்டாவது என்று நினைத்து திருப்திப்பட்டுக் கொள்ளுங்கள்."

"அப்படி என்றால் இதில் உன்னுடைய தவறு எதுவும் இல்லை என்கிறாயா?"

இந்த முறையில் திகைத்துப்போவது என் பங்காயிற்று. என் தவறா? "என் தவறு என்ன இருக்கு இதில்?"

"நீயும், பிருந்தாவும் காதலித்துக்கொண்ட விஷயம் என் மகளுக்குச் சொல்லாமல் மறைத்தது."

"இது உங்களுக்கு .... உங்களுக்கு எப்படித் தெரியும்?" தடுமாறிக் கொண்டே கேட்டேன்.

அவர் பதிலளிக்காமல் "உங்க இருவருக்கும் இடையே இருந்த காதல் விஷயத்தை உங்களுடன் சேர்ந்து சுற்றிக் கொண்டே இருந்தும் கூட என் மகளால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. அவ்வளவு அப்பாவிப் பெண் அவள். அப்படிப்பட்டவளிடம் உங்க விஷயத்தை ஏன் சொல்லவில்லை? போகட்டும். சொல்ல வேண்டிய தேவை உங்களுக்கு இல்லை என்றே வைத்துக் கொள்வோம். குறைந்த பட்சம் உங்களைத் திருமணம் செய்துகொள்ளப் போவதாக அவள் சொன்ன போதாவது நீ இந்த விஷயத்தைச் சொல்லியிருக்கவேண்டாமா? அந்த இடத்தில் உயிர்தான் முக்கியம் என்று உனக்குத் தோன்றிவிட்டதா? நான் இப்படி பேசுவதற்காகக் கோபம் கொள்ளாதே. என் இடத்தில் இருந்து யோசித்துப் பாரு. இந்த விதமாக நானும் வாதம் செய்யலாம் இல்லையா. உனக்கு இதயநோய். அதைக் குணப்படுத்துவது என்பது நம்

இருவருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம். பிருந்தாவிடம் உனக்கு உண்மையிலேயே அன்பு இருக்கும் பட்சத்தில் நீ தரளாவிடம் எல்லா விஷயங்களையும் சொல்லியிருப்பாய். ஏன் சொல்லவில்லை?"

அவர் பேசப் பேச என் ஆவேசம் அதிகரித்துக் கொண்டிருந்தது. அவர் என் உணர்ச்சிகளைப் பொருட்படுத்தாமல் மேலும் சொன்னார்.

"அதனால் உனக்கு ஏதாவது கோபம் இருந்தால் என் மேல் தீர்த்துக்கொள் ஆனந்தன். தரளா மேல் வேண்டாம். இனி பிருந்தாவின் விஷயம் என்கிறாயா...அதை..."

அவர் வார்த்தைகளை முடிப்பதற்கு முன் "போதும் நிறுத்துங்கள்" என்று கத்தி விட்டேன். "உங்களுக்குத் தெரியுமா? நான் இந்தக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்குக் காரணம் பிருந்தாதான். நான் உயிரோடு இருந்தால் போதும் என்று நினைத்து விட்டாள். எனக்காகத் தன் எதிர்காலத்தைப் பலி கொடுத்துவிட்டாள். தரளாவைத் திருமணம் செய்துகொள்ளச் சொல்லிச் சத்தியம் வாங்கிக்கொண்டாள்."

"எனக்குத் தெரியும்" என்றார் அவர். "அதற்குக் கைமாறாக பிருந்தாவின் எதிர்காலத்தை நீ கனவில்கூட ஊகித்திராத அளவிற்கு உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருகிறேன். அதை என்னிடம் விட்டு விடு."

மெள்ள மெள்ளமாக நான் வாதத்தில் தோற்றுக் கொண்டிருப்பது எனக்குப் புரிந்தது.

ஆனால் என் வாதத்தில் இருந்த குறைதான் எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் இவருடன் வாதம் புரிய வேண்டிய அவசியம் எனக்கென்ன இருக்கு? அதையே அவரிடம் சொல்லி, அவர் மேலும் ஏதோ சொல்ல முயன்றபோது வெளியில் தள்ளிக் கதவைச் சாத்திவிட்டேன்.

பிறகு நான் செய்ய வேண்டியதைப் பற்றி யோசிக்கத் தொடங்கினேன். முதலில் இந்த ஊரை விட்டுப் போய்விட வேண்டும்.

பிருந்தாவையும் அழைத்துக்கொண்டு.

அவ்வளவுதான்.

தரளாவுக்கும், அவள் தந்தைக்கும் புத்தி புகட்ட வேண்டும் என்றால் இங்கிருந்து போய்விட வேண்டும். போவதற்கு முன் இந்தக் கிராமத்தில் எல்லோரிடமும் அவர் ஆடிய நாடகத்தைப் பற்றிச் சொல்லிவிட வேண்டும். மணமான அடுத்த நாளே மகளை விட்டு விட்டு மருமகன் கிளம்பிப் போய் விட்டான் என்றால் அதை விட அவமானம் வேறு என்ன வேண்டும்? எனக்குச் செய்த மோசடிக்கு இதுதான் சரியான பதில்.

ஆனால் நான் உடனே பிருந்தாவிடம் போகவில்லை. அதற்கு முன்னால் செய்ய வேண்டிய வேலை ஒன்று இருக்கிறது.

தரளாவின் தந்தை லேசுப்பட்ட ஆள் இல்லை. மகளுக்கு விவாகரத்துத் தராமல் இரண்டாம் திருமணம் செய்து கொண்டால் என்னை ஜெயிலில் தள்ளாமல் இருக்கமாட்டார். விஷயம் அவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டால் எதற்கும் துணிந்து விடுவார்.

அவருடைய ஆர்க்யுமெண்டைப் பார்த்தாலே எனக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. எவ்வளவு சுலபமாகத் தவறை முழுவதையும் என் மீது தள்ளிவிட்டார். நான் போய் அவர் மகளிடம் எங்கள் காதல் விஷயத்தைப் பற்றிச் சொல்லியிருக்க வேண்டுமாம். சொல்லியிருந்தால் என்ன செய்திருப்பாள்? எங்க இருவருக்கும் திருமணம் நடத்தி, மருத்துவச் செலவுக்காக இரண்டு லட்சம் தந்திருப்பாளா? நாடகம் ஆடியது அவர். நிம்மதியாக, மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய எங்கள் வாழ்க்கையில் மிகத் தந்திரமாகத் திட்டத்தைப் போட்டு நெருப்பை அள்ளிக்கொட்டியது

அவர்தான். அந்தனைக்கும் பழிவாங்காமல் போனால் என்னால் உறங்க முடியாது.

மறுநாளே பட்டணத்திற்குப் போய் அங்கே ரயிலைப் பிடித்துப் பெங்களூருக்குப் போனேன். அங்கே என் நண்பன் ஒருவன் இருந்தான். அவன் வேலை பார்த்துக்கொண்டிருந்தது கூட உரக் கம்பெனிதான். அங்கே எனக்கு வேலை கிடைப்பது அவ்வளவு கஷ்டமாக இருக்கவில்லை. என்னுடைய எண்ணம் என்னவென்றால் நாங்கள் கிளம்பிப் போன மூன்று நான்கு வருடங்கள் வரையில் நாங்க எங்கே இருக்கிறோம் என்று தந்தைக்கும் மகளுக்கும் தெரியக்கூடாது. குழப்பத்தாலும், அவமானத்தாலும் கிடந்து சாக வேண்டும்.

உங்கள் கண்களுக்கு நான் கயவனாகவும், அரக்கன் போலவும் தென்படலாம். ஆனால் நான் உங்களை வேண்டுவது ஒன்றுதான். என்னுடைய இடத்திலிருந்து, யோசித்துப் பாருங்கள். இவ்வளவு கொடுமை, உங்களுக்கே நிகழ்ந்து, உங்களுக்கு மட்டும் தைரியம் இருந்திருந்தால் அந்த இடத்திலேயே அவரைக் கத்தியால் குத்திக்கொன்று இருப்பீர்கள். அது இல்லாமல்தான் இந்த விதமாக விலகி, தொலைவாகப் போய்க் கொண்டிருக்கிறேன். இத்தனை நடந்த பிறகும் அவரை ஒருமையில் விளிக்க என்னால் முடியவில்லை.

பெங்களூருக்கு வருவதற்கு முன்பே கிராமத்தில் நான் பார்த்து வந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு எந்த வில்லங்கமும் இல்லாமல் பார்த்துக் கொண்டேன். இந்த வேலைகளை எல்லாம் ரொம்ப அமைதியாக, எந்த விதமான பதற்றமும் இல்லாமல் செய்து முடித்தேன்.

என்னுடன் வருவதற்கு பிருந்தா சம்மதிக்க மாட்டாள் என்று எனக்குத் தெரியும். தரளாவின் தந்தை சொன்ன தர்க்கத்தை நம்புவது என்று தீர்மானித்தேன். அதாவது காயம்தான் மனிதனுக்குச் சூழ்நிலையோடு சமாதானம் செய்துகொள்ளக் கற்றுத்தரும்.

எப்படியாவது பிருந்தாவை அந்தக் கிராமத்திலிருந்து வெளியே அழைத்து வந்துவிட்டால் பிறகு திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்துவிடலாம். நானே போய்க் கேட்டால் சினேகிதிக்குத் துரோகம் செய்ய முடியாது என்று நிச்சயமாக மறுத்துவிடுவாள். அதனால் கடிதம் எழுதினேன்.

பிருந்தா....

அவசரமான வேலை இருந்ததால், பட்டணத்திற்கு வர வேண்டியிருந்தது. இங்கே என் நண்பன் ஒருவனைச் சந்தித்தேன். அவனுடைய ஆபீசில் ஒருவேலை காலியாக இருக்கிறதாம். நான் கேட்டதும் அந்த வேலையை உனக்குத் தருவதற்கு ஒப்புக்கொண்டு விட்டான். உடனே வந்தால் அந்த வேலை கிடைக்கும். இக்கடிதத்தை எடுத்துக்கொண்டு வருபவனும் என்னுடைய மற்றொரு நண்பன்தான். அவனுடன் சேர்ந்து வந்தால் வேலையில் உடனே சேர்ந்துவிடலாம்.

பிருந்தா! நம் வாழ்க்கை எப்படியும் ஒன்று சேரவில்லை. குறைந்தபட்சம் இந்த உதவியாவது என்னைச் செய்யவிடு. உன் வாழ்க்கைக்கு ஒருவழி ஏற்பட்டால் தவிர என்மனம் நிம்மதி அடையாது.

உன்
ஆனந்தன்.

மற்றொரு முறை அக்கடிதத்தை படித்துப் பார்த்தேன். இந்தக் கடிதத்தைப் பார்த்தால் பிருந்தா நிச்சயமாக வருவாள் என்று தோன்றியது. அந்தக் கிராமத்திலிருந்து, அந்த வீட்டிலிருந்து சீக்கிரமாக வெளியேற வேண்டும் என்று அவள் தவித்துக் கொண்டிருந்தது எனக்குத் தெரியும்.

'உன்னை இந்த வேலையில் சேர்த்துவிட்டு நான் கிராமத்திற்குப் போய் விடுகிறேன். அதனால் இந்த விஷயத்தை நீ தரளாவிடமோ, அவள் தந்தையிடமோ சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நம் கிராமத்தைப் பற்றி உனக்குத்

தெரியாதது என்ன இருக்கு? நான் உனக்கு இந்த உதவி செய்ததாகத் தெரிந்தால் ஒன்றிற்கு இரண்டாகக் கற்பனை செய்து பேசுவார்கள். பிறகு அந்த ஊரில் என் வாழ்க்கை நரகமாகிவிடும்.'

பின் குறிப்பு போல் இந்த வாக்கியங்களைச் சேர்த்த பிறகு இன்னும் கொஞ்சம் திருப்தியாக இருந்தது. பிருந்தா நிச்சயம் வருவாள்.

கடிதத்தை நண்பனிடம் கொடுத்து அனுப்பினேன். பிருந்தாவின் முகவரியை விவரமாகச் சொன்னேன்.

அதற்குப் பிறகு ஒருநாள் முழுவதும் அளவுக்கு மீறிய பதற்றத்தை அனுபவித்தேன். மனம் பற்பலவிதமாக யோசிக்கத் தொடங்கியது. எல்லாவற்றையும் விட முக்கியமான பிரச்னை பிருந்தாவை இந்தத் திருமணத்திற்கும், என்னுடன் சேர்த்து இருப்பதற்கு எப்படிச் சம்மதிக்க வைப்பது? மற்ற எல்லா விஷயங்களில் ஒன்றாக இருந்தாலும், சமுதாயக் கட்டுப் பாடுகள், நெறிமுறைகள் என்று வரும்போது எங்களுடைய அபிப்பிராயங்கள் மாறுபட்டு இருக்கும்.

இப்பொழுது நடந்த நிகழ்ச்சியையே எடுத்துக் கொண்டால்....

அவர்கள் என்னை ஏமாற்றிவிட்டார்கள். அதற்குப் பதில் சொல்லத் துப்பு இல்லாதவன் போல், கைகளைக் கட்டிக் கொண்டு என்னால் குடித்தனம் செய்ய முடியாது. நடந்ததேதோ நடந்துவிட்டது என்று நினைக்கவும் என்னால் முடியாது. அத்தனைக்கும் பழிவாங்க வேண்டும். எல்லாவற்றையும்விட முக்கியமாக என் சுகத்திற்கும், மகிழ்ச்சிக்கும் அணைக்கட்டுப் போடும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை என்று நிரூபிக்கிறேன். அதுதான் என் வாதம்.

ஆனால் பிருந்தா இந்த வாதனையை ஒப்புக்கொள்ள மாட்டாள் என்று எனக்குத் தெரியும். "உங்களுக்குள் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். ஆனால் நடுவில்

தரளாவுக்கு அநியாயம் செய்துவிடாதீர்கள்" என்று சொல்வாள். மற்றவர்களின் சுகத்துக்காகத் தன்னுடைய சுகத்தைவிட்டுக் கொடுப்பதில்தான் மகிழ்ச்சி இருக்கிறதென்று நம்பும் அப்பாவி இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு எடுத்துக்காட்டு பிருந்தா. அவளை என்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு சம்மதிக்க வைப்பது எளிதான காரியம் இல்லை. ஆனால் உலகத்தையே எதிர்க்க வேண்டியதுவந்தாலும் சரி இதைச் சாதித்துத் தீருவேன். இப்படிப்பட்ட யோசனைகளுடன் ஒருநாள் கழிந்தது.

எனக்குப் புரியவில்லை. பட்டணத்திலிருந்து நான்கு மணி நேரம் லாஞ்சில் பயணம் செய்தால் அந்தக் கிராமத்தை அடைந்துவிடலாம். என் நண்பன் இன்னும் ஏன் வரவில்லை?

இன்னொரு நாள் கழிந்தது. என் நண்பன் வரவில்லை. எனக்குப் பரபரப்பு அதிகமாகிவிட்டது. மேலும் கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு நானே புறப்பட்டேன்.

கிராமத்தை அடையும்போது இருட்டிவிட்டது. அன்று அமாவாசை. இருட்டில் என்னை யாரும் அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை. இல்லாவிட்டால் ஜி.பி.ராவின் மருமகனாகப் புதிதாக வந்து சேர்ந்த அந்தஸ்திற்கு, இந்நேரத்திற்கு நான் வந்த செய்தி எல்லோருக்கும் தெரிந்துவிட்டிருக்கும். ஜி.பி.ராவின் சாமர்த்தியத்தை குறைவாக எடைபோடக் கூடாது. திருமண மான அடுத்த நாளே ஏதோ வேலையாக மருமகன் வெளியூர் சென்றிருப்பதாக எல்லோருக்கும் சொல்லியிருக்கக் கூடும்.

அந்த யோசனைகளுடனேயே பிருந்தாவின் வீட்டை நோக்கி நடந்து போய்க்கொண்டிருந்தேன். தெருமுனையில் திரும்பியதுமே அந்த வீடு தென்பட்டது.

சட்டென்று என் கால்கள் நின்றுவிட்டன.

அந்த வீட்டின் முன்னால் பந்தல் போடப்பட்டிருந்தது.

கல்யாணப் பந்தல்!

12

எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. என் மூளை இயங்க மறுத்துவிட்டது. நான் சற்றும் எதிர்பாராத விஷயம் அது.

என் மனதில் இன்னும் ஏதோ இனம் புரியாத ஆசை ஒட்டிக் கொண்டிருந்தது. மேலும் இரண்டடிகள் எடுத்து வைத்தேன். என் மானனார் திரு. ஜி.பி.ராவ் தலைமை வகிக்கும் பெரிய மனிதராக அங்கே அமர்ந்திருந்தார். அப்பொழுதுதான் உள்ளே இருந்து பிருந்தாவின் மாமா புத்தாடைகளை அணிந்த நிலையில், திருமணக் கோலத்தில் வெளியில் வந்தான். என் மனதில் எந்த மூலையிலேயோ ஒட்டிக்கொண்டிருந்த ஆசை கொஞ்சம் கொஞ்சமாக நசிந்துகொண்டிருந்தது. அந்தப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்த சிறுவனை அழைத்து, யாருடைய கல்யாணம் நடந்தது?" என்று கேட்டேன்.

"அதோ... அந்த வீட்டில்தான்."

"அது தெரிகிறது. கல்யாணப் பெண் யாரு?"

"பிருந்தா அக்கா" என்று சொல்லிவிட்டு அவன் ஓடிப்போய் விட்டான். நான் அப்படியே நின்றுவிட்டேன்.

நாம் அதுவரையில் ஊகித்து வந்ததுதான் நடந்தாலும், அது நடந்தது என்று தெரியும்போது ஏற்படும் வேதனையும், பதற்றமும் வேறு. ஆனால் அந்த இரண்டையும்விட தீவிரமாக என்னைப் பாதித்தது, ஜி.பி.ராவ் அந்தப் பந்தலுக்கு நடுவில் உட்கார்ந்து கொண்டு ஊர்வம்பு பேசிக்கொண்டிருந்த காட்சி!

சிரித்துக்கொண்டே என் கழுத்தை எப்படி அறுத்துவிட்டார்! எவ்வளவு சாமர்த்தியமாக என்னைச் சுற்றிலும் வலையைப்

பின்னி, எல்லா வழிகளையும் அடைத்துவிட்டார்? நினைத்துப் பார்க்கும்போதே என் தேகம் பதை பதைத்தது.

அந்த நிமிடமே ஓடிப் போய் அந்தப் பந்தலை எல்லாம் பிய்த்துப் போட்டுவிட்டு, பிருந்தாவை என்னோடு அழைத்து வந்துவிட வேண்டும் என்ற விருப்பத்தை வலுக்கட்டாயமாக அடக்கிக்கொண்டேன். அது இல்லை வழி. நான் அப்படிச் செய்யக் கூடும் என்று எதிர்பார்த்துதான் உடனடியாக பிருந்தாவின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார். இப்பொழுது நான் எது செய்தாலும் அது என்னை ஜெயில் கம்பி எண்ணும்படியாகச் செய்துவிடும். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட மோசமான வழிகள் மூலமாக என்னைக் கட்டிப் போட்டுவிட முடியாது என்பதை நிரூபிக்க வேண்டும். அப்படிப்பட்ட திட்டத்தை யோசிப்பதற்குக் கொஞ்சம் அவகாசம் தேவை.

எல்லாவற்றையும் விட முதலில் பிருந்தாவைச் சந்தித்து என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ள வேண்டும். அவளை எந்தவிதமாக வற்புறுத்தி இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தார்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால் அவளை எப்படிச் சந்திப்பது என்றுதான் எனக்குப் புரியவில்லை. அதற்குள் என்னுடன் பேசிய சிறுவன் மறுபடியும் அந்தப் பக்கமாக வந்தான். சின்னத்துண்டு காகிதத்தில் அவசர அவசரமாக எழுதி அவன் மூலமாக அனுப்பினேன். ஐந்து நிமிடங்களுக்குள் காவேரிக் கரைக்கு வந்து என்னைச் சந்திக்கச் சொல்லி எழுதியிருந்தேன். சாதாரணமாக எழுதினால் அவள் வரமாட்டாள் என்று தெரியும். அதுவும் அப்பொழுதுதான் அவளுக்குத் திருமணம் முடிந்திருந்தது. அதனால் கடைசியில் ஒரு வரியை சேர்த்தேன். ஐந்து நிமிடங்களில் அவள் வரவில்லை என்றால் காவேரியில் என்னுடைய பிணம் மிதக்கும் என்று. இதை அவளைப் பயமுறுத்துவதற்காக மட்டுமே சேர்க்கவில்லை. இந்தக் கிழவன் ஆடிய நாடகத்தில் ஒரு பகடைக்காயாக பயன்படுத்தப்பட்டு கழுத்தில் கட்டப்பட்ட

தாலிக்குதான் பிருந்தா அதிக மதிப்புக் கொடுப்பவளாக இருந்தால் எனக்கு வாழ்க்கையில் இனி எஞ்சியது எதுவுமே இல்லை. என் மரணத்தின் மூலமாக அவன் மகளைச் சாகுவதமாக விதவையாக்கிவிட்டு, அந்தக் கிழவனுக்கு என்றுமே மறக்க முடியாத அளவுக்கு பாடம் கற்பிக்க வேண்டும். வேறு எந்த வழியாலும் முடியாவிட்டால் இதுதான் கடைசி வழி என்று நினைத்துக்கொண்டேன்.

சீட்டை பையனிடம் கொடுத்து அனுப்பிவிட்டு நான் காவேரிக் கரையைநோக்கி நடந்தேன்.

காவேரி வேகமாக சுழித்து ஓடிக்கொண்டிருந்தது.

அதைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது எனக்கு அந்த தந்தையும், மகளும்தான் நினைவுக்கு வந்தார்கள். இந்தக் காவேரியும் அதேபோல்தான். எதையும் பொருட்படுத்தாது. நினைத்ததை சாதித்துக்கொள்ளும் சுபாவம். குறுக்கே வந்தவர் களை மூழ்கடித்துவிடும் குணம். சாதாரணமாக இருக்கும்போது மேலுக்கு நிர்மலமாகத் தென்படும்.

அந்த ஐந்து நிமிடங்களும் என் முடிவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அதோடு இந்த முடிவு ஆவேசத்தில் எடுத்துக் கொண்டது அல்ல. அவ்விருவரும் எனக்கு ஏற்படுத்திய மனத்துன்பத்திற்கு இரண்டு மடங்காக நானும் அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

அப்படியும் என் மனதில் ஏதோ ஒரு கோடியில் கொஞ்சம் ஆசை இருந்தது. பிருந்தா வருவாள் என்று. வந்தால் மட்டும் என்னுடன் அழைத்துக் கொண்டு போய்விட முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. எந்தச் சமுதாயக் கோட்பாடுகளும், நெறிமுறைகளும் எங்களைத் தடுக்க முடியாது.

பிருந்தா வரவில்லை.

ஐந்து... ஆறு... ஏழு நிமிடங்கள் கழிந்தன.

மேலும் நாலைந்து நிமிடங்கள் காத்திருந்தேன். மனிதனுக்கு செண்டிமெண்டுகள் இருப்பதில் தவறு இல்லை. இருந்துதான் ஆக வேண்டும். ஆனால் அர்த்தமற்றவைகளைப் பிடித்துக்கொண்டு தொங்குவதில் எனக்கு உடன்பாடு இல்லை. எனக்கு மனித இனத்தின் மீதே வெறுப்பு ஏற்படத் தொடங்கியது.

கரையில் இருந்த நாணல் புற்களைத் தொட்டுக்கொண்டே காவேரி ஓடிக் கொண்டிருந்தது. இன்னொரு நிமிடம் தாமதித்து இருந்தால் என் உடல் அதில் அடித்துக்கொண்டு போயிருக்கும்.

அப்பொழுதுதான் பார்த்தேன் அந்த உருவத்தை!

வேகமாக என்னை நோக்கி வந்துகொண்டிருந்தது. அந்த நடையில் அவசரம் தென்பட்டது.

என் மனதில் இருந்த ஆசைத் தீ திடீரென்று எழும்பி அதற்குள்ளேயே அணைந்துவிட்டது.

வந்துகொண்டிருந்தது பிருந்தா இல்லை. என்னுடைய மாமனார்.

எதிர்பாராத விதமாக அவரை அங்கே பார்த்ததில் திகைத்துவிட்டேன்.

ஆனால் அது ஒரு வினாடி நேரம்தான்.

அதுவரையில் என் மனதில் மறைந்திருந்த பகையும், வெறுப்பும் இருமடங்காகி, திடீரென்று வெளியேறியது. இவன்தான். இவன்...தான். இ...வ...ன்...தா...ன்!

சுற்று வட்டாரத்தில் யாருமே இல்லை. அப்படியே காவேரியில் தள்ளிவிட்டால் சாட்சியம்கூட இருக்கப் போவதில்லை.

"ஆனந்தன்! உன்னை இரண்டு நாட்களாகத் தேடாத இடம் பாக்கி இல்லை" என்று சொல்லியவாறே என்னை நோக்கி வந்து கொண்டிருந்தவரை ஒன்றும் செய்துவிடாமல், என்னை

நான் கட்டுப்படுத்திக்கொள்ளப் பெரும் முயற்சி செய்ய வேண்டியிருந்தது.

"அதிர்ஷ்டம் நன்றாக இருப்பதால் அந்தச் சிறுவனிடம் நீ கொடுத்தனுப்பிய கடிதம் என் கையில் கிடைத்தது. வேறு யார் கையிலாவது கிடைத்திருந்தால் குடி மூழ்கிப் போயிருக்கும்."

அவரை அருவருப்புடன் பார்த்துக்கொண்டே "என்ன நடந்திருக்கும்? உங்க மருமகன் இப்படிப்பட்டவன் என்று எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அப்படிப்பட்ட மருமகனுக்காக நீங்க போட்ட கீழ்த்தரமான திட்டங்கள் வெட்ட வெளிச்சமாகி இருக்கும். அவ்வளவுதானே" என்றேன்.

"இங்கே வேண்டாம் தம்பி. வீட்டிற்குப் போய்ப் பேசிக் கொள்வோம் வா."

"உங்க வீட்டுக்கா? இனி செத்தாலும் உங்கள் வீட்டு வாசற்படியை மிதிக்க மாட்டேன்."

"அப்படிச் சொல்லாதே ஆனந்தன். எந்தத் தவறு நடந்திருந்தாலும் அது என்னுடையதுதான்."

"இதே வார்த்தையை இரண்டு நாட்களுக்கு முன்னால் சொன்னீங்க. அதற்குப் பிறகு இன்றைக்கு உங்கள் கையாலேயே இன்னொரு கல்யாணத்தைச் செய்து வைத்து அதைவிட மோசமான தவறை செய்து இருக்கீங்க."

"எது? பிருந்தாவின் கல்யாணத்தைத் தானே சொல்கிறாய். அதைப்பற்றித்தான் பேசுகிறேன். கொஞ்சம் பொறுமையாகக் கேட்டுக்கொள்."

"நான் எதையும் கேட்கவிரும்பவில்லை. என் கோபத்தை தூண்டிவிடாதீர்கள்." உரத்தக் குரலில் கத்திவிட்டேன்.

அவ்விதமாக எங்க இருவருக்கும் இடையில் வாத விவாதங்கள் வெகுநேரம் நடந்தன. காவேரி வழக்கம் போல் பாய்ந்துகொண்டே இருந்தது. எங்கள் பேச்சைக்

கேட்டுக்கொண்டிருந்தது. பிழைக்கத் தெரிந்த நடுவரைப் போல் யாருடையது நியாயம் என்று சொல்லாமலேயே இருந்துவிட்டது.

சாதாரணமாக இருந்தால் அவரிடம் அதுபோல் எதிரில் நின்றுகொண்டு பேசுவதற்கே எல்லோரும் பயப்படுவார்கள். ஆனால் எனக்கென்ன பயம்?

"இதோ பாருங்கள். நானாக இருப்பதால் இன்னும் உங்களுக்கு மதிப்புக் கொடுத்துப் பேசிக்கொண்டிருக்கிறேன். வேறு யாராவதாக இருந்தால் நீங்க செய்த காரியங்களுக்கு முகத்தின் மீதே காறித்துப்பி இருப்பார்கள். உங்க சுய நலத்திற்காக எனக்கு அநியாயம் செய்தது இருக்கட்டும். ஆனால் பாவம் அந்த பிருந்தா என்ன செய்தாள்? அந்தப் பெண்ணை ஒரு கிழ ரௌடிக்குத் தந்து மணம் முடிக்க வேண்டிய அவசியம் உங்களுக்கு ஏன் வந்தது?"

"அதைச் சொல்லத்தான்..."

அவர் பேச்சைக் காதில் போட்டுக்கொள்ளாமல் கத்தினேன். "என்ன சொல்லப் போறீங்க? எனக்கு இதயநோய் என்று பொய் சொன்ன டாக்டருக்கு எவ்வளவு கொடுத்தீங்க என்று சொல்லுவீங்களா? உங்க மகளுடன் சேர்ந்து இருந்தால் எனக்கு எவ்வளவு சொத்து வருமோ அந்த விவரங்களைச் சொல்லுவீங்களா? பிருந்தாவின் கல்யாணத்தை வலுக் கட்டாயமாக நடத்தி வைப்பதற்கு ரௌடிகளுக்கு எவ்வளவு கொடுத்தீங்கன்னு சொல்லுவீங்களா? இவை எதுவும் தேவையில்லை. ஆனால் நான் ஒரு யோசனை சொல்கிறேன். கேட்டுக்கொள்ளுங்கள். உங்கள் மான மரியாதைகள் போகாமல் இருக்கும். நான் யார் கண்ணிலும் படாமல் எங்கேயாவது போய் விடுகிறேன். உங்க மருமகன் காவேரியில் விழுந்து செத்துவிட்டதாக அறிவித்துவிட்டு உங்க மகளை விதவையாக்கி விடுங்கள். பிறகு பரந்தமனதோடு மறுமணம் செய்து வைக்கப் போவதாக விளம்பரம் கொடுங்கள். இனி மாப்பிள்ளைப்பற்றிக் கேட்கிறீங்களா? உங்களைப் போன்ற பணக்காரனுக்கு மாப்பிள்ளையாக வருவதை யார்தான் விரும்ப மாட்டார்கள்?

பணத்திற்காக ஆசைப்பட்டுத் திடமான ஆரோக்கியத்துடன் இருப்பவனுக்கே இதய நோய் இருப்பதாகச் சொன்ன டாக்டரே உங்களுக்கு மருமகனாக வந்துவிட்டால் இன்னும் நல்லது. மாமனாரும், மருமகனும் சேர்ந்து இன்னும் பலரின் வாழ்க்கையை நாசமாக்கலாம்"

"நீ என்னை என்ன வேண்டுமானாலும் சொல். ஆனால் தரளாவின் எதிர்காலம் நன்றாக இருக்கவேண்டும். நான் செய்த தவறுக்கு அவளைத்தண்டிக்காதே. நடந்ததேதோ நடந்து விட்டது. நீங்கள் இருவரும் சுகமாக இருக்க வேண்டுமென்றால் நான் என்ன செய்ய வேண்டுமோ அதைச் சொல்லு."

"என்ன சொன்னாலும் செய்வீர்களா?"

"என் மகள் சுகமாக இருப்பதற்காக எதை வேண்டு மானாலும் செய்கிறேன்."

"அப்படியானால் செத்துத் தொலையுங்கள்."

அவர் சட்டென்று நிமிர்ந்து பார்த்தார். ஏளனமாகச் சிரித்தேன். "ஏன்? தற்கொலை செய்துகொண்டால் மானம் போய்விடுமே என்று பார்க்கிறீங்களா? மகளுக்காக மானத்தை இழப்பதா வேண்டாமா என்று யோசிக்கிறீங்களா? இது வரையில் உங்கள் அபாரமான சாமர்த்தியத்தால் எங்கள் வாழ்க்கைகளோடு விளையாடிவிட்டீர்கள். இனி இப்பொழுது என் பங்கு. நீங்கள் செய்ததற்கு இரு மடங்காக அனுபவிக்கும் படிச் செய்கிறேன். நடந்ததை எல்லாம் தரளாவிடம் சொல்லி..."

"வேண்டாம். வேண்டாம்." சட்டென்று இடைமறித்தார். "செய்ததெல்லாம் நான்."

"தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்ற எண்ணத்துடன் இறுமாப்புக்கொண்டு இருக்கிறாள் உங்கள் மகள். அதை வீழ்த்தாமல் விடப் போவதில்லை."

அவர் ஏதோ சொல்லப்போய் நிறுத்திக்கொண்டு "சரி தம்பி. இவ்வளவு நடந்தபிறகு இந்தப் பிரச்னைக்கு ஒரே ஒரு

பரிகாரம்தான் தென்படுகிறது. எனக்கு நாலு மணிநேரம் அவகாசம் கொடு. சொல்கிறேன்" என்று திரும்பினார்.

"என்ன சொல்லப் போறீங்க நீங்க?" பின்னாலிருந்து உரத்தக் குரலில் கத்தினேன்.

பதில் சொல்லவில்லை அவர். அப்படியே நதிக்கரையில் நடந்தபடியே நாணற்புதருக்குள் மறைந்துவிட்டார்.

நான்கு மணி நேரத்திற்குள் எங்கள் மூவரின் வாழ்க்கைக்கும் அவர் என்ன பரிகாரம் சொல்லப் போகிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

தெரிந்ததும் பதைபதைத்துப் போய்விட்டேன்.

நான் ஊருக்குள் போகும் போதே அந்தச் செய்தி குப்பென்று பரவியிருந்தது. ஜி.பி.ராவ் தற்கொலை செய்து கொண்டுவிட்டார் என்ற செய்திதான் அது.

13

எல்லோரும் கும்பல் கும்பலாக அந்த வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார்கள். நான் மட்டும் கால்கள் பூமியில் புதைந்துவிட்டாற்போல் அப்படியே நின்றுவிட்டேன். என் மனதில் எண்ணங்கள் புயலில் சிக்குண்ட சருகைப் போல் சுழன்று கொண்டிருந்தன. அவற்றுக்குத் தெளிவான உருவம் இல்லை. என் மனதில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் செய்வ தற்காகத்தான் அவை இருப்பது போல் தோன்றியது. அரை மணிக்கு முன்னால் நான் சொன்ன வார்த்தைகள் இன்னும் என் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

"தற்கொலை செய்து கொண்டால் மானம் போய்விடுமே என்று நினைக்கிறீங்களா? வாழ்க்கையில் உங்களுக்கு வேண்டியது இரண்டே இரண்டுதானே. உங்க மகளின்

சந்தோஷம். மற்றது உங்கள் மதிப்பு. முதலாவதற்காக இரண்டாவதை விட்டு விடுங்கள்."

என் வார்த்தைகள் அவரை இவ்வளவு கொடூரமான முடிவு எடுக்கும்படிச் செய்யும் என்று எதிர்ப்பார்க்கவில்லை. என் விருப்பம் இத்தனை பெரிய பலிதானத்தைக் கேட்கும் என்று நான் ஊகித்திருக்கவில்லை. என் ஆவேசமும், அவர் மேலிருந்த கோபமும் சேர்ந்து என்னை வாய்க்கு வந்தபடிப் பேசச் செய்து விட்டன. அவ்வளவுதான்.

"இதென்ன? இங்கேயே நின்றுவிட்டாய்? உன் மாமனார் இறந்து போய் விட்டாராமே. தெரியாதா? வா... வா... போகலாம்" என்ற முன்சீபின் குரலைக்கேட்டுத் தேறிக்கொண்டு என்னையும் அறியாமல் வீட்டை நோக்கி நடந்தேன்.

அவருடைய உடல்மீது விழுந்து தரளாவும், அவள் தாயும் கதறி அழுதுகொண்டிருந்தார்கள். பிருந்தா அவர்களைத் தேற்றிக் கொண்டிருந்தாள். அவள் இன்னும் மணக்கோலத்தில் தான் இருந்தாள். திருமணமாகி, முதலிரவு முடிந்த பிறகு நான் காணாமல் போனதற்கும், இன்று இவருடைய மரணத்திற்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்று சிலர் என் பக்கம் சந்தேக மாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சின்னக் கிராமத்தில் இதுபோன்ற விஷயங்கள் மேலும் ஆர்வத்தைத் தூண்டிவிடும்.

இறுதிக் காரியத்திற்கான ஏற்பாடுகளை முன்சீப் செய்து கொண்டிருந்தார்.

நானும் வெளியே வந்தேன்.

அங்கேயே நின்றுகொண்டிருந்த டாக்டர் என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்தார். அதுபோன்ற கடிதம் ஏதாவது இருக்கக் கூடும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்ட விஷயங்கள் மட்டும் எதிர்பாராத விதமாக இருந்தது என் மனதை நெகிழச் செய்துவிட்டன.

கடிதம் இவ்வாறு இருந்தது.

மகனே, என் மேல் உனக்கு இருந்த கோபம் தணிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

அல்லது உன் கண்களுக்கு நான் ஒரு முட்டாளாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் ஒரு விஷயம் மட்டும் புரிந்து கொள். எனக்கு என் மகள் மீது அளவற்ற பிரியம். அந்தப் பலவீனத்தால்தான் டாக்டரைக் கொண்டு அதுபோல் நாடகமாடச் செய்தேன். எனக்கு அந்தச் சமயத்தில் உங்கள் காதல் விஷயம் தெரியாது. கேவலம் என் அகம்பாவத்திற்குத் தடையாக நீ இந்தத்க் திருமணத்திற்குச் சம்மதிக்கவில்லை என்று நினைத்தேன். என் சாமர்த்தியத்திற்கு இது ஒரு சவாலாக எடுத்துக் கொண்டேன். நீ இந்த கல்யாணம் முடிந்தபிறகு, இவ்வளவு சொத்துக்கு வாரிசு ஆன பிறகு, நான் போட்ட நாடகத்தை விளையாட்டாக எடுத்துக் கொண்டு மறந்துபோய் விடுவாய் என்று நினைத்தேனே தவிர பணத்தைத் துச்சமாக மதிப்பாய் என்றும், காதலுக்கு வாழ்க்கையைவிட அதிக மதிப்பைத் தருவாய் என்றும் ஊசித்திருக்கவில்லை. நினைத்ததை சாதித்துக் கொள்ளும்வரை உறங்காத மனநிலை என்னுடையது. இந்தக் கிராமத்தில் இதுவரையில் அப்படித்தான் நடந்து வந்தது. முதல்முறையாக என்னை எதிர்த்து நின்றது நீதான்.

நான் எந்த விதமாகச் சொன்னாலும் நீ ஒப்புக் கொள்ள மாட்டாய். நம்பமாட்டாய். என் மகளை ஏற்றுக் கொள்ளவும் மாட்டாய், நான் உயிரோடு இருக்கும்வரையில் யோசித்து யோசித்து நான் இந்த முடிவை எடுத்துக்கொண்டேன்.

மகனே. . . நான் உன்னை வேண்டுவது ஒன்றுதான். தரளா அப்பாவிப்பெண். என் காரணமாக அவளை வெறுக்காதே, துன்புறுத்தாதே. நான் இல்லாத இந்த உலகத்தில் அவளைப் பார்த்துக்கொள்ள வேண்டியது நீதான். நான் உனக்குச் செய்த அநியாயத்திற்குப் பரிகாரமாக என் உயிரைத் தருவதாகப் பாவித்து, இனி இந்த வெறுப்பை விட்டுவிடு. என் கடைசி விருப்பத்தை நிறைவேற்றுவாய் இல்லையா.

கடைசியாக ஒரு விஷயம்.

உன் சிநேகிதி பிருந்தாவின் திருமணத்தை நானே சுயமாக முன் நின்று நடத்திவைத்தால், உனக்கு என்மேல் இருந்த கெட்ட அபிப்பிராயம் இன்னும் அதிகமாகியிருக்கும் என்று தெரியும். ஆனால் நடந்தது என்னவென்று தெரியுமா?

முதலிரவு நடந்த அடுத்த நாளே நீ பட்டணத்திற்குப் போய் விட்டாய். அங்கிருந்து பிருந்தாவுக்குக் கடிதம் எழுதினாய் நினைவிருக்கா? காதலித்து ஒன்றாக இணைய முடியாமல் போனதற்காகப் பட்டணத்தில் வேலை வாங்கித்தருவதாகவும், அவளை வரச் சொல்லியும் கடிதம் எழுதியிருந்தாய். நீ எழுதிய இரண்டாவது கடிதம் என் கையில் கிடைத்தது போல், நீ எழுதிய அந்த முதல் கடிதம் பிருந்தா தாயின் கையில் கிடைத்தது. அவள் பதற்றமடைந்து அதைத் தன் தம்பியிடம் காட்டினாள். பிருந்தாவுக்கு ரகசியமாகக் கடிதம் எழுதியது நீ செய்ததவறு.

கைக்கெட்டிய பழம் நழுவி விடப்போகிறதே என்று பைரவமூர்த்தி பயந்துவிட்டான். நீ இரண்டாவது குடித்தனம் வைப்பதற்காக அந்தப் பெண்ணைப் பட்டணத்திற்கு வரச் சொல்கிறாயோ என்று நினைத்துவிட்டார்கள் அந்த அக்காவும், தம்பியும். அது மட்டுமே இல்லை. அது நாள் வரையில் அந்தப் பெண்ணை வெறும் வாய்வார்த்தைகளால் தொழிலுக்கு அடிபணிய வைக்க முயற்சி செய்து வந்தார்கள். உங்கள் காதல் விஷயம் தெரிந்த பிறகு பைரவ மூர்த்திக்குப் பிருந்தாவிடம் இருந்த 'பயம்' போய்விட்டிருக்கும்.

அதோடு அக்காவும் சப்போர்ட் செய்ததும் அவனுக்குத் துணிச்சல் அதிகமாகிவிட்டது. இம்முறை வார்த்தைகளால் அல்லாமல் செயல்களால் அவளைச் சம்மதிக்க வைக்க முயற்சித்தார்கள். மகள் வீட்டை விட்டுப் போய்விடாமல், பணத்தைச் சம்பாதித்துத் தர வேண்டிய இயந்திரம் கைநழுவி விடாமல் இருப்பதற்காக முந்தா நாள் இரவு. . . தன்

வீட்டிலேயே மகளின் தொழிலுக்குப் பிள்ளையார் சுழிபோட ஏற்பாடு செய்தாள். தன்னுடைய தம்பியையே இந்தக் காரியத்திற்குப் பயன்படுத்தினாள்.

நான் போனபோது அங்கிருந்த நிலைமை இதுதான். உன்னைப்பற்றி விவரம் தெரிந்து கொள்வதற்காகப் போயிருந்த போது எனக்கு அங்கே பிருந்தாவின் வாழ்க்கை எச்சில் இலையாக மாறவிருந்தது தென்பட்டது. அதற்குள்ளாகவே அவள் நடைபிணமாகி விட்டிருந்தாள். அவனுடைய அரக்கத் தனத்திற்குப் பலியாகி, எந்த நிமிடமும் சாவை வரவேற்கத் தயாராக இருந்தாள்.

நான் நினைத்தால் அப்பொழுதே அந்தக் கயவனைப் போலீசாரிடன் பிடித்துக்கொடுத்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்தால் பிருந்தாவின் வாழ்க்கை முற்றிலும் நாசமாகிவிடும். அந்த நிலைமையில் என்ன செய்ய முடியும்? பைரவமூர்த்தியை இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கச் செய்வதைத் தவிர.

அதற்காக அவன் ஐம்பதாயிரம் கேட்டான்.

பிருந்தாவின் தாயும் அதே விலையை முடிவுசெய்தாள். மகள் 'தொழிலில்' இறங்கி இருந்தால் அந்த அளவுக்குச் சம்பாதித்து இருப்பாளாம். ஆனந்தன்! இதையெல்லாம் எழுதி உன் மனதை வருந்தச் செய்வதில் எனக்கு விருப்பம் இல்லை. ஆனால் நடந்தது இதுதான்.

ஐம்பதாயிரம் கொடுப்பதற்காக நான் சம்மதித்தேன். அதன் பலனாய் மறுநாளே இந்தத் திருமணம் நடந்தது.

ஆனால் அத்தனைச் சுலபமாகப் பிருந்தா இதற்குச் சம்மதிக்கவில்லை. அந்தக் கயவனை மணப்பதைவிடத் தற்கொலை செய்து கொள்வதே நல்லது என்று அவள் நினைத்தாள். ஆனால் அவள் இறந்து விட்டால் நீ என்னவாகி விடுவாயோ என்று என்னால் ஊகிக்க முடியும். அதைப்பற்றி யோசித்துப் பார்க்கச் சொல்லி அவளிடம் சொன்னேன். அவள் புத்திசாலி. நிமிடத்தில் நிலைமையைப் புரிந்து[illegible]ன்டாள்.

திருமணத்திற்குச் சம்மதித்தாள். ஐம்பதாயிரம் ரூபாயுடன் பைரவமூர்த்தி அவளை மணந்தான்.

ஆனந்தன்... இதையெல்லாம் உன்னிடம் சொல்ல வேண்டாம் என்றுதான் எண்ணியிருந்தேன். என் பணத்தைப் பற்றிக்கூடச் சொல்லிக்கொள்வதில் எனக்கு விருப்பம் இல்லை. ஆனால் இமயமலையை விட உயர்ந்துவிட்ட உன் சினேகிதியின் தனித்தன்மையின் முன்னால் என்னுடைய அல்பகுணம் என்னை ஏளனம் செய்கிறது. மரணவாக்கு மூலத்தைக் காட்டிலும் சத்தியம் வேறு இல்லை. அதனால்தான் இந்த உண்மையை உன்னிடமிருந்து மறைக்கவில்லை. கற்பழிக்கப்பட்டுவிட்ட உன் சினேகிதியை ஒரு இல்லத் தரசியாக்கிய திருப்தி ஒன்றுதான் எனக்கு மிஞ்சியது. என் மூலமாக அநியாயம் நேர்ந்து விட்டவர்களுக்குள் அவளும் ஒருத்தி இல்லையா. சொத்தில் ஒரு பங்கையும் அவள் பெயருக்கு எழுதி வைத்துவிட்டேன். பைரவமூர்த்தி இதன் காரணமாகவாவது அவளைக் கவனமாகப் பார்த்துக் கொள்வான் என்ற ஆசைதான். என்னால் முடிந்ததை எல்லாம் நான் செய்துவிட்டேன். இனி மற்றதை நீ செய்ய வேண்டும். இந்த உலகத்தில் இல்லாத என்மீது, இனி உனக்குக் கோபம் இருக்காது என்று நம்புகிறேன். ஒருக்கால் இருந்தாலும் என் மகள் மீது அதைக் காட்டவேண்டாம் என்ற வேண்டுகோளுடன்.

உன்
மாமா.

14

அக்கடிதத்தை எப்படிப் படித்து முடித்தேனோ எனக்கே தெரியாது. மனம் முழுவதும் வெறுமை பரவியிருந்தது.

பிருந்தா நாசமாகிவிட்டாள். அபூர்வமாக நான் வளர்த்து வந்த பூஞ்செடி இன்னொருத்தர் காலடியில் விழுந்து கசங்கிப்

போய்விட்டது. அதை மறுபடியும் பழைய நிலைக்குக்கொண்டு வருவதற்குத் தரளாவின் தந்தை முயற்சி செய்திருக்கிறார்.

ஒருபக்கம் என்னையும் சரிக்கட்டுவதற்காக உயிர்த் தியாகம் செய்துவிட்டார். 'இமயமலையை விட உயர்ந்துவிட்ட உன் சினேகிதியின் தனித்தன்மையின் முன்னால்' என்று குறிப்பிட்டு இருந்தார். உயர்ந்துவிட்டது பிருந்தா இல்லை அவர் தான். செய்த பிழைகளுக்கு இவ்வளவு பெரிய தண்டனையை ஏற்றுக்கொண்டு புனிதமாகிவிட்டார் அவர்.

அவர் கடிதத்தில் எழுதியிருந்த இன்னொரு வரி என் மனதை நெகிழ்த்திவிட்டது.

'தான் இறந்து போய்விட்டால் நீ என்ன ஆவாயோ என்று யோசித்துத்தான் பிருந்தா இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தாள்.'

எவ்வளவு கடினமான உண்மை!

உண்மையாகவே நான் பட்டணத்தில் இருந்தபோது இங்கே இந்தக் கொடுமை நிகழ்ந்து பிருந்தா தற்கொலை செய்துகொண்டு இருந்தால், நான் என்னவாகி இருப்பேன்? எப்படி யோசித்துப் பார்த்திருப்பேன்? அவளைத் தரளாவின் தந்தைதான் கொன்றிருப்பார் என்று நினைத்திருப்பேன். பிருந்தாவின் குறுக்கீடு ஒழிந்தால்தான் தன் மகளின் வாழ்க்கை நன்றாக இருக்குமென்று திட்டம் போட்டு அவர்தான் இக்காரியத்தை செய்ய வைத்திருப்பார் என்று நினைத்து தரளாவை விட்டு நிரந்தரமாக பிரிந்திருப்பேன் இல்லையா.

இதையெல்லாம் யோசித்துப் பார்த்த பிறகு பிருந்தா இத்திருமணத்திற்கு ஒப்புக்கொண்டிருக்கிறாள் போலும். மனதில் எவ்வளவு எரிமலைகளை கொந்தளித்துக்கொண்டிருந்தாலும், தன்னை வலுக்கட்டாயமாகக் கெடுத்தவனுடனேயே வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்வதற்குத் தயாராகிவிட்டாள்.

ஒருத்தர் தற்கொலை செய்துகொண்டு என்னைத் திருத்த முயற்சி செய்தார். இன்னொருத்தியோ எனக்கு வேதனை

ஏற்பட்டு விடாமல் இருப்பதற்காத் தற்கொலை செய்து கொள்ளாமல் நரகத்தைப் போன்ற தாம்பத்திய வாழ்க்கையில் அடி எடுத்துவைத்திருக்கிறாள். இருவருமே இந்த விதமாக என்னைப் பழிதீர்த்துக்கொண்டுவிட்டார்கள்.

என் மனதில் அந்த வீட்டைப் போலவே மயான வைராக்கியம் பரவியிருந்தது. காரியங்களை எல்லாம் கடமைக்காக செய்துமுடித்தேன்.

ஒருதடவை மனிதன் மனதளவில் இறந்து போகத் தொடங்கினால், அதற்குப்பிறகு அந்த மரணம் ஒரேயடியாக நிகழாது, நிற்கவும் நிற்காது. எந்தக் காயத்தின் வேதனையையும் சகித்துக் கொள்ளலாம். ஆனால் ஆன்மாவுக்கு, உள் மனதிற்கும் இடையே ஏற்படும் போராட்டத்தைத் தாங்கிக் கொள்வது மட்டும் அசாத்தியம். ஒருமுறை அது தொடங்கி விட்டால் பிறகு எப்படிப்பட்டவராக இருந்தாலும் சரி, குன்றி, தளர்ந்துப் போக வேண்டியதுதான்.

அதுதான் அழிவிற்குத் தொடக்கம்.

எனக்குப் பலமுறை ஒரே கனவு அடிக்கடி வந்துகொண்டே இருந்தது. அந்தக்கனவில் தரளாவின் தந்தை, தரளா யாருமே இருக்கவில்லை. அப்பொழுது எனக்குத் திருமணமாகி விட்டதோ இல்லையோ கூடத்தெரியாது. இரண்டு நாட்கள் பட்டணத்தில் ஏதோ வேலையாக போய் விட்டுத் திரும்பி வருவதற்குள் பிருந்தாவை அவன் மாமா கற்பழித்துவிட்டதாகத் தெரிவித்தது. 'கோடாலியை எடுத்துக் கொண்டு ஓடுகிறேன். கதவைத்தட்டியதும் எதிரே பிருந்தா கழுத்தில் தாலிச்சரடோடு, என் கணவரைக் கொன்றுவிடாதே என்பது போல் பார்க்கிறாள்.

நான் உரத்தக் குரலில் சிரித்துவிட்டு "என்னைக் கொலைக் காரனாக்க விரும்பாமல் உன் கணவனை நான் எப்படியும் கொல்லமாட்டேன் என்ற தைரியத்தில் நீயாகவே உன் கழுத்தில் கட்டி கொண்ட தாலி அது. அவ்வளவுதானே தவிர உன் கணவன் கட்டியது மட்டும் இல்லை" என்று சொல்கிறேன்.

அவ்வளவுதான், கனவு சிதறிவிடும். திரும்பத்திரும்ப இந்தக் கனவு என்னைத் துரத்தியது. இந்தக் கனவிற்கு நானே இவ்வாறு விளக்கம் ஊகித்துக்கொண்டேன்.

"நான் சுகமாக இருக்கிறேன். நீயும் சந்தோஷமாக இரு" என்று எனக்குச் சொல்வதற்காகவே பிருந்தா இந்தத் திருமணத்தைச் செய்து கொண்டாளே தவிர, அசல் அது திருமணமே இல்லை என்ற எண்ணம் என்மனதில் ஏதோ ஒரு மூலையில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அந்த எண்ணத்தின் வடிவம்தான் அடிக்கடி வரும் இந்தக்கனவு.

என்னால் வாழ்க்கையுடன் ஒத்தப்போக முடியவில்லை. ஒரு விதத்தில் சொல்லப்போனால் என்னை விட தரளாவின் தந்தையே தைரியசாலி போலும். செய்த பிழைக்குப் பரிகாரமாகத் தற்கொலை செய்து கொண்டுவிட்டார்.

தரளாவிடம் பிடிவாதம், பைத்தியக் காரத்தனம் இவற்றுடன் அளவுக்கு மீறிய அன்பும் இருந்தது. ஆனால் அதை வெளிப்படுத்தும் முறைதான் சரியாக இருக்கவில்லை.

"காலையில் போய் இரவுதான் திரும்பி வர்றீங்க. அதுவரையில் என்னதான் செய்வது?" என்றாள் எரிச்சலுடன். "என் பெயரை எழுதிப்பார்த்துக்கொண்டு திருப்திப்பட்டுக்கொள்" என்றேன். அன்று இரவு வீட்டுக்குத் திரும்பி வந்த போது சுவர்முழுவதும் என் பெயரை எழுதிக் கொண்டிருந்தாள். இதுதான் அவள் அன்பை வெளிப்படுத்தும் முறை. வேறு யாரா வதாக இருந்தால் அவளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திருப் பார்களோ என்னவோ. ஆனால் ஒரு முறை நதியின் நிதான மான வேகத்திற்குப் பழக்கப்பட்டவர்கள் அருவியின் பேரிரைச்சலை விரும்பமாட்டார்கள். அவளுடைய அன்பு என்னை அவ்வப்போது நெகிழ்த்திவிடும். ஆனால் அவள் அருகில் வந்தாலே எனக்குப் பிருந்தாவின் நினைவு வந்துவிடும். உடனே விலகிப் போய்விடுவேன். அவளைத் தொட்டது முதலிரவு அன்றைக்கு மட்டும்தான். ஆனால் விதி அந்த அவகாசம் போதும் என்றது.

தரளா கருவுற்று இருப்பதாகத் தெரிந்த பிறகு என்னால் முன்போல் அவளிடம் கடினமாக இருக்கமுடியவில்லை. ஆனால் மனதளவில் என்றுமே அவளை நெருங்க முடிய வில்லை என்பது மட்டுமே உண்மை. எனக்குக் காதலைப்பற்றிப் பெரிதாக விவரிக்கத் தெரியாது காதலர்கள் ஒருவர்பால் இன்னொருவர் நம்பிக்கையோடு இருப்பார்களா, எப்போதும் அடுத்தவரைப் பற்றி யோசனையில் மூழ்கியிருப்பார்களா என்னால் சொல்ல முடியாது. காதல் என்பது ஒரு உணர்ச்சி. இதயத்தில் இருக்கும் மச்சம் போன்றது. அதை அனுபவித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமே தவிர இன்னொருவர் மூலமாக கேட்டுத் தெரிந்துகொள்ள நினைப்பது நகைப்பிற்குரியது.

ரொம்ப நாட்களுக்கு முன்னால் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. நாங்கள் மூவரும் சினேகிதர்களாக இருந்த நாட்கள் அவை. நான் காவேரிக்கரைக்குப் போய்ச் சேரும் போது தரளாவும், பிருந்தாவும் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். தரளா ஏதோ சொன்னதைக் கேட்டு பிருந்தா பெரிதாகச் சிரித்துக் கொண்டிருந்தாள். அதற்குப்பிறகு தனியாக இருந்தபொழுது அவளைக் கேட்டேன்.

"நான் இல்லாதபோது கூட உன்னால் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடியுமா?"

அவளுக்குப் புரியவில்லை.

"எனக்கு எப்படி இருக்கும் தெரியுமா? நீ என் முன்னிலையில் தவிர வேறு யாரிடமும் சிரிக்கக் கூடாது என்று தோன்றும்."

பிருந்தாவின் கண்கள் வியப்பால் விரிந்தன. "தரளாவிடம் கூடவா?" என்றாள்.

"ஆண், பெண் என்ற கேள்விக்கே இடமில்லை. நான் இருக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். நான் அருகில் இல்லாதபோது எதையோ இழந்து விட்டாற்போல் யோசித்துக் கொண்டிருக்க வேண்டும். அவ்வளவுதான்."

அவள் சிரிப்பை அடக்கிக்கொண்டே "பொறாமையா?" என்றாள்.

"ஆமாம். காதலின் உச்சநிலை அதுதான்."

உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவள் மீது எனக்கு இருந்த அன்பு அவ்வாறு இருந்தது. வாழ்நாள் முழுவதும் அப்படி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஏதோ ஒரு கட்டத்தில் இவ்வளவு ஆழமாக நேசிக்காமல் போனால் அது காதலே இல்லை என்பது என்னுடைய அபிப்ராயம். ஆனால் நான் என்றுமே என்னை வெளிப்படுத்திக்கொள்ளவில்லை. நான் அவளை எவ்வளவு ஆழமாக நேசித்தேன் என்று என்று பிருந்தாவுக்கே தெரியாது என்பது என் சந்தேகம். காதலை கவிதையாக வடிக்கவோ, இசைக்கவோ எனக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் என் காதலைப் பற்றிச் சொல்வதற்கு மேலே குறிப்பிட்ட சம்பவம் போதும். அப்படிப்பட்ட காதலியை விட்டுவிட்டு இந்தச் சாரம் இல்லாத வாழ்க்கையை எப்படிக் கடைசி வரைக்கும் கழிக்கப் போகிறேன்? என் நேரத்தை முழுவதும் மாமனாரின் சொத்து விவகாரங்களைப் பார்த்துக்கொள்வதில் செலவழித்துக் கொண்டிருந்தேன். மாமனாரை விட மருமகன் இன்னும் திறமையாக சொத்துகளைப் பராமரிக்கிறான் என்று ஊர் மக்கள் பேசிக்கொள்வது சில சமயம் என் காதிலும் விழுந்தது.

பிருந்தாவைப் பற்றி எந்த விஷயமும் எனக்கு தெரியவில்லை.

நாள் செல்லச் செல்ல அவளை மறந்து போய் விடுவேனோ என்று நினைத்தேன். ஆனால் அது சாத்தியம் இல்லை என்று தெரிந்துவிட்டது.

கட்டில் மீது பக்கத்தில் மனைவி படுத்திருப்பாள். என் மனம் மட்டும் வேறு எங்கேயோ இருக்கும். தரளாவுக்குத் துரோகம் செய்கிறோனோ என்று மனதில் உறுத்திக்கொண்டே இருக்கும். இல்லை... இல்லை. இந்த உலகமே எனக்குத் துரோகம் செய்துவிட்டது போல் ஆத்திரம் ஏற்படும்.

பிருந்தா என் கண்ணில் படவே இல்லை. அவளைப் பற்றிய விவரங்கள் கூட ரொம்ப நாட்கள் வரை எனக்குத் தெரிய வில்லை. தெரிந்த அடுத்த வினாடியிலிருந்து எனக்கு ஒவ்வொரு இரவும் பிரளயகால இரவாகிவிட்டது.

15

"என் தம்பி மனுஷன் இல்லை தம்பி, ராட்சசன்" என்றாள் அவள் கண்ணீர் வடித்துக்கொண்டே.

21906

அவள் பக்கம் அருவருப்போடு பார்த்தேன். பெற்ற மகளைப் பலவந்தமாகக் கற்பழிக்கச் செய்த இந்த விலைமகள் இப்பொழுது நீலிக்கண்ணீர் வடிக்கிறாள்.

"என்ன? என்ன நடந்தது?" என்று கேட்டேன்.

"அவன் அவளை அடித்துக் கொல்கிறான். ரத்தத்தை உறிஞ்சிக்கொண்டிருக்கிறான்."

"எதற்கு?"

"உங்களைக் கேட்டுப் பணம் வாங்கிக்கொண்டுவரச் சொல்லி."

சாட்டையால் சுளீர் என்று அடித்தாற்போலிருந்தது. என்ன நடந்துகொண்டிருந்தது என்று நிமிடத்தில் புரிந்துவிட்டது. ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் கொடுத்து, தரளாவின் தந்தை இந்தத்திருமணத்தை நடத்திவைத்தார். ரத்தத்தின் ருசி கண்டு விட்ட புலி, இப்பொழுது சொத்தை முழுவதுமாகக் கபளீகரம் பண்ணிவிடவேண்டும் என்று பார்க்கிறது. என் பலவீனத்தைச் சரியான இடத்தில் தாக்கிவிட்டது.

"உயிரே போனாலும் உங்களிடம் போகமாட்டேன் என்று என் மகள் சொல்கிறாள். அவனோ உயிரையே எடுத்து

விடுவதுபோல் அவளை அடித்து வருகிறான். நடுவில் நான் கிடந்து தவிக்கிறேன். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை தம்பி."

"இந்தப்பணமெல்லாம் என்னோடது இல்லை. தரளாவோட பணம். அவனுக்கு எதுக்காகத் தரவேண்டும்? அப்படி கேட்க அவனுக்கு என்ன வலிமை இருக்கு? ஆனாலும் அவனுக்கு நான் எதுக்குப் பணம் தர வேண்டும்? கடன் பட்டிருக்கிறேனா என்ன?" ஆவேசத்தில் என் குரல் நடுங்கியது.

"அதையெல்லாமல் அவன் யோசித்துப் பார்க்கவில்லை தம்பி. 'அவனிடம் பணம் இருக்கு. நீ போய்க் கேட்டால் மறுக்க மாட்டான். ஒரு காலத்தில் உனக்கு நண்பனாக இருந்தவன் தானே. போய்க் கேட்டு வாங்கிக்கொண்டுவா' என்கிறான். போக மறுத்தால் செம்மையாக உதைக்கிறான். பெற்ற மனம் கேட்காமல் உன்னிடம் ஓடிவந்தேன். என்ன செய்வாயோ. உன் இஷ்டம்."

யோசித்தேன். ஒருமுறை கொடுக்கத்தொடங்கிவிட்டால் இனி அது நிற்காது. ஆனால் இன்னொருவரின் பணத்தை எடுத்துக்கொடுக்க எனக்கென்ன உரிமை இருக்கிறது? அதையே சொன்னேன்.

"அப்படிச் சொல்லாதே தம்பி. அவன் அவளைக் கொன்றுவிடுவான்."

இழுத்துக் கன்னத்தில் ஒரு அறை கொடுத்து 'பலவந்த மாக மகளைக் கற்பழிக்கச் செய்த போது இந்தத் தாய்ப்பாசம் எங்கே போயிற்று?' என்று கேட்க நினைத்தாலும் வலுக் கட்டாயமாக அந்த எண்ணத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். இவளோடு வாதம் புரிவது இனி அனாவசியம்.

மறுப்பது போல் தலையை அசைத்துக்கொண்டு "என்னால் கொடுக்கமுடியாது. வேண்டுமானால் பஞ்சாயத்தைக் கூட்டி உன் மகளைத் திருப்பி மீட்டுத் தருகிறேன். அவ்வளவுதானே தவிர பணம் மட்டும் தர மாட்டேன்" என்றேன்.

"அவன் அவளை அடிக்கிறதைப் பார்த்துக்கிட்டு என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை தம்பி. இப்பொழுது நீ அவளைப் பார்த்தால் உன்னால் அடையாளம் கூடத்தெரிந்து கொள்ளமுடியாது. ஏற்கெனவே பிள்ளைத்தாய்ச்சி பெண் வேறு."

அதிர்ச்சி அடைந்துவிட்டேன். பிருந்தா கருவுற்று இருக்கிறாள்!

அரும்பாடுப்பட்டுச் சமாளித்துக்கொண்டு "எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டேன்.

"இரண்டாயிரம் கொடுத்தால் அவன் வாயை மூடிக் கொள்வான் தம்பி."

நிம்மதியாக மூச்சு விட்டுக்கொண்டேன். இரண்டாயிரத் தோடு தொல்லை நீங்கிவிடும்.

உள்ளே போய்ப் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தேன் அவள் போய்விட்டாள்.

அதற்குப்பிறகு எனக்கு நரகம் தொடங்கிவிட்டது.

பத்து நாட்கள் கழித்து அவள் மறுபடியும் வந்தாள், அதே காரியமாக.

இம்முறை இன்னும் இரண்டாயிரம் அதிகம்.

எனக்குத் தாங்கமுடியாத ஆத்திரம். . . கோபம்.

பைரவமூர்த்தி ஒருவன் மீது மட்டுமே இல்லை. உலகத்தின் மீதே. என் கையாலாகாத்தனத்தின் மீது.

பிருந்தா எப்படி இருக்கிறாளோ பார்க்க வேண்டுமென்ற என் விருப்பம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக்கொண்டே போனது. வீட்டில் நிறைமாத கர்ப்பிணியாக நடமாடிக் கொண்டிருந்த தரளாவைப் பார்க்கும் போதெல்லாம் பிருந்தா தான் நினைவுக்கு வந்தாள்.

பிருந்தாவை அந்த நரகத்திலிருந்து எப்படி மீட்பது என்று தான் எனக்குப் புரியவில்லை.

கடைசியில் ஒரு யோசனை வந்தது. போலீஸ் ரிப்போர்ட்!

அன்றே இன்ஸ்பெக்டரைப் போய்ச்சந்தித்தேன். ரொம்ப மரியாதை கொடுத்து வரவேற்றார்.

பிருந்தாவை அவள் கணவன் எப்படிக் கொடுமைப் படுத்துகிறான் என்று சொன்னேன். அவள் தாய் பணத்திற்காக என்னிடம் வந்துகொண்டிருந்த விஷயத்தையோ, மற்ற விவரங்களையோ நான் சொல்லவில்லை. நான் சொன்னதை எல்லாம் இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டார். கடைசியில் "இது அவங்க குடும்ப விஷயம் சார். நாம் என்ன செய்ய முடியும்?" என்றார்.

"நான்கு சுவற்றுக்கு நடுவில் ஒரு ரௌடி ஒரு பொண்ணை ரத்தவிளாராய் அடித்துத் துன்புறுத்தினால் உங்களால் ஒன்றும் செய்ய முடியாதா?"

இன்ஸ்பெக்டர் சங்கடத்துடன் பார்த்தார். இத்தனைப் பொறுமையாக அவர் கேட்டுக்கொண்டதே பெரிய விஷயம். எனக்கு அந்த ஊரில் இருக்கும் செல்வாக்கு அவரை அந்த அளவுக்காவது கேட்டுக்கொள்ளும்படி செய்திருக்கும் என்று நினைக்கிறேன்.

நான் எழுந்துகொண்டு "போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியில் வரும்போது "ஒரு வழியில் நான் அவனை மிரட்டி வைக்கமுடியும் சார்" என்றார் இன்ஸ்பெக்டர். நான் நின்றேன்.

"தன் மகளை மருமகன் அடித்துத் துன்புறுத்துகிறான் என்று அவள் தாய் மட்டும் புகார் கொடுத்தால் அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு வரமுடியும். கேஸ் எதுவும் போடமுடியாது. ஆனால் ஒருமுறை போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டால் அதற்குப்பிறகு வாழ்நாள் முழுவதும் மனைவியின் உடம்பின் மீது கை வைக்க முடியாதபடி செய்யும் பொறுப்பு எங்களுடையது."

இந்த யோசனை நன்றாக இருப்பது போலவே தோன்றியது. தலையை அசைத்துவிட்டு வெளியே வந்தேன்.

அடுத்த முறை பிருந்தாவின் தாய் பணத்திற்காக வரும் போது இந்தப் புகாரைப் பற்றிச் சொல்லவேண்டும். ஆனால் அது வரையில் பொறுத்திருக்க விரும்பாமல் நேராக அங்கே போவதற்காக புறப்பட்டேன். பிருந்தாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மனதில் மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. நாம் மிகவும் விரும்பும் நபர் ஒரேயடியாய் நம்மைத் தவிர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியும் போது, அவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற தவிப்பு மேலும் அதிகமாகி விடுகிறது. விலகிப் போவதற்குக் காரணங்கள் தெரிந்திருந்தாலும் சரி. என்னுடைய விருப்பமும் அப்படிப்பட்டது தான்.

வாசலில் நின்றபடி உள்ளே அவள் தென்படுகிறாளா என்று எட்டிப்பார்த்தேன். அவள் தென்படவில்லையே தவிர பேச்சுக்குரல் கேட்டது.

மாமியாரும் மருமகனும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"இன்னொரு தடவை போ. இம்முறை பத்தாயிரம் கொண்டுவா."

"முந்தா நாள் தானே போய்விட்டு வந்தேன். அடிக்கடி போனால் அவ்வளவு நன்றாக இருக்காது தம்பி."

"பரவாயில்லை. இந்தத் தடவை அவளை இன்னும் செம்மையாக உதைத்துவிட்டேன் என்று சொல்லு. இல்லையா சாகக் கிடக்கிறாள் என்று சொல்லு. அதைக் கேட்டதும் அவன் பயந்தோ இரக்கப்பட்டோ கேட்டதைத் தராமல் இருக்க மாட்டான்."

நான் கேட்டுக்கொண்டிருந்தது உண்மைதானா என்ற சந்தேகம் ஏற்பட்டது எனக்கு. பிருந்தாவின் தாய் தன்னுடைய தம்பியுடன் சேர்ந்து இப்படி நாடகம் போடுவாள் என்று ஊகித்திருக்கவில்லை. பணம் எதையும் செய்யும் என்பதற்கு அவளே பிரத்யட்ச சாட்சி.

அங்கிருந்து அப்படியே திரும்பிவந்துவிட்டேன். என் மனம் முழுவதும் கலங்கிவிட்டிருந்தது.

இது நடந்த அடுத்த நாளே அவள் மறுபடியும் எங்க வீட்டுக்கு வந்தாள். கதவைச் சாத்திவிட்டு "இந்தத்தடவை எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டேன்.

"பத்தாயிரம் தம்பி."

இடுப்பில் இருந்த பெல்டை உருவிக் கையில் எடுத்துக் கொண்டு "திருட்டு நாயே! உன் புத்தியைக் காட்டிவிட்டாய். தம்பியுடன் சேர்ந்து எவ்வளவு பெரிய திட்டம் போட்டிருக்கிறாய்?" என்று அடிக்கப் போனேன். எதிர்பாராத விளைவுக்கு திகைத்துப் போனாலும், உடனே கால்களில் விழுந்துவிட்டாள். அதற்குள் இரண்டு அடிகள் அவள் மேல் விழுந்துவிட்டன.

அவள் அழுதுகொண்டே "மன்னித்துவிடு தம்பி. பணம் கொண்டு வராவிட்டால் அவன் கொன்றுவிடுவான்" என்றாள்.

"உங்கள் திட்டங்கள் எல்லாம் எனக்குத் தெரியும்."

"அவன் உண்மையிலேயே அவளை அடித்துக் கொல்கிறான். பெற்ற வயிறு என்பதால் மனம் ஒப்பாவிட்டாலும் அவனோடு ஒத்துப் போனார் போல் இருக்கிறேன். என்னை நம்பு தம்பி" என்று கண்ணால் ஜலம் விட்டாள். அது உண்மையா, நடிப்புதானா எனக்குப் புரியவில்லை. எது எப்படி இருந்தாலும் "நான் இனி செத்தாலும் ஒரு பைசா கூடத் தரமாட்டேன்" என்று சொல்லிவிட்டு வெளியே தள்ளி கதவைச் சாத்தினேன். பின்னால் திரும்பிய போது தரளா அங்கே நின்றுகொண்டிருந்தாள்.

அவள் வாரத்திற்கு ஒருமுறை வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்தது தரளாவுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். "அடிக்கடி அவள் ஏன் இங்கு வருகிறாள்?" என்று கேட்டாள்.

'நான் செய்த பாவத்திற்குப் பரிகாரமாக என்னிடமிருந்து வசூல் செய்துகொள்ள' மனதில் நினைத்துக்கொண்டேன்.

எனக்கு எல்லோர் மீதும் வெறுப்பாக இருந்தது. ஒருவரை விட ஒருவர் உயர்ந்தவர்கள்தான். நான் ஒருத்தன்தான் சுயநலக்காரன். வெளிப்பார்வைக்குத் தென்படும் உண்மை இது. மேலுக்கு தென்படுபவை எல்லாமே உண்மை இல்லை. என் பக்கத்திலிருந்து சொல்லிக்கொள்வதற்கு வாதம் எதுவும் இல்லாமல் இருக்கலாம். வாதம் இல்லாத ஒரே காரணத்திற்காக மனிதன் கெட்டவனாகிவிட மாட்டான். தவறு செய்தவனின் ஆர்க்யுமெண்ட் எல்லோரும் நம்பும் விதமாகப் பலமாக இருக்கலாம். தற்கொலை செய்துகொண்டு என் மாமனாரும். ஆழமாகக் காதலித்த என் மனைவியும் இந்த ஊர் மக்களின் இரக்கத்தைப் பெற்று விட்டார்கள். எந்தப் பக்கமும் போக முடியாமல் நலிந்து போய்க்கொண்டிருந்தவன் நான் ஒருத்தன்தான். பிருந்தாவுக்காக என் இதயம் எவ்வளவு தூரம் பரிதவித்துக் கொண்டிருந்தது என்று யாருக்குமே புரியாது. இந்த அன்பு என் பலவீனம் இல்லை. என் துரதிர்ஷ்டம்.

அந்தத் துரதிர்ஷ்டம் அதோடு நிற்கவில்லை. மறுநாள் மாலையில்தான் தெரிந்தது, என் வார்த்தைகளின் விளைவு.

பிருந்தா ஆஸ்பத்திரியில் இருந்தாள், தலையில் பெருத்த காயம் ஏற்பட்டதால், சமையல் அறையில் வழுக்கிவிழுந்து விட்டாள்.

உண்மை அது இல்லை என்று எனக்குத் தெரியும்.

தன்னால் என்ன செய்ய முடியுமோ, பைரவமூர்த்தி செய்து காட்டிவிட்டான். எனக்கு உணர்த்துவதற்காக அந்தச் செய்தியை அனுப்பியிருக்கிறான்.

என் உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன ஆவேசத்தினால் என் உடல் நடுங்கியது.

அன்று மாலையே அவள் தாய் மறுபடியும் வந்தாள், ஆஸ்பத்திரியில் இருக்கிற மகளைக் காப்பாற்றுவதற்காகப் பணம் வேண்டும் என்ற வேண்டுகோளுடன்.

அந்த வேண்டுகோளுக்குப் பின்னால் இலேசான புன்னகை இருந்ததோ என்னவோ? 'உன்னை நாங்கள் வென்று விட்டோம்' என்ற வெற்றியோடு கூடிய புன்னகை இருந்திருக்கலாம். எதுவும் செய்ய முடியாத இயலாமை என்னை ஆட்கொண்டது. அவளுக்குப் பணம் கொடுத்து அனுப்பிவைத்தேன்.

அன்றுதான் முதல் முறையாக நான் குடித்தேன்.

இந்த வேதனையிலிருந்தும், எல்லாப் பக்கத்திலிருந்தும் வந்து கொண்டிருந்த எதிர்ப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக குடியைப் பழக்கப்படுத்திக் கொண்டேன். முதன் முதலாகக் குடித்து விட்டு வந்த என்டைய பார்த்து தரளா பயந்துவிட்டாள். அந்தப் பயத்தைப் பார்க்கப் பார்க்க என் மனம் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்தது. அதுவரையில் என்னைத் துன்புறுத்தி வந்தவர்களை எல்லாம் பழிவாங்கி விட்டாற்போல் தோன்றியது. இன்னும் அதிகமாகக் குடித்தேன்.

குடிப்பது இவ்வளவு சந்தோஷத்தைத் தரும் என்று நினைக்கவில்லை. அது ஒன்று மட்டுமே காரணம் இல்லை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு சாடிஸ்ட் மறைந்திருப்பான் என்று நினைக்கிறேன்.

இந்தக் குடி, என்னை விட என்னுள் மறைந்திருந்த சாடிஸ்டை அதிகமாகத் திருப்திப் படுத்திக்கொண்டிருந்தது. எனக்கு இரண்டுவிதமான மகிழ்ச்சி. பிருந்தாவை மறப்பது ஒன்று. இரண்டாவது தரளாவைத் துன்புறுத்துவது.

வியாபாரத்தைப் பொருட்படுத்துவதை விட்டுவிட்டேன். அடிக்கடிப் பட்டணத்திற்குப் போய் முகாமிட்டுக் கொண்டிருந்தேன். இரவும் பகலும் ஒரே நினைவுதான். பட்டணத்தில் இருந்தால் நான் எங்கே இருக்கிறேன் என்று பைரவமூர்த்திக்கோ, அவன் அக்காவுக்கோ தெரிய வாய்ப்பு

இல்லை. நான் அதிகமாக அங்கே தங்கியிருந்ததற்கு அதுவும் ஒரு காரணம்.

முதலில் தெரியாமல் போனாலும், சில நாட்களிலேயே கிராமத்தில் இந்தச் செய்தி குப்பென்று பரவிவிட்டது. முன்பின் அறியாதவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து எனக்கு அறிவுரைகளை வழங்குவதோடு, கண்டிக்கவும் தொடங்கினார்கள். ஒருகால் அவர்கள் யாருமே தம் வாழ்க்கையில் ஒருதடவை கூடக் காதலித்து இருக்கமாட்டார்கள். நான் பட்டணத்திலேயே இருந்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

எனக்கு எல்லாவற்றையும் விட வியப்பை அளித்தது தரளாவின் விஷயம்தான்.

அவள் நினைத்தால் எனக்குப் பணம் கிடைக்காமல் செய்து விட முடியும். நான் வேலையை விட்டு வெகு நாட்களாகிவிட்டது. சொத்து விவகாரங்களை எல்லாம் அவளே பார்த்துக் கொண்டிருந்தாள். குறைந்த பட்சம் வாரந்தோறும் இவ்வளவு பணம் யாருக்குத் தருகிறீர்கள் என்று என்னை உலுக்கி இருக்கலாம். ஆனால் அவள் எதுவும் செய்யவில்லை.

அவ்வாறு செய்யாதது எனக்கு மேலும் வருத்தத்தை ஏற்படுத்தியது. உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இன்னும் எப்படிச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

அன்றைக்கு நான் இன்னும் அதிகமாகக் குடித்தேன். நானும், இந்தச் சொத்தும், இந்தக் கிராமும் எரிந்து சாம்பலாக வேண்டும். சல்லிக்காசு கூடக் கிடைக்காமல் பைரவமூர்த்தி தவிதவிக்கவேண்டும்.

அன்று இரவு எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முந்தைய அந்த இரவு இப்பொழுதும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. அன்றைக்குப் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் என்

நினைவுத்திரையில் அழியாமல் பதிந்து போய்விட்டது. நான் ஏன் அன்று அவ்வாறு பேசினேன். அவ்வாறு பேசாமல் இருந்திருந்தால் இன்று என் கதை இப்படி திசை திரும்பியிருக்காதோ.

என்னவாயிற்று என்பதை அப்புறமாகச் சொல்கிறேன். அன்றிரவு மழை சோவென்று கொட்டிக்கொண்டிருந்தது. வானத்தைக் கிழித்தெறிவதுபோல் மின்னல் மின்னிக் கொண்டிருந்தது. அவுட்ஹவுஸில் உட்கார்ந்துகொண்டு குடித்துக் கொண்டிருந்தேன். நேரம் எட்டரை மணிக்கு மேல் ஆகிவிட்டது. இந்த மழையினால் கிராமம் முழுவதும் சீக்கிரமாகவே உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாற்போல் இருந்தது.

அப்பொழுதுதான் வந்தாள் பிருந்தா மெதுவாக. . . நிழலைப் போல் . . . தலைக்கு மேல் முக்காட்டைப் போட்டுக்கொண்டு.

மங்கலான வெளிச்சத்தில் முதலில் யார் என்று அடையாளம் தெரியவில்லை. அவள் மேலும் அருகில் வந்தாள்.

"பி. . .ரு. . .ந். . .தா!" வியப்பும் திகைப்பும், ஒன்றாகச் சேர, உணர்ச்சி வசப்பட்டுக் கத்திவிட்டேன். அவளைப்பார்க்க வேண்டும் என்ற என் விருப்பம் இன்றிரவு இந்த விதமாக நிறை வேறும் என்று நினைக்கவில்லை.

ஆனால், ஏனோ எனக்கு அப்பொழுது மகிழ்ச்சியாகத் தோன்றவில்லை. தயவுசெய்து என்னைப் புரிந்துகொள்ளுங்கள். என் மனம் முழுவதும் ஒரு விதமான விரக்தியாலும், வெறுமையாலும் நிரம்பியிருந்தது. நான் பிருந்தாவை நேசித்ததைக் காட்டிலும், அவளை தேசித்துத் தோல்வியடைந்து விட்டேன் என்ற உணர்ச்சியை அதிகமாகக் காதலித்தேன் என்று நினைக்கிறேன். அந்த நிலை அப்படிப்பட்டது. அதனால்தான் அவள் வருகை எனக்குச் சந்தோஷத்தை ஏற்படுத்தவில்லை. இந்த உலகில் இனி எதுவுமே எனக்குச் சந்தோஷத்தை ஏற்' ?த்தாது என்று புரிந்து விட்டது.

"என்னைக் குடிக்க வேண்டாம் என்றும் இப்படி உடல் நலனைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம் என்றும் சொல்லத் தானே வந்தாய்."

அவள் பதில் பேசவில்லை.

"நீ எதுக்காக வந்தாய் என்று எனக்குத் தெரியும். எப்படித்தெரியும் என்று நீ கேட்கவே இல்லையே?"

"எப்படித் தெரியும்?"

"பல வருடங்களுக்கு முன்னால் பெங்காலி எழுத்தாளர் சரத்சந்திரர் இதே போன்ற சம்பவத்தை எழுதியிருக்கிறார்." சிரித்தேன் வெறுப்போடு. "உனக்குச் சந்தோஷமாக இருக்கிறதா? நாமும் அதே போல் வரலாற்றில் நிலைத்து நிற்கப் போகிறோம்."

அவள் அதற்கும் பதில் சொல்லவில்லை. என் கோபம் மேலும் அதிகரித்தது.

"இதெல்லாம் உன்னால்தான். உன்னால்தான் நடந்தது. நான் கோழை ஒன்றுமில்லை. உலகத்தையே எதிர்த்து நின்றாவது உன்னைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொன்னேன். ஏதோ வேதாந்தம் சொன்னாய். விதவையாக வாழ்வதைவிட கன்னிப் பெண்ணாக வாழ்வதைத்தான் விரும்புவதாக மொழிந்தாய். மேலும் இதெல்லாம் எனக்காகத்தான் என்றாய். கடைசியில் வேறு எவனையோ திருமணம் செய்துகொண்டாய். உன் செண்டிமெண்டுகளால் நம் இருவரின் வாழ்க்கையையும் பாழடித்துவிட்டாய். இப்பொழுது இன்னொரு அறிவுரை வழங்குவதற்கு வந்திருக்கிறாய். மன்னித்துக்கொள். உன் அறிவுரைகள் எனக்குத் தேவையில்லை. என்னால் குடியை விட முடியாது."

"நான் அதைச் சொல்வதற்காக வரவில்லை ஆனந்தன்?."

"பின்னே"

"பைரவமூர்த்திக்குப் பணம் தரவேண்டாம் என்று சொல்லத்தான் வந்தேன்."

இம்முறை நான் உடனே பதில் சொல்லவில்லை. சற்று நேரம் பொறுத்துச் சொன்னேன். "நீ சொல்லப் போகும் மற்ற விஷயங்கள் கூட எனக்குத் தெரியும்." என் கணவன் என்னை ரத்த விளாராய் விளாசினாலும் சரி, நீ கற்சிலையாக இருந்து கொள்., இது கணவன் மனைவிக்குள் இருக்கும் விஷயம்" என்பாய். "என்னால் அப்படி இருக்க முடியாது" என்பேன். 'தரளாவின் சொத்து இது. இதை எடுத்துக் கொடுக்கும் உரிமை உனக்கு ஏது?" என்பாய். இதோ பார் பிருந்தா! இதைச் சொல்லும் உரிமை உனக்கு இல்லை. சமுதாயம் விதித்த கட்டுப்பாடுகள்', நெறிமுறைகள் எல்லாவற்றையும் விட்டு விட்டேன். ஒரு காலத்தில் பிருந்தா என்ற பெண்ணைக் காதலித்தேன். உன்னை இல்லை. நீ வேறு யாரோ. அந்தப் பெண்ணிற்காக நான் எதை வேண்டுமானாலும் செய்வேன். அதை மறுக்கும் உரிமை உனக்கு இல்லை. நீ என்று இல்லை. என்னை யாராலுமே தடுக்க முடியாது. "

அவள் விழிகளில் நீர் தளும்பியது. "இப்படி இருந்தால் உன்னிடம் எதுவுமே மிஞ்சி இருக்காது ஆனந்தன். உடல் நலம் கூட நாசமாகிவிடும்." என்றாள்.

அவள் தலையில் அடித்துக்கொண்டே "கடவுளே! நான் என்ன செய்வேன்?" என்று முணுமுணுத்துக் கொள்வது கேட்டது.

"அந்தக் கடவுள்கூட எனக்கு எந்த ஆலோசனையும் தரவில்லை பிருந்தா, கடந்த காலத்தில் நமக்கு அவர் தந்த எந்த யோசனையுமே சரியாக இல்லை."

அவள் ஒரு முடிவுக்கு வந்தவள் போல் "நான் இங்கிருந்து போய் விடுகிறேன்" என்றாள்.

"எங்கே?"

"எங்கே என்று தெரியாது. நான் போய் விட்டால், உனக்கு பைரவமூர்த்தியின் தொல்லை இருக்காது."

நாற்காலியை விட்டு எழுந்துகொண்டேன். "மிரட்டுகிறாயா?" என்று கத்தினேன். எல்லோரும் என்னை மிரட்டுகிறவர்கள்தான். நீ, உன் கணவன், என்னுடைய மாமனார், என் மனைவி. . . "என்குரல் கம்மி விட்டது." இதோ பார் பிருந்தா. சத்தியம் செய்து சொல்கிறேன். என்னைக் காப்பாற்றுவதற்காக நீ இந்த இடத்தையும் விட்டுப் போய் விட்டாயானால் அடுத்த நிமிடம் என் பிணத்தைத்தான் பார்ப்பாய்."

அவள் சிரிக்க முயன்றாள். "ஒரு பெண்ணால் இந்த உலகத்தில் தனியாக வாழ முடியாதா ஆனந்தன்?"

நான் பதில் சொல்லவில்லை.

"போகட்டும் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வுதான் என்ன? நீயே சொல்லு எனக்காக வாழ்நாள் முழுவதும் என் கணவனுக்குப் பணத்தைக் கொடுத்துக்கொண்டே இருக்கப் போகிறாயா?"

"அவனைப் போலீஸில் பிடித்துக்கொடுத்து விடுகிறேன்."

அவள் சிரித்துவிட்டு "அப்பொழுதும் நான் தனியளாகத் தானே ஆவேன்" என்றாள்.

"நானும் உன்னுடன் வந்து விடுகிறேன் பிருந்தா. இருவருமாகச் சேர்ந்து எங்கேயாவது போய் விடலாம்."

மின்னல் வெளிச்சத்தில் விரக்தி கலந்த புன்னகையுடன் அவள் என்னை நோக்குவது தென்பட்டது. அதற்குள் அவளே சொன்னாள்.

"இதே வார்த்தையைத் திருமணமான முதல்நாளே கூடச் சொன்னாய். ஆனால் அப்பொழுது இருந்த ஆவேசம்

இப்பொழுது இல்லை. இருக்க வேண்டுமென்று நானும் விரும்பவில்லை. மனைவியை விட்டுவிட்டு வருவது அவ்வளவு சுலபமான வேலை என்று நினைத்து விட்டாயா? நெஞ்சின் மீது கையை வைத்துச் சொல்லு. அதுவும் திருமணமான ஒரு பெண்ணிற்காக."

நான் மௌனமாக இருந்துவிட்டேன். அவள் சொன்ன வார்த்தைகளில் இருந்த உண்மை என்னை ஏளனம் செய்து கொண்டிருந்தது. அவள் எதிர்காலம் உண்மையிலேயே என்னைப் பயமுறுத்திக்கொண்டிருந்தது. அவள் சொன்னதற்குப் பதில் சொல்வதுபோல் சொன்னேன். "என்னை இப்படியே விட்டுவிடு பிருந்தா. வாழ்க்கையின் பாதையை முடிவு செய்பவர்கள் நாம் இல்லை. எப்படி நடக்கிறதோ அப்படியே நடக்கட்டும்."

"அப்பொ... இந்தக் குடியை விட்டுவிடுவாயா?"

"அதை மட்டும் கேட்காதே." சற்று பொறுத்துச் சொன்னேன். "உனக்குத் தெரியாது பிருந்தா. ஒவ்வொரு இரவும் எனக்கு ஒரு நரகம். உன்னைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருப்பேன். அப்பொழுதெல்லாம் பைரவமூர்த்தியின் கைகளில் உன்னை ஊகித்துப் பார்க்கும்போது உறக்கமே வராது. இப்பொழுதோ ரத்த விளாராய் கிடக்கும். உன் உடலைப்பற்றி நினைக்கும் போது தூங்க முடியவில்லை. இதையெல்லாம் கேட்பவர்களுக்குச் சிரிப்பாய்த்தான் இருக்கும். ஆனால் என்னைப் புரிந்து கொண்டவர்களுக்குத்தான் தெரியும் அந்த வேதனை."

அவள் ரொம்ப நேரம் அப்படியே மௌனமாக உட்கார்ந்திருந்தாள். விட்டுவிட்டுப் பெய்துகொண்டிருந்த மழையின் சத்தத்தைத் தவிர வேறு எந்த ஓசையும் இருக்க வில்லை. இடைஇடையே தொலைவில் இடி இடித்துக் கொண்டிருந்தது.

அவள் அவ்வாறு எவ்வளவு நேரம் இருந்தாளோ தெரியாது, என்ன யோசித்துக்கொண்டிருந்தாள் என்றும் புரியவில்லை. கால்களை ஸ்டூல் மீது வைத்துக்கொண்டு, சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். எலும்புக் கூடாய் இருந்தாள் அவள். தாய்மையின் சாயல்கள் மட்டுமே அவளை ஒரு பெண்ணாக அடையாளம் காட்டிக்கொண்டிருந்தன. அவள் ரத்தத்தை முழுவதும் உரிஞ்சி எடுத்துவிட்டான் அந்த பைரவமூர்த்தி. நான் என்னுடைய யோசனைகளில் மூழ்கியிருந்தபோது...

அவள் மெதுவாகக் குனிந்து என் கால்களை ஒருமுறை தொட்டுவிட்டுத் திரும்பினாள்.

அப்பொழுது பூமியையே ஒளி வெள்ளத்தில் மூழ்கடிப்பது போல் வானத்தில் மின்னியது.

அந்த மின்னல் வெளிச்சத்தில் அவள் முகத்தில் தென்பட்ட உணர்ச்சி என் கண்களில் அப்படியே நிலைத்து விட்டது. இமைக் கோடியில் பனித்த நீர்த்திவலை எதிர்காலச் சரித்திரத்தைச் சொல்லிற்று அவள் என்ன தீர்மானித்துக் கொண்டிருக்கிறாள் என்பதைத்தெரிவிக்கும் உணர்ச்சி அது.

அது புரிந்ததுமே சரேலென்று நாற்காலியை விட்டு எழுந்தேன்.

அதற்குள் அவள் வாசலைத் தாண்டிக்கொண்டிருந்தாள்.

"நில்லு பிருந்தா!" கத்தினேன். அவள் நிற்கவில்லை.

இருளில் கத்தினேன். "என்னைக் காப்பாற்றுவதற்காக யாருக்குமே தெரியாத இடத்திற்குப் போய்விட வேண்டும் என்று நீ முடிவு செய்தால்... உன் வயிற்றில் உள்ள குழந்தையின் மேல் ஆணை. நான் நானாக இருக்கமாட்டேன். நினைவில் வைத்துக் கொள்."

அவள் நின்றாள்.

திரும்பிப் பார்த்தாள்.

சிரித்தாளா? என்னவோ.

என் வார்த்தைகள் அவள்முடிவை மாற்றிக்கொள்ளும்படி செய்தன. முற்றிலுமாக இல்லை. ஓரளவுக்கு.

அதன் விளைவுதான் கோபிசந்த்.

கோபிசந்த் சொன்ன கதை

ஏற்பாடுகள் எல்லாம் முடிந்துவிட்டன.

நான் எதிர்ப்பார்த்ததை விட சில வேலைகள் சுலபமாக நடந்தேறிவிட்டன. பிரபாகருக்குத் தரளா எழுதியிருந்த கடிதம் என் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியது.

செங்கல்பட்டிற்கு வெகு தொலைவில், காட்டிற்கு நடுவில், எங்களுடைய பாக்டரி இருந்தது. அங்கே தபால் போக்கு வரத்து வசதி கிடையாது. அதனால் பேக்டிரியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் செங்கல்பட்டு போஸ்ட் ஆபீசுக்குப் போய்த் தபால்களைப் பெற்றுக்கொள்வது வழக்கம்.

அதில் கிடைத்தது தாய் மகனுக்கு எழுதிய கடிதம்.

பிரபாகர்,

இவ்விடத்தில் நிலைமை எதுவும் சரியாக இல்லை. சிற்சில விஷயங்கள் தெரிந்த போது என் மனம் முற்றிலும் கலங்கிவிட்டது. எந்தத் தாயுமே மகனிடம் தந்தையைப் பற்றிச் சொல்ல விரும்பமாட்டாள். ஆனால் இந்தச் சூழ்நிலையில் உன்னிடம் தவிர வேறு யாரிடம் போய்ச் சொல்ல முடியும்?

உன் தந்தைக்கு மதுரையில் இன்னொரு மனைவி இருக்கிறாள். வியப்படைந்துவிட்டாயா? இந்தச் செய்தி

தெரிந்தபோது நானும் நம்பவில்லை. ஆனால் சுயமாக ஒரு மகள் தன்னுடைய தந்தையைத் தேடிக்கொண்டு வந்தபோது, யதேச்சையாகச் சந்தித்த ஒரு இளைஞன் அப்படியே உன் தந்தையின் ஜாடையில் இருப்பது... இதையெல்லாம் பார்க்கும் போது, அந்த உண்மையை நானும் ஜீரணித்துக்கொள்ள வேண்டியிருந்தது. இதெல்லாம் பொய் என்றும், நானே எதையோ கற்பனை செய்துகொண்டு பயப்படுகிறேன் என்று நீ எண்ணிவிட வேண்டாம். இந்தத் தரளா வாழ்க்கையில் எதற்குமே பயப்பட மாட்டாள் என்று உனக்குத் தெரியும்.

அதோடு எனக்குத் தெரிந்த இந்தச் செய்தி உண்மைதான் என்பதைப்பற்றியும் எனக்கு ஐயம் இல்லை. நான் இதைப்பற்றிய உண்மையை முழுவதுமாகத் தெரிந்துகொண்ட பிறகுதான் உனக்கு எழுதுகிறேன்.

சில நாட்களில் திருமணம் செய்துகொள்ளப் போகிற உன்னிடம் இந்த விஷயங்களை எல்லாம் தெரிவித்து, உன் மனதைக் கலங்கடிப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. ஆனால் கடைசியாகத் தெரிவிப்பதை விட முன்கூட்டியே தெரிவிப்பது நல்லது இல்லையா. நாங்கள் இருவரும் பிரிந்துவிடப்போவது உனக்கு முன்பே தெரிந்திருந்தால் மனதளவில் தயாராக இருப்பாய். உன் திருமணத்தை எண்ணித்தான் நான் இதை ஒத்திப்போடுகிறேன்.

உன் தாய் செய்யும் காரியம் உனக்கு முட்டாள்தனமாகத் தென்படலாம். ஆனால் எனக்குச் சில பலமான கருத்துக்கள் இருக்கின்றன. ஒரு ஆண் செய்த அநியாயத்திற்கு என்னால் அடிபணிந்து இருக்க முடியாது. அதிலும் உன் தந்தையின் ஒரு மனைவி வெளி நாட்டிலிருந்து திரும்பிவந்துகொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், இன்னொரு மனைவி மதுரையில் அவருக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் இனி இவருடன் "எல்லாவற்றையும் மறந்து போய்" குடும்பம் நடத்த என்னால் முடியாது.

நான் உன்னிடமிருந்து எதிர்பார்ப்பது என்னவென்றால், நீ எந்தப் பக்கத்தில் இருக்கிறாய் என்று முடிவு செய்துகொள். என் பக்கத்தில் இருந்தால், நீ எப்படியும் சட்டப்படிப்புப் படித்தவன் என்பதால் இந்த விவகாரத்தை எப்படி செட்டில் செய்வது என்று முடிவு செய்யும் பொறுப்பை நீயே எடுத்துக்கொள். இந்த விஷயம் தெரிந்ததிலிருந்து நான் அவருடன் பேசுவதை நிறுத்திவிட்டேன்.

ஒருக்கால் நீ உன் தந்தையைச் சப்போர்ட் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தால், உன் தங்கைகளான என் இரு மகள்களையும் கூட்டிக்கொண்டு வேறு லாயரின் உதவியோடு நான் இந்த விவகாரத்தைத் தீர்த்துக்கொள்கிறேன். இந்தக்கடிதத்தைப் படித்து விட்டு அவசர அவசரமாக ஓடிவந்து எனக்கு அறிவுரைகள் வழங்க முயற்சி செய்யாதே. உன் தாயைப்பற்றி உனக்கு நன்றாகத் தெரியும் இல்லையா? ஒரு காலை உடைத்துவிட்டாவது தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்கள் என்று வாதாடும் பிரிவைச் சேர்ந்தவள்.

உன் திருமணத்திற்கு மூன்று நாட்கள் முன்னதாக வந்து விடு. இங்கே நடந்த விஷயங்களை வெளியே மூச்சு விடாதே. பிற்பாடு உலகத்திற்கு எப்படியும் தெரியாமற் போகாது. இந்தத் திருமணம் மட்டும் நடந்து முடியட்டும். முக்கியமாக நான் உனக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால் ஏதோ கொடுமை நிகழ்ந்துவிட்டதென்றும், உன் தாய்க்கு அநியாயம் நேர்ந்து விட்டதென்றும், கலங்கிப்போய்விடாதே. காலங்காலமாகப் பெண்களுக்கு இது போன்ற அநியாயங்கள் நிறையவே நிகழ்ந்து வருகின்றன. இந்த விஷயத்தில் சிறப்பு என்னவென்றால் அநீதி இழைக்கப்பட்ட பெண்தான் யார் என்பதைக் கணவனுக்கு நிரூபிக்க முடிவு செய்துவிட்டாள். வாழ்நாள் முழுவதும் நினைவு இருக்கும் விதமாகப் பாடம் கற்பிக்கத் தீர்மானித்துவிட்டாள். ஆனந்தன் மைனஸ் தரளா, இண்டஸ்ட்ரீயில் அவரை எங்கே கொண்டு போய் நிற்க வைக்கும் என்று எனக்குத் தெரியாதா. ரத்தத்தின் காரணமாக

நீ அவருக்குப் பரிந்துகொண்டு வர நினைத்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை. உன் முடிவை மறு தபாலில் தெரியப்படுத்தவும்.

உன் தாய்
தரளா.

கடிதத்தைப் படித்து முடித்த என் இதழ்களில் குறுநகை படர்ந்தது. நான் எதிர்பார்த்ததை விட பலன் அதிகமாகவே கிடைத்துவிட்டது. பாவம் ஆனந்தன்.

இத்துடன் இது நிற்கப் போவதில்லை. இன்னும்... இன்னும் மனதளவில் துன்பத்தை அனுபவிக்க வேண்டும். இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன் என் தாய்க்கு இழைத்த துரோகத்திற்கு, எஞ்சிய வாழ்க்கை முழுவதும் மனம் வெதும்பி சாகவேண்டும்.

பிரபாகரின் திருமணத்திற்கு முதல்நாள் இந்த நாடகத்திற்குக் கடைசி திரையை இறக்க வேண்டுமென்று முடிவு செய்தேன்.

இந்தக் கடிதம் எனக்கு ரொம்பவும் உபயோகமாக இருக்கும் என்று அதைப் பத்திரமாக எடுத்து வைத்தேன்.

மேலும் நான்கு நாட்கள் கழிந்தன. நான் நினைத்தாற் போலவே கல்யாணத்திற்காகப் பிரபாகரிடமிருந்து ஒருவாரம் விடுமுறை வேண்டும் என்று அப்ளிகேஷன் வந்தது. சாங்ஷன் செய்தேன்.

திருமண அழைப்பிதழைக் கொடுப்பதற்காக பிரபாகர் வந்தான். வாழ்த்துக்களைத் தெரிவித்தேன்.

"நீங்கள் கண்டிப்பாக வரவேண்டும் சார்" என்றான்.

"வருகிறேன்" என்றேன். வராமல் எப்படி இருக்க முடியும்? என்று மனதில் நினைத்துக்கொண்டேன். எல்லா விஷயங்களும் ஒரு முடிவுக்கு வரப் போவது அப்பொழுதுதானே.

நான் பிரபாகருடன் பேசிக்கொண்டிருந்தபோது எங்கள் ஃபேக்டரியிலிருந்து போன் வந்தது. அங்கிருந்து எங்கள் மேனேஜர் பேசினார்.

"நேற்று இரவு நம் பேக்டரி அலுவலகத்தில் பணம் திருட்டு போய்விட்டது சார். இருபத்தி ஐயாயிரம் வரையில் ரொக்கம் குறைகிறது" என்றார்.

"உண்மையாகவா?" குரலில் பரபரப்பைக் காட்டிக் கொண்டே சொன்னேன். "போலீசில் ரிபோர்ட் கொடுத்தீங்களா?"

"கொடுத்தாகிவிட்டது சார்."

"பிரபாகர் இங்கேதான் இருக்கிறான். அவனிடருந்தும் ஒரு ஸ்டேட்மெண்ட் வாங்கிக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனை வைத்துவிட்டேன்.

விஷயத்தை முழுவதும் கேட்ட பிறகு பிரபாகரின் முகம் வாடிவிட்டது. "நான் விடுமுறையில் வரும்போது சாவியை மேனேஜரிடம் கொடுத்தேன். அப்பொழுது பணம் சரியாகத் தான் இருந்தது" என்றான்.

"இரவு நடந்த திருட்டுக்கு நீ என்ன செய்வாய்? நடந்ததை அப்படியே பேப்பரில் எழுதிக் கொடு. இன்ஸ்பெக்டர் வந்தால் தருகிறேன். கல்யாணச் சந்தடியில் இருக்கும் உனக்கு இந்த ரகளையெல்லாம் எதற்கு?'' என்று அவனிடமிருந்து ஸ்டேட்மெண்டை வாங்கிக்கொண்டேன். பிரபாகரின் முகம் களை இழந்து தென்பட்டது.

"நீ ஒன்றும் கவலைப்படாதே. இருபத்தைந்தாயிரம் நமக்கு ஒரு பொருட்டு இல்லை" என்று சொல்லிவிட்டு அவனை அனுப்பி வைத்தேன்.

அவன் போனபிறகு மறுபடியும் செங்கல்பட்டிற்குப் போன் செய்தேன்.

"பிரபாகருடைய க்வார்டர்ஸின் டுப்ளிகேட் சாவி நம்மிடம் தானே இருக்கு?"

"ஆமாம் சார்."

"சரி. நான் சொன்னது போலவே செய்து விடுங்கள்." போனை வைத்துவிட்டேன்.

மேனேஜர் நம்பிக்கைக்கு உரியவர். என்னிடம் பத்து வருடங்களாக வேலை பார்த்து வருகிறார்.

அந்த விதமாகப் பிரபாகர் நான் போட்ட வலையில் முழுவதுமாகச் சிக்கிக்கொண்டுவிட்டான்.

அவன் மேல் எனக்கு எந்த விதமான விரோதமும் இல்லை. அவனை முற்றிலும் மாட்ட வைக்கவேண்டும் என்ற எண்ணமும் இல்லை. எனக்கு வேண்டியதெல்லாம் ஆனந்தனைப் பழிவாங்குவது ஒன்றுதான்.

பிரபாகரின் திருமணத்திற்கு இன்னும் ஒரே நாள் தான் இருந்தது.

அவன் தாய் தான் எழுதிய கடிதத்தைப் பற்றிக் கேட்டிருப்பாள். கிடைக்கவில்லை என்று சொல்லியிருப்பான். கடிதத்தில் தான் எழுதியிருந்த விஷயங்களைப் பற்றிச் சொல்லுவாளா? இல்லை திருமணச் சந்தடியில் எதற்குச் சொல்லவேண்டும் என்று சும்மா இருந்து விடுவாளா? அங்கே தாய், தந்தை, மகன்... மூவருக்குமிடையே எந்த விதமான நாடகம் நடக்கிறதோ பார்க்க வேண்டும் என்ற என் விருப்பத்தை வலுக்கட்டாயமாக அடக்கிக்கொண்டேன்.

மறுநாள் திருமணம்!

நாளைக்கு நான் செய்யப்போகும் காரியம் வெடிகுண்டு போல் வெடிக்கப்போகிறது என்று எனக்குத் தெரியும், நான் யோசித்தது அதைப் பற்றி இல்லை.

அம்மாவைப்பற்றி.

தன்னை ஏமாற்றியவனைப் பற்றி எனக்கு முழுவதுமாகத் தெரிந்துவிட்டதென்றும், யாருடைய ரத்தத்தைப் பகிர்ந்து கொண்டு நான் பிறந்தேனோ அந்த ஆளை முழுவதுமாக பழிவாங்கிவிட்டேன் என்றும் அம்மாவிடம் சொல்வதா வேண்டாமா?

இப்பொழுதே சொல்லக் கூடாது.

தரளாவைப் போன்றவள் இல்லை அம்மா. எவ்வளவு பெரிய தவறு செய்தவனாக இருந்தாலும் அம்மா மன்னித்து விடுவாள். அதனால்தான் இந்த விஷயம் முழுவதுமாக முடியும்வரை அம்மாவுக்குத் தெரியக்கூடாது.

எனக்கு எதுவும் தெரியாது என்று ஆனந்தன் டபாய்ப்பாரா? ஒருக்கால் அப்படிச் செய்ய மாட்டாராயிருக்கும். எங்க இருவரையும் அருகருகில் பார்த்த யாருமே அவருடைய வார்த்தைகளை நம்பமாட்டார்கள். அவ்வளவுதூரம் எதற்கு? அவர் மனைவி என் சார்பில் சாட்சியம் சொல்லுவாள்.

என் நம்பிக்கை எல்லாம் அவள் மீதுதான் இருந்தது. இந்த நாடகத்திற்குக் கடவுள் வாழ்த்துப் பாடப் போவது அவள்தான். மகனின் திருமணத்திற்காக, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு குடும்ப மானத்தைப் பாதுகாத்து வருகிறான். இப்பொழுது கல்யாண மண்டபத்தில் அந்தக் குடும்பமானத்தை காற்றில் பறக்கவிடப்போகிறேன். அவள் கோபம் முழுவதும் ஆனந்தனின் பக்கம் திரும்பும். என் ஊகத்தின்படி எல்லா விஷயங்களையும் வெளிப்படுத்திவிடுவாள்.

அதைவிட எனக்கு வேறு என்னவேண்டும்? கல்யாணத்திற்கு வந்திருந்த நண்பர்கள், உறவினர்களின் முன்னிலையில் மனைவியால் குற்றம் சாட்டப்படுவதை விட ஒரு கணவனுக்கு வேறு அவமானம் என்ன வேண்டும்?

மறுநாள், திருமணத்திற்கு இன்னும் இரண்டுமணி நேரம் இருந்த போது போன் செய்தேன்.

"ஹலோ. . . யார் பேசுவது?" என்று கேட்டேன்.

"ஆனந்தன் ஹியர். நீங்க யார்?"

லேசாகச் சிரித்தேன். "நான் . . . பிருந்தாவின் மகன்" என்றேன் மிகத்தெளிவாய். மறுமுனையில் இருந்த நபர் துள்ளி விழுந்திருப்பாரா? ரிசீவர் பற்றியிருந்த கை நடுங்கி இருக்குமா? என்னவோ. . . எனக்குத் தெரியாது.

பரபரப்புடன் குரல் மட்டும் கேட்டது. "யாரு?"

"இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் பிருந்தா நினைவிருக்கிறதா? அவள் மகன்."

"கோபிசந்த்!!"

"ஆமாம். கோபிசந்த்தான்."

"எங்கே இருக்கிறாய்? நீ எங்கே இருக்கிறாய் கோபிசந்த்?"

சிரித்தேன். "எதுக்கு இவ்வளவு பரபரப்பு? இன்னும் ஒரு மணி நேரத்தில் வரப் போகிறேன், போலீஸ் இன்ஸ்பெக்டருடன் சேர்ந்து."

"இன்ஸ்பெக்டரா?"

"ஆமாம். உன் மகன் பிரபாகர் வேலை பார்க்கும் பாக்டரியில் திருட்டு நடந்துவிட்டது. இன்று அவனுடைய க்வார்டர்ஸில் திருட்டு போன பணத்தில் ஒரு பகுதி கிடைத்திருக்கிறது. அரெஸ்ட் வாரெண்ட் எடுத்துக்கொண்டு இன்ஸ்பெக்டருடன் சேர்ந்து நான் வரப் போகிறேன் மிஸ்டர் ஆனந்தன். திருமணத்திற்கு வந்தவர்களுடன் பேசிக் கொண்டிருப்பாயோ இல்லை இந்த ஒரு மணி நேரத்தில் ஜாம் னுக்காக முயற்சி செய்வாயோ உன் இஷ்டம்."

"கோபிசந்த்! நான் உடனே உன்னைச் சந்திக்க வேண்டும்."

"உடனே முடியாது. இன்னும் ஒருமணி நேரம் பொறுத்திருக்க வேண்டும். கல்யாண மண்டபத்தில் இன்னொரு

கிளைமாக்ஸ் நிகழப் போகிறது. அதற்கும் தயாராக இரு. என்னைப் பார்த்ததுமே உன் மனைவி உன் மீது பாயத் தொடங்கிவிடுவாள். சில நாட்களுக்கு முன்னால் நான் ஆடிய நாடகத்தின் பாதிப்பு அவள் மனதில் எரிமலையாகக் கொதித்துக் கொண்டு இருக்கிறது. என்னைப் பார்த்ததுமே அந்த எரிமலைக் குழம்புப் பொங்கி உன்னைத் தகித்து விடப்போகிறது. உன் குடும்பம் சர்வநாசமாகப் போகிறது, உற்றார் உறவினர்களின் முன்னிலையில், நிறைந்த கல்யாண மண்டபத்தில்."

"ஆனால்..."

"நில். என்னைச் சொல்ல விடு. நான் சொல்ல வேண்டியது இன்னும் முடியவில்லை. இதை எல்லாம் நான் ஏன் செய்கிறேன் என்று உனக்குத் தெரிந்தே இருக்கும். உன்னிடம் ஏமாந்து போன என் தாய் இன்னொரு கயவனுக்கு மனைவியாக, உன் மகனுக்குத் தாயாக வாழ்நாள் முழுவதும் நரகத்தை அனுபவித்தாள். என் தாயை ஏமாற்றிய நீ மட்டும் மனைவி குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறாய். இன்றிலிருந்து உனக்கு நரகம் தொடங்கிவிட்டது. அதற்கு இதுதான் முதல் படி."

"கோபிசந்த்! ப்ளீஸ்... நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்டுக்கொள்."

"ஏன் கேட்க வேண்டும்? என்ன சொல்லப் போகிறாய் சொல்வதற்கு என்ன இருக்கு உன்னிடம்? நான் உனக்குப் பிறந்த மகன் இல்லை என்பாயா? அதற்கு டாக்டர் பரிசோதனை கூடத் தேவையில்லை. நம் இருவரையும் அருகருகில் நிற்க வைத்தாலே போதும். உன்னைப் போன்ற வர்கள் இருப்பார்கள் என்றும், ரத்தப் பரிசோதனைகளுக்கு, சாட்சியங்களுக்கு அவர்கள் இணங்கமாட்டார்கள் என்றும் தெரிந்துதான் கடவுள் ஜெனடிக்ஸை உருவாக்கினார். நீ ஆயிரம் குரலெடுத்து மறுத்தாலும் நான் உன் மகன் என்ற உண்மையை யாராலும் மறுக்க முடியாது."

"நீ என்மகன்தான் கோபிசந்த் இல்லை என்று மறுக்கவில்லை." மறுமுனையிலிருந்து குரல் வேண்டுகோள் விடுப்பது போல் கேட்டது. இவ்வளவு சுலபமாக அவன் ஒப்புக்கொள்வான் என்று எதிர்பார்க்கவில்லை. மறுபடியும் ஏதாவது திட்டம் போடுகிறானோ என்று நினைத்தேன். அதையே சொன்னேன்.

"ஓ ஹோ... இப்பொழுது வழிக்கு வந்து விட்டாய் என்று சொல்லு. இன்னும் என்ன சொல்லப் போகிறாய்? உன் தவறு எதுவும் இல்லை என்றும், விதிவசத்தால் என் தாயை விட்டுப் பிரிந்து, அவளை மறந்து போவதற்காக இன்னொரு திருமணம் செய்து கொண்டேன் என்று சொல்லப் போகிறாய். அப்படித்தானே. சரி... அதையெல்லாம் இன்னும் சற்று நேரம் கழித்து எல்லோருக்கும் முன்னால் சொல்லிக்கொள்ளலாம். உண்மையில் இப்பொழுது நான் உனக்குப் போன் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. இந்த ஒரு மணி நேரமும் நீ மனம் கலங்கித் தவிக்க வேண்டும். என்ன செய்யலாம் என்று நிலைமுடியை பிய்த்துக் கொள்ளவேண்டும். இதுபோன்ற விளையாட்டுகள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதான் ஸ்ரீதேவி மற்றும் தேவிகா என்ற பெயர்களில் நாடகமாடச் செய்து உன் மனைவியின் மன அமைதியைக் குலைத்துவிட்டேன். இப்பொழுது மகனின் அரெஸ்ட் மூலமாக அவள் கோபம் கட்டு மீறி விடும். அது வெள்ளமாக மாறி உன்னை மூழ்கடிக்கப் போகிறது. பத்து பேருக்கு முன்னால் அதுபோன்ற நாடகத் தனமான திருப்பத்திற்காகவே நான் இத்தனைக் கஷ்டப்பட வேண்டியிருந்தது. அவசியம் இல்லாவிட்டலும் உன் மகனான பிரபாகரைத் தற்காலிகமாக இதில் சிக்க வைக்க வேண்டியிருந்தது."

"பிரபாகர் என் மகன் இல்லை கோபிசந்த்."

மறுமுனையிலிருந்து வந்த சொற்கள் என்னை நிலைகுலையச் செய்துவிட்டன. அதுவரையில் சிகரத்தின் மீது அமர்ந்து கொண்டு பேசியவனுக்குத் திடீரென்று சிகரம்

சரிந்து விட்டது போல் தோன்றியது. உடனே சமாளித்துக் கொண்டு சிரித்தேன்.

"மறுபடியும் ஏதாவது புதுத் திட்டம் தீட்டுகிறாயா?"

"இல்லை கோபிசந்த். இது உண்மை. ஆனால் ஒருக்கால் என்னால் இதை நிரூபிக்க முடியாமல் போகலாம். என்னிடமுள்ள சாட்சிகளை ஆதாரங்களை நீ நம்பாமல் போகலாம். நான் சொல்வதெல்லாம் உண்மை என்று நிரூபிக்கக்கூடிய ஒரே சாட்சி இப்பொழுது இந்த உலகத்திலேயே இல்லை. அதனால் கையெழுத்தைக்கூட நம்ப மாட்டாய்."

'அப்பொழுது இருந்து இப்பொழுது இல்லாமல் போய்விட்ட அந்த சாட்சி தான் எது?"

"பிருந்தா!"

"வ்வாட்!!"

"ஆமாம். பிருந்தா ஒருத்தியால்தான் இதற்கு சாட்சி சொல்ல முடியும்."

நான் ஸ்ரீதேவி மூலமாக அவனுக்குச் சொல்லச் சொன்னது நினைவுக்கு வந்தது. தன் தாய் இறந்துவிட்டாள் என்று அவள் ஆனந்தனிடம் சொல்லியிருக்கிறாள். அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு இவன் வேறொரு நாடகம் போடுகிறானோ என்று தோன்றியது. அவன் மேல் மேலும் வெறுப்பு கூடியது. இன்னும் கொஞ்சம் ஆட்டம் காட்ட வேண்டும் போலிருந்தது.

"ஆனால் என் தாய் இறக்கும் முன் என்னிடம் எல்லா விஷயங்களையும் சொல்லிவிட்டாள் மிஸ்டர் ஆனந்தன்."

"என்ன சொன்னாள்?"

"நீ செய்த மோசடியை."

"பொய். பிருந்தா ஒரு நாளும் அப்படிச் சொல்லியிருக்க மாட்டாள்."

"போய்க் கேட்கலாமா?"

"எங்கே?"

"இங்கேதான். என் தாய் உயிரோடுதான் இருக்கிறாள்." நிதானமான குரலில் சொன்னேன்.

"பி...ரு..ந்..தா...உயிரோடு இருக்கிறாளா?"

"ஏன்? செய்தியை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லையா? கதை திசை திரும்பி விட்டதே என்று கவலையாய் இருக்கிறதா?"

"நான் பிருந்தாவை உடனே பார்க்க வேண்டும்."

"இன்னும் ஒருமணி நேரத்தில் நடக்கப் போகிற நாடகத்திற்கு அவளை அழைத்துக்கொண்டு வரமாட்டேன். ஊர் மக்களின் இரக்கம் அவளுக்குத் தேவையில்லை."

"நான் உடனே அவளைப் பார்க்க வேண்டும்." வேண்டுகோள், பதற்றம், அவசரம்... எல்லாம் கலந்த குரலில் அவன் சொன்னான்.

"பயனில்லை" என்றேன் கச்சிதமாய், எந்த மாயை வார்த்தைகளைச் சொல்லி அவளை ஏமாற்றினாயோ, அதே மாய வார்த்தைகளைச் சொல்லி இப்பொழுது அவளைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்வாய். தேவைப்பட்டால், இனி எந்த வழியும் இல்லாமல் போய் விட்டால் உன் மான மரியாதைகள் போகாமால் காப்பாற்றச் சொல்லி அவளுடைய கால்களில் விழுந்து வேண்டுகோள் விடுப்பாய். பிறவியிலேயே பெண்ணிற்கு இரக்கக் குணத்தைத் தந்துவிட்டான் அந்த ஆண்டவன். உன் நிலைமைக்கு இரக்கப்பட்டு என் பிறப்புக்குக் காரணம் நீ இல்லையென்று சொன்னாலும் சொல்பவள் என் தாய். உன்னை அத்தனை சுலபமாகத் தப்பித்துக்கொண்டு போக விடமாட்டேன்.

"முட்டாளே! என்ன நடந்தது என்று நீ உன் தாயை என்னிக்காவது நீ கேட்டிருக்கிறாயா?" அவன் குரலில் முதல் முறையாகக் கோபமும், எரிச்சலும் தென்பட்டன. இந்த முறை தணிந்து போவது என் பங்காயிற்று.

"என்ன கேட்க வேண்டும்?"

"முதலில் போய் என்ன நடந்தது என்று கேள். உண்மை என்னவென்று தெரிந்துகொள்ளாமல் நீயே எதையோ கற்பனை செய்து கொண்டு, ஒரு திருமணம் வீணாக நாசமாகாமல் பார்த்துக் கொள்."

"என் தாயைக் கேட்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. நான் உன் மகன் இல்லை என்று அவள் என்ன, அந்தப் பிரம்மாவே வந்து சொன்னாலும் நான் நம்ப மாட்டேன்."

"நீ என் மகன் இல்லை என்று நான் சொல்லவில்லை."

"பின்னே"

"நீ பிருந்தாவின் மகன் இல்லை என்கிறேன்."

இடி விழுந்தது போல் இருந்தது. அதற்குள் டெலிபோனுக்கு ஏதாவது கோளாறு ஆகி விட்டதா இல்லை அவன் தான் ஏதாவது செய்தானா தெரியாது. லைன் கட் ஆகி விட்டது.

மறுபடியும் டயல் செய்யும் முயற்சி எதுவும் செய்ய வில்லை. அப்படியே சலனமில்லாமல் ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தேன்.

என் காதுகளில் காவேரியின் பேரிரைச்சல் ஹோவென்று கேட்டுக்கொண்டிருந்தது. அவன் சொன்ன வார்த்தைகளே திரும்பத் திரும்ப என் மனதில் சுழன்று வந்துகொண்டிருந்தன. அவன் சொன்னது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதன் பாதிப்பு மட்டும் என் மீது இருந்தது.

போர்க்களத்தில் படை வீரனொருவன் ஆவேசமாகப் போர் புரிந்து கொண்டே முன்னேறிக்கொண்டிருந்தபோது, திடீரென்று ராஜா இறந்து விட்டதாகச் செய்தி தெரிந்தால் எப்படி சிலையாக நின்று விடுவானோ, அதே போல் ஆகிவிட்டேன். அவன்

சொன்ன வார்த்தைகள் மட்டும் உண்மையாக இருந்தால் நான் இது வரை போட்டு வந்த திட்டமெல்லாம் எவ்வளவு அர்த்தமற்றவை என்று புரிந்ததுமே என்னைச் சோர்வு ஆட் கொண்டது. ஆனந்தனின் மேல் கொண்ட பகைமை இப்பொழுது என்னை வாட்டவில்லை. ஆனால், இவ்வளவு நாளாக என்னை வளர்த்து வந்தது என் பெற்ற தாய் இல்லை என்ற செய்தி தான் என்னைப் பெரிதும் வாட்டியது. அப்படியும் என் மனதில் ஏதோ ஒரு மூலையில் கடுகளவு ஆசை ஒட்டிக்கொண்டிருந்தது.

ஆமாம். ஆனந்தன் சொன்னது தவறாக இருக்கலாம். அவன் எதற்கும் துணிந்தவன் மற்றொரு புதிய நாடகம் போடுகிறவனாக இருக்கும்.

போனையே பார்த்துக்கொண்டிருந்தேன். மறுபடியும் அவனுக்கு போன் செய்யத் தோன்றவில்லை. பயமா? என்னவோ! அப்படிப்பட்டதாகவே இருக்கலாம். அவனிட மிருந்து என்ன ருசுவை, என்ன செய்தியைக்கேட்க வேண்டியிருக்குமோ.

நான் இவ்வாறு யோசித்துக்கொண்டிருந்த போதே கதவு திறந்த சத்தம் கேட்டது. அவசரமாக கதவைத் தள்ளிக்கொண்டு வந்த நபர் ஆனந்தன்.

பின்னாலேயே வந்த செகரெட்ரி மன்னித்துக் கொள்ளும் படிப் பார்வையாலேயே வேண்டிக் கொண்டான், அனுமதி இல்லாமல் விசிட்டர் உள்ளே வந்து விட்டதற்கு.

அவனை போகச்சொல்லி ஜாடைக்காட்டினேன்.

நான் எங்கே இருக்கிறேனோ ஆனந்தனுக்கு எப்படித் தெரிந்திருக்குமென்று ஒரு நிமிடம் வியப்படைந்தேன். ஒருக்கால் பிரபாகரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பான்.

செகரெட்ரி வெளியில் போனதும் அவன் என் கைகளை பற்றிக்கொண்டு "கோபீ" என்றான். அவன் குரலில் நான்

அடையாளம் காண விரும்பாத அன்பு, பதற்றம் ஒரு விதமான சஞ்சலம் எட்டிப் பார்த்தன.

"உனக்குக் கோபிசந்த் என்ற பெயரைச் சூட்டி பிருந்தா தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றிக்கொண்டு விட்டாள் போலும்."

"அங்கே திருமணம் நடந்துகொண்டிருக்கிறதா? "அவள் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கேட்டேன் "நடந்து கொண்டிருக்கிறது. உங்களை அழைத்துப் போகத்தான் வந்தேன்."

"ஏன்? க்ரூப் போட்டோ எடுத்துக்கொள்ளவா?" ஏளனமாக கேட்டேன்.

"உன் பேச்சை எல்லாம் அப்புறமாகக் கேட்கிறேன். முதலில் பிருந்தா எங்கே என்று சொல்லு."

"சாரி. சொல்லமாட்டேன். முதலில் உன் சார்பில் நீ சொல்ல வேண்டியதைச் சொல்லு. போனில் நீ சொன்னது எவ்வளவு தூரம் உண்மை?"

"நூற்றுக்கு நூறு உண்மை. கோபி! இந்த விஷயங்களை யெல்லாம் அப்புறமாகப் பேசிக்கொள்வோம். முதலில் பிருந்தாவை அவசரமாக இந்தத் திருமணத்திற்கு அழைத்துப் போக வேண்டும்."

"அவள் வராவிட்டால் திருமணம் நின்றுவிடாது."

"வாத விவாதங்கள், விளக்கங்கள் எல்லாம் அப்புறம் கோபி. முதலில் அம்மா எங்கே என்று சொல்லு. நீ எதுவும் செய்ய வேண்டாம். அவளிடம் நான் வந்திருப்பதாகச் சொல்லு போதும்."

"அதற்குப் பதில் போனிலேயே சொல்லிவிட்டேன் என்று நினைவு. ஒருமுறை அம்மா உன் கண்ணில் பட்டால், உன்

வார்த்தை ஜாலத்தால் அவளை ஏமாற்றிவிடுவாய். இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன்பு, இதே வார்த்தைகளால்தான் அவளை வஞ்சித்தாய். இப்பொழுது மன்னிப்புக் கேட்டுக் கொண்டு சுலபமாகத் தப்பித்துக்கொண்டு விடுவாய்."

"ஆனால் பிரபாகரின் திருமணத்தைத் தான் பார்க்க முடியாமல் தடுத்தது நீதான் என்று தெரிந்தால். அவள் இனி வாழ்நாளில் என்றுமே உன்னை மன்னிக்க மாட்டாள்."

"ஏனோ?"

"பிரபாகர் அவளுடைய மகன் என்பதால்!"

நாற்காலியை வேகமாக பின்னால் தள்ளிவிட்டு எழுந்து நின்று "நீ என்ன பேசுகிறாய்?" என்று கத்திவிட்டேன். அவன் எழுந்து கொள்ளவில்லை. இம்முறை அவன் டாமினேட் செய்வது போல் தோன்றியது. நிதானமான குரலில் சொன்னான்.

"நான் சொன்னது எதுவுமே பொய் இல்லை கோபிசந்த்."

"நீ சொல்வதற்கெல்லாம் சாட்சி இருக்கிறதா?"

"அதான் சொன்னேனே, பிருந்தாதான் சாட்சி என்று. தங்கையாக நீ அனுப்பிய பெண் தன்னுடைய தாய் இறந்து விட்டதாகச் சொன்ன அன்றைக்கு நான் உறங்கவே இல்லை. பிருந்தா இறந்துவிட்டாளே என்ற வேதனை ஒரு பக்கம், என் மகன் என்னவானானோ என்ற கவலை இன்னொரு பக்கம். அந்த வேதனை விரோதிக்குக்கூட வரக்கூடாது. என் மேல் இருக்கும் பகையால் நீ இதை எல்லாம் திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு செய்கிறாய் என்று எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அன்றே நடந்தது என்னவென்று உன் தாய் மூலமாய் உன்னைத் தெரிந்து கொள்ளச் சொல்லியிருப்பேன்."

நான் ஒரு முடிவுக்கு வந்தவன் போல் "சரி. நடந்தது என்னவென்று என் தாய் மூலமாகவே தெரிந்துகொள்கிறேன். நீ போகலாம்." என்றேன்.

"ஆனால் அங்கே திருமணம் ....."

"நடக்கட்டும். எங்களுக்காக அது நிற்க வேண்டியதில்லை."

"ஆனால் அவள் இந்தத் திருமணத்தைப் பார்க்க முடியாமல் போனதற்கு வாழ் நாள் முழுவதும் வருத்தப் படுவாள்."

"அதுக்கு என்னால் எதுவும் செய்ய முடியாது. மேலும் நீ சொன்னதெல்லாம் உண்மைதான் என்ற நம்பிக்கை எனக்கு இன்னும் ஏற்படவில்லை. எல்லாவற்றையும் விட முக்கியமாக என் தாய் இந்த ஊரில் இல்லை. நான்தான் போய்க் கேட்க வேண்டும். நீ சொன்னதெல்லாம் உண்மைதான் என்று தெரிந்தால் அப்பொழுது அழைத்துக்கொண்டு வருகிறேன்." அலட்சியமான குரலில் சொன்னேன்.

அவன் நாற்காலியை விட்டு எழுந்துகொண்டே "வா...போகலாம்" என்றான்.

"எங்கே?"

"எங்கள் வீட்டுக்கு."

"என்னிடம் ஒரே ஒரு ஆதாரம் இருக்கிறது. அதைக் காட்டுகிறேன். அதை நீ நம்பிவிட்டால் அடுத்த நிமிடமே பறந்து சென்று உன் தாயை இந்தத் திருமணத்திற்கு அழைத்து வருவாய். இல்லாவிட்டால் ஒரு தாயை தன் மகனின் திருமணத்தைப் பார்க்க முடியாமல் தடுத்த பாவம் உன்னைத் தான் சேரும்."

இதில் ஏதாவது ஏமாற்று வேலை இருக்குமோ என்று யோசித்தேன். அவன் சொன்னதெல்லாம் ஒருக்கால் உண்மையாக இருந்தால், நான் எதிர்பார்க்காத திருப்பங்கள் எத்தனையோ எனக்குப் பின்னால் நிகழ்ந்திருக்க வேண்டும். அவை என்ன?

எழுந்துகொண்டேன். "வா....போகலாம்" என்றேன்.

இருவருமாகச் சேர்ந்து வீட்டிற்கு வந்தோம்.

தோட்டத்தில் பெரிய பெரிய குடைகள் பொருத்தப்பட்டு இருந்தன. ரிசப்ஷன் அந்த இடத்தில்தான் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் போலும். மக்கள் கூட்டத்தால் அந்த இடமே சந்தடியாக இருந்தது.

அவன் பின் பக்கமாக என்னை அழைத்துச் சென்றான். மனைவி என்னைப் பார்த்து விடக்கூடாது என்பது அவனுடைய எண்ணமாக இருக்கக்கூடும்.

இருவரும் மாடி ஏறி அவன் அறைக்குள் சென்றோம். கீழே இருந்த சூழ்நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட விதமாக மாடியில் ஆளரவமற்று இருந்தது .

அவன் கதவைத் தாழிட்டான்.

வெளியிலிருந்து மங்கள வாத்தியங்களின் இசை கேட்டுக் கொண்டிருந்தது.

அவன் அலமாரியிடம் சென்று தஸ்தாவேஜுகளைப் பாதுகாத்து வைக்கும் அறையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்தான். எத்தனையோ ஆண்டுகளாக அது அந்த இருட்டு அறையில் இருந்திருக்கும் என்று அதைப் பார்த்ததுமே தெரிந்தது. ஆங்காங்கே கிழிந்து, சிதலமான நிலையில் இருந்தது. ஒருக்கால் அவன் அதைப் பல்லாயிரம் தடவை படித்திருப்பான்.

அருகில் வந்து அந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்தான்.

அந்தக் கடிதத்தில் என்னதான் எழுதியிருக்கும்?

படிக்கத் தொடங்கினேன்.

"அன்புள்ள ஆனந்தன்"

ஏதோ சந்தேகம் வந்து சட்டென்று கடைசியில் இருந்த கையொப்பத்தைப் பார்த்தேன். என் சந்தேகம் உண்மைதான். அந்தக் கையெழுத்து என் தாயுடையதுதான்.

கடிதத்தை தொடர்ந்தேன்.

ஆனந்தன் தொலைவில் நின்றபடி கைகளை பின்னாலிருந்த மேஜை மீது ஊன்றிக்கொண்டு என்னையே கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டு இருந்தான். ஒருக்கால் என் முகத்தில் மாறும் உணர்ச்சிகளைக் கவனிப்பதற்காகப் போலும். அவ்வறையில் எறும்பு ஊர்ந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் சூழ்ந்திருந்தது. அந்த நிசப்தத்திலிருந்து என் வாழ்க்கைக்குச் சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான ரகசியம் எனக்குப் புரியத் தொடங்கியது.

உள்ளூரப் பரவியிருந்த உத்வேகம், காட்டாற்று வெள்ளமாகப் பெருக்கெடுத்தும் புயலில் சிக்கிய படகைப் போல் தத்தளித்தேன். மனிதனின் இதயத்தில் நிரந்தரமாக ஒளி வீசிக்கொண்டிருக்கும் நல்ல குணம் என்ற ஒளி என் கண்களைப் பறிக்கும் படியாகச் செய்தது. ஆவேசமும், வேதனையும் ஒன்றாகக் கலந்த உணர்வுடன் "அம்மா...அம்மா' என்று நினைத்துக்கொண்டேன்.

இமயமலையை விட உன்னதமாக உயர்ந்துவிட்ட என் தாயின் தனித்தன்மை என்னை மூழ்கடித்துவிட்டது. தன்னுடைய அன்பினாலும், பரிவினாலும்.

புயலுக்குக்கூட தன் மடியில் இடமளித்துத் தன் கருணையைப் பகிர்ந்தளிக்கும் பூமித்தாய்தான் நினைவுக்கு வந்தாள்.

அவன் சொல்லத் தொடங்கினான்.

இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன் தரளா என்ற பெண்ணின் பிடிவாதத்தினால் இன்னொரு பெண் தன் காதலை

எவ்வாறு தியாகம் செய்ய வேண்டி வந்ததோ, தரளாவின் தந்தை போட்ட மூன்றாம் தரத் திட்டத்தினால் அவள் எவ்வாறு ஒரு கயவனுக்கு மனைவியானாளோ ஆனந்தன் என்ற நபரைக் குடிப்பழக்கத்திலிருந்து மீட்பதற்காக எல்லோரையும் விட்டு விட்டுக் கண் காணாத இடத்திற்கு அவள் போக நேர்ந்ததை... எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான்.

நான் சிலையாக நின்று கேட்டுக் கொண்டிருந்தேன். அவன் ஒவ்வொரு உண்மையாக எடுத்துச் சொல்லச் சொல்ல என் மனதின் மீது சாட்டையால் சுளீர் சுளீர் என்று அடி விழுந்தது போலிருந்தது. எல்லோருமாகச் சேர்ந்து ஒரு பெண்ணை எல்லாவிதமாகவும் துன்புறுத்தியிருக்கிறார்கள் என்ற உண்மை என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது. பைரவமூர்த்தி இறந்துவிட்டான் என்பது இந்தக் கதையின் கிளைமாக்ஸ். அவன் மரணம் என் தாயை விதவையாக்காது. ஆக்கவும் முடியாது. உயிரோடு இருக்கும் போது எந்த விதத்திலும் மனைவியை சந்தோஷமாக வைத்துக் கொள்ளாதவனுக்கு, இறக்கும்போது அவளுடைய மஞ்சள் குங்குமத்தைப் பறித்துக் கொள்ளும் உரிமை இல்லை.

அவன் சொல்லி முடிக்கும்போது வெளியே கதவு தட்டிய சத்தம் கேட்டது.

இருவரும் திடுக்கிட்டோம்.

"என்ன செய்துகிட்டு இருக்கீங்க உள்ளே?" என்ற குரல் கேட்டது. அது தரளாவின் குரல்.

"அங்கே எல்லோரும் உங்களுக்காகக் காத்துக்கிட்டு இருக்காங்க."

அவன் என்னை மறைத்து வைக்க முயற்சி செய்தான். நான் அந்த முயற்சிக்கு ஒத்துழைக்காமல் சுயமாகப் போய்க் கதவைத் திறந்தேன்.

எதிரே தரளா நின்றிருந்தாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம். அவள் அந்தச் சூழ்நிலையில் என்னை அங்கே பார்த்து பயத்துடனோ, கோபத்துடனோ கத்துவாள் என்று நினைத்தேன். அவள் அம்மாதிரி எதுவும் செய்யவில்லை. செயல் மறந்தவளாய் அப்படியே பார்த்துக்கொண்டு நின்றுவிட்டாள்.

நான் சிரித்தேன்.

இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு பெற்ற தாயைப் பார்த்தால் எற்பட்ட மகிழ்ச்சியான சிரிப்பு அல்ல அது. விதி ஆடிய நாடகத்தை எதிர்த்து நின்று நான் ஆடப் போகும் நாடகத்திற்குத் திரை விழப் போகும் முன்னால் சிரித்த கடைசிச் சிரிப்பு.

"நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். சில நாட்களுக்கு முன்னால் நள்ளிரவில் உங்களை அனாவசியமான சந்தேகங்களால் பயமுறுத்திவிட்டேன்" என்றேன்.

அவள் இன்னும் அதே போல் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உங்கள் கணவர் எனக்கு மாமா முறை ஆக வேண்டும். அதே ஜாடை எனக்கும் வந்திருக்கு. அதான் சின்ன பிராக்டிகல் ஜோக் செய்தேன். ஒரு குடும்பத்தை முழுவதுமாக சந்தேகத்தில் ஆழ்த்த முடியுமா முடியாதா என்று நானும் என் நண்பனும் பந்தயம் வைத்துக்கொண்டோம். நீங்கள் எல்லோரும் இவ்வளவு டென்ஷனை அனுபவிப்பீர்கள் என்று நான் நினைத்திருக்கவில்லை. உங்கள் கணவர் எல்லாவற்றையும் சொன்னார். இவ்வளவு நாளாக உங்களை சந்தேகத்தில் ஆழ்த்தியதற்கு மன்னித்துவிடுங்கள்." அவசர அவசரமாகச் சொல்லி முடித்தேன்.

அவள் தலையை உயர்த்தி நேராக என்னைப் பார்த்தாள். நான் சொன்ன இந்தக் கட்டுக் கதையை அவள் நம்புவாளா?

நான் தலையைத் திருப்பி என் தந்தையின் பக்கம் பார்த்தேன். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நான் கற்பனை செய்து சொன்ன இந்தக் கதை அவனை வாயடைக்கச் செய்து விட்டதை முகத் தோற்றத்திலிருந்தே புரிந்துகொள்ள முடிந்தது. ஒருக்கால் அவனுக்கு நான் சொன்னது எதுவுமே புரிந்திருக்காது. அவனுக்குப் புரியும் என்றும் நான் நினைக்கவில்லை. சூழ்நிலையைச் சரியாகப் புரிந்து கொள்ளும் பக்குவம் மட்டும் அவனுக்கு இருந்திருந்தால் என் தாய் பிருந்தா இவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கும்படி நேர்ந்திருக்காது. (மன்னியுங்கள், பிருந்தாவை என் தாயாக விளிப்பதற்கு.)

"அதெல்லாம் அப்புறமாகப் பேசிக்கொள்ளலாம் முதலில் கீழே வாருங்கள். முகூர்த்தம் நெருங்கிவிட்டது." என்றாள் அவள்.

அவ்வளவு சுலபமாக நான் சொன்னதை அவள் ஏற்றுக் கொண்டது என்னை வியப்பில் ஆழ்த்தியது. எங்க இருவரையும் அந்தச் சமயத்தில் அவ்வாறு பார்த்துவிட்டு ரகளை செய்வாள் என்று நினைத்தேன். மூவரும் கீழே வந்தோம்.

மணமக்கள் மேடையில் உட்கார்ந்து இருந்தார்கள்.

அவர்களைப் பார்த்துக்கொண்டே அவன் சொன்னான். "நாங்கள் பிரிந்து போய் இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு பிருந்தா என்னைச் சந்திக்கிறேன் என்று சொன்னாள். அப்பொழுதுதான் உன்னை என்னிடம் ஒப்படைக்கப் போவதை என்னிடம் சொன்னாள். அதுவரையில் பிரபாகருக்குத் திருமணம் செய்துவைக்கும் உரிமை எனக்கு இல்லை. ஆனால் பிரபாகர் அதற்குள் காதலில் ஆழ்ந்து போய் உடனே கல்யாணம் செய்து வைக்கவில்லை என்றால் 'தர்மசங்கடமான நிலைமை உருவாகிவிடும் போல் இருந்தது. உனக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்."

தலையை அசைத்தேன்.

"இந்தக் கல்யாணம் நிச்சயமான பிறகு பிருந்தாவை ரொம்பவும் தேடினேன். ஆனால் தென்படவில்லை. என்னால் திருமணத்தை ஒத்திப்போட முடியவில்லை. என்னைவிட்டுப் பிரியும்போது அவள் வேண்டிக்கொண்ட இந்தக் கடைசி விருப்பத்தைக்கூட என்னால் நிறைவேற்றி வைக்க முடிய வில்லை. "வேதனை கலந்த குரலில் சொன்னான்.

நான் பதில் பேசவில்லை. என் யோசனைகள் அவ்விடத்திலேயே இல்லை.

தரளாவை என்னால் எவ்வளவு தூரம் தாயாக ஏற்றுக் கொள்ள முடியும் என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டி ருந்தேன்.

அதற்குள் அவன் சொன்னான்."நீ ஏன் அம்மாவிடம் அப்படிச் சொன்னாய்?"

அம்மா என்று அவன் குறிப்பிட்டது தரளாவை.

நான் பேசவில்லை.

என் மனதில் எண்ணங்கள் கடல் அலைகளைப் போல் கொந்தளித்துக்கொண்டிருந்தன. என் பார்வை தொலைவில் மேடை அருகில் நின்றிருந்த தரளா மீது படிந்தது. அவள் குனிந்து சாஸ்திரிகள் சொன்ன வேலைகளைப் பிரபாகர் செய்வதற்கு உதவி செய்துகொண்டிருந்தாள். நடுநடுவில் எங்க இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் தாயை "அவள்" என்ற நிலையிலிருந்து உயர்த்துவதற்கு என் மனம் ஏன் ஒப்பவில்லை என்று எனக்குப் புரியவில்லை.

பக்கத்திலிருந்து ஆனந்தன் சொல்லிக்கொண்டிருந்தான். "எனக்கு இதெல்லாம் நேற்றே தெரிந்திருந்தால் இருவருமாகச் சேர்ந்து பிருந்தாவை அழைத்து வந்திருக்கலாம். தான் இல்லாமல் மகனுடைய திருமணத்தை நடத்தியதற்குப் பிருந்தா என்னை மன்னிக்கமாட்டாள்."

"இத்தனை வருடங்களாக மன்னித்து வந்திருக்கிறாள். இந்தக் கடைசி தவறையும் மன்னித்துவிடுவாள். கவலைப்பாடதீங்க." மனதில் நினைத்துக்கொண்டேன்.

மாங்கல்ய தாரணம் நடந்துகொண்டிருந்தது.

"நாம்ப போகலாமா?" பரபரப்புடன் கேட்டான் ஆனந்தன்.

"எங்கே?" சலனமில்லாமல் கேட்டேன்.

"பிருந்தாவை அழைத்துக்கொண்டு வர வேண்டாமா?"

"எதற்காக? கல்யாண மண்டபத்தில் மைக் மூலமாக எல்லோருக்கும் இந்தக் கதையைச் சொல்வதற்காகவா?"

"கோபீ!"

"இந்த ரகசியம் எவ்வளவு பேருக்குத் தெரியும்?"

"உன்னோடு சேர்த்து நம் மூவருக்குத்தான் தெரியும்?"

"பிரபாகருக்கும், தரளாவுக்கும்... ஐ மீன் என்னைப் பெற்ற தாய்க்கும் தெரிந்தால் அவர்கள் இதை எப்படி எடுத்துக் கொள்வார்களோ, நீங்க யோசித்துப் பார்த்தீங்களா?"

"நீ என்ன பேசுகிறாய்?"

"யதார்த்தத்தைப் பேசுகிறேன்."

நான் சொன்னதைப் புரிந்துகொள்வதற்கு அவனுக்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப்பட்டது. குழப்பமாக என் பக்கம் பார்த்தான்.

"நான் முதலில் எங்கள் ஊருக்குப் போகிறேன். அம்மாவிடம் நடந்ததை முழுவதும் சொல்கிறேன். ஒரு வேண்டுகோளையும் விடுக்கப்போகிறேன்."

"அதென்ன வேண்டுகோள்?" சட்டென்று இடைமறித்துக் கேட்டான் ஆனந்தன்.

"சொல்லமாட்டேன்" என்றேன். "முதலில் அம்மாவைக் கேட்கிறேன். அவள் என் விருப்பத்தை ஏற்றுக்கொண்டால்...."

நான் தாமதித்ததைப் பொறுக்க முடியாதவன் போல் "ஏற்றுக் கொண்டால்?" என்றான்.

"ஒருக்கால் இனி எப்பொழுதுமே அவள் உங்களைச் சந்திக்க மாட்டாள்."

என் பேச்சைக் கேட்டு அவன் வியப்புடன் நோக்கினான். ரொம்ப நேரம் அப்படியே பார்த்துக்கொண்டிருந்தான். நான் சொன்னது மின் அதிர்ச்சியாய் அவனைத் தாக்கியிருக்க வேண்டும். ஆனால் ஏதோ யோசிப்பது போல் மௌனமாக இருந்தான். என் பேச்சின் மூலமாக மறைமுகமாகக் கொடுத்த குறிப்பை அவன் உணர்ந்திருக்க வேண்டும். தனக்குள் தானே முணுமுணுத்துக் கொள்வது போல் "அது வந்து பிரபாகர் தன்னை பெற்ற தாயை விட்டுத் தொலைவாக ..." என்று ஏதோ சொல்லப் போனான்.

"உங்க மனைவியைப் பெற்ற தாயாக ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. மிஸ்டர் ஆனந்தன்" ஒரு முடிவுக்கு வந்து விட்டது போல் சொன்னேன்.

என் முடிவை ஏற்றுக்கொள்வதற்கு ரொம்ப நேரம் தயங்கி விட்டுக் கடைசியில் சொன்னான்."உன் இஷ்டம்."

எல்லோரும் எழுந்து நின்று மணமக்கள் மீது அட்சதைகளை போட்டுக்கொண்டிருந்தார்கள். சிலர் கிளம்பிப் போவதற்கு முற்பட்டார்கள்.

"போய் வருகிறேன்" என்றேன்.

"மறுபடியும் வருவாய் இல்லையா?"

"வரக்கூடாது என்று தான் விரும்புகிறேன்."

அங்கிருந்து வெளியில் வந்தேன். அம்மா எழுதிய கடிதம் என் சட்டைப் பையில் பத்திரமாக இருந்தது.

மாலைவேளை. நதியின் மீது நிழல்கள் நீளவாக்கில் விழுந்துகொண்டிருந்தன.

காவேரி நதி வழியாக வீசிக்கொண்டிருந்த குளிர்ந்த காற்று இதமாக இருந்தாலும் என் மனம் மட்டும் ரொம்பப் பதற்றமாக இருந்தது. நான் கேட்கப் போகும் விருப்பத்தைக் கேட்டு அம்மா என்ன சொல்வாளோ என்ற பயமும், உத்வேகமும் என் மனம் முழுவதும் நிரம்பியிருந்தது.

காரை மெதுவாகச் செலுத்திக்கொண்டிருந்தேன். சாலையை ஒட்டினாற் போல் காவேரி பாய்ந்துகொண்டிருந்தது. மறுபக்கம் நெற் வயல்கள் வரவேற்பு அளிப்பது போல் காற்றுக்கு நெற்பயிர் மெதுவாக அசைந்துகொண்டிருந்தது.

தலையைத் திருப்பிப் பார்த்தேன்.

அம்மா தலையைக் குனிந்துகொண்டு யோசனையில் மூழ்கியிருந்தாள். மடியின்மீது கைகளை வைத்து, விரல்களைப் பிணைத்துக்கொண்டு அந்த விரல்களையே கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இந்த ஊர் வருவதற்கு முதலில் அம்மா முதலில் சம்மதிக்கவில்லை. ரொம்பவும் கட்டாயப்படுத்திய பிறகு ஒப்புக் கொண்டாள். ஆபீஸ் வேலை இருக்கிறது என்றும், அதற்காக போகிறேன் என்று சொல்லிப் புறப்பட்டு வரச் செய்துவிட்டேன். பாதி தூரம் வந்த பிறகு "இந்தப் பக்கம் எந்த ஊருக்குப் போகிறோம்" என்று கேட்டாள்.

"இந்தப் பக்கம்தான் வேலை" என்று சொன்னேன்.

ஊர் நெருங்கும் போது அம்மாவின் சந்தேகம் வலுவடைந்தது. "இத்தனைச் சின்னக் கிராமத்தில் உனக் கென்ன வேலை?" என்று கேட்டாள்.

"ஊரில் இல்லை அம்மா. ஊருக்கு வெளியில்தான்." வேறு எதுவும் கேட்க முடியாதபடி காரின் வேகத்தை அதிகரித்தேன்.

உண்மையில் அம்மாவை இங்கே எதற்காக அழைத்து வர வேண்டும் என்று தோன்றியதோ எனக்கே தெரியவில்லை. இந்த விஷயத்தை, இந்தச் சூழ்நிலையில் சொல்லி, என் விருப்பத்தை இந்த இடத்தில் வெளிப்படுத்துவது உசிதம் என்று காரணமே இல்லாமல் எனக்கு யோசனை தோன்றியது. அவ்வளவு தான்.

பழைய நினைவுகள் மனதில் வெள்ளமாகப் பொங்கி வர, சாதாரணமாக இருப்பதற்காக அம்மா பெரும், முயற்சி செய்வது பார்த்தாலே புரிந்துகொள்ள முடிந்தது. ரொம்ப நேரம் வரை இருவரும் பேசிக்கொள்ளவில்லை.

காரை ஒரு ஓரமாகக் கொண்டு போய் நிறுத்தினேன்.

அம்மா தலையை உயர்த்திப் பார்த்தாள்.

இனி சொல்ல வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஏற்கனவே பலமுறை ஒத்திகைப் பார்த்துக்கொண்டாலும் அந்த நேரம் நெருங்கும்போது ஏதோ தடுமாற்றம் என்னை ஆட் கொண்டது.

ஆனாலும் சொல்லித்தான் ஆக வேண்டும். எப்படித் தொடங்குவது என்று தடுமாறினேன். இருபத்தைந்து வருடங்களாக அம்மா மனதில் வைத்திருந்த ரகசியம் எனக்குத் தெரிந்துவிட்டது என்று சொல்வதுதான் கடினம். அதற்குப் பிறகு என் விருப்பத்தை வெளிப்படுத்துவது அவ்வளவு கஷ்டமான காரியம் இல்லை.

"மிஸ்டர் ஆனந்தனைப் பார்த்தேன் அம்மா!" அதுதான் நான் தொடங்கிய முதல் வாக்கியம்.

காவேரி ....வயல் காற்று....எதிலுமே மாறுதல் இல்லை. அம்மா மட்டும் சரேலென்று தலையை உயர்த்தினாள். நான் சொன்னது கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்குப் புரிந்திருக்க

முடிவுரை

இந்தக் கதையை ஆரம்பித்தது நான் தான் என்பதால் இதற்கு முடிவுரை சொல்லவேண்டிய கடமையும் என்மீதுதான் இருக்கிறது.

அதற்குப் பிறகு எப்பொழுதாவது ஆனந்தன் பிருந்தாவைச் சந்திக்க முயற்சி செய்தானா. அதற்கு கோபிசந்த் ஒத்துழைத்தானா என்பது நமக்குத் தேவையில்லாத விஷயம். இந்த ரகசியம் தம் மூவருடனே சமாதியாகிவிட வேண்டும் என்று மட்டுமே அவர்கள் நினைத்துக்கொண்டார்கள். ஆனால் இந்த ரகசியம் தெரிந்த நபர் இன்னொருத்தர் இருக்கிறார்.

அந்த நபர் தரளா.

மகனின் திருமண முகூர்த்தம் நெருங்கிவிட்டதென்று பரபரப்புடன் மாடிக்கு வந்த தரளா, அவ்விருவருக்கும் இடையில் நடந்த உரையாடல் முழுவதுமாகக் கேட்டுவிட்டாள்.

வேடிக்கை என்னவென்றால்.....

அவள் நினைவு தப்பிக் கீழே விழவில்லை. வீலென்று கத்தி ரகளை எதுவும் செய்யவில்லை. தன்னுடைய சுபாவத்துக்கு மாறாக உரையாடல் முழுவதுமாக முடியும்வரை அப்படியே நின்றிருந்தாள். முகம் மட்டுமே இல்லை. உடலும் கறுத்துவிட்டது.

தன்னுடைய முட்டாள்தனம் இருகாதலர்களை எவ்வாறு பிரித்துவிட்டது என்றும், தந்தையின் உயிரை எவ்வாறு பலி வாங்கி விட்டதென்றும் உணர்ந்தாள். காதலித்துவிட்டால் மட்டுமே போதாது என்றும், அடுத்தவரிடம் அந்தக் காதல் இருக்கிறதா இல்லையா என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் இருபத்தைந்து வருடங்கள் தாமதமாகப் புரிந்துகொண்டாள்.

நடுங்கிவிட்டாள்.

அதற்குப் பிறகு அவள் எத்தனை இரவுகள் தனிமையில் அழுதுகொண்டே கழித்தாளோ தெரியாது.

வாழ்நாள் முழுவதும் அந்த ரகசியத்தைத் தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டு ஒன்றுமே அறியாதவளைப் போல் நடந்து கொண்டாள். பிரபாகரைச் சொந்த மகன் போலவே பார்த்துக் கொண்டாள்.

வேலைக்காரி திருட்டுத்தனம் கேஸில் மகளைத் தண்டித்து, பிறகு தவறைத் தெரிந்துகொண்டு உடலில் சூடு போட்டுக் கொள்வதன் மூலமாகத் தன்னைத்தானே எப்படித் தண்டித்துக் கொண்டாளோ, அதேபோல் இப்பொழுது செய்த தவறுக்கு தன் சொந்த மகனான கோபிசந்தை வாழ்நாள் முழுவதும் பார்க்காமல் இருப்பதையே தண்டனையாக நினைத்துக் கொண்டாள்.

தரளா பேரன்றவர்கள் உங்களுக்கு எங்கேயாவது தென்பட்டால் அவர்களைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள், இரக்கப்படுங்கள்.

முற்றும்

"ஊரில் இல்லை அம்மா. ஊருக்கு வெளியில்தான்." வேறு எதுவும் கேட்க முடியாதபடி காரின் வேகத்தை அதிகரித்தேன்.

உண்மையில் அம்மாவை இங்கே எதற்காக அழைத்து வர வேண்டும் என்று தோன்றியதோ எனக்கே தெரியவில்லை. இந்த விஷயத்தை, இந்தச் சூழ்நிலையில் சொல்லி, என் விருப்பத்தை இந்த இடத்தில் வெளிப்படுத்துவது உசிதம் என்று காரணமே இல்லாமல் எனக்கு யோசனை தோன்றியது. அவ்வளவு தான்.

பழைய நினைவுகள் மனதில் வெள்ளமாகப் பொங்கி வர, சாதாரணமாக இருப்பதற்காக அம்மா பெரும், முயற்சி செய்வது பார்த்தாலே புரிந்துகொள்ள முடிந்தது. ரொம்ப நேரம் வரை இருவரும் பேசிக்கொள்ளவில்லை.

காரை ஒரு ஓரமாகக் கொண்டு போய் நிறுத்தினேன்.

அம்மா தலையை உயர்த்திப் பார்த்தாள்.

இனி சொல்ல வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஏற்கனவே பலமுறை ஒத்திகைப் பார்த்துக்கொண்டாலும் அந்த நேரம் நெருங்கும்போது ஏதோ தடுமாற்றம் என்னை ஆட் கொண்டது.

ஆனாலும் சொல்லித்தான் ஆக வேண்டும். எப்படித் தொடங்குவது என்று தடுமாறினேன். இருபத்தைந்து வருடங்களாக அம்மா மனதில் வைத்திருந்த ரகசியம் எனக்குத் தெரிந்துவிட்டது என்று சொல்வதுதான் கடினம். அதற்குப் பிறகு என் விருப்பத்தை வெளிப்படுத்துவது அவ்வளவு கஷ்டமான காரியம் இல்லை.

"மிஸ்டர் ஆனந்தனைப் பார்த்தேன் அம்மா!" அதுதான் நான் தொடங்கிய முதல் வாக்கியம்.

காவேரி ....வயல் காற்று....எதிலுமே மாறுதல் இல்லை. அம்மா மட்டும் சரேலென்று தலையை உயர்த்தினாள். நான் சொன்னது கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்குப் புரிந்திருக்க

வேண்டும். முற்றிலும் புரிந்துகொள்வதற்குச் சில வினாடிகள் தேவைப்பட்டன.

அதற்குள் நான் சக்தியைத் திரட்டிக்கொண்டேன். எதையுமே மறைத்து வைக்கவில்லை.

பைரவமூர்த்தியிடமிருந்து ரௌடி ஒருத்தன் வந்து ஏமாக்மெயில் செய்ததிலிருந்து பிரபாகர் இண்டர்வ்யூக்கு வந்தது வரை. அதற்குப் பிறகு ஆனந்தனின் குடும்பத்தை நாசமாக்க வேண்டுமென்று நான் போட்ட திட்டம், அந்த முயற்சியில் என் ஆனந்தனைச் சந்தித்தது, அவர் சொன்ன கதை.... எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னேன்.

பயங்கரமான காட்சிகள் நிறைந்த படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளரைப் போல் அவள் சிலையாய் என் சொன்னதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனால் என் கதை முடிவுக்கு வரும் சமயத்தில் அவளிடம் ஒரு திருப்தமான நிம்மதி தெரிந்தது. ஒருக்கால் நானும் ஆனந்தனும் மௌனம் விட்டு பேசிக்கொண்டதன் மூலமாக கருத்து வேற்றுமைகள் காரணமாக இருக்கலாம்.

"நான் போன சமயத்தில் அங்கே பிரபாகரின் திருமணம் நடந்துகொண்டிருந்தது. அம்மா" என்றேன், டைரியின் கடைசிப் பக்கத்தைத் திறந்து வைப்பது போல்.

"பிரபாகர்? என்றாள்."

"ஆமாம்மா. உன் மகன்." என் வார்த்தைகள் சர்வ சாதாரணமாகத் தொனிக்கும் படியாய்ச் சொன்னேன். அவள் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். நானோ காவேரியுடன் ஒக்கியமாகிக்கொண்டிருந்த மணல் மேட்டைப் பார்த்தபடி தொடர்ந்தேன். "நீ வைத்திருந்த கெடு வரைக்கும் அவரால் திருமணத்தை ஒத்திப் போட முடியவில்லை. அதற்குள் பிரபாகர் கண்மண் தெரியாத அளவுக்கு காதலில் மூழ்கிப்போய் விட்டானாம்." சிரிக்க முயற்சி செய்தேன்.

தொடர்ந்து கேட்கப் போகும் விருப்பத்தின் நினைவு வந்த போது சிரிப்பு வரவில்லை. இனி கேட்டு விட வேண்டியதுதான். அம்மா என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"அவர் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக்கொண்டார், இந்தத் திருமணத்திற்கு உன்னை அழைத்து வரச் சொல்லி. பிரபாகரின் தாய் நீதான்னு நான் எப்படி நம்புவது என்று கேட்டேன். நீ அவருக்கு எழுதிய கடிதத்தைக் காட்டினார்."

"கடிதமா?"

"ஆமாம். அந்த ஊரை விட்டு சாசுவதமாகப் போவதற்கு முன்னால் நீ அவருக்கு எழுதிய கடிதம்."

தொலைவில் ஏதோ பறவையின் குஞ்சு ஒன்று வழித் தவறிப் போய் தாய் பறவைக்காகக் கத்திக் கொண்டிருந்தது. பக்கத்தில் மாட்டு வண்டி ஒன்று காரைத் தாண்டிக்கொண்டு போயிற்று.

"அம்மா! கடிதத்தில் நீ சொல்லியிருந்த கெடு முடிவடைந்ததுமே நான் அவர்கள் வீட்டுக்குப் போய் விட வேண்டுமா? அவரைத் தந்தையாகவும், அவளைத் தாயாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமா?"

கேட்டு விட்டேன். இந்த விஷயம் தெரிந்தது முதல் என் மனதில் ஏற்பட்ட வேதனை கலந்த சஞ்சலனம், இப்பொழுது அவள் சொல்லப் போகும் பதிலின் மேல் ஆதாரப்பட்டு உத்வேகமாக மாறியது.

"நீ அவர்களுடைய மகன் கோபிசந்த்." அவள் தாழ்ந்த குரலில் சொன்னாள். அப்படிச் சொல்லும் போது அவள் குரல் நடுங்கிற்று.

சட்டென்று சொன்னேன். "இத்தனை வருடங்கள் உன்னிடம் வளர்ந்து விட்டு இப்பொழுது அந்தக் குடும்பத்தோடு.... முக்கியமாக அந்தத் தரளாவோடு என்னால் ஒன்ற முடியாது.

"தவறு கண்ணா! பெற்ற தாயை அப்படிச் சொல்லக் டாது."

"சரி போகட்டும். நான் போகிறேன் என்று வைத்துக் ொள்வோம். அந்தப் பிரபாகர் உன்னிடம் வருவான் என்று ன்ன நம்பிக்கை? தாய், தந்தை, தங்கைகள் என்று எல்லோரும் ிருக்கிற குடும்பத்தை விட்டு விட்டு உன்னிடம் வருவான் ன்ற கிராயண்டீ என்ன?" சொன்ன பிறகுதான் தெரிந்தது. அந்தக் கோபத்தில் நான் எவ்வளவு சிறு பிள்ளைத்தனமாகப் பேசிவிட்டேன் என்று.

ஆனால் என் வார்த்தைகள் அம்மாவின் மீது எந்தப் ரதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அப்படியே தலையைக் குனிந்து கொண்டு சொன்னாள். "பெற்ற தாயுடன் இருப்பதற்கு அவனுக்குப் பிடிக்கவில்லை என்றால் வளர்த்த தாயுடனே ிருந்து கொள்ளட்டும் கோபீ."

நான் விட்டஅம்பு சரியான இடத்தில்தான் தைத்துக் கொண்டது. முறுவலித்தேன். "அப்பொ அவனுக்கு அவ்வளவு ரம் கொடுத்த நீ, நான் என்னுடைய வளர்ப்பு தாயுடன் ிருக்கிறேன் என்று சொன்னால் ஏன் ஒப்புக் கொள்ள றுக்கிறாய்?" காவேரியுடன் சங்கமித்துக்கொண்டிருந்த சிறிய ாய்க்காலைப் பார்த்துக்கொண்டே சொன்னான். நீர் அந்த ள்ளத்தில் இரு மடங்கு உற்சாகத்துடன் பாய்ந்து கொண்டிருந்தது. ஏதோ சொல்ல வந்து நிறுத்திக்கொண்டாள். அந்தக் கைகளை என் கைகளில் எடுத்து கண்ணில் ற்றிக்கொண்டே வேண்டிக் கொண்டேன்.

"அம்மா! நீ என்னைப் பெற்ற தாயாக இல்லாமல் ிருக்கலாம். ஆனால் இத்தனை வருடங்களாக என்னை ளர்த்தாய். இருவருமாகச் சேர்ந்து கஷ்டங்களைப் பகிர்ந்து கொண்டோம். நீ சாப்பிடாமல் எனக்கு உணவளித்தாய். இவ்வளவு அன்பிற்கும் யாரோ பிரபாகர் என்பவன் வந்து, இன்றைக்கு உரிமையாளன் என்று சொன்னால் ஒப்புக்கொள்ள

முடியாது. இதை என் சுயநலம் என்று வேண்டுமானாலும் சொல்லிக்கொள். வேறு என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள். நான் உன்னோடுதான் இருப்பேன். அந்த வீட்டுக்கு மட்டும் போகச் சொல்லாதே. பெற்ற மகன் மீது உனக்கு அவ்வளவு அன்பு இருந்தால் அவனையும் வரச் சொல்கிறேன். ஆனால் என்னை மட்டும் அவர்களிடம் போகச் சொல்லி விடாதேம்மா. ப்ளீஸ்...."

மகன் குரலில் இருந்த துக்கத்தைத் தாயால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். பரிவோடு அணைத்துக் கொண்டாள். நான் என் வயதை மறந்துவிட்டேன். எட்டு வயதில், தூக்கத்தில் கனவு கண்டு பயந்தபோது அருகில் இழுத்து அணைத்துக்கொண்ட கைகள் அவை.பிசினெஸ் மேனேஜ்மென்டில் ரேங்க் வந்தபொழுது, அந்த வெற்றி தன் உழைப்பின் பலன்தான் என்ற சந்தோஷத்தோடு அணைத்த கைகள் அவை.

"இந்த விஷயம் நம்ம மூவருக்கும் தவிர யாருக்கும் தெரியாதும்மா. இதைத் தன் மனைவியிடம் சொல்லக்கூடிய துணிச்சல் ஆனந்தனுக்கு இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. இனி தரளாவைப் பற்றிக் கேட்கிறாயா? பிரபாகரைப் பார்த்து அவள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறாள் என்று திருமணத்திலேயே கவனித்தேன். அவர்கள் எல்லோரும் சந்தோஷமாக, நிம்மதியாக இருக்கிறார்கள். நாம்தான் தேவையற்ற செண்டிமெண்டுகளுடன் ஏதோ தவறு செய்து விட்டார் போல் வருத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறோம்.

எந்த முடிவுக்கும் வர முடியாதவளாய் "என்னைக் கொஞ்சம் யோசிக்க விடு கோபி" என்றாள்.

இரண்டு நிமிடங்கள் மௌனமாகக் கழிந்தன. அம்மா காரை விட்டு இறங்கினாள். கார் கதவைச் சாத்திக்கொண்டே என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் 'உன்னைப் போன்ற மகனைத் தன்னிடமிருந்து பிரித்ததற்குத் தரளா என்னை

மன்னிக்க மாட்டாள்' என்ற உணர்ச்சி தென்பட்டாற் போலிருந்தது.

தொலைவிற்குப் போய் காவேரியை நோக்கித் திரும்பி மனலில் உட்கார்ந்துகொண்டாள்.

அந்தப் பக்கமாகப் பார்த்துக்கொண்டே 'கோபியை விட்டு என்னால் மட்டும் எப்படி இருக்க முடியும்?' என்ற சுயநலத்தை என்தாயின் மனதில் தோற்றுவிக்கும்படிக் கடவுளை வேண்டிக் கொண்டேன். எனக்கு அந்த வீடு, அந்த சொத்து, அந்த உறவினர்கள் எதுவுமே எனக்கு வேண்டாம். பிரபாகர் மறுத்தால் வயதான காலத்தில் தனித்து எஞ்சியிருக்கப் போகும் இந்த தாய் எனக்கு வேண்டும்.

கையில் இருந்த கடிதத்தைப் பிரித்தேன். அம்மா என் தந்தைக்கு எழுதியிருந்த கடிதம். பாதாளத்தை நோக்கி விழுந்து கொண்டிருந்த ஒரு நபரை மறுபடியும் சொந்தக் கால்களில் நிற்க வைப்பதற்காக ஒரு பெண் செய்த தியாகத்தை இருபத்தைந்து வருடங்களாக இருட்டில் மறைத்து வைத்திருந்த கடிதம்.

மறுபடியும் படிக்கத் தொடங்கினேன்.

அன்புள்ள ஆனந்தன்,

உனக்கு என்ன எழுதுவது, எங்கிருந்து தொடங்குவது என்றே புரியவில்லை. ஆனால் நான் செய்யப் போகும் காரியத்தை உனக்குத் தெரியப்படுத்துவது என்னுடைய கடமை. என் முடிவு சரியானதுதானா இல்லையா என்று சொல்ல வேண்டியது நீ தான்.

சில நாட்களுக்கு முன் நீ ஒரு வார்த்தை சொன்னாய் நினைவு இருக்கிறதா? உன்னை விட்டு நான் போகக்கூடாது என்று ஆணையிட்டாய். அந்த விஷயத்தைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நீ எவ்வளவு பிடிவாதக்காரன் என்று எனக்குத் தெரியும். அது போன்ற அசம்பாவிதம் எதுவும் நடந்துவிடாமல் இருப்பதற்காகத்தான் இந்தக் கடிதம்.

ஆனந்தன்..... கஷ்டசுகங்கள் நிறைந்ததுதான் வாழ்க்கை. என்னைப் பற்றி யோசிப்பதை விட்டு விடு. எதற்காக நாளுக்கு நாள் இப்படி சீர்குலைந்து போய்க்கொண்டிருக்கிறாய்?மனம் வேதனையில் இருக்கும் போது அதிலிருந்து வெளியேறுவது எப்படி என்று யோசிக்கவேண்டுமே தவிர, மனதை மயக்கத்தில் ஆழ்த்துவதற்கான வழிகளைத் தேடக் கூடாது.

என்னைப் பற்றித்தான் உன் கவலை என்று எனக்குத் தெரியும். இந்த வீட்டில் நான் படும் கஷ்டங்கள் உன்னைத் தூங்க விடாது என்றும், ஏற்கனவே இந்தத் திருமணத்தால் மன அமைதியை இழந்துவிட்ட உனக்கு என் பிரச்னை வேறு புதிதாக வந்து சேர்ந்துகொண்டு விட்டது. என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு என் வீட்டார் உன்னிட மிருந்து பணத்தைப் பறிக்கிறார்கள் என்றும், என் உடம்பில் விழும் ஒவ்வொரு அடியும் மாதக் கணக்கில் உனக்குத் தூக்க மில்லாமல் செய்துகொண்டிருக்கிறதென்றும் எனக்குத் தெரியும்.

அதனால்தான் இந்த வீட்டை விட்டே போய்விடப் போகிறேன்.

நில்லு. உன் மிரட்டலை மறுபடியும் நினைவுபடுத்தாதே. நான் தொலைவிற்குப் போய்விட்டால் நீ இந்த உலகத்திலேயே இருக்க மாட்டேன் என்று சொன்னாய் இல்லையா.

என்னதான் செய்வது ஆனந்தன்?

உன்னிடமிருந்து பணத்தை வசூல் செய்யும் இயந்திரமாக இந்த வீட்டில் உழைத்துக் கொண்டிருக்க வேண்டுமா? எந்த நிமிடத்தில் என் கணவன் யாரையாவது அழைத்துக்கொண்டு வந்து என்னை விலைமகளாக்கி விடுவானோ என்று பயந்து கொண்டே ஒவ்வொரு நிமிடத்தையும் கழிக்க வேண்டுமா?

போய்விடத்தான் தீர்மானித்துக்கொண்டுவிட்டேன் ஆனந்தன். என் பிரிவு உன்னை மேலும் தனிமையில் ஆழ்த்தி விடும் என்றும் அந்த வெறுப்பில் உன்னையே நீ தண்டித்துக் கொள்வாய் என்றும் தெரியும். ஆறு மாதங்கள் முன்பு உன்னைக் குடிப்பழக்கத்தை விடச் சொல்லி கெஞ்சினேன். நீ கேட்கவில்லை. வெறுப்பு அதிகமாகி இன்னும் குடித்தாய். யார் மீது உனக்கு இவ்வளவு வெறுப்பு? தரளாவின் மீதா? அவள் என்ன செய்து விட்டாள்? அப்பாவித்தனமும், பிடிவாதமும் மனிதனின் இயல்பு குணங்கள்தானே தவிர, அதில் தவறு எதுவும் இல்லையே? தரளாவின் தந்தை மீதா?பாவம், தான் செய்த சிறிய தவறுக்கு உயிர்த் தியாகம் செய்து எவ்வளவு பெரிய தண்டனையை ஏற்றுக்கொண்டார்?

நீ என்ன பதில் சொல்வாயோ? எனக்குத் தெரியும். 'எனக்கு யார் மீதும் வெறுப்பு இல்லை. என் மீதே எனக்குக் கோபமாக இருக்கிறது. அதனால்தான் இவ்வாறு ஆகிவிட்டேன்' என்று சொல்வாய் இல்லையா.

ஆனந்தன்! உனக்கு எடுத்துச் சொல்லக் கூடியவள் இல்லை என்றாலும் விதி என்பது இருக்கிறது பார்த்தாயா! நம்மைக் காலம் என்ற அறைக்குள் பூட்டி வைத்துப் பயமுறுத்திப் பார்க்கும். பூனையை அறைக்குள் அடைத்து வைத்தால் புலியாய் சீறிப் பாயுமாம். நாமும் காலத்தை எதிர்த்து நின்றால், அது நாம் சொன்னபடி கேட்கும், நம் பிரச்னைகளை யாருமே வந்து தீர்த்து வைக்கமாட்டார்கள். நாம்தான் தீர்வு கண்டு பிடிக்க வேண்டும்.

இதெல்லாம் வரட்டு வேதாந்தமாகத் தோன்றுகிறது. இல்லையா. ஆமாம். நான் என்ன சொன்னாலும் நீ கேட்கப் போவதில்லை. நேரில் வந்து சொன்ன போதே கேட்காதவன் இப்படிக் கடிதம் எழுதினால் மட்டும் கேட்டுவிடப் போகிறாயா?

அதனால்தான் உன் மகனை நான் எடுத்துக்கொண்டு போகிறேன்.

இந்தச் செய்தி மின் அதிர்ச்சியாக உன்னைத் தாக்குகிறது இல்லையா. எனக்கு மட்டும் சந்தோஷமாக இருக்கிறது. உன் மகன் என்னிடம் வளரப்போகிறான் என்ற யோசனையே என் உள்ளத்தைப் பூரிக்கச் செய்கிறது.

உனக்கு நினைவு இருக்கிறதா? நானும் தரளாவும் காவேரியில் படகுகளை விட்டு, யாருடைய படகு முன்னால் போகிறது என்று பந்தயம் வைத்துக்கொள்வோம். இப்பொழுது என்னுடைய தீபத்தை அவளிடம் விட்டுவிட்டுப் போகிறேன். இந்தப் பந்தயத்தில் யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். உன் மகனை உன்னை விட உயர்ந்தவனாக மாற்றிக் காட்டுகிறேன். பந்தயம் வைத்துக்கொள்வோமா? இம்முறை பந்தயம் உன்னோடு. சம்மதமா?

ஆனந்தன்! இதையெல்லாம் நான் எதற்காகச் செய்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும் இல்லையா. நான் போய் விட்டேன் என்ற வெறுப்போடும், வேதனையோடும் நீ உன் குடும்பத்தை விட்டு இன்னும் தொலைவிற்குப்போய்விடுவாய். உன் வியாபாரத்தை, சொத்து விவகாரங்களை மேலும் அலட்சியம் செய்வாய். ஆனால் இப்பொழுது! என் மகனைக்கூட ஒரு பிச்சைக்காரனாக ஆக்குவாயா? என் மகனே உனக்கு வாழ்க்கையின் மேல் ஒரு பிடிப்பையும், எதிர்காலத்தின் மீது ஒரு ஆசையையும் ஏற்படுத்துவான் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என் வேண்டுகோள் என்னவென்றால் என் மகனின் படிப்பும் வளர்ப்பும் உன் சம்பாத்தியத்தின் மூலமாகத்தான் நடைபெறவேண்டும். உன் மாமனாரின் சொத்தைத் தொடக்கூடாது. இனி எங்கள் விஷயத்தைப் பற்றிக் கேட்கிறாயா? கோபிசந்த் பற்றி (உனக்கு நினைவு இருக்கிறதா?நம் திருமணம் ஆன பிறகு பிறக்கப் போகும் முதல் குழந்தை ஆணாக இருந்தால் பிரபல எழுத்தாளர் கோபிசந்தின் நினைவாக அவருடைய பெயரையே சூட்ட வேண்டும் என்று முடிவு செய்திருந்தோம்) நீ எந்தக் கவலையும்

பட வேண்டாம். என் உடலில் இருக்கும் சக்தியெல்லாம் திரட்டி அவனை உயர்ந்த மனிதனாக்குகிறேன். ஒருக்கால் அப்படிச் செய்ய முடியாவிட்டால் உன்னிடம் அனுப்பி வைக்கிறேன். நான் நினைத்தபடி அவனை வளர்த்துவிட்டால் அவனுக்கு இருபத்தைந்து வயது ஆன பிறகு உன்னிடம் ஒப்படைக்கிறேன். இந்த நீண்ட இடைவெளிக்குள் உனக்கு வாழ்க்கை என்றால் காதல் ஒன்று மட்டுமே இல்லை என்றும், உறுதியும் இருந்தாக வேண்டும் என்றும், சத்தியம் செய்து ஒரு ஆளைக் கட்டிப்போட்டு விட முடியாது என்ற அளவுக்கு உன் எண்ணங்கள் மாறிவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

இதெல்லாம் உனக்காகத்தான் என்ற உண்மையைப் புரிந்து கொண்டு என்மீது கோபம் கொள்ள மாட்டாய் இல்லையா. கண்ணீருடன் விடைகொடுக்க முடியாது என்னால். என் நினைவுகளையும், என் ரத்தத்தையும் பகிர்ந்துகொண்டு பிறந்த குழந்தையையும் உன்னிடம் விட்டு விட்டுப் போகும்போது அது பிரிவு எப்படி ஆகும்? சென்று வருகிறேன்.

உன்
பிருந்தா.

படித்து முடித்தேன். மனம் முழுவதும் ஒரு விதமான வெறுமை பரவியிருந்தது. கடிதத்தை மடித்துச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டேன்.

அம்மா இன்னும் அப்படியே நதியின் கரையில் உட்கார்ந்திருந்தாள்.

அந்தப்பக்கத்திலிருந்து காவேரி.... இந்தப் பக்கத்திலிருந்து மாலை வெய்யில்.

நடுவில் சிலையாய் அம்மா. ஒருக்கால் கடந்த காலத்தைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறாளோ என்னவோ. இத்தனை வருடங்கள் கழித்து அதே சூழ்நிலை. இந்த மணல்

பரப்பில்தானே அவள் கனவுக் கோட்டையை கட்டிக் கொண்டிருப்பாள்! இங்கே இருக்கும் நாணற் புதற்களின் நிழலில்தானே எத்தனையோ ஆசைகளை வளர்த்துக் கொண்டிருப்பாள்! நெல் வயல்களுக்கு இடையில் ஒற்றையடிப் பாதையில் பாவாடை காலைத் தடுக்க எதிர்காலத்தை நோக்கி ஓடியிருப்பாள்! தான் கண்ட கனவுகள் கண் முன்னாலேயே கருகிப் போய்க்கொண்டிருக்கும்போது, செயல் மறந்த நிலையில் பார்வையாளரால் நின்றுவிட்டதும் இங்கே தானே.

என்ன சாதித்துவிட்டாள்?

எதைச் சாதிக்கவில்லை?

ஆமாம். வரலாற்று வல்லுனர்கள் எத்தனையோ பேர் வீரப் பத்தினிகளைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். எத்தனையோ சீர்திருத்தவாதிகள் பெண் உரிமைகளைப் பற்றித்தொண்டைக் கிழியப் பிரசங்கம் செய்திருக்கிறார்கள். எத்தனை கவிகள், எழுத்தாளர்கள் அடிமைத்தனத்திலிருந்து பெண்கள் மீளுவது எப்படி என்று பக்கம் பக்கமாக எழுதித் தள்ளியிருக்கிறார்கள்.

ஆனால் இதோ.... இங்கே இருக்கிறாள் ஒரு பெண்மணி. அவள் வாழ்க்கை எந்த வரலாற்றுக்கும் எட்டாத பாடப் புத்தகம். வாழ்க்கையைக் காட்டிலும் சிறந்த பாடம் வேறு என்ன இருக்க முடியும்? ஒரு விலைமாதின் வயிற்றில் பிறந்தாள். குடும்பப் பெண்ணாக மாற விரும்பினாள். காதல் தோல்வி அடைந்தது. விதி கொடுமையாக ஆடிய நாடகத்தில் வேறொரு கயவனுக்கு மனைவியானாள். துன்பங்களை அனுபவித்தாள். ஆனாலும் தளர்ந்து விடவில்லை. பரந்த உலகத்திற்குள் தனியாய் அடியெடுத்து வைத்துக்கொண்டே, தான் காதலித்தவனை சீர்திருத்தும் முயற்சியில் எந்தத் தாயும் செய்யாத தியாகத்தைச் செய்தாள். இன்னொருத்தியின் மகனுக்குத் தாயாகி, கைகளையே இறகுகளாக மாற்றிக்கொண்டு ஒரு பறவைக் குஞ்சுக்குப் பறக்கக் கற்றுக்கொடுத்தாள்.

அம்மகன் தன் சொந்த மகனுக்கே முதலாளியாகக் கூடிய நிலைக்கு உயர்த்தினாள். தோல்வியின் கடைசி திருப்பம் ஏமாற்றம் இல்லை என்றும், எதிர்த்து நிற்பதுதான் என்றும் எந்த புரட்சிக்காரனும் செய்யாத அளவுக்கு மிக உயர்வாய்த் தன் வாழ்க்கை மூலமாக நிரூபித்துவிட்டாள். அப்படிப்பட்ட பெண் தாயாகக் கிடைத்தால் யாரால்தான் பிரிந்திருக்க முடியும்? நீங்களே சொல்லுங்கள்.

அவள் எழுந்துகொண்டாள்.

நன்றாக இருட்டிவிட்டது. சந்தியா வேளை நதியிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு போய்விட்டது.

சந்திரன் மெதுவாக மேலே எழும்பி வந்து கொண்டிருந்தான். அம்மாவுக்குப் பின்னால் காவேரி நதியின் மேல் நிலா வெளிச்சம் பரவிக்கொண்டிருந்தது.

தென்றல் காற்றைப் போன்ற எண்ணம் என் மனதில் புகுந்து மலையமாருதமாய் மாறியது.

இந்தப் பெண்ணிற்கும், காவேரிக்கும் வித்தியாசம் என்ன இருக்கிறது?

மிகச் சாதாரணமான மலைச்சரிவில் பிறந்து நிதானமாக பிரவகித்து, விதி என்ற மேடுகள் இருந்த இடங்களில் பணிவாக வளைந்து கொடுத்து, பலத்தைக் கூட்டிக் கொண்டு, மலைகளுடன் மோதி தடைகளை விலக்கிக்கொண்டு ஜீவநதியாய் ஊருக்கெல்லாம் அன்னமிடும் காவேரி.....

சாகர சங்கமத்திற்காக சந்தோஷமாக ஓடிக்கொண்டிருந்த போது குறுக்கிட்டுத் தன் சுயநலத்திற்காக அணைக்கட்டு கட்டிய மனிதனைக்கூட புன்முறுவலுடன் மன்னித்து விடும் தாய் இந்தக் காவேரி. கேட்கக் கூடிய செவிகள் இருந்தால் அதன் சலசல சத்தத்திலிருந்து வாழ்க்கைக்கு ஊக்கமளிக்கும் வேத மந்திரங்களின் ஓசையைக் கேட்க முடியும்.

அந்த மௌன ராகத்தின் அழகை ரசித்துக் கொண்டிருந்தபோது அம்மா அருகில் வந்தாள்.

பரபரப்புடன் நிமிர்ந்து பார்த்தேன்.

இதழ்கள் மலர புன்முறுவலித்தாள்.

அந்தப் புன்முறுவலில் எனக்கு வேண்டிய பதில் கிடைத்து விட்டது.

நானும் சிரித்தேன்.

நிலா வெளிச்சத்தில் காவேரியும் சிரித்தாள்.

முடிவுரை

இந்தக் கதையை ஆரம்பித்தது நான் தான் என்பதால் இதற்கு முடிவுரை சொல்லவேண்டிய கடமையும் என்மீதுதான் இருக்கிறது.

அதற்குப் பிறகு எப்பொழுதாவது ஆனந்தன் பிருந்தாவைச் சந்திக்க முயற்சி செய்தானா. அதற்கு கோபிசந்த் ஒத்துழைத் தானா என்பது நமக்குத் தேவையில்லாத விஷயம், இந்த ரகசியம் தம் மூவருடனே சமாதியாகிவிட வேண்டும் என்று மட்டுமே அவர்கள் நினைத்துக்கொண்டார்கள். ஆனால் இந்த ரகசியம் தெரிந்த நபர் இன்னொருத்தர் இருக்கிறார்.

அந்த நபர் தரளா.

மகனின் திருமண முகூர்த்தம் நெருங்கிவிட்டதென்று பரபரப்புடன் மாடிக்கு வந்த தரளா, அவ்விருவருக்கும் இடையில் நடந்த உரையாடல் முழுவதுமாகக் கேட்டுவிட்டாள்.

வேடிக்கை என்னவென்றால்.....

அவள் நினைவு தப்பிக் கீழே விழவில்லை. வீலென்று கத்தி ரகளை எதுவும் செய்யவில்லை. தன்னுடைய சுபாவத்துக்கு மாறாக உரையாடல் முழுவதுமாக முடியும்வரை அப்படியே நின்றிருந்தாள். முகம் மட்டுமே இல்லை, உடலும் கறுத்துவிட்டது.

தன்னுடைய முட்டாள்தனம் இருகாதலர்களை எவ்வாறு பிரித்துவிட்டது என்றும், தந்தையின் உயிரை எவ்வாறு பலி வாங்கி விட்டதென்றும் உணர்ந்தாள். காதலித்துவிட்டால் மட்டுமே போதாது என்றும், அடுத்தவரிடம் அந்தக் காதல் இருக்கிறதா இல்லையா என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் இருபத்தைந்து வருடங்கள் தாமதமாகப் புரிந்துகொண்டாள்.

நடுங்கிவிட்டாள்.

அதற்குப் பிறகு அவள் எத்தனை இரவுகள் தனிமையில் அழுதுகொண்டே கழித்தாளோ தெரியாது.

வாழ்நாள் முழுவதும் அந்த ரகசியத்தைத் தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டு ஒன்றுமே அறியாதவளைப் போல் நடந்து கொண்டாள். பிரபாகரைச் சொந்த மகன் போலவே பார்த்துக் கொண்டாள்.

வேலைக்காரி திருட்டுத்தனம் கேஸில் மகளைத் தண்டித்து, பிறகு தவறைத் தெரிந்துகொண்டு உடலில் சூடு போட்டுக் கொள்வதன் மூலமாகத் தன்னைத்தானே எப்படித் தண்டித்துக் கொண்டாளோ, அதேபோல் இப்பொழுது செய்த தவறுக்கு தன் சொந்த மகனான கோபிசந்தை வாழ்நாள் முழுவதும் பார்க்காமல் இருப்பதையே தண்டனையாக நினைத்துக் கொண்டாள்.

தரளா போன்றவர்கள் உங்களுக்கு எங்கேயாவது தென்பட்டால் அவர்களைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள், இரக்கப்படுங்கள்.

முற்றும்